1910 - 2010

# வெட்டாப்பு

## நூற்றாண்டு விழா சிறப்பு மலர்

## 1910 - 2010








**மட்/ குருமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயம்**

# வெட்டாப்பு

## நூற்றாண்டு விழா சிறப்பு மலர்

## 1910 - 2010

**மட் / குருமண்வெளி**

**சிவசக்தி மகா வித்தியாலயம்**

# மட்/ குருமண்வெளி
# சிவசக்தி மகா வித்தியாலயத்தின்

## மகுட வாக்கியம்

சத்தியமே வெல்லும்

## தூரநோக்கு

எதிர்கால சவால்களை வெற்றி கொள்ளும் பூரண ஆளுமையுள்ள நற்பிரஜைகள்.

## பணிக்கூற்று

பாடசாலையின் முறை சார்ந்த, முறை சாராத கல்விச் செயற்பாட்டிலும், இணைப்பாடச் செயற்பாட்டிலும் மாணவர்களை முழுமையாக ஈடுபடுத்தி தகைமைத்திறனை விருத்தி செய்து எதிர்கால சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்கக் கூடியதும் தேர்ச்சி மிக்கதுமான சமூகத்திற்கும் நாட்டிற்கும் தேவையான நல்லொழுக்கங்கள் உடையதுமான மாணவர் சமூகத்தைக் கட்டியெழுப்புதல்.

# பாடசாலைக் கீதம்

*ஓங்குக கல்வி உயர் குருமண்வெளி*
*சிவசக்தி மகா வித்தியாலயமே*
*ஓங்குக மாணவர் ஆசிரியர் பணி*
*உறுப்பயன் ஓங்குகவே!*

*கோங்கொடு பூங்கொடி மல்லிகை முல்லை*
*குளிர் பசும் பூந்தென்றல்*
*தீந்தமிழ் பூத்திடச் சித்தி விநாயகர்*
*திருவருள் ஓங்குகவே!*

*ஒழுக்கமும் அன்பும் உயர் குணப் பண்பும்*
*உயிர்த்திட மாணவர்கள்*
*விழுப்பொருட் கல்வி வித்தையில் சித்தி*
*விறற்கொடி நாட்டுகவே!*

*விதம் விதமான ஞானமும் கலையும்*
*நிரந்தரம் ஓங்குகவே*
*நிதந்தரு சேவை நிதம் பொலிகல்வி*
*என்றென்றும் ஓங்குகவே.*

*இயற்றியவர்:*
**மண்டூர் சோமசுந்தரப்புலவர்**

# தமிழ் மொழி வாழ்த்து

*வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி*
*வாழிய வாழியவே!*

*வான மளந்த தனைத்தும் அளந்திடும்*
*வன்மொழி வாழியவே!*

*ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி*
*இசை கொண்டு வாழியவே!*

*எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி*
*என்றென்றும் வாழியவே!*

*சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்*
*துலங்குக வையகமே!*

*தொல்லை வினைதரு தொல்லை யகன்று*
*சுடர்க தமிழ்நாடே!*

*வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி*
*வாழ்க தமிழ் மொழியே!*



*வானம் அறிந்த தனைத்து மறிந்து*
*வளர்மொழி வாழியவே!*



# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | – | வெட்டாப்பு |
| நூல் வகை | – | சஞ்சிகை |
| தாள் அளவு | – | B5 |
| பக்கங்கள் | – | 150 |
| பிரதிகள் | – | 500 |
| பதிப்பு | – | 2010 டிசம்பர் |
| அச்சுப்பதிப்பு | – | கோல்டன் அச்சகம், கல்முனை |
| கணினி வடிவமைப்பு | – | திரு.அ.லக்ஸ்மன் |
| வெளியீடு | – | மட்/ குருமண்வெளி சிவசக்தி ம.வி |

# சஞ்சிகைக் குழு

*காப்பாளர் :*

**திரு. வ. கனகரெத்தினம்** (அதிபர்)

*ஆலோசகர்கள்:*

**திரு. சோ. டில்லிநாதன்** (பிரதி அதிபர்)

**திரு. சி. இளங்கோ** (உப அதிபர்)

*இதழாசிரியர்:*

**திரு. க. உபேந்திரன்** (ஆசிரியர்)

*குழு உறுப்பினர்கள்:*

**திரு. பொ. திருச்செல்வம்** (ஆசிரியர்)

**திரு. வ. திருநாவுக்கரசு** (ஆசிரியர்)

**திருமதி. வி. புஸ்பராசா** (ஆசிரியை)

**திருமதி. ப. குணரெத்தினம்** (ஆசிரியை)

**திருமதி. சூ. இராஜேஸ்வரன்** (ஆசிரியை)

**திருமதி. ச. சுகுணராஜன்** (ஆசிரியை)

**திரு. க. செல்வராசா** (ஆசிரியர்)

**திரு. பொ. புஸ்பநாதன்** (கட்டுறுபயிலுனர்)

**திரு. அ. லக்ஸ்மன்** (ப.மா.சங்கம்)

**திரு. த. விஜயகுமார்** (பா.அ.சங்கம்)

**திரு. பொ. ஜெயநாதன்** (ப.மா.சங்கம்)



நூற்றாண்டு விழாக்குழு



சஞ்சிகைக்குழு

நூற்றாண்டு விழாக்குழு:

திரு.வ.கனகரெத்தினம் (அதிபர்)
திரு.சோ.டில்லிநாதன் (பிரதி அதிபர்)
திரு.சி.இளங்கோ (உப அதிபர்)
திரு.க.உபேந்திரன் (ஆசிரியர்)
திரு.செ.கிரிதர் (ஆசிரியர்)
திரு.க.செல்வராசா (ஆசிரியர்)
திரு.கோ.வரதராஜசுந்தரம் (ஆசிரியர்)
திரு.க.கருணாநிதி (பா.அ.சங்கம்)
திரு.சீ.முரளிதரன் (ப.மா.சங்கம்)
திரு.சு.மதனராஜ் (ப.மா.சங்கம்)
திரு.பே. இராஜகுலேந்திரன் (ப.மா.சங்கம்)
திரு.த.விஜயகுமார் (பா.அ.சங்கம்)
திரு.செ.ரவீந்திரன் (பா.அ.சங்கம்)
திரு.வ.இராசதுரை (ப.மா.சங்கம்)
திரு.பொ.ஜெயநாதன் (ப.மா.சங்கம்)

நிதி சேகரிப்புக் குழு:

திரு.செ.கிரிதர் (ஆசிரியர்)
திரு.க.உபேந்திரன் (ஆசிரியர்)
திரு.கோ.வரதராஜசுந்தரம் (ஆசிரியர்)
திரு.க.கருணாநிதி (பா.அ.சங்கம்)
திரு.த.விஜயகுமார் (பா.அ.சங்கம்)
திரு.தா.கந்தசாமி (ப.மா.சங்கம்)
திரு.ந.மகேந்திரன் (பா.அ.சங்கம்)

பரிசளிப்புக் குழு:

திரு.கோ.வரதராஜசுந்தரம் (ஆசிரியர்)
திரு.ஞா.குணரெத்தினம் (ஆசிரியர்)
திரு.க.செல்வராசா (ஆசிரியர்)
திரு.சீ.நரேந்திரன் (ஆசிரியர்)
திரு.க.மதிவதனன் (ஆசிரியர்)
திரு.பே.சந்திரசேகரம் (ஆசிரியர்)
திருமதி.சு.புட்பமூர்த்தி (ஆசிரியை)
திருமதி.ஜீ.இராஜசிங்கம் (ஆசிரியை)
திருமதி.வி.கிருபைராஜா (ஆசிரியை)
திருமதி.வி.பரமலிங்கம் (ஆசிரியை)
திருமதி.யோ.ரவிசங்கர் (ஆசிரியை)
திருமதி.ரே.திலீபன் (ஆசிரியை)
திரு.செ.ரவீந்திரன் (பா.அ.சங்கம்)
திரு.வ.இராசதுரை (ப.மா.சங்கம்)

போட்டி ஒழுங்கமைப்புக் குழு:

திரு.கோ.வரதராஜசுந்தரம் (ஆசிரியர்)
திரு.க.உபேந்திரன் (ஆசிரியர்)
திரு.செ.கிரிதர் (ஆசிரியர்)
திருமதி.ந.கிருஸ்ணபிள்ளை (ஆசிரியை)
திரு.தா.காண்டீபன் (ப.மா.சங்கம்)
திரு.சு.மதனராஜ் (ப.மா.சங்கம்)

*கலை நிகழ்வுக்கான ஏற்பாட்டுக் குழு:*

**திருமதி.ச.மகேந்திரராஜா** (ஆசிரியை)
**திருமதி.மு.காண்டீபன்** (ஆசிரியை)
**திருமதி.ச.சுகுணராஜா** (ஆசிரியை)
**திரு.வ.திருநாவுக்கரசு** (ஆசிரியர்)
**திரு.பே.சந்திரசேகரம்** (ஆசிரியர்)
**திரு.ஞா.குணரெத்தினம்** (ஆசிரியர்)
**திரு.பொ.திருச்செல்வம்** (ஆசிரியர்)
**திருமதி.ஜெ.ஏகாம்பரம்** (ஆசிரியை)
**திருமதி.ப.நித்தியானந்தம்** (பா.அ.சங்கம்)

*உபசரனைக் குழு:*

**திரு.க.செல்வராஜா** (ஆசிரியர்)
**திருமதி.ஜெ.வரதராஜசுந்தரம்** (ஆசிரியை)
**திருமதி.சு.குமாரசிங்கம்** (ஆசிரியை)
**திருமதி.இ.இராஜேந்திரம்** (ஆசிரியை)
**திருமதி.ர.பாலமோகன்** (ஆசிரியை)
**திருமதி.ஜீ.இராஜசிங்கம்** (ஆசிரியை)
**திருமதி.லீ.சௌந்தராஜசுந்தரம்** (ஆசிரியை)
**திரு.பொ.புஸ்பநாதன்** (கட்டுறு பயில்வு ஆசிரியர்)
**திரு.க.டினேஸ்** (ப.மா.சங்கம்)
**திரு.க.பிரபா** (ப.மா.சங்கம்)
**திரு.ம.சுரேஸ்** (ப.மா.சங்கம்)
**திரு.வ.வினோதன்** (ப.மா.சங்கம்)
**திரு.மு.மோகனன்** (ப.மா.சங்கம்)

*பரிசுப் பொருள் கொள்வனவுக் குழு:*

**திரு.பொ.திருச்செல்வம்** (ஆசிரியர்)
**திரு.பே.சந்திரசேகரம்** (ஆசிரியர்)
**திரு.க.மதிவதனன்** (ஆசிரியர்)
**திருமதி.சு.குமாரசிங்கம்** (ஆசிரியை)
**திருமதி.ர.பாலமோகன்** (ஆசிரியை
**திருமதி.ஜீ.இராஜசிங்கம்** (ஆசிரியை)
**திரு.ந.மகேந்திரன்** (பா.அ.சங்கம்)
**திரு.சு.மதனராஜ்** (ப.மா.சங்கம்)

*பரிசு பெறும் மாணவர் பெயர் விபர ஒழுங்குபடுத்தல்:*

**திருமதி.சு.புட்பமூர்த்தி** (ஆசிரியை)
**திரு.சீ.நரேந்திரன்** (ஆசிரியர்)
**திரு.ஞா.குணரெத்தினம்** (ஆசிரியர்)

*பரிசு பெறும் மாணவர் விபர வெளியீடு:*

**திரு.க.செல்வராசா** (ஆசிரியர்)
**திருமதி.ரே.திலிபன்** (ஆசிரியை)

*சான்றிதழ் எழுதுதல்:*

**திருமதி.ரே.திலீபன்** (ஆசிரியை)
**திரு.க.மதிவதனன்** (ஆசிரியர்)

*பொதி செய்தல்:*

**திரு.ஞா.குணரெத்தினம்** (ஆசிரியர்)
**திருமதி.ஜீ.இராஜசிங்கம்** (ஆசிரியை)
**திருமதி.யோ.ரவிசங்கர்** (ஆசிரியை)
**திருமதி.வி.கிருபைராஜா** (ஆசிரியை)
**திருமதி.ந.யோகேஸ்வரி** (பா.அ.சங்கம்)

*சோடனை மண்டப ஒழுங்கு:*

**திரு.சி.இளங்கோ** (உதவி அதிபர்)
**திரு.சி.ஜெகதீஸ்வரன்** (ஆசிரியர்)
**திரு.பே.சந்திரசேகரம்** (ஆசிரியர்)
**திருமதி.சு.புட்பமூர்த்தி** (ஆசிரியை)
**திருமதி.கோ.இராஜரெத்தினம்** (ஆசிரியை)
**திருமதி.கீ.ரமேஸ்** (ஆசிரியை)
**திரு.பொ.புஸ்பநாதன்** (கட்டுறு பயில்வு ஆசிரியர்)
**திரு.வ.சுதாகரன்** (பா.அ.சங்கம்)
**திரு.நா.நாகராசா** (ப.மா.சங்கம்)
**திரு.பே.ராஜ்குமார்** (ப.மா.சங்கம்)
**திரு.பொ.புவிராஜ்** (ப.மா.சங்கம்)
**திரு.மு.மோகனன்** (ப.மா.சங்கம்)

*வரவேற்புக் குழு:*

**திரு.சோ.டில்லிநாதன்** (பிரதி அதிபர்)
**திரு.கோ.வரதராஜசுந்தரம்** (ஆசிரியர்)
**திருமதி.ந.கிருஸ்ணபிள்ளை** (ஆசிரியை)
**திருமதி.யோ.ரவிசங்கர்** (ஆசிரியை)
**திருமதி.ரே.திலீபன்** (ஆசிரியை)
**திருமதி.வி.புஸ்பராஜா** (ஆசிரியை)
**திருமதி.வி.கிருபைராஜா** (ஆசிரியை)
**திருமதி.சு.கணேசமூர்த்தி** (ஆசிரியை)
**திருமதி.வ.உதயகுமாரன்** (ஆசிரியை)
**செல்வி.ச.சிறீஸ்கலா** (ஆசிரியை)
**திரு.க.செல்லப்பா** (பா.அ.சங்கம்)
**திரு.பே.இராஜகுலேந்திரன்** (ப.மா.சங்கம்)
**திரு.க.கருணாநிதி** (பா.அ.சங்கம்)

*அழைப்பிதழ் குழு:*

**திரு.சி.இளங்கோ** (உதவி அதிபர்)
**திரு.சி.ஜெகதீஸ்வரன்** (ஆசிரியர்)
**திருமதி.ப.கிருஸ்ணதாசகுருநாதன்** (ஆசிரியை)
**திருமதி.கோ.இராஜரெத்தினம்** (ஆசிரியை)
**திரு.இ.கிருபைராசா** (பா.அ.சங்கம்)
**திரு.சு.மதனராஜ்** (ப.மா.சங்கம்)

*ஒலி, ஒளி, புகைப்படம், வீடியோ:*

**திரு.கோ.வரதராஜசுந்தரம்** (ஆசிரியர்)
**திரு.சீ.நரேந்திரன்** (ஆசிரியர்)
**திரு.க.உபேந்திரன்** (ஆசிரியர்)
**திருமதி.சு.குமாரசிங்கம்** (ஆசிரியை)
**திரு.பா.நாகேந்திரன்** (பா.அ.சங்கம்)

*பத்திரிகைச் சிறப்பிதழ், ஊடகத்துறை:*

**திரு.சோ.டில்லிநாதன்** (பிரதி அதிபர்)
**திரு.க.மதிவதனன்** (ஆசிரியர்)
**திருமதி.ப.குணரெத்திணம்** (ஆசிரியை)
**திரு.செ.ரவீந்திரன்** (பா.அ.சங்கம்)

# பாடசாலை ஆளணி விபரம்

1. திரு.வ.கனகரெத்தினம் (அதிபர்)
2. திரு.ச.டில்லிநாதன் (பிரதி அதிபர்)
3. திரு.சி.இளங்கோ (உப அதிபர்)
4. திரு.க.செல்வராஜா (பகுதித் தலைவர்)
5. திரு.சீ.நரேந்திரன்
6. திரு.கோ.வரதராஜசுந்தரம்
7. திரு.ஞா.குணரெத்தினம் (பகுதித் தலைவர்)
8. திரு.சி.ஜெகதீஸ்வரன்
9. திரு.க.உபேந்திரன்
10. திரு.செ.கிரிதர் (பகுதித் தலைவர்)
11. திரு.பொ.திருச்செல்வம்
12. திரு.க.மதிவதனன்
13. திரு.பே.சந்திரசேகரம்
14. திரு.வ.திருநாவுக்கரசு
15. திரு.தா.கோபாலகிருஸ்ணன்
16. திருமதி.கோ.இராஜரெத்தினம் (பகுதித் தலைவர்)
17. திருமதி.இ.இராஜேந்திரம்
18. திருமதி.யோ.ரவிசங்கர்
19. திருமதி.சு.புட்பமூர்த்தி
20. திருமதி.வி.கிருபைராஜா (பகுதித் தலைவர்)
21. திருமதி.ஜீ.இராஜசிங்கம்
22. திருமதி.ஜெ.வரதராஜசுந்தரம்
23. திருமதி.வி.புஸ்பராஜா
24. திருமதி.சு.குமாரசிங்கம்
25. திருமதி.வா.உதயகுமாரன்
26. திருமதி.ர.பாலமோகன்
27. திருமதி.ப.குணரெத்தினம்
28. திருமதி.ச.மகேந்திரராஜா
29. திருமதி.வி.பரமலிங்கம்
30. திருமதி.ரே.திலீபன்
31. திருமதி.ஜெ.ஏகாம்பரம்
32. திருமதி.சு.கணேசமூர்த்தி
33. திருமதி.ந.கிருஸ்ணபிள்ளை
34. திருமதி.லீ.சௌந்தரராஜசுந்தரம்
35. திருமதி.சூ.இராஜேஸ்வரன்
36. திருமதி.ச.சுகுணராஜா
37. திருமதி.கீ.ரமேஸ்
38. திருமதி.மு.காண்டீபண்
39. திருமதி.ப.கிருஸ்ணதாசகுருநாதன்
40. செல்வி.ச.சிறீஸ்கலா
41. செல்வி.க.கோமளவதி
42. திரு.பொ.புஸ்பநாதன் (கட்டுறு பயிலுனர் ஆசிரியர்)
43. திரு.செ.பேரின்பம் (பாடசாலைத் தொழிலாளி)
44. திருமதி.கீ.ஜெகன் (தொண்டர் ஆசிரியர்)



அதிபருடன் ஆசிரியர்களும் ஊழியர்களும்

# வெட்டாப்பில் பிரகாசிப்பவை


1. ஆசிச் செய்தி - குருமண்வெளி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பிரதமகுரு
2. ஆசிச் செய்தி - குருமண்வெளி மெதடிஸ்த தேவாலய போதகர்
3. வாழ்த்துச் செய்தி - பா.அரியநேத்திரன் (பா.உ.)
4. வாழ்த்துச் செய்தி - வடகிழக்கு மாகாண முன்னாள் கல்விச் செயலாளர்
5. வாழ்த்துச் செய்தி - கிழக்கு மாகாண கல்வியமைச்சின் பிரதிச் செயலாளர்
6. வாழ்த்துச் செய்தி - பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர்
7. வாழ்த்துச் செய்தி - ம.தெ.எ.பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர்
8. வாழ்த்துச் செய்தி - பாடசாலை அதிபர்
9. வாழ்த்துச் செய்தி - பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்
10. வாழ்த்துச் செய்தி - பழைய மாணவர் சங்கச் செயலாளர்
11. இதழாசிரியர் செய்தி
12. அதிபர் அறிக்கை
13. இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்
14. என்னுடைய சேவைக்காலத்தில் குருமண்வெளிப் பாடசாலை ஓர் பார்வை
15. விடியலை நோக்கி
16. அன்பு
17. இடைநிலை வகுப்பு மாணவர்களின் தமிழ் மொழிப் பயிற்சியில் ஆசிரியர் விடும் தவறுகள் சில அவதானிப்புக்கள்
18. வாழ்வில் உயர்வதற்கு
19. புதுமை
20. தெருவோர ஆச்சி
21. நல்லொழுக்கம் நற் பெயர் தரும்
22. சிவ சக்தி
23. பாரதி ஒரு தேசிய கவிஞர்
24. மாணவர்கள்
25. எனது பார்வையில் பாடசாலையின் வளர்ச்சி
26. மலரும் நினைவுகள்
27. எம் வாழ்வில் சக்தி
28. எம் இனிய ஆசான்கள்
29. அன்னை
30. வாழ்வும் வளமும்




31. நுண்பாகக் கற்பித்தல் முறைகள்
32. தமிழ் மொழியின் இன்றைய நிலை
33. ஓங்கிடும் சிவ சக்தி
34. நட்பின் மகிமை
35. ஈழத்துத் தமிழ் அரங்கப் பாரம்பரியமும் கா.சிவத்தம்பியும்
36. நீ நூலைத் தேடு உலகம் உன்னைத் தேடும்
37. அன்புடன் வாழ்த்துகின்றேன்
38. வசந்தங்கள் மறைந்தன
39. காத்திருப்பு
40. மனித வாழ்க்கையில் சோதிடத்தின் தாக்கம்
41. உன்னையே நீ எண்ணிப்பார்
42. My School
43. விழுமியக் கல்வி பற்றிய கூர்ந்த சிந்தனை
44. முதியவர்களைப் பேணுவோம்
45. ஆலயமாகும் கல்விச்சாலை
46. நாட்டார்பாடலின் இயல்புகள் - மறுமதிப்பீடு
47. புகைத்தலினால் மனிதனுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்
48. வெளியூர்க் கல்வி
49. மானிடா எழுந்திரு
50. சித்திரங்களின் ஊடாக சிறுவர்களின் மனவெழுச்சி வெளிப்பாடு
51. கருவறைச் சிசுக்களின் அவலக் கண்ணீர்
52. தன் ஊரே தனக்குக்கதி
53. நட்பின் மகிமை
54. நவீன அரங்கில் காட்சியமைப்பு
55. ஆசானைப் போற்றுவோம்
56. இலங்கையின் பொருளாதாரப் புவியியலை மீள வலியுறுத்தல்
57. அம்மா
58. சிறந்த மாணவன் யார்?
59. ஆசிரியரும் விளை திறனும்
60. நூற்றாண்டை மிஞ்சிவிட்ட சிவ சக்தி
61. திராவிடர்கள் அரக்கர்களா...?
62. 2010 ஆம் ஆண்டு பரிசளிப்பு விழாவின் சாதனையாளர்கள்
63. நூற்றாண்டு விழாவில் கௌரவிக்கப்படுவர்கள்
64. நன்றி நவிலல்

குருமண்வெளி அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய
பிரதமகுரு அவர்களின்



# ஆசிச்செய்தி

"வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்துவரும்" அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது அதிலும் ஞானம் கல்வி வேள்வி பெற்று பிறத்தல் மிக அரிது. மனித குல வாழ்க்கையில் ஈடேற்றம் ஏற்படுத்துவது கல்விச் செல்வமாகும். இந்த செல்வங்களைப் பெறுவதற்கு வித்தியாலயங்களுக்குச் செல்ல வேண்டும். ஆலயங்கள் இருவகை இதில் ஒன்று நாம் வழிபாட்டிற்குச் செல்லும் கோயில்கள் ஆகும். இங்கு ஆன்மா ஈடேற்றம், முத்தி பேரின்பம், மனசாந்தி, இறையருள் இவைகள் ஆலயதரிசனம் மூலம் கிடைக்கும்.

மற்றைய ஆலயம் வித்தியாலயம், மனிதன் மனிதனாக வாழவும், புத்திசாலியாக வருவதற்கும் சீரான கல்வியைப் பெறவும் கடமை ,கண்ணியம், கட்டுப்பாடு, நெறிதவறாத வாழ்க்கை, நன்னடத்தை, ஒழுக்கம் மேம்பாட்டு நிலைமை இவைகளைக் கற்று நல்லவனாக சான்றோனாக வாழ வழி வகுப்பது வித்தியாலயங்கள் ஆகும். ஆகவே இதில் இரண்டாவது ஆலயம் புனிதமானது.

இவ் ஆலயங்களில் மாணவர்கள் செம்மைப்படுகின்றார்கள். பின்பு தூய வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கு இதுவே உறுதுணையாக உள்ளது. இப்படியான பாடசாலைகள் நகரம், பட்டினம், கிராமங்கள் தோறும் உள்ளன. அவற்றினுள் ஒன்றுதான் எமது புண்ணிய பகுதியாம் குருமண்வெளி கிராமத்தில் உள்ள சிவசக்தி மகா வித்தியாலயமாகும்.

இங்கே பல சான்றோர்கள், பட்டதாரிகள், புத்திஜீவிகள், ஆசிரியர்கள் இப்படியான நல்லோர்களை உருவாக்கி வீறு நடைபோட்டு தனது நூற்றாண்டைக் கொண்டாடுகிறது. இந்த நூற்றாண்டு விழாவையொட்டி ***"வெட்டாப்பு"*** எனும் சஞ்சிகை வெளிவர உள்ளது. இம்மலர் வெளிவருவதையிட்டு நாம் அகம் மலருகின்றோம். இம்மலரானது சிறப்புற வெளிவர அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் நல்லாசிகள் கிடைக்க வேண்டும் என்றும், மென்மேலும் வளர்ந்து இன்னும் பல ஆசான்களை உருவாக்க வேண்டும் என விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகனை வேண்டி ஆசிக்கின்றேன்.

"கோவிந்த நாம சங்கீர்த்தனம்"


*ஆசிரிய திலகம் : பூஜா கிரம ஜோதி*
**வேலா குகேந்திர சர்மா**
அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயம்
குருமண்வெளி.

குருமண்வெளி

# மெதடிஸ்த தேவாலய போதகர்

அவர்களின்

# ஆசிச் செய்தி




மட்/ குருமண்வெளி சிவ சக்தி மகா வித்தியாலய நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் அம்சமாக வெளியிடப்படும் ***"வெட்டாப்பு"*** சஞ்சிகைக்கு ஆசிச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

ஒரு சிறிய விதை மண்ணில் விழுந்து மடிந்து புதிய உயிரைக் கொடுப்பது போல் இப்பாடசாலைக்காக அத்தனை ஆண்டுகளும் தங்களை அர்ப்பணித்து, அயராது உழைத்த ஒவ்வொருவரையும் நினைத்துப் பார்க்கின்றேன். குறிப்பாக குருமண்வெளிப் பகுதியில் கல்விக்கான வித்தை ஊன்றிய மிசனெரிமார்களையும் நினைவில் கொள்கின்றேன். அவர்கள் அயராமல் செய்து வந்த அருட் பணியும் ஊக்கத்துடன் உழைத்த உழைப்பும் தியாகமும் சிந்தனையும் இறை மன்றாடல்களுமே இன்று இந் நூற்றாண்டு விழாவைக் கடக்க கால்கோளாக அமைந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன், இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

கல்வி என்பது காலத்தால் அழியாத ஒரு செல்வம் மாத்திரமன்றி அறியாமை இருளில் இருந்து மனிதனை ஓர் உன்னத ஒளிக்குள் கொண்டுவருகின்ற ஓர் கருவி. இதனை தங்கள் வாழ்க்கையில் பெற்றுக் கொள்வதற்காக குருமண்வெளிப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களுக்கு சிவ சக்தி மகா வித்தியாலயம் ஒரு ஒளிமுதலாய் திகழ்வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

பல காலங்கள் கடந்து சென்று ஒரு நூற்றாண்டுக்குள் நுழைகின்ற இந் நன்நாளிலும் இப்பாடசாலைக்காய் பாடுபட்டு உழைத்த அனைவரையும் நினைவுகூருகின்றேன். தற்போது பணியாற்றிக் கொண்டிருக்கும் அதிபர், ஆசிரியர் யாவரையும் வாழ்த்துகின்றேன். இறை ஆசி அவர்களுடைய வாழ்வில் நிறைவாய் நிலைத்திருக்க மன்றாடுகின்றேன்.

குறிப்பாக ***"வெட்டாப்பு"*** சஞ்சிகை வெற்றியுடன் வெளிப்பட உழைத்த ஒவ்வொருவருக்கும் என் உளமார்ந்த நல் வாழ்த்துக்களும் ஆசிகளும் உரித்தாகட்டும்.



இறை ஆசிகளுடன் என்றும்

**அருட்திரு.கு.குணாளன்**

குருமண்வெளி மெதடிஸ்த தேவாலய போதகர்

கல்லாறு சேகர சபைக்குரு

மட்டக்களப்பு மாவட்ட
பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்
அவர்களின்



# வாழ்த்துச் செய்தி

## உயர்ச்சி பெற எனது வாழ்த்துக்கள்


*உரிமைத் தமிழுக்கு ஊமை விலங்கிடப்பட்ட இன்றைய நிலையில் வாழ்வைத் தொலைத்தவர்களாய் வசந்தத்தைத் தேடி நிம்மதியற்றவர்களாய் நாம் உள்ளோம். இந்நிலையில் உதயத்தை நோக்கி அறிவு ரீதியாகச் செயற்பட வேண்டிய காலம் இதுவாகும்.*

*எல்லாவற்றையும் இழந்தாலும் எமது இனத்தில் இழக்க முடியாமல் எஞ்சியிருப்பது கல்வி மட்டுமே. நவீன யுகத்தின் உலக மயமாக்கலின் சவால்களுக்கு எதிர் நீச்சல் போட்டு அறிவு ரீதியாகவும் நல்லொழுக்க ரீதியாகவும் மாணவர்களை நல்வழிப்படுத்தும் அறிவுச் சாலைகளாக பாடசாலைகள் மிளிர்கின்றன.*

*அந்த வரிசையில் மட்/ குருமண்வெளி சிவ சக்தி மகா வித்தியாலயம் அளப்பரிய பங்காற்றியுள்ளது. இவ் வித்தியாலயத்தில் கற்ற பலர் இன்று உள்நாட்டிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் புத்திஜீவிகளாகவும் போற்றத்தக்க பெரியவர்களாகவும் உள்ளனர்.*

*இன்று நூறு ஆண்டு அகவையில் தடம்பதிக்கும் இவ் வித்தியாலயமானது **"வெட்டாப்பு"** சஞ்சிகையினை சிறப்பு மலராக வெளியிட்டு இவ் வித்தியாலய வளர்ச்சியின் படிக்கட்டுக்களையும் எதிர்கால முன்னேற்றத்தினையும் புடம் போட்டு காட்டியுள்ளது.*

*குருமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயமானது எதிர்காலத்தில் ஏற்றமிகு மாணவர்களை உருவாக்கி எழுச்சிமிகு கல்லூரியாய் உயர்ச்சி பெற எனது வாழ்த்துக்களை உவந்தளிக்கின்றேன்.*



**பா.அரியநேத்திரன்**
பாராளுமன்ற உறுப்பினர்
மட்டக்களப்பு மாவட்டம்.

வடக்குக்கிழக்கு மாகாண

முன்னாள் கல்விச் செயலாளரின்



# வாழ்த்துச் செய்தி

இன்று எமது கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கும் பட்டிருப்பு கல்வி வலயத்தில் அமைந்துள்ள குருமண்வெளி சிவ சக்தி மகா வித்தியாலயத்தின் "வெட்டாப்பு" இதழுக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மிக நீண்டதொரு வரலாற்றினைக் கொண்ட (1910 – 2010) இவ் சிவசக்தி மகா வித்தியாலயம் ஆரம்ப காலத்தில் திண்ணைப்பள்ளியாகவும் பின்னர் கிறிஸ்தவ மிஷனெரிமாரால் மட்/ மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையாக மாற்றப்பட்டது. ஆரம்பத்தில் ஆங்கிலக் கல்வியோடு மிகவும் தேர்ச்சி பெற்ற கண்டிப்பான எமது ஊர் ஆசான்கள் கல்வி புகட்டுவதில் ஈடுபட்டதாக அறிய முடிகின்றது. எருவில் பற்றில் ஒரே ஒரு சிரேஷ்ட பாடசாலையாக இப்பாடசாலை அமைந்ததால் அருகிலுள்ள மண்டூர், மகிழூர், கல்லாறு போன்ற கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் தூர இடங்களில் இருந்து வந்து உறவினர் வீடுகளில் தங்கி இப்பாடசாலையில் தமது கல்வி நடவடிக்கையினை மேற்கொண்டதாகவும் அறிய முடிகின்றது. 1930 – 1960 காலப்பகுதியில் SSC தராதர பாடசாலையாக இப்பாடசாலை தரமுயர்த்தப்பட்ட போது ஆசிரியர்களான திரு.தம்பையாப்பிள்ளை மற்றும் காலஞ்சென்ற திரு.அழகையா போன்றோர். தமது கற்பித்தல் செயற்பாடுகளால் பல மாணவர்களை SSC தராதர சான்றிதழ் பரீட்சையில் சித்தி பெறுவதற்கான முன்னோடியாய் இப்பாடசாலை இருந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் எனது தந்தையார் ஒரு வருடம் இப்பாடசாலையில் ஆசிரியராகக் கற்பித்து தொடர்ந்து சுமார் 33 வருடங்கள் இப்பாடசாலையின் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்று இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக தன் வாழ்வுதனை அர்ப்பணித்தது பற்றி இன்று நான் பெருமையுடன் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளேன். அக்காலத்தில் நானும் எனது ஆரம்பக் கல்வியினை இப்பாடசாலையில் தொடர்ந்தேன் என்பதை இன்று மகிழ்ச்சியுடன் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

"கல்வியைக் கற்க மறுப்பவன் மனித வாழ்க்கையை வாழ மறுப்பவனாகின்றான்" என்ற நிலையில் இன்று பாடசாலை, கல்வி கற்கும் என்ற நிலை மாறி, சமூக வாழ்விற்கு வழிகாட்டும் இடமாக பாடசாலை உருமாறி வருகின்றது அந்த வகையில் மாணவர்களிடையே காணப்படும் ஆக்க சிந்தனையை கிளர்ந்தெழச் செய்து அவர்களின் ஆக்கத்திறனை வெளிக்கொணர வடிகாலாக அமையப்பெற்ற "வெட்டாப்பு" சஞ்சிகைக்கு எனது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

பட்டிருப்பு கல்வி வலயத்தில் குருமண்வெளி சிவசக்தி வித்தியாலயம் மென்மேலும் சாதனைகள் படைத்து முன்னேறிட எனது வாழ்த்துக்கள் மற்றும் பிரார்த்தனைகள்.

**கலாநிதி. ஈ.ஜே. சற்குணராஜா**

ஓய்வு பெற்ற வடக்கு கிழக்கு மாகாண

கல்விச் செயலாளர்.

## கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் அவர்களின்



# வாழ்த்துச் செய்தி

*மட்டக்களப்பு குருமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயம் தனது நூற்றாண்டு விழாவையொட்டி "வெட்டாப்பு" என்கின்ற சிறப்பு மலரை வெளியிடுவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.*

*ஒரு பாடசாலை நூறு ஆண்டுகளை நிறைவு செய்வது என்பது மிகவும் பெருமைக்குரிய விடயமாகும் கல்விக்காக நூற்றாண்டுகள் பணி செய்த இப்பாடசாலையின் வெற்றிக்கான காரணிகள் என்ன என்பது பற்றி இத்தருணத்தில் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். அதிபரின் தலைமைத்துவம், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, மாணவர்களின் செயற்திறன், சமூகத்தின் பங்களிப்பு இவற்றின் ஊடாகத்தான் ஒரு பாடசாலை சமூகத்தில் வெற்றிபெறமுடியும்.*

*அத்தகைய வெற்றி பெற்ற ஒரு பாடசாலையாக இன்று குருமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயம் எமது கல்விச் சமூகத்தில் திகழ்கின்றது. இது குறித்து நாம் எல்லோரும் பெருமைப்பட முடியும்.*

*நாட்டிற்கும் , சமூகத்திற்கும் சிறந்த குடிமக்களை உருவாக்கிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு பாடசாலைக்கு உரியதாகும். முறைமை சார்ந்த கலைத்திட்ட நடவடிக்கைகளுக்கு அப்பாலும் பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சி குறித்த நடவடிக்கைகள் பற்றி பாடசாலைகள் சிந்தித்துச் செயற்பட வேண்டும். பிள்ளைகளின் பல்வேறுபட்ட திறன்களையும் வளர்த்தெடுப்பதற்கான வாய்ப்புக்களை பாடசாலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் தேர்ச்சி பெற்ற குடிமக்கள் சமூகத்திற்குக் கிடைப்பார்கள்.*

*அந்த வழியில் குருமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயம் தனது கல்விப் பயணத்தைத் தொடரும் என்பது எனது நம்பிக்கையாகும். நூற்றாண்டுகளைக் கடந்தும் தனது கல்விப் பணியை இப்பாடசாலை வெற்றிகரமாகத் தொடரவேண்டும் என வாழ்த்துகின்றேன். நூற்றாண்டு விழாக்காணும் இத்தருணத்தில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் யாவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.*

**சி.தண்டாயுதபாணி**
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
காணி, பிரதிச் செயலாளர்
காணி அபிவிருத்தி, போக்குவரத்து அமைச்சு,
கிழக்கு மாகாணம், திருகோணமலை.



## பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

ஒவ்வொரு பாடசாலைகளும் தத்தமது செயற்பாடுகளை வெளிப்பாடுகளை ஆவணப்படுத்தி வைத்துக் கொள்கின்றன. இந்த ஆவணங்கள் அப்பாடசாலையின் வரலாற்றை அறிந்து கொள்வதிலும் பெரும் பங்கு வகிக்கின்றன. அந்தவகையில் சஞ்சிகையும் பெறுமதிமிக்கதொன்றாக விளங்குகின்றது. ஆகவே மட்/குருமன்வெளி சிவசக்தி மகா வித்தியாலயம் "வெட்டாப்பு" என்ற பெயரில் வெளியிடும் சஞ்சிகையும் அவ்வாறானதொரு சஞ்சிகையாக அமைய வேண்டும் என்பதோடு நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வெளியிடுவதிலும் இது இன்னும் புதுமை பெற வேண்டும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

பாடசாலை மாணவர்களின் ஆக்கவெளிப்பாட்டுத் திறனை வளர்ப்பதில் சஞ்சிகைகள் ஒரு களமாக அமைகின்றது. இங்கு மாணவர் மட்டுமல்லாமல் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், சமூகத்தவர், துறைசார் நிபுணர்கள் என்ற அடிப்படையில் பல்வேறு ஆக்கங்களும் இடம்பெற்று இருப்பது பல்வேறு அரிய மலர்களைத் தேடிப்பறித்து புதுமணம் கமழும் பூமாலைபோல் பொலிவுடன் விளங்குமென நம்புகிறேன்.

நூறு ஆண்டுகள் கடந்துநிற்கும் இவ் வித்தியாலயத்தின் செயற்பாடுகளைப் புரட்டும்போது சான்று பகரும் ஆதாரங்களாக நல்ல இலக்கிய ஆர்வலர்களையும் சான்றோர்களையும் ஈன்று எமக்கு அளித்திருப்பதை இட்டு மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறேன். இவ் வேளையில் நூற்றாண்டு விழாவை சிறப்பிக்கும் முகமாக சிறப்பு மலராக வெளிவரும் இவ் வெட்டாப்பு சஞ்சிகை வெளிவர ஒத்துழைப்பு நல்கிய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் அனைவரையும் வெகுவாக பாராட்டுவதுடன் என் இதய பூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி. சா. பவளகாந்தன்**
வலயக்கல்விப் பணிப்பாளர்
பட்டிருப்பு.

# கோட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்களின்

## வாழ்த்துச் செய்தி



வெட்டாப்பு வெறும் சஞ்சிகை அல்ல - அது
விடியலுக்கு கட்டியம் கூறும் ஒளியின் வெளிப்பாடு.

பட்டப்பகலையும் மூசாப்பாக்கி, மூடிய கருமேகம்
கொட்டி முடித்து கொடுப்பையுள் தானடங்க
செங்கதிரோன் ஒளியால் விடியலுக்கு
கட்டியம் கூறும் வெட்டாப்பு வெறும் சஞ்சிகையல்ல

வெட்டாப்புக்கண்டு,
நெல்லேருழவர் நிமிர்ந்து வயல் நோக்கும் வரிசையென
நல்லதோர் வழியை நம் இளைஞர்களுக்குக் காட்டும்
வெட்டாப்பு வெறும் சஞ்சிகை அல்ல - அது
விடியலுக்கு கட்டியம் கூறும் ஒளியின் வெளிப்பாடு.

சொல்லேருழவர்கள் முன் சொல்லி வைத்த பனுவல்கள்
பல்வகை தேர்ந்து பகிர்ந்து படைக்கும் ஆற்றலை
அளிக்கத் தூண்டும் வெட்டாப்பு வெறும் சஞ்சிகை அல்ல - அது
விடியலுக்கு கட்டியம் கூறும் ஒளியின் வெளிப்பாடு.

படைக்கும் ஆர்வம் படிக்கும் ஆற்றலை வளர்க்குமாதலால்
வெட்டாப்பு வெறும் சஞ்சிகை அல்ல - அது
விடியலுக்கு கட்டியம் கூறும் ஒளியின் வெளிப்பாடு.
பேனா முனையில் தானாகி, தனியாய் விளங்க
விழைவிக்கும் வெட்டாப்பு வெறும் சஞ்சிகை அல்ல - அது
விடியலுக்கு கட்டியம் கூறும் ஒளியின் வெளிப்பாடு

பொருண் முதன் உலகில் நீதியும், நெறி முறையும்
நின்று நிலைக்க பிள்ளைச் சமூகத்திற்கு நல்வழி காட்டும்
வெட்டாப்பு வெறும் சஞ்சிகை அல்ல - அது
விடியலுக்கு கட்டியம் கூறும் ஒளியின் வெளிப்பாடு.

அது கற்றலின் நோக்கம், கல்வியின் கலங்கரை விளக்கம்
உள்ளத்து ஆற்றல்களை உயர வளர்த்து விடும் உன்னத பணி
வெட்டாப்பு வெறும் சஞ்சிகை அல்ல - அது
விடியலுக்கு கட்டியம் கூறும் ஒளியின் வெளிப்பாடு.

"வெட்டாப்பு" வெளியீடு முயற்சிகளின் முன்னோடிகளாக உழைக்கும்
அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன்.

**திருமதி. வே. குணநாயகம்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்
ம.தெ.எ.பற்று, களுவாஞ்சிகுடி.

## பாடசாலை அதிபர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



மட்/ குருமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா சிறப்பு மலராக வெளிவரும் ***"வெட்டாப்பு"*** சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு பாடசாலை தனது கல்விப்பணியில் நூறு வருடங்களை நிறைவு செய்வது சாதாரண விடயமல்ல ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தில் மெதடிஸ்த மிசனெரியினரால் உருவாக்கப்பட்ட இப் பாடசாலை இப் பிரதேசத்தின் கல்வி முன்னேற்றத்திற்கு காத்திரமான பங்களிப்பினை வழங்கி இன்று நூற்றாண்டு விழாக் கொண்டாடுகின்றது.

இக் கிராமம் பாரம்பரியமான ஒரு விவசாயக் கிராமமாகும். விவசாயிகளின் வாழ்க்கையில் ***"வெட்டாப்பு"*** பெரிதும் வேண்டற்பாலதாகும். இவ் வகையில் கல்வியில் ஒரு விடிவு ஏற்படுவதைக் குறிக்கும் வகையில் வெட்டாப்பு என்ற பெயரினைத் தாங்கி எமது பாடசாலைச் சஞ்சிகை வெளிவருகின்றது. பாடசாலை நூற்றாண்டு விழாவின் ஒரு அங்கமாக நூற்றாண்டு விழா சிறப்பு மலராக ***"வெட்டாப்பு"*** மலர்கின்றது.

பாடசாலைகளில் சஞ்சிகை வெளியீடானது பல்வேறு சிரமங்களின் மத்தியிலேயே இடப்பெறுகின்றது. இச் சிரமங்களின் மத்தியிலும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் அயராத உழைப்பினாலும் ஒத்துழைப்பினாலும் நூற்றாண்டு விழா சிறப்பாக இடம் பெறுவதுடன் பெறுமதி மிக்க சஞ்சிகையும் எமது கரங்களில் தவழ்கின்றது.

இச் சஞ்சிகை வெளியீட்டுக்குப் பொறுப்பாக இருந்த இதழாசிரியர் திரு.க.உபேந்திரன் ஆசிரியர் அவர்கட்கும் மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும் ஒத்துழைப்புக்கள் வழங்கிய நல் உள்ளங்கள் அனைவருக்கும் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன் வருடாந்த சஞ்சிகையாக ***"வெட்டாப்பு"***தொடர்ந்து வெளிவர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**வ. கனகரெத்தினம்** (அதிபர்)
மட்/ குருமண்வெளி சிவசக்தி ம.வி.

பாடசாலை அபிவிருத்திச் சங்க
செயலாளரின்



# வாழ்த்துச் செய்தி

*மட்/ குருமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயம் நூறு ஆண்டுகளைக் கடக்க இருக்கும் இவ்வேளையில் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இதனையொட்டி வெளியிடப்படும் **"வெட்டாப்பு"** சிறப்பு மலர் வளம்பெற வாழ்த்துகிறேன்.*

*ஆரோக்கியமான ஒரு கல்விச் சமூகம் உதயமாக வேண்டுமாயின் அது நீண்ட கால வரலாற்றைக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறான நிகழ்வுகள் மூலம் இதனை ஞாபகப்படுத்தி விழிப்படையச் செய்வதன் மூலம் கல்வி வளர்ச்சியை மேலும் உறுதியான நிலைக்கு கொண்டுவர வாய்ப்புகள் உண்டு. பாடசாலையின் வெற்றிக்கு அப்பாடசாலை சார்ந்த சமூகத்தினது ஆரோக்கியமான ஒத்துழைப்பும் அவசியமாகின்றது. இதன் பிரதிபலிப்பாக நூற்றாண்டு விழாவினையும் சஞ்சிகை வெளியீட்டினையும் பார்க்கின்றேன்.*

*பல்வேறு வேலைப் பழுக்களின் மத்தியில் இந்த நூற்றாண்டு விழாவின் ஒரு அங்கமாக **"வெட்டாப்பு"** சிறப்பு மலரை வெளியிட இருக்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

**க. கருணாநிதி**
*செயலாளர்*
*பாடசாலை அபிவிருத்திச் சங்கம்*
*மட்/ குருமண்வெளி சிவசக்தி ம.வி*

*பழைய மாணவர் சங்க செயலாளரின்*

# வாழ்த்துச் செய்தி




இவ் வையகத்தை அடக்கியாள்கின்ற எல்லாம் வல்ல இறைவனை நினைத்தவனாக விருட்சம் போல பிரகாசித்து நூற்றாண்டு எனும் விழுதினை உறுதியாக நிலைநிறுத்தியுள்ள மட்/குருமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயத்தின் வரலாற்றை எடுத்தியம்பும் நூற்றாண்டு மலரான ***"வெட்டாப்பு"*** சஞ்சிகைக்கு இப்பாடசாலையின் பழைய மாணவர் சங்க செயலாளர் என்ற ரீதியில் வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

அறியாமைப் பசிபோக்கி அறிவுத்தாகம் தீர்க்க வருகின்ற மாணவர்களுக்கு தாயின் அரவணைப்போடு வழிகாட்டி பாகுபாடின்றி அறிவு புகட்டும் அறிவுக் கூடமாக விளங்கி குருமண்வெளிக்கு புகழ் பரப்புகின்ற பாடசாலையின் நூற்றாண்டு விழாக்காணும் இத்தருணத்திலே திண்ணைப்பள்ளியாக விளங்கிய இக் கூடத்தினை மெதடிஸ்த மிசன் எனும் பாடசாலை அந்தஸ்து வழங்கி சிவசக்தி வித்தியாலயம், சிவசக்தி மகா வித்தியாலயம் என பாடசாலைகளின் வளர்ச்சிப் படிகளில் தூண்களாக நின்று உழைத்த, உழைத்துக் கொண்டிருக்கின்ற அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலையின் புகழினை வெளியுலகிற்கு பறைசாற்றி சாதனை படைத்த பழைய மாணவர்கள், திணைக்களத் தலைவர்கள், சங்கங்கள் அனைத்தையும் இத்தருணத்தில் நினைவு கூருவதோடு பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

பாடசாலையின் முன்னைய நிகழ்வுகளையும், சாதனைகளையும் பின்னைய இளம் சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டும் பொக்கிஷமான ***"வெட்டாப்பு"*** எனும் சஞ்சிகை பாடசாலையின் முதுசமாக, அறிவுப் பேழையாக, கலை இலக்கிய பொய்கையாக, வரலாற்றுப் பதிவேடாக வெளிவர சகல வழிகளிலும் உதவி நல்கிய அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் இப்பணி சிறக்க வாழ்த்துக் கூறி பிரார்த்தனைகளை தூவுகின்றேன்.

**பொ.ஜெயநாதன்**
*செயலாளர்*
*பழைய மாணவர் சங்கம்*
*மட்/குருமண்வெளி சிவசக்தி ம.வி.*



## இதழாசிரியரிடமிருந்து....

எமது பாடசாலையின் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பிக்கும் முகமாக ***"வெட்டாப்பு"*** சஞ்சிகையை சிறப்பு மலராக வெளியிடுவதில் உள்ளம் உவகை கொள்கிறேன்.

எமது பாடசாலையின் மிகக் குறுகிய காலத்தில் அதிபரின் நெறிப்படுத்தலின் கீழ் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவ சங்கத்தினரின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரின் கடின உழைப்பினால் நூற்றாண்டு விழாவின் ஓர் அங்கமான பரிசளிப்பு விழாவினை நடாத்தியமையையும், நூற்றாண்டு விழாவினையும் அதோடு இணைந்து ***"வெட்டாப்பு"*** சிறப்பு மலர் வெளியிடுவதையும் எண்ணி பெருமையடைகின்றேன்.

இந்த ***"வெட்டாப்பு"*** சஞ்சிகை நூற்றாண்டு விழாவை ஆவணப்படுத்தும் ஆவணமாகவும் பாடசாலையின் நூற்றாண்டு கால வரலாற்றினை சுருக்கமாக எடுத்தியம்பும் வரலாற்றுப் பெட்டகமாகவும், மாணவர்களதும் மற்றும் ஆசிரியர்களதும் எழுத்தாக்க வெளிப்பாட்டுக்கு களமாகவும் அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

மறைந்து கிடக்கும் மாணவர்களதும் மற்றும் ஆசிரியர்களதும் எழுத்தாற்றலை ஆண்டு தோறும் ***"வெட்டாப்பு"*** புதுப்பொலிவுடன் வெளிவந்து எம்மை வளப்படுத்தும்.

**திரு. க. உபேந்திரன்**

# நூற்றாண்டு விழா 1910 - 2010

## அதிபர் அறிக்கை

*மீன்பாடும் தேன்நாடாம் மட்டக்களப்பில், மட்டக்களப்பு நகரிலிருந்து தெற்கே சுமார் 31km தொலைவில் வளம் கொழிக்கும் பழம் பதியாம் குருமண்வெளிக் கிராமம் அமைந்துள்ளது. குருமார்கள் வசித்ததனால் குருமண்வெளி என சிறப்புப் பெயர் பெற்ற இக் கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கு கலங்கரை விளக்காகத் திகழ்வது மட்/ குருமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயமாகும். நூறு ஆண்டுகள் வரலாற்றைக் கொண்ட இவ்வித்தியாலயத்தின் 16ஆவது அதிபராகக் கடமையாற்றும் நான் வித்தியாலய நூற்றாண்டு விழாவுக்கு தலைமை வகிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.*

*நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் வித்தியாலயத்தின் கடந்த கால வரலாற்றை திரும்பிப் பார்த்தல் பொருத்தமானது என கருதுகின்றேன். இச் சந்தர்ப்பத்தில் இவ் வித்தியாலயத்தில் கடமையாற்றிய அதிபர்களை நினைவு கூரக்கடமைப்பட்டுள்ளேன்.*

| இல | அதிபர்களின் பெயர்கள் | இடம் | கடமையாற்றிய காலப்பகுதி |
|---|---|---|---|
| 01 | திரு.கி.தா.சீனித்தம்பி | குருமண்வெளி | 1910-1914 |
| 02 | திருமதி.மேரி சாமித்தம்பி | குருமண்வெளி | 1914-1923 |
| 03 | திரு.முகாந்திரம் ஜே.சீ.இளையதம்பி | குருமண்வெளி | 1923 - 1956.05.04 |
| 04 | திரு.க.ஏ.சரவணமுத்து | குருமண்வெளி | 1956.05.07 - 1963.11.11 |
| 05 | திரு.எஸ.ஈ.கணபதிப்பிள்ளை | குருமண்வெளி | 1964.01.01 - 1964.10.08 |
| 06 | திருமதி.கிருபையம்மா அழகையா | குருமண்வெளி | 1963.11.11 - 1965.06.30 |
| 07 | திரு.க.கந்தையா | பட்டிருப்பு | 1965.07.01 - 1967.09.18 |
| 08 | திரு.சா.நாகமணி | களுவாஞ்சிக்குடி | 1968.01.01 - 1970.07.19 |
| 09 | திரு.த.செல்வநாயகம் | குருமண்வெளி | 1970.08.01. - 1971.07.27 |
| 10 | திரு.மு.தம்பிராசா | பெரியகல்லாறு | 1971.08.01 - 1971.12.14 |
| 11 | திரு.த.செல்வநாயகம் | குருமண்வெளி | 1972.03.01 - 1973.09.02 |
| 12 | திரு.மு.இராசரெத்தினம் | குருமண்வெளி | 1974.01.01 - 1984.12.24 |
| 13 | திரு.இ.கந்தசாமி | குருமண்வெளி | 1985.02.15 - 1996.12.22 |
| 14 | திரு.கோ.கயிலாயபிள்ளை | குருமண்வெளி | 1997.01.09 - 2006.06.22 |
| 15 | திரு.சோ.தர்மசீலன் | மண்டூர் | 2006.07.12 - 2010.06.30 |
| 16 | திரு.வ.கனகரெத்தினம் | களுதாவளை | 2010.07.01 தொடக்கம் |

*நீண்ட கால கல்வி மரபினைக் கொண்ட இக்கிராமத்தில் ஆரம்பத்தில் குருகுலக் கல்வி முறையில் அமைந்த திண்ணைப்பள்ளியின் மூலமாகக் கல்வி போதிக்கப்பட்டது. குருமண்வெளியில் வாழ்ந்த குருமார்களில் ஒருவரான கிந்தாஸ் ஐயரின் மகன் சீனித்தம்பி அவர்கள் தற்போது எமது பாடசாலை உள்ள வளவில் திண்ணைப்பள்ளி ஒன்றினை நிறுவி கல்வி போதித்து வந்தார். கிறிஸ்தவ சமயத்தை போதிக்கும் நோக்குடன் மெதடிஸ்த திருச்சபையினர் இக்கிராமத்தில் செயற்படத்*

தொடங்கிய ஒரு காலகட்டத்தில் சீனித்தம்பி அவர்கள் கிறிஸ்தவ சமயத்தினைத் தழுவிக் கொண்டு தானியேல் சீனித்தம்பி ஆனார். இதனைத் தொடர்ந்து இவரது பொறுப்பிலிருந்த திண்ணைப்பள்ளி 1910ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதி மெதடிஸ்த மிசன் பாடசாலையாக - பாடசாலைக் கட்டமைப்புக்குள் கொண்டுவரப்பட்டது. இம் மெதடிஸ்த மிசன் பாடசாலையை ஸ்தாபிப்பதில் அமரர் கி.தா.சீனித்தம்பி முன்னோடியாக செயற்பட்டதுடன் பாடசாலையின் முதலாவது தலைமை ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

திரு. கி. தா. சீனித்தம்பி ஓய்வுபெற 1914ஆம் ஆண்டு இவரது மகளான மேரி சாமித்தம்பி தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றார். இவரே இப்பிரதேசத்தின் முதலாவது பெண் தலைமை ஆசிரியராவார். இவரைத் தொடர்ந்து பாடசாலை ஸ்தாபகரின் மற்றொரு மகளின் கணவரான முகாந்திரம் ஜே.சீ.இளையதம்பி அவர்கள் தலைமை ஆசிரியராக கடமையாற்றினார். இவர் கடமையாற்றிய காலகட்டம் இப் பிரதேச கல்வி வளர்ச்சியில் இவ் வித்தியாலயம் முதன்மையான பங்காற்றிய ஒரு காலப்பகுதியாகும். இவர் காலத்திலே **SSC** வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு பாடசாலை தரமுயர்ந்தது. சுமார் 33ஆண்டுகள் இவர் தலைமை ஆசிரியராக கடமையாற்றிய போது இக் கிராம பெற்றோருக்கு கல்வி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியதுடன் தேவையான கற்றல் உபகரணங்களையும் வழங்கி மாணவர் எண்ணிக்கையை உயர்த்தினார். வெளியூர் மாணவர்களும் இங்கு வந்து கல்வி கற்கத் தொடங்கினர்.

1960களில் மிசனெரி பாடசாலைகளை அரசாங்கம் கையேற்ற போது இப்பாடசாலையும் அரச நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. இக் காலகட்டத்தில் திரு.க.எ.சரவணமுத்து அவர்கள் தலைமை ஆசிரியராக கடமையாற்றினார். அவர் காலத்தில் 1958ஆம் ஆண்டு இப்பாடசாலையில் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

1973ஆம் ஆண்டு பாடசாலையின் வரலாற்றில் ஒரு திருப்புமுனை என குறிப்பிடலாம். 1960 இல் மிசனெரி பாடசாலையானது அரசாங்கப் பாடசாலையாக மாற்றப்பட்ட போதும் பாடசாலையின் பெயர் மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை என்றே இருந்தது. எனினும் ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் நன்கு அறியப்பட்ட எழுத்தாளரான அருள் செல்வநாயகம் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய போது, தான் ஒரு கிறிஸ்தவராக இருந்தபோதும் பெற்றோரின் கருத்துக்கு மதிப்பளித்து பாடசாலையின் பெயரை 1973.06.08ஆம் திகதி சிவ சக்தி வித்தியாலயம் என சைவப் பெயராக மாற்றியமைத்தார். இவரின் காலத்தில் பொதுமக்களின் பண உதவியுடன் பாடசாலைக்கென காணித்துண்டொன்றும் கொள்வனவு செய்யப்பட்டது.

1992ஆம் ஆண்டு பாடசாலையின் வரலாற்றில் மற்றொரு மைல்கல் எனக் குறிப்பிடலாம். இவ் ஆண்டிலேயே க.பொ.த. உயர்தரக் கலைப்பிரிவு இவ் வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதனால் பாடசாலையின் தரம் 1C ஆக மாற்றமடைந்தது. இதன் மூலம் இக் கிராம மாணவர்கள் தமது சூழலிலேயே உயர்தரக் கல்வியைப் பெறும் அரிய வாய்ப்புக் கிடைத்தது. இக் காலப்பகுதியில் இப்பாடசாலையின் அதிபராக திரு.இ.கந்தசாமி அவர்கள் கடமையாற்றினார். உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டதன் சிறந்த அறுவடையாக 1995ஆம் ஆண்டில் மாவட்ட நிலையில் முதலாம் இடத்தினை இப்பாடசாலை மாணவன் சீ.முரளிதரன் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்க சாதனை ஆகும். திரு.இ.கந்தசாமி அதிபர் அவர்களின் காலத்தில் பெற்றோரின் பங்களிப்புடன் பாடசாலைக்கென ஒரு துண்டுக் காணி கொள்வனவு

செய்யப்பட்டதுடன் மற்றுமொரு துண்டுக் காணி இக் கிராமத்தைச் சேர்ந்த மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் தற்போதைய உறுப்பினர் திரு.ப.கணேசன் அவர்களால் கொள்வனவு செய்யப்பட்டு பாடாாலைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. திரு கந்தசாமி அதிபரின் காலப்பகுதியிலேயே தற்போது இப்பாடசாலையில் இருக்கின்ற மாடிக் கட்டடங்கள் இரண்டும் நிர்மாணிக்கப்பட்டமை விஷேட அம்சமாகும். எனவே இவரது காலப் பகுதி பாடசாலையின் வரலாற்றில் ஒரு பொற்காலமாக கிராம மக்களால் குறிப்படப்படுகின்றது.

பாடசாலையின் வரலாற்றில் மற்றுமொரு முக்கிய கட்டம் 2001ஆம் ஆண்டு இடம்பெற்றது. கிறிஸ்தவ பாடசாலைக்கு சவாலாக சைவப் பாடசாலையாக 1942ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை 2001.01.01 முதல் இவ் வித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டு இவ் வித்தியாலயமானது இக் கிராமத்தின் தனித்துவமான கல்வி நிறுவனமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. இக்காலகட்டத்தில் பாடசாலையின் அதிபராக திரு.கோ.கயிலாயபிள்ளை அவர்கள் கடமையாற்றினார். இவரது காலப்பகுதியில் ஆரம்பப் பிரிவில் மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இவரைத் தொடர்ந்து பதவியேற்ற திரு.சோ.தர்மசீலன் அவர்கள் காலத்தில் மாடிக்கட்டட வேலை பூர்த்தி செய்யப்பட்டது.

இவ்வாறு நீண்ட கால கல்வி வரலாற்றினைக் கொண்ட இப்பாடசாலையின் நூற்றாண்டு விழா 19.12.2010 ஆம் திகதியாகிய இன்று நடைபெறுவதையிட்டு தற்போதைய அதிபர் என்ற வகையில் மனநிறைவடைகின்றேன்.

**சமய சமரசம்**

இப்பாடசாலையானது மெதடிஸ்த திருச்சபையினால் உருவாக்கப்பட்டதனால் கிறிஸ்தவ மிசனெரியினரின் முழுமையான கட்டுப்பாட்டில் இருந்தது. பாடசாலை மாணவர்களின் பெருந்தொகையினர் சைவ சமயத்தைச் சார்ந்திருந்தாலும் சைவ சமய நெறிமுறைகளை கைக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. காலை ஒன்று கூடலில் கிறிஸ்தவ ஆராதனைகளே இடம் பெற்றதுடன் வருடாவருடம் ஒளி விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 1960இல் அரசாங்கம் பாடசாலையை சுவீகரித்த போதிலும் நிலைமையில் மாற்றமேற்படவில்லை. இதனை சைவ மாணவர்கள் விரும்பவில்லை.

திரு.கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமை ஆசிரியராக கடமையாற்றிய போது மிகுந்த சிரமத்தின் மத்தியில் வெள்ளிக் கிழமைகளில் சைவ ஆராதனைகள் ஆரம்பிக்கப்பட்டது. இதே போல திருமதி.ஆர்.கே.அழகையா பதில் அதிபராக கடமையாற்றிய போது பெரும் போராட்டத்தின் மத்தியில் வாணி விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

தற்போது வெள்ளிக் கிழமைகளில் சைவ மாணவர்கள் சித்தி விநாயகர் ஆலயதிற்கும் கிறிஸ்தவ மாணவர்கள் மெதடிஸ்த தேவாலயத்திற்கும் சென்று இறை வழிபாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். சகலரும் ஒன்றிணைந்து வாணி விழாவினையும், ஒளி விழாவையும் கொண்டாடுகின்றனர். இவ்வகையில் சமய சமரசம் நிலவுகின்ற ஒரு பாடசாலையாக தற்போது குருமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயம் மிளிர்கின்றது.

## பரீட்சைப் பெறுபேறுகள்

எமது பாடசாலை மாணவர்கள் தரம் ஐந்து புலமைப்பரிசில்பரீட்சை, க.பொ.த (சா/த) பரீட்சை, க.பொ.த (உ/த) பரீட்சை ஆகிய பொதுப் பரீட்சைகளுக்குதோற்றுகின்றனர். தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையினைப் பொறுத்தவரை தற்போது வீதாசார அடிப்படையில் சித்தி பெறுவோரின் வீதம் குறைவாக உள்ள போதும் சித்தியடைந்த மாணவர்கள் தமது திறமையினை வெளிப்படுத்தத் தவறவில்லை. 2000ஆம் ஆண்டு இப்பரீட்சைக்குத் தோற்றிய சி.சிவராகவன் 170 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 18வது இடத்தைப் பெற்றுக் கொண்டார். இதே போல 2003இல் தி.தரண்யா 153 புள்ளிகளையும் 2006இல் கோ.ஆர்த்திகா 167 புள்ளிகளையும் 2010இல் பு.அனந்தசெயன் 168 புள்ளிகளையும் பெற்று வசதியான பாடசாலை மாணவர்களுக்கு தாம் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபித்துள்ளனர்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையினைப் பொறுத்தவரை 2003ஆம் ஆண்டில் கி. ஜயந்திமாலா என்ற மாணவி தான் தோற்றிய சகல பாடங்களிலும் அதி விஷேட சித்தி பெற்று பாடசாலைக்கும் கிராமத்திற்கும் பெருமை சேர்த்தார். இதே ஆண்டில் கே.அனிதா, இ.பிரார்த்தனா ஆகியோர் 7A. 1B சித்தியினையும் 2004இல் த.நிசிகேசன் 7A, 1B, 1C சித்தியினையும் 2009 இல் உ.ஆர்த்தி 8A, 1C சித்தியினையும் பெற்று தாமும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபித்துள்ளனர். பட்டிருப்பு கல்வி வலயத்தினால் நடாத்தப்பட்ட சாதனையாளர்கள் பாராட்டு விழாவில் வலயத்தில் இரண்டாவது சிறந்த பெறுபேறு பெற்றமைக்காக விருது வழங்கப்பட்டமை விஷேட அம்சமாகும்.

க.பொ.த உயர்தர பரீட்சையினைப் பொறுத்தவரை 1995ஆம் ஆண்டில் சீ.முரளிதரன் 4 பாடங்களிலும் A தரச் சித்தியினைப்பெற்றதுடன் மாவட்டத்தின் முதல் நிலை மாணவராக தெரிவு செய்யப்பட்டார். 1997இல் செ.மோகனவதனி 3A, 1B இணைப் பெற்று மாவட்ட நிலையில் நான்காவது இடத்தினைப் பெற்றுக்கொண்டார். 2004ஆம் ஆண்டில் பொ.பொன்சடாச்சரமும் 2005ஆம் ஆண்டில் பே.ஜனனியும் தாம் தோற்றிய 3 பாடங்களிலும் A தரச் சித்தியினைப் பெற்றதுடன் மாவட்ட நிலையில் முறையே 17, 5ஆம் இடங்களைப் பெற்று பாடசாலையைத் தலை நிமிரச் செய்தனர்.

## இணைப்பாடவிதானம்

பாடசாலைக்கென விளையாட்டு மைதானமோ, பயிற்றுவிப்பாளரோ இல்லாத நிலையிலும் தமது திறமையினால் பல மாணவர்கள் விளையாட்டுத்துறையில் பிரகாசித்துள்ளனர். 1968ஆம் ஆண்டில் செ.இராணி, த.தங்கம்மா, சி.பூமலர், இ.தவமணிதேவி ஆகியோர் மாகாண மட்டப் போட்டியில் பங்கு பற்றியுள்ளனர். 2005, 2006 ஆம் ஆண்டுகளில் செ.சுகந்தன், தி.தீபன் ஆகியோர் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டி பாடசாலைக்கு கீர்த்தியினைப் பெற்றுக் கொடுத்தனர். இதே போல் இப்பாடசாலையின் பழைய மாணவரான S.ரமணன் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்று கிராமத்தின் பெயரை தேசிய மட்டத்தில் பிரகாசிக்கச் செய்தார்.

தமிழ்த்தினப் போட்டியில் 2009ஆம் ஆண்டு உ.ஆர்த்தி சிறுகதை ஆக்க நிகழ்வில் மாகாண மட்டத்தில் முதல் இடத்தினைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தகைமை பெற்றார். இரண்டாம் மொழி சிங்கள தினப் போட்டியில் 2008இல் யோ.கிஷாந்தினி சிங்கள எழுத்தாக்கப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடத்தைப்

பெற்று எமது பாடசாலைக்கும் பட்டிருப்பு கல்வி வலயத்திற்கும் பெருமை சேர்த்தார். 2009 இல் தேசிய கலை இலக்கிய மகோற்சவத்தினை முன்னிட்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட பாடலாக்க நிகழ்ச்சியில் பொ.அனுசியா மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றார். விஞ்ஞான வினாடி வினாப் போட்டியில் 2007இல் கோ.ஆர்த்திகா முதலாம் இடத்தினையும் 2009இல் மூன்றாம் இடத்தினையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்தார்.

## மட்/ குருமண்வெளி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்களின் விபரம்

| தொ. இல | அதிபர்களின் பெயர் | இடம் | கடமையாற்றிய காலப்பகுதி |
|---|---|---|---|
| 01 | திரு.மு.இளையதம்பி | குருமண்வெளி | 1946 - 1948 |
| 02 | திரு.க.வேல்முருகு | பழுகாமம் | 1948 - 1955 |
| 03 | திரு.மு.தம்பிராசா | பெரிய கல்லாறு | 1955 - 1959 |
| 04 | திரு.க.வெ.வீரக்கோன் | கோட்டைக்கல்லாறு | 1959 - 1961 |
| 05 | திரு.மு.இளையதம்பி | குருமண்வெளி | 1961 - 1964 |
| 06 | திரு.மு.இராசரெத்தினம் | குருமண்வெளி | 1964 - 1971 |
| 07 | திரு.சீ.தம்பிராசா (பண்டிதர்) | பெரிய கல்லாறு | 1971 - 1972 |
| 08 | திரு.வீ.தம்பையாப்பிள்ளை | குருமண்வெளி | 1972 - 1979 |
| 09 | திரு.பி.கி.இராசதுரை கவிஞர் இராஜபாரதி) | குருமண்வெளி | 1980 - 1984 |
| 10 | திரு.சி.சோமநாதன் | களுவாஞ்சிக்குடி | 1984 - 1986 |
| 11 | திரு.ச.இரட்ணசிங்கம் | குருமண்வெளி | 1986 - 1989 |
| 12 | திரு.செ.காசிப்பிள்ளை | குருமண்வெளி | 1989 - 1996 |
| 13 | திரு.தெ.சங்கரலிங்கம் | களுவாஞ்சிக்குடி | 1996 - 1999.12.31 |

*நம்பிக்கையை மனதில் உறுதியாகக் கொண்டு*
*நடந்து பாருங்கள் வசந்தங்கள் நம்முடன்*
*கை கோர்த்து கூட வரும்....*

## மட்/ குருமண்வெளி சிவ சக்தி மகா வித்தியாலயத்தின் அதிபர்கள்


திரு. கி. தா. சீனித்தம்பி


திருமதி. மேரி. சாமித்தம்பி


திரு. முகாந்திரம். ஜே. சீ. இளையதம்பி


திரு. க. எ. சரவணமுத்து


திரு. எஸ். ஈ. கணபதிப்பிள்ளை


திருமதி. ஆர். கிருபையம்மா அழகையா


திரு. க. கந்தையா


திரு. சா. நாகமணி


திரு. த. செல்வநாயகம்


திரு. மு. தம்பிராசா


திரு. மு. இராசரெத்தினம்


திரு. இ. கந்தசாமி


திரு. கோ. கயிலாயபிள்ளை


திரு. சோ. தர்மசீலன்


திரு. வ. கனகரெத்தினம்

மட்/ குருமண்வெளி

சிவ சக்தி மகா வித்தியாலயத்தின்

# சாதனையாளர்கள்


யோ.கிஷாந்தினி


கோ.ஆர்த்திகா


உ.ஆர்த்தி


கி.ஜயந்திமாலா


பொ. அனுஷியா


சி.மோகனவதனி


சி.சிவராகவன்


சீ.முரளீதரன்


பொ.பொன்சடாச்சரம்

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

இன்றைய சமுதாயத்தை எடுத்துப் பார்ப்போமானால் இன்றைய சிறுவர்கள்தான் நாளைய தலைவர்களாக மின்னிக் கொண்டிருப்பதனை நாம் காணக் கூடியதாக உள்ளது. பிள்ளைகளின் மனதை சிறு பராயத்திலிருந்து புரிந்து கொள்வது மிக அவசியமானதாகும். சிறு வயதில் இருந்து நல்ல பண்புகளையும், நற்குணங்களையும் வளர்த்தால்தான் சமூகத்தில் மட்டுமன்றி நாட்டுக்கும் நல்ல குடிமகனாகத் திகழ்கின்றனர். இவற்றிற்கு குடும்பம், சூழல், பாடசாலை போன்றவை முக்கிய பங்களிப்பைச் செலுத்துகின்றன.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்ற பாடலை நோக்குகின்ற போது குடும்பம் பெரியதொரு பங்களிப்பைச் செலுத்துகின்றது. இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்களாக மிளிர்வதற்கு பெற்றோர் முதற் படியாக அமைகின்றனர். ஆரோக்கியமான குடும்பம் ஒன்றில் அன்பு, ஆதரவு, பணிவு என்பன மேலோங்கிக் காணப்படும். இதை சிறுவர்களும் பின்பற்றி நல் விழுமியங்களை உள்வாங்கி நற் பிரஜைகளாக வளர்வதற்கு வாய்ப்பாக உள்ளது. ஆரோக்கியமற்ற அதாவது பிரச்சினைக்குரிய குடும்பங்களில் முதியோரை மதிக்காமை, பிறர் கருத்தை கவனத்தில் எடுக்காமை, மது அருந்துதல், புகைத்தல் விட்டுக் கொடுக்காத தன்மை போன்ற கெட்ட பண்புகளைக் கொண்ட குடும்பத்தில் வளர்கின்ற பிள்ளை உள ஆரோக்கியம் அற்றவனாக சமூகத்தில் காணப்படுவான்.

ஒருவனுடைய எதிர் காலம் சிறு வயதில் அவனது செயல் நடத்தைகள் என்பன எதிர்கால தலைவனாக வருவதைத் தீர்மானிக்கின்றது. இதற்கு உதாரணமாக "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்ற பழமொழி சிறந்த எடுத்துக் காட்டாக காணப்படுவதை எம்மால் கண்டுகொள்ள முடிகிறது. எனவே அவனது குழந்தைப் பருவத்தில் இருந்த வளர்ப்பே அவனது உயர்ச்சிக்கு காரணமாய் அமைகின்றது. இன்றைய சிறுவர்களை எதிர்காலத் தலைவர்களாக மிளிரச் செய்வதற்கு பாடசாலை பாரிய பங்களிப்பை ஆற்றுகின்றது. பாடசாலை அறிவை மட்டும் போதிக்கும் இடமல்ல. ஒழுக்கம், பணிவு கட்டுப்பாடு, பொறுமை, தலைமைத்துவப் பண்பு போன்ற பண்புகளை எல்லாம் போதிக்கும் இடமாக உள்ளது. மாணவர் ஒருவனை நாளைய சமுதாயத்தில் சிறந்த தலைவனாக வளர்ப்பதில் பாடசாலையின் பங்களிப்பு பிரதானமானதாக அமைகின்றது.

சிறுவர்கள் அனைவரும் நாளைய தலைவர்களாக இருப்பார்கள் என்று கூற முடியாது. ஏனெனில் பணிவு, பொறுமை, தியாக உணர்வு, பிறர் உணர்வுகளை மதித்தல் போன்ற விழுமியங்களை சிறு வயதிலே கற்றுக் கொள்கின்றவர்கள் நாளைய சமுதாயத்தில் நற் பிரஜைகளாக நல்ல தலைவர்களாக மிளிர்வார்கள். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பதற்கு அமைய சிறுவயதில் கற்கின்ற கல்வி விழுமியப் பண்புகள் சாகும் வரை தொடர்ந்து வரும் என்று கூறப்படுகின்றது.

சிறு பராயத்தில் இலட்சிய நோக்குடனும் குறிக்கோள்களுடனும் வளர்பவர்கள் எதிர்காலத்தில் நல்ல தலைவர்களாக உருவாக முடியும். அவர்களது கெட்ட சிந்தனைகள் அகற்றப்பட்டு நல்ல எண்ணங்களும், சிந்தனைகளும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். ஒருவனிடத்தில் காணப்படுகின்ற நல்ல இலட்சியம், விடாமுயற்சி, தன்னம்பிக்கை என்பனவே எதிர்காலத்தை தீர்மானிக்கின்றன.

இன்றைய சூழ்நிலையில் சிறுவர்கள் பல தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர். பாடசாலைக்குச் சென்று படிக்கக் கூடிய காலத்தில் பாடசாலை செல்லாது வேலையில் ஈடுபடுதல் பாரிய ஒரு சவாலாகக் காணப்படுகின்றது. சிலர் சிறு வயதிலே தீய பழக்கங்களுக்கு அடிமையாகி தங்களைத் தாங்களே அழித்துக் கொள்கின்றனர். மது, புகைத்தல் போன்றவற்றிற்கு அடிமையாதல், இளம் வயதில் திருடர்களாக வளர்தல், ஆபாசப் படங்களைப் பார்ப்பது, பெண்களுக்கு தொல்லை கொடுப்பது போன்ற பண்புகளைக் கொண்டவர்களை சமூகம் புறக்கணிக்கும். இவ்வாறான நிலையினை மாற்றுதல் வேண்டும். இச்செயற்பாடு பிழையானது எனப் புரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் இதனைப் புரிந்து கொண்டால் ஒவ்வொருவரும் திருந்தி நற் பிரஜைகளாக உருவாக முடியும்.

எனவே இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்களாகத் திகழ வேண்டுமாயின் நல்ல கல்வியறிவும் ஒழுக்கம், பணிவு, பொறுமை, தியாகம் போன்ற விழுமியங்களையும் நல்ல இலட்சியங்களை உடையவர்களாகவும் தன்னம்பிக்கை உடையவர்களாகவும் திகழ்ந்தால் நாளைய தலைவர்களாக வர முடியும். “நல்லவராவதும் தீயவராவதும் அவரவர் எண்ணங்களைப் பொறுத்ததே” என்பதற்கு அமைய நாம் நல்லவற்றை சிந்தித்து நற் செயலில் ஈடுபட்டு சமூகம் போற்றும் நற் பிரஜைகளாக வாழ்வோம்.

**ப. கௌசிகா**
*தரம் :- 13 கலை*

## பிள்ளைகளது வாழ்வே அவர்களது கல்வி

விமர்சனத்திடையே வாழும் பிள்ளை
கண்டனம் செய்யக் கற்றுக்கொள்கின்றது.

பகைமையிடையே வாழும் பிள்ளை
சண்டையிடுவதற்குக் கற்றுக்கொள்கிறது.

நேர்மையிடையே வாழும் பிள்ளை
நீதியைக் கற்றுக்கொள்கிறது.

கேலிப் பேச்சுக்களிடையே வாழும் பிள்ளை
கூச்சப்படவும் ஒதுங்கிக் கொள்ளவும் பழகும்

பொறாமையிடையே வாழும் பிள்ளை
குற்ற உணர்வு கொள்ளப் பழகுகிறது

அவநம்பிக்கையிடையே வாழும் பிள்ளை
சூழ்ச்சி மிக்கதாக இருக்கக்
கற்றுக்கொள்கிறது.

சகிப்புத் தன்மையிடையே வாழும் பிள்ளை
பொறுமையாக இருக்கக் கற்றுக்கொள்கிறது

பகிர்ந்து கொடுப்புக்களிடையே வாழும் பிள்ளை
பிறர் உணர்வை மதிக்கக்கற்றுக் கொள்கிறது.



உற்சாகப்படுத்தலிடையே வாழும்
பிள்ளை தன்னம்பிக்கையை
கற்றுக்கொள்கிறது.

புகழ்ச்சியிடையே வாழும் பிள்ளை
பாராட்டக் கற்றுக்கொள்கிறது.

பாதுகாப்பினிடையே வாழும் பிள்ளை
நம்பிக்கைத் தன்மையை பெற
கற்றுக்கொள்கிறது.

மதிப்போடு வாழும் பிள்ளை
தன்னை நேசிக்கக்
கற்றுக்கொள்கிறது.

கல்வியறிவினிடையே வாழும் பிள்ளை
மெய்யறிவைக் கற்றுக் கொள்கிறது.

வரபேற்புடனும் நட்புடனும் வாழும்
பிள்ளை
இப்புவியில் அன்பைத் தேடக்
கற்றுக் கொள்கிறது.

பரிகசிப்பினிடையே வாழும் பிள்ளை
பயந்தாங் கொள்ளியாக இருக்கக்
கற்றுக்கொள்கிறது

- நன்றி - (Children Learn What They Live)

## என்னுடைய சேவைக்காலத்தில் குருமண்வெளிப் பாடசாலை

# ஓர் பார்வை

ஒரு நூற்றாண்டு காலத்தைத் தாண்டி நிற்கும் குருமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயத்தின் ஆரம்பம் திண்ணைப்பள்ளி 1910 ஆம் ஆண்டளவில் மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையாக மாற்றப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்ட பாடசாலை நிருவாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. கலைத்திட்டத்திற்கு அமைவாக பாடங்களும் போதிக்கப்பட்டன. தொடர்ச்சியாக மெதடிஸ்த மிஷன் பாடசாலை சிறப்பாக இயங்கியது. கிராமத்தவர்கள் கல்வியைப் பெறும் வாய்ப்பு ஏற்பட்டது. குருமண்வெளியின் ஆரம்பக் கல்வி வளர்ச்சிக்கு இந்த மெதடிஸ்த மிஷன் பாடசாலையின் பங்களிப்பு அளப்பரியது.

மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் குருமண்வெளியைச் சேர்ந்த பலர் தலைமை ஆசிரியர்களாக கடமையாற்றியுள்ளனர். இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு பலருடைய பங்களிப்பு இருந்துள்ளது என்பதை யாவரும் அறிவோம். ஆயினும் என்னுடைய நோக்கில் மூன்று காலகட்டங்களில் சேவையாற்றிய மூவரைக் குறிப்பிடலாம் என எண்ணுகிறேன்.

என்னுடைய சிறு வயது காலத்திற்கு முன்பே சேவையாற்றி எல்லோராலும் இன்று வரை பெரிய ஐயா என அழைக்கப்படும் திரு.ஜே.சீ.இளையதம்பி அவர்கள், அடுத்ததாக மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையை சிவசக்தி வித்தியாலயமாக மாற்றியமைத்த திரு.அருள்செல்வநாயகம் அவர்கள், அடுத்து நகரப்புற பாடசாலைகளில்தான் தரமான கல்வியைப் பெறலாம் என்றிருந்த கருத்தை மாற்றியமைத்து கிராமப்புற பாடசாலைகளிலும் தரமான கல்வியைப் பெற முடியும் என செயலில் காட்டிய திரு.இ.கந்தசாமி அவர்கள்.

சுமார் 33 வருடங்கள் மெதடிஸ்த மிஷன் பாடசாலையின் தலைமையாசிரியராக இருந்த திரு.ஜே.சீ.இளையதம்பி அவர்களின் சேவை அளப்பரியது. வீடு வீடாகச் சென்று மாணவர்களை அழைத்து வந்து அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி கல்வியைப் போதித்தார். இவர் காலத்தில் அயல் கிராமங்களைச் சேர்ந்த பலர் இங்கு கல்வியைப் பெற்றுக் கொண்டனர். இவர் காலத்தில் பல விதங்களில் வளர்ச்சி கண்டு உயர்தர பாடசாலையாக மாற்றமடைந்தது. இவர் காலத்தில் கல்வி கற்ற பலர் பல உத்தியோகங்களை வகித்து இன்று சேவையிலிருந்து ஓய்வு பெற்று வாழ்கின்றனர். இவருடைய சேவைக்காலம் கிராமத்து மக்களின் பொன்னான காலம் என்பதில் ஐயமில்லை.

அடுத்ததாக மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை இன்று சிவசக்தி மகா வித்தியாலயமாக உயர்ந்து நிற்பதற்கு திரு.அருள்செல்வநாயகம் அவர்களின் பெரு முயற்சியே காரணமாகும். 1970 – 1973 வரையில் இவருடைய சேவைக்காலத்தைக் குறிப்பிடலாம். எழுத்துலகில் பிரபல்யமான இவர் குருமண்வெளி எனும் கிராமத்தை பலர் அறியச் செய்ததில் முக்கியமானவர். துணிச்சலான இவரின் பணியை நாம் இன்றுவரை நினைவு கூருகின்றோம்.

*அடுத்ததாக இப்பாடசாலையின் பழைய மாணவராக இருந்து அதிபராக சேவையாற்றிய திரு.இ.கந்தசாமி அவர்கள் 1985 - 1996 வரை இவரது சேவைக்காலமாகும். அயற்கிராமங்களுக்குச் சென்று கல்வியைப் பெறுவதைத் தவிர்த்து இப்பாடசாலையிலே கல்வியைப் பெறுவதற்கு வழிகாட்டியாக இருந்தவர். இவருடைய பெரு முயற்சியின் பயனாக பௌதீக வளங்களை பெற்றுக் கொண்டதோடு ஆளணியினரையும் அதிகரித்து இப்பாடசாலையை தனது சீரான நிருவாகத்தின் கீழ்க் கொண்டு வந்தார். இவர் வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இவர் காலத்தில் கடமையிலிருந்த திரு.எஸ்.எஸ்.மனோகரன் போன்ற மேலதிகாரிகளும் உறுதுனையாக இருந்தனர். பாடசாலை சிறந்த வளர்ச்சியைப் பெற்றது, மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டனர். இவர் காலத்திலேயே க.பொ.த உயர் தரம் ஆரம்பிக்கப்பட்டது. சிவசக்தி வித்தியாலயம் சிவசக்தி மகா வித்தியாலயமாக தரமுயர்ந்தது. மாணவர்கள் க.பொ.த உயர் தரத்தில் திறமையாக சித்தியடைந்து பல்கலைக்கழகம் சென்றனர்.*

*திரு.இ.கந்தசாமி அவர்களின் சேவைக்காலத்திலேயே அதாவது 24.05.1993 - 20.12.1996 வரை பிரதி அதிபராகவும், திரு.இ.கந்தசாமி அவர்கள் ஓய்வு பெற்ற பிற்பாடு 21.12.1996 இல் இப்பாடசாலையின் அதிபராக கடமையேற்றேன். என்னுடைய காலத்திலும் தொடர்ந்து கல்வி வளர்ச்சியடைந்து கொண்டு சென்றது. 1986 இல் மொத்தம் 467 ஆக இருந்த மாணவர் தொகை 1996 இல் 978 ஆக அதிகரித்தது. 15 ஆக இருந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 38 ஆக உயர்ந்தது. என்னுடைய முயற்சியின் பயனாக பௌதீக வளங்களும் அதிகரித்தன.*

*10.01.2001 இல் மட்/ குருமண்வெளி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மட்/ குருமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டது. அதன் பிற்பாடு ஆரம்பப் பிரிவினை தமிழ்க் கலவன் பாடசாலையிலேயே இயங்கவைத்தோம். பெற்றோரின் நிதி உதவியினைப் பெற்று பாடசாலை சுற்று மதில்களைக் கட்டினோம். அதே நிதி உதவியுடன் பாடசாலைக்கு என்று கணணி வசதியினை ஏற்படுத்தினோம். பாராளுமன்ற உறுப்பினரின் நிதி உதவியினைப் பெற்று மின்சார வசதி, தொலைபேசி வசதி என்பவற்றை ஏற்படுத்தினோம். அத்துடன் நிக்கொட் திட்டத்தின் கீழ் மாடிக்கட்டிடம் ஒன்றும் அமைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு எங்களால் அடிக்கல்லும் நாட்டி வைக்கப்பட்டது.*

*கல்வி நிலையிலும் பாடசாலை வளர்ச்சி கண்டது. புலமைப்பரிசில் பரீட்சையில் வருடாவருடம் மாணவர்கள் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக் கொண்டனர். க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் மாணவர்கள் சித்தியடையும் வீதம் அதிகரித்தது. தொடர்ச்சியாக இப்பாடசாலையிலிருந்து பல மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானார்கள்.*

*என்னுடைய சேவைக்காலத்தில் இப்பாடசாலையின் வளர்ச்சியில் இன்னுமோர் முக்கியமான விடயம் ஆங்கிலக் கல்வியின் முன்னேற்றமாகும். ஆங்கில மொழி சித்தியடையும் வீதத்தில் பட்டிருப்பு வலயத்தில் இறுதி நிலையிலிருந்த குருமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயம் முதன் நிலையை அடைந்தமையை இங்கு குறிப்பிட்டுக் கூற வேண்டும். 1999 - 2006 வரை இப் பாடசாலையில் சேவையாற்றிய ஆங்கில ஆசிரியர் திரு.செ சிவசுப்பிரமணியம் பாராட்டப்பட வேண்டியவர்.*

இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் எமது பாடசாலை பின் நின்றதில்லை. வருடா வருடம் இல்ல விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா, ஏனைய பாடசாலை விழாக்கள் அனைத்தும் கிரமமாக நடைபெற்றன. எமது சேவைக்காலத்தில் கல்வியிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் மாணவர்கள் தமது திறமையினை வெளிப்படுத்தினர். இதற்கு உறுதுணை புரிந்தவர்களில் திரு.ஆ.உதயகுமார், திரு.அ.கருணாநிதி ஆகிய ஆசிரியர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இன்று எமது நாட்டிலும் வெளிநாடுகளிலும் இப்பாடசாலையில் கல்வி பயின்றவர்கள் பல்வேறு உயர் பதவிகளில் உள்ளனர் என்பது பெருமைக்குரியது.

இப்பாடசாலையில் அதிபர் சேவை எனும் சீரிய பணியில் கடமை தவறாது ஈடுபடுவதில் துணைநின்ற ஆசிரியர்கள், மாணவர்கள், கிராம மக்கள், அனைவருக்கும் எனது பாராட்டுதல்களும் நன்றியும் உரித்தாகட்டும்.

**கோ.கைலாயபிள்ளை** (அதிபர்)
மட்/ எருவில் கண்ணகி மகா வித்தியாலயம்.

## விடியலை நோக்கி...

*காலையில் சூரியன் வருவதால்*
*காலை விடிகிறது*
*இரவில் சந்திரன் வருவதால்*
*இரவு விடிகிறது - ஆனால்*
*என் வாழ்வில்*
*இருள் மட்டும் இன்பமாக*
*இருப்பிடம் கொள்கிறது*
*கவலைக்கடல் வற்றவில்லை*
*கனவு மலை நிலைக்கவில்லை*
*உயிரற்ற உடல் போல்*
*உறக்கமின்றி உலாவுகிறேன்*
*அலைகடல் ஓயாதா...? - என்*
*கவலையது தீராதா*
*சோதனையும் சோகமும்*
*சுகமான சுமைகளாகபாதையை நிரப்பி*
*வேதனையை பெருக்கிடுதே*
*வழி தெரியவில்லையே*
*இருள் என்னும் கவலையைப் போக்க...*
*ஒளி என்னும் மகிழ்ச்சி வந்து*
*விரட்டிட மாட்டாதா..? - என்*
*வாழ்க்கையில் விடிவு எனும் ஒளி*
*வரமாட்டாதா.........???*
*ஒளி கொண்ட வழி தேடி அலைகிறேன்*
*விடிவெள்ளி கொண்ட விடியலை நோக்கி.*



**சி.செல்வமதி**
தரம் -12 கலை

நில்லாது விரைந்து ஓடுகின்ற காலம் என்னும் ஓடத்தில் பயணிக்கும் மனிதர்களான எம் வாழ்விற்கு அன்பு மிகவும் முக்கியமானதாகும். அன்பில்லையேல் மனிதர்கள் புனிதமும் பூரணமும் அற்றவர்களாகின்றனர். அன்பு என்பது நாம் மற்றவருடன் வைத்துள்ள ஒரு புனிதமான உறவு என்று சொல்லலாம். எமது குடும்பத்திலிருந்து நாம் வாழும் சமூகம் வரை ஒவ்வொருவருடனும் எமது உறவானது அன்பினால் கட்டுப்பட்டிருந்தால் மட்டுமே எமது வாழ்வு பூரணமடையும்.

அந்தவகையில் அன்பின் முதல் அனுபவங்களை எமது சொந்த இல்லங்களிளேயே அனுபவிக்கின்றோம். நாம் குழந்தையாய் இருந்த போது தாயின் அரவணைப்பில் வளர்ந்தோம். அவர் உடலின் பலத்தை பாலின் மூலம் பருக்கி சிறுவயது முதல் எம்மைப் பாதுகாத்து எமக்குத் தேவையான அனைத்தையும் தந்து எம்மை அன்பால் வழிநடத்தினார். எமது சகோதரர்கள் தந்த அன்பினாலும் உறவுகள் தந்த அன்பினாலும் போஷித்து வளர்க்கப்பட்டு சமூகத்தில் விடப்படுகின்றோம். எமது நண்பர்கள், அயலவர்கள், எம் ஆசிரியர்கள் ஆகியோர் தந்த அன்பில் நனைந்து வாழுகின்ற எமக்கு எம் வாழ்வின் ஒவ்வொரு கட்டமும் அன்பினாலே பூரணப்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு ஒவ்வொருவரிடமும் அன்பைக் கடனாகப் பெற்ற நாம் அதனை திருப்பி அவர்களுக்கு கொடுப்பது அவசியமாகும். ஒரு கவிஞன் பின்வருமாறு கூறுகின்றான். "வாழ்க்கை மலர் போன்றது. அதில் அன்பு தேன் போன்றது." என்று மலர் கொண்டுள்ள தேனின் காரணமாக வண்டு முதலியன அதனை நாடுகிறது. அதே போல் நாம் அன்புள்ளவர்களாக இருந்தால் மட்டுமே ஏனையவர்களால் விரும்பப்படுகின்றவர்களாவோம். ஆகவே நாம் அன்பைப் பெற்றவர்களாக மட்டும் இருக்காது அன்பு செலுத்துகின்றவர்களாகவும் இருக்கவேண்டும்.

சமூகத்தில் பலர் எம்முடன் அன்பாகப் பேசுவர், பழகுவர். ஆனால் இதில் வெளிவேஷமான மாய அன்பும் கலந்து காணப்படும். இதனை நாம் இனங்கண்டு உண்மையான அன்பை மட்டும் புரிந்து நடப்பது அவசியமாகும். பரிசுத்த வேதாகமம் உண்மையான அன்பின் பண்புகளை பின்வருமாறு கூறுகின்றது. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. அன்புக்குப் பொறாமையில்லை, அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், விசுவாசிக்கும், நம்பும், சகிக்கும் என்பவற்றைக் கூறலாம். ஆகவே இந்த அன்பின் அடையாளங்களைக் கொண்டுநாம் உண்மையைப் புரிந்து சிறப்பான வாழ்வினை அடையலாம்.

உலகப் பொதுமறையை ஈன்ற பொய்யாமொழிப்புலவரின் திருவரிகள் பின்வருமாறு கூறுகின்றன.

**"புறத்துறுப்பு எல்லாம் எவன் செய்யும்**
**யாக்கை அகத்துறுப்பு அன்பில் அவர்க்கு"**

அதாவது உடம்பை சுட்டெரித்துக் கொடுத்தாலும் அன்பு இல்லாவிட்டால் பிரயோசனம் இல்லை என்பதாகும். இதன் மூலம் எம் வாழ்வில் அன்பின் அவசியம் தென்படுகிறது இல்லையா? நாம் செல்வராகவோ, கல்வியில் பெரியவர்களாகவோ, வீரத்தில் வலியவராகவோ இருக்கலாம். ஆனால் அன்பில்லாவிட்டால் பிரயோசனம் ஒன்றுமில்லை. திருவள்ளுவர் தனது திருக்குறளில் இவ்வாறு கூறுகின்றார்.

***"அன்பகத்து இல்லா உயிர் வாழ்க்கை வன்பால் கண் வற்றல் மரம் தளிர்த்தற்று"***

அதாவது மனதில் அன்பு இல்லாத உயிர் வாழ்தல் வலிய நிலத்தில் வற்றிய மரம் தளிர்த்தது போன்றது. ஆகவே எமது வாழ்வில் அன்பு என்பது மிகவும் முக்கியமானதாக அமைகின்றது. இவ்வுலக வாழ்வினை சிறப்பாக வாழ்ந்து அன்புக்கு இலக்கணமாக அமைந்த இயேசுகிறிஸ்து, கௌதமபுத்தர், அன்னைதெரேசா, மகாத்மாகாந்தி, புளோரன்ஸ் நைட்டிங்கேள், ஆகியோரின் வாழ்க்கையை எம்வாழ்வின் முன்மாதிரியாகக் கொண்டு நாமும் எம்வாழ்வில் அன்பை விதைக்க வேண்டும்.

இன்றைய காலமானது மக்கள் அனைவரையும் பாவமான வாழ்விலே மூழ்க வைத்துள்ளதுடன் தீய காரியங்கள் ஒவ்வொன்றுக்கும் விலை மலிந்துள்ள காலமாகவும் பாவமானது உலகையே மாற்றிக் கொண்டு வரும் காலமாகவும் திகழ்கின்றது. ஆகவே இந்தக் காலங்களில் நாம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியையும் கவனமாக வைக்க வேண்டும். குறிப்பாக இந்தக்காலம் வாலிபப் பருவத்தவர்களை திசை திருப்பும் ஒன்றாக அமைந்துள்ளது.

ஆகவே நாம் இவற்றில் இருந்து விடுபட அன்பையே ஆயுதமாகப் பயன்படுத்த வேண்டும். அதற்காக எமது உள்ளத்தை அன்பினால் நிறைத்து எம்மிடம் காணப்படும் எரிச்சல், பொறாமை, வஞ்சகம், அடுத்துக்கெடுத்தல் போன்ற தீய குணங்களை விட்டு அன்பு என்னும் உத்தம பண்பையும் கருணை, இரக்கம், நீதி,நேர்மை, நியாயம், காருண்யம் போன்ற நல்ல பண்புகளையும் எம் வாழ்வின் அத்தியாயத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

அத்துடன் இறைவனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு நாம் வாழும் போது எம்மை அணுகும் சகல சிக்கல்களும் இறைவன் தரும் அன்பால் தீர்ந்துவிடும். ஆகவே இந்த உலகின் நாகரிக மோகத்தில் நாமும் மூழ்கி வெண்ணிறமான எம் வாழ்வில் கரும்புள்ளி விழாதவாறு எம்மைக் காத்துக்கொள்ள அன்பை பேராயுதமாக எம் உள்ளங்களில் ஏந்தி பிறரை நேசித்து எமது சமுதாயத்திற்கு அன்பினால் புனர்வாழ்வு கொடுப்போம்.

**"அன்பு போர் போன்றது
தொடக்குவது சுலபம்
நிறுத்துவது சிரமம்"**



**ஜெ.ஜோயல்மனோஜ்**
தரம்-**11S**

## இடைநிலை வகுப்பு மாணவர்களின் தமிழ்மொழி பயிற்சிகளில் ஆசிரியர் விடும் தவறுகள்

# சில அவதானிப்புகள்...

இன்றைய காலகட்டத்தில் பல்துறை சார்ந்த அறிவு தமிழாசிரியருக்கு அவசியமானது என்ற கருத்து உணரப்பட்டுள்ளது. தற்கால தொழில்நுட்ப அபிவிருத்தியை மக்கள் வாழ்க்கையின் தேவைகளுடன் தொடர்புபடுத்தி பயன்படுத்துகின்ற நவீனத்துவப் பிரயோகங்கள் தமிழ் பயிற்றுதலில் பயன்படுத்தப்பட வேண்டியது அவசியம். தமிழ் மொழியின் சமகால உலகப் பரம்பலை நோக்கும் போது தமிழ் இன்று பாரம்பரிய நிலைமைக்கு முற்றிலும் மாறான சூழ்நிலையில் பயிலவும் பயிற்றுவிக்கவும் வேண்டிய தேவையுள்ளது.

தாய்மொழி ஆசிரியர்கள் இதுவரை இலக்கிய இன்பம் அடைவதே கல்வியின் நோக்கம் என்று எண்ணியிருந்தனர். அந்த நோக்கத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். மொழியைக் கற்பது இலக்கியம் படித்து நுகர்வதற்காக மட்டும் அன்று. கல்வி மனிதனை முழுமையடையச் செய்யும் சாதனம். மனிதனை சிறந்த பிரஜையாக வாழ வழிவகுக்கும். குழந்தையின் மனதைப்பற்றி அறிஞர்கள் அனுபவத்தில் கண்டறிந்த உண்மைகளைத் தெரிந்து கொண்டு தமிழ்மொழிப் பயிற்சிகளை எவ்வாறு கையாளலாம் என சிந்திக்க வேண்டும். தாய்மொழியைக் கற்பதற்கும் வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பை மாணவர்கள் உணரும்படி செய்யவேண்டும். அன்றாட வாழ்க்கையுடன் வாழும் சூழ்நிலைகளுடன் கவனித்து அதற்கேற்ப செயற்றிறன்களை வகுத்து பயிற்றுதல் வேண்டும். அன்றாட வாழ்க்கையில் மொழி எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதை தாய்மொழி ஆசிரியர்கள் உணர வேண்டும்.

இக்காலத்தில் அறிவுத்துறை பன்முகவிரிவை எய்தியிருப்பதை எல்லோரும் அறிவர். இவ் அகன்ற துறைக்கேற்ற சொல்வளமும், நடைப்பொருத்தமும் இன்றைய தமிழுக்கு அவசியம். இவை வழக்காற்றில் பயின்று வரும்போது மொழி புத்துயிரும் தரமும் பெறும். புதிய கல்வி முறை தமிழில் பல்வேறு வகையான உரைநடைகளின் தோற்றம் அதன் பயனாக தமிழ் மொழியும் நவீன மொழியாக வாழத்தலைப்பட்டது. அறிவியல் போன்ற துறைகள் வளர வளர தமிழ் பல்வேறு மாற்றங்களைக் கண்டது. புதிய புதிய கலைச்சொற்கள் புதிய இலக்கணக் கூறுகள் புதிய வாக்கிய அமைப்புக்கள் முதலிய பல நிலைகளில் தமிழில் மாற்றங்கள் ஏற்பட்டன. இம் மாற்றங்களை அறிந்து அதற்கேற்ற வகையில்மொழியைக் கையாளும் வல்லமையை தாய்மொழி ஆசிரியர்கள் பெற வேண்டும்.

தமிழ் மொழி ஆசிரியர்கள் தமிழைப் போதிப்பதற்கேற்ற வகையில் பாடசாலை மாணவர்களுக்கு பாடநூல்கள் எழுதப்பட்டுள்ளன. அதனுடன் சேர்ந்து வழிகாட்டி நூல்களும் வந்துள்ளன. பாடப்புத்தகங்களில் மொழியறிவு விருத்திக்கு பயிற்சிகளும் விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இடைநிலைப்பிரிவு மாணவர்களின் தமிழ்மொழிப் பயிற்சிகளில் ஆசிரியர்கள் விடும் தவறுகளால் குழப்பங்கள் ஏற்படுகின்றன. அவ்வாறான சில விடயங்களைக் சுட்டிக்காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கம்.

தாய்மொழி ஆசிரியர்கள் பாடப்புத்தகத்திலுள்ள பாடங்களை விளக்குகின்றனர். அதன் பின் பயிற்சிகளை செய்விக்கின்றனர். வாய் மூலம் அல்லது எழுத்து மூலம் இப்பயிற்சிகள் செய்விக்கப்படுகின்றன. மாணவர்கள் தமிழ்மொழிப் பாடத்திற்கு மாத்திரமல்லாது ஏனைய பாடங்களுக்கும் இவ்வாறான பயிற்சிகளையே மேற்கொள்கின்றனர். இதுவும் ஒரு வகையான மொழிப்பயிற்சிதான். இது கற்றல் கற்பித்தலுக்கு சிறந்த தூண்டுகோலாகும். இது இன்றியமையாததும் கூட மாணவர்கள் பயிற்சிகளின் ஊடாக சிறந்த பலாபலன்களைப் பெற பல காரணிகள் காரணமாக இருக்கின்றன. மாணவர்களின் வயது நிலைக்கேற்ப அறிவை வளர்க்கும் வகையில் பாடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ற வகையிலேயே பயிற்சிகளின் அமைப்பும் உள்ளன. தாய்மொழி ஆசிரியர்கள் இதனை கருத்தில் கொள்ள வேண்டும். மொழியறிவை வளர்க்க வேண்டிய ஆசிரியர்கள் கொண்டுள்ள தமிழறிவும் அதன் விளக்கங்களும் அவற்றை விதந்துரைக்கும் தெளிவுத்தன்மையும் அவசியமானவை. நல்ல மொழியறிவும் நவீனம் பற்றிய கருத்துக்களும் தமிழ் மொழி ஆசிரியர்களிடம் இருக்கும் போதுதான் மாணவர் சிறந்த பலாபலன்களை பெற முடியும்.

மாணவர்கள் பாடப் புத்தகத்தினை மாத்திரம் கற்று மொழியறிவை விருத்தி செய்துகொள்ள முடியாது. அதற்கும் மேலே சென்று வகுப்பறைக்கு அப்பால் பல்வேறு வாசிப்புகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கான சந்தர்ப்பங்களை ஆசிரியர்கள் ஏற்படுதிக் கொடுக்க வேண்டும். சிறந்த வீட்டுச் சூழல் உள்ள மாணவர்கள் சஞ்சிகைகள், சிறுகதை நூல்கள், பத்திரிகைகள் முதலியவற்றை வாசிக்கின்றனர். இது மாணவர்களுடைய மொழியறிவில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி சிறந்த மொழிக் கையாளுகையினை வெளிப்படுத்தும். சிறந்த வீட்டுச் சூழல் இல்லாத மாணவர்களுக்கு ஆசிரியரே வழிகாட்டியாக இருக்க வேண்டும். சிறந்த நூல்களைப் பெற்றுக் கொடுத்து அவர்களின் வாசிப்பினை ஊக்கப்படுத்த வேண்டும்.

மாணவர் ஆசிரியர் கூறும் எதனையும் வேதவாக்காக நினைத்து நம்பி ஏற்கின்றனர். இங்கு ஆசிரியர் சரியைப் பிழை என்றும் பிழையை சரி என்றும் கூறினால் அது மாணவர்களின் உள்ளத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். அதனால் சரியான முறையில் மாணவர்களை ஆசிரியர் வழிப்படுத்த வேண்டும். ஆரம்ப வகுப்புக்களில் இருந்து மாணவர் விடும் எழுத்துப் பிழைகள் திருத்தப்படாமையினால் பல்கலைக்கழகம் வரை பிழையான சொற்களை சரியென நினைத்து எழுதுகின்றனர். முயற்ச்சி, காடச்சி, மோடச்சம், உற்ச்சாகம் முதலிய சொற்களை உதாரணமாகக் கூறலாம். பாடசாலையில் கற்கும் போது ஆசிரியர் எவரும் அவை தவறான பிரயோகம் என எடுத்துக் கூறவில்லை. பல ஆசிரியர்கள் மாணவர் சமுதாயத்திற்கு வழிகாட்டிகளாக இருக்கவேண்டும் என்ற உணர்வு அற்றவர்களாகவே இருக்கின்றனர். பொறுப்பற்ற முறையில் மாணவர் பயிற்சிகளில் திருத்தங்களை மேற்கொள்கின்றனர். அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. அதே போன்று மாணவர் எல்லாப் பாடங்களையும் தமிழ் மொழியிலேயே கற்கின்றனர்.

எல்லா ஆசிரியர்களும் தமிழ்மொழியில் பாட ஆசிரியர்களாக இருப்பதனால் மாணவர் விடும் பிழைகளை களைய முயல வேண்டும். மாணவர் விடும் பிழைகளுக்கு தமிழாசிரியர்களே பொறுப்பாளி எனக் கொள்ளாமல் பிற ஆசிரியர்களும் பொறுப்பாளிகளாக இருக்க வேண்டும்.மாணவர் எழுதும் போது எழுத்துக்களை உறுப்பமைய எழுதுவதில்லை. ஆரம்ப வகுப்புக்களில் ஓரளவு

உறுப்பமைய எழுதும் பயிற்சிகளில் ஈடுபடுத்தினாலும் அதற்கு அடுத்த வகுப்புகளில் உறுப்பமைய எழுதுவதில்லை. ஆசிரியர் அதனைக் கவனத்திற் கொள்வதுமில்லை. எழுத்துக்களை வடிவக் குழப்பம் இன்றி எழுதுவதற்கு மாணவரை நெறிப்படுத்த வேண்டியது அவசியமாகும். வடிவத்தில் குழப்பமாகக் கூடிய எழுத்துக்களை அவற்றை எழுத வேண்டிய முறையையும் ஆசிரியர்கள் அறிவுறுத்தும் போது காலவரையில் சரியான வழியைப் பின்பற்றி சரியான திசை முகத்தில் உறுப்பமைய எழுத்துக்களை எழுதும் பயிற்சியை பெறுவார்கள். மாணவர் எழுதுவதற்கு பல எழுத்து உபகரணங்களை பயன்படுத்துகின்றனர். இவற்றின் பயன்பாடுகள் எழுத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஆரம்ப வகுப்புக்களில் பயிலும் மாணவர்கள் எவ் உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டும் என்பதைப் பொறுத்து அவர்களுடைய எழுத்துக்கள் உறுப்பமைய அமைந்திருக்கும். ஆனால் மாணவர் உறுப்பமைய எழுதுவதற்கு உதவும் ஆசிரியர் மிகக் குறைவாகவே உள்ளனர்.

ஒலி வடிவங்களை எழுத்து வடிவங்களுடன் தொடர்புபடுத்தும் போது குழப்பம் அடைகின்றனர். ஒலி வேறுபாடுடைய சொற்களை இனங்கண்டு உச்சரிப்பதற்கும் அவற்றை எழுதுவதற்கும் மாணவர் சிக்கலை எதிர் நோக்குகின்றனர். ஒலி வேறுபாடுகளை புரிந்து கொள்ள முடியாது எழுத்துக்களை பிழையாக எழுதும் போது சொற்களின் பொருள் மாறுபடும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. இங்கு மொழியாசிரியரின் பணி மிக முக்கியமானது. ஒலி பேதமுடைய சொற்களை சரியான முறையில் ஒலிப்பதற்கும் எழுதுவதற்கும் பயிற்சிகள் வழங்க வேண்டும். ஆசிரியர் பலர் இவற்றில் தவறுவிடும் சந்தர்ப்பங்கள் பலவற்றை கண்டிருக்கின்றோம். ஆகவே மொழி கற்பிக்கும் ஆசிரியரும் இவ் ஒலி வேறுபாடுகளுடைய சொற்களை திருத்தமாக உச்சரிக்க வேண்டும். எழுத்துப் பிழைகளின்றி கரும்பலகையிலும் தாள்களிலும் எழுத வேண்டும்.

மாணவர்களின் பயிற்சிப் புத்தகங்களில் முழுமையாக பிழை திருத்தம் செய்வதே இல்லையெனலாம். திருப்பி எழுதுக என ஆசிரியர் எழுதியிருப்பார்.அவ்வாறு எழுதும் போது எதைத் திருப்பி எழுத வேண்டும், விட்ட பிழைகள் என்ன என்பது மாணவருக்கு விளங்குவதில்லை. ஆசிரியர் மாணவர் விட்ட பிழைகளை சுட்டிக்காட்டுவதுமில்லை. எவற்றை திருப்பி எழுத வேண்டும் என்ற அறிவுறுத்தல்களும் மாணவருக்கு வழங்கப்படுவதில்லை. மாணவர் திருப்பி எழுதுகின்றனரா என்பதை மேற்பார்வை செய்வதும் இல்லை. திருப்பி எழுதுக என்றுஎழுதும் ஆசிரியர் மாணவர் எதைத் திருப்பி எழுதுவர் என்பதை அவரே அறிந்திருக்க மாட்டார்.

ஒரு சில ஆசிரியர்கள் பயிற்சிப் புத்தகத்தில் பயிற்சிகளைப் பார்த்தமைக்கு ஒப்புதலாக சில சிவப்பு மை அடையாளங்களையும் கையெழுத்தையும் இடுகின்றனர். முழுமையாக திருத்தங்களை மேற்கொள்வதில்லை. இதனால் மாணவர் தாம் எழுதுவது சரியெனும் நினைப்புடன் தொடர்ந்து அவ்வாறே எழுதிக் கொள்கின்றனர்.

மாணவர் எழுதும் வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்தும் போது, எழுத்துப்பிழை ஒன்றை மாத்திரம் திருத்தி விட்டு மிகுதிப் பிழைகளை கவனிப்பதில்லை. தவறுகள் திருத்தப்படும் போதும் / என்ற அடையாளத்தை இட்டு எழுத்துக்களை வெட்டி விடுவர். ஆனால் அதற்குப் பதிலாக மாணவர் எழுத வேண்டிய திருத்தங்களை எழுதி விடுவதில்லை. திருத்தம் தேவையில்லாத விடத்து சிவப்பு மையினால் கோடிடுவர். அவ்விடத்தில் திருத்தம் செய்ய வேண்டியதாக இருக்காது. இவ்வாறான விடயங்களை கவனித்து செயற்பட வேண்டியது ஆசிரியர் கடமையாகும்.

மொழிப் பயிற்சிகளின் போது கீறிட்ட இடங்களை நிரப்பும் போதும் வினாவிற்கான விடைகளை எழுதும் போதும் வாக்கிய அமைப்புக்களில் மாணவர் விடும் தவறுக்ளை ஆசிரியர் பொருட்படுத்துவதேயில்லை. இடைவெளியைப் பூர்த்தி செய்யும் மாணவர் வாக்கியத்தைப் பற்றி கவனிப்பதில்லை. பூர்த்தியாக்கப்பட்ட வாக்கியங்கள் இயைபுடையதாக அமைந்திருக்காது. எழுவாய் பயனிலையுடன் திணை, பால், எண், இடம் என்பன இயைந்து வரக்கூடியதாக வாக்கியங்களை எழுதும் பயிற்சியை மாணவர்களுக்கு வழங்க வேண்டும். சொற்களை வைத்து வாக்கியங்களை அமைக்கும் மாணவர் இயைபற்ற வாக்கியங்களையும் பொருள் மயக்கமுடைய வாக்கியங்களையும் எழுதும் போது அவை திருத்தப்படுவதில்லை. மாணவர் அர்த்தமற்ற வாக்கியங்கள் எழுதுவதை தவிர்த்து அர்த்தமுடைய வாக்கியங்களை எழுத வேண்டும் என்பதை உணர்த்த வேண்டும். அனுபவம் வாய்ந்த ஆசிரியர் மாணவருக்கு ஏற்ற மொழியமைப்புக் கொண்ட வாக்கியங்களை தெரிந்து பயிற்சிகளை வழங்க வேண்டும்.

சில மாணவரது மொழிப்பயிற்சிகளில் பெற்றோரினதும் ரியூசன் ஆசிரியரினதும் தலையீடு காணப்படுகின்றது. மொழிப்பயிற்சி அற்ற இவர்களினால் மாணவர்களினது மொழித்திறன் வளர்ச்சியில் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு. தாய்மொழி தமிழ் எனும் போது அதை இலகுவாக கற்பித்து விட முடியும் எனும் தன்னிச்சையான மனப்பாங்கு இன்று பலரிடம் காணப்படுகின்றது. சில ஆசிரியர்களிடமும் இவ்வாறான தன்னிச்சையான போக்கு காணப்பகின்றது. இது மாணவர்களின் மொழித்திறன் வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை ஆசிரியர்கள் உணர்ந்து கொள்வதில்லை.

மாணவரின் எழுத்துத்திறன் தொடர்பான செயற்பாடுகளான மொழிப்பயிற்சிகள், வாக்கியங்கள், ஆக்கங்கள் என பல்வகையான ஆக்கத்திறன்களில் ஈடுபடுகின்றனர். ஆனால் இவர்கள் உரிய முறையில் நிறுத்தற் குறியீடுகளை இடுவதில்லை.இவற்றை திருத்தும் ஆசிரியரும் குறியீடுகளை இட்டு எவ்வித திருத்தமும் மேற்கொள்வதில்லை. அடிப்படைக் குறியீடுகளின் பயன்பாடு பற்றி அறியாத மாணவர்களின் வாசிப்புத் திறமையும் நன்றாக அமைய மாட்டாது என்பதை ஆசிரியர் தமது சிந்தனையில் கொண்டு வருவதில்லை. ஆசிரியரின் சிந்தனையின்மை மாணவரை தொடர்ந்து பிழைவிட வைக்கின்றது.

மாணவரது பயிற்சிப் புத்தகங்கள் யாவும் திருத்தப்பட வேண்டும். பாட வேளைகளில் நேரம் போதாமல் இருந்தால் ஓய்வு நேரங்களில் மாணவர்களது பயிற்சிகளை திருத்துதல் அவசியம். திருத்தும் போது அக்கறை அற்று ஏனோ தானோ என்று இல்லாமல் முறையாகச் செய்ய வேண்டும். அப்போதுதான் மாணவர்களிடையே ஆர்வம் ஏற்படும். மேலும் கற்கத் தூண்டும் ஆசிரியரிடமும் மாணவருக்கு பற்றுதல் உருவாகும். திருத்தங்கள் செய்யும் போது எல்லாத் தவறுகளும் கவனித்தல் வேண்டும். ஒலி எழுத்து உருவக அமைப்பு, வாக்கிய அமைப்பு, பொருள் அமைப்பு ஆகிய எல்லாவற்றையும் கவனிக்க வேண்டும்.

தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் இலக்கணப் பகுதிகளை கற்பிக்கும் போது தெளிவற்ற முறையில் கற்பிக்கின்றனர். மொழியை செம்மையாகப் பயன்படுத்தவே இலக்கணப் பயிற்சி வழங்கப்படுகின்றது. ஆனால் அனேக ஆசிரியர்கள் இந்த நோக்கத்தை விளங்கிக் கொள்ளாது இலக்கணம் மனனம் பண்ணி வைத்துக் கொள்வதற்காக மாத்திரமே என்ற நோக்குடன் கற்பிக்கின்றனர். இவர்களிடம் இலக்கணப் பயிற்சியும் குறைவாகக் காணப்படுகிறது. இவர்களிடம் முழுமையாக இலக்கண அறிவு இல்லை. இலக்கணத்தில் தெளிவற்ற நிலையில் இருக்கும் ஆசிரியர் மாணவருக்கு எவ்வாறு இலக்கணத்தைக் கற்பிக்க முடியும்? மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் நன்நூல் இலக்கணத்தை முழுமையாக கற்றறிதல் வேண்டும். அதே வேளை தற்கால மொழிப் பயன்பாட்டினை விளங்கிக் கொள்ளும் வகையில் தற்கால மொழியியலாளர்களின் கருத்துக்களையும் கற்றறிதல் வேண்டும். ஆசிரியர் கற்றுக் கொடுக்க முன்பு கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்.

தாய்மொழியின் பன்முக அமைப்பில் சில விடயங்கள் ஆசிரியருக்குத் தெளிவில்லாத அல்லது தெரியாத விடயமாக இருக்கலாம். தெரியாத விடயத்தை அப்படியே விட்டு விடுவதும் தெளிவற்ற விடயங்களை அரை குறை விளக்கத்தோடு கற்பிக்க முயலக் கூடாது. தெரியாத விடயங்களைப் பற்றிய தகவல்களை தேடிப் பெறலாம். அல்லது பிறரிடம் கேட்டறிந்தும் கொள்ளலாம். இவ்வாறு அவ்விடயங்களை முழுதாக அறிந்து கொண்ட பின்பே மாணவரை பயிற்றுவிக்க வேண்டும்.

பாடநூல்களிலும் பயிற்சிப் புத்தகங்களிலும் உள்ள சகல விடயங்களும் சரியானவை என்ற மனப்பாங்குடனேயே அனேக ஆசிரியர்கள் மாணவர்களைப் பயிற்றுவிக்கின்றனர். சில விடயங்களை தர்க்க ரீதியாக அணுகி செயற்படுத்தும் திறன் பல ஆசிரியர்களிடம் இல்லை. சிறந்த ஆசிரியர் ஒருவர் இன்றைய வழக்கிற்கு ஏற்ற வகையில் அவற்றை தர்க்கரீதியில் அணுகி மாணவருக்கு விளக்கம் கொடுக்க வேண்டும்.

இன்று இலங்கையில் தமிழ் வானொலி, தமிழ் தொலைக்காட்சி, சில பத்திரிகைகள் என்பன பிழையான மொழிப் பிரயோகங்களை கூடுதலாக பயன்படுத்துகின்றன. இவற்றின் தாக்கத்திற்கு உட்பட்டிருக்கும் மாணவர் பிழையாக எழுதுவதற்குரிய தூண்டுதலாக இவை அமைந்து விடுகின்றன. மாணவரின் எழுதும் திறனை இவற்றின் செல்வாக்கிற்கு உட்படுத்தாமல் மாணவரின் மொழி வளர்ச்சியில் அக்கறை கொண்டு நடைமுறைப்படுத்துவது ஒரு நல்லாசிரியரின் கடமையாகும்.

ஆசிரியர்கள் மாணவர்களின் எழுத்து விடயங்களில் கூடிய அக்கறை காட்டி நல்ல தமிழ் எழுதப் பழக்க வேண்டும். இது எழுத்துத் தமிழை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் முக்கியமான ஒன்றாகும். இன்றைய காலத்தின் தேவையுமாகும் என்பதை கடமையுணர்வுள்ள ஒவ்வொரு தாய்மொழி ஆசிரியரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.


**திருமதி. T. குகதாசன் (M.Phil)**
விரிவுரையாளர்
மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரி



அதிபர், பொறுப்பாசிரியர், பயிற்றுவிப்பாளருடன் பாண்ட் வாத்தியக்குழு



அதிபருடன் மாணவர் தலைவர்கள்



[illegible]



[illegible]

| | | |
|---|---|---|
| மாதா, பிதா, குருவை | வா | படிப்பை வெறுக்காதே |
| மதித்து நடந்திடு | | வெறுத்து விட்டு – பின்பு |
| அவர் மனம் நோக | | வாழ்க்கை முழுவதும் அழுதிடாதே |
| நடக்காதே | ழ் | |
| கடவுளை தினமும் வணங்கு | வி | அடுத்தவருக்கு உதவு |
| காரியம் பிழைத்தால் | | உனக்கு உதவ |
| அவர் மீது பழி போடாதே | ல் | எல்லோரும் முன்வருவர் |
| பொன்னான நேரத்தை | | பெரியோரை மதித்து நட |
| சரியாகப் பயன்படுத்து | | அவர் ஆசி என்றும் |
| மண்ணாக்கி விட்டு – பின் | உ | உனக்குக் கிடைக்கும் |
| கவலை கொள்ளாதே | | |
| | ய | தான தர்மம் செய் |
| தோல்வியைக் கண்டு | | அது உன்னைத் |
| பயந்து ஓடாதே | ர் | தலை தூக்கி வைக்கும் |
| எதிர்த்து நின்று வென்றுவிடு | | |
| | வ | துக்கத்தோடு சேராதே |
| பிறரைக் குறை கூறுவதை விட | | சேர்ந்து விட்டு – பின்பு |
| உன் குறையை நிவர்த்தி | த | ஏங்காதே வாசிப்பை நிறுத்தாதே |
| செய்யப் பழகிக்கொள் | | நிறுத்திவிட்டு – பின்பு |
| | ற் | யோசிக்காதே |
| அடுத்தவரைக் கேலி செய்யாதே | | |
| உன்னைப் பார்த்து | கு | நல்லவற்றைக் கற்று |
| கேலி செய்யும் காலம் வரும் | | வாழ்வில் உயர்த்திடு |

க.தனுசியா
தரம் - 10V

# புதுமை

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" எனும் ஆரம்ப காலத்தின் ஆழமான வரிகள் அர்த்தமற்றதாகி "கணனியும் ஆங்கிலமும் எம் இரு விழிகள்" எனும் எண்ணக்கரு எல்லோர் புலமைகளிலும் விதைக்கப்பட வேண்டும் எனும் சிந்தனையை வலியுறுத்தி நிற்கின்றது.

இன்றைய 21ஆம் நூற்றாண்டில் கல்விப் புலமை பாரிய சவால் விட்டு முகம்கொடுத்த வண்ணம் மாற்றமடைந்து செல்வதை அவதானிக்க முடிகிறது. மாற்றமுறுகின்ற கல்வி உலகிற்கு ஏற்ப மாற்றுகின்ற சமுதாயம் இன்று தேவைப்படுகின்றது.

இலங்கையில் இன்றைய கல்விப் போக்கு பரீட்சையை மையமாகக் கொண்டதாக இருப்பதனால் ஆயிரக்கணக்கானோர் வேலையற்று வெளியில் தேங்கி நிற்கின்றனர். மாறாக இலங்கையின் கல்விக் கொள்கையில் வேலை உலகிற்குத் தயாராகும் முறைமை ஒன்று உருவாக்கப்படுவது அவசியமானதாகும்.

மாதா, பிதா, குரு, தெய்வம் இவர்களில் குரு ஸ்தானத்தில் வைத்து நோக்கப்படுபவர்கள் ஆசிரியர்கள். ஆசிரியர்கள் ஆசிரியத்துவத்தை நேசிப்பவர்களாகவும் தொழில்வாண்மை கொண்டவர்களாகவும் கற்றுக்கொண்டே கற்பிப்பவர்களாகவும் வகுப்பறைக்குள் புதுமைகளைக் கொண்டு மாணவர்களை விழிப்படையச் செய்பவர்களாகவும் சமூக விழுமியங்களைப் பாதுகாப்பவர்களாகவும் செயற்படும் போதுதான் மாணவர் சமுதாயம் ஆசிரியர்களின் மீது நம்பிக்கை வைத்து பற்றுக் கொண்டவர்களாகவும், நேசிப்பவர்களாகவும் மாறுவார்கள்.

இன்றைய காலகட்டத்தில் மாணவர்கள் ஒழுக்கவிழுமியங்கள் அற்றவர்களாகவும் பாடசாலைகள் மீது நம்பிக்கை அற்றவர்களாகவும் ஆசிரியர்களுக்கு மரியாதை செலுத்தத் தவறுபவர்களாகவும் செயற்பட்டு வருகின்றனர் இவற்றுக்கெல்லாம் தனியார் நிறுவனங்களின் ஆதிக்கமும் ஆசிரியர்களின் தொழில்வாண்மையற்ற போக்குமே காரணமாகும்.

ஒரு கிராமத்தின் எழுச்சிக்கு பாடசாலை, வைத்தியசாலை, கோயில் போன்றவையே முச்சுடர்களாக விளங்குகின்றன. ஆலயம் மனிதனின் ஞானக் கண்ணைத் திறக்கின்றது. வைத்தியசாலை ஊனக் கண்ணைத் திறக்கின்றது. பாடசாலை அறிவுக் கண்ணைத் திறக்கின்றது.

அறிவுக் கண்ணைத் திறக்கும் ஆசிரியர்கள் வாழுமிடம் புனிதமானவையாகப் போற்றப்பட வேண்டும். அறிவுக் கண்ணைத் திறக்கும் ஆசிரியர்கள் பல்வேறு வகையான நடிபங்குகளைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அதாவது நண்பர், ஆலோசகர், துன்பத்தில் கை கொடுப்பவர், ஆய்வாளர், அவதானிப்பவர், தாய், தந்தை,வழிகாட்டி, ஆராய்ச்சியாளர், நீதிபதி, மேற்பார்வையாளர் போன்றவர்களாகும்.

வினைத்திறன் உள்ள ஆசிரியர்கள் சிறந்த வினைத்திறனை ஏற்படுத்துபவர்களாக இருக்கவேண்டும். தனியாள் தொடர்பான தரம், அது தொடர்பான அடிப்படை, மாணவர்களை மகிழ்வாக வைத்திருத்தல் வாழ்நாள் முழுவதும் கற்கும் மனப்பான்மை என்பவற்றைக் கொண்டவர்களாக இருப்பர். நல்ல ஆசிரியர்களுடைய திறன்களாக தொழில்சார் அறிவு ஆளிடைத் தொடர்பு என்பவற்றைக் குறிப்பிடலாம். நல்லாசான்கள் மாணவர்களுக்கு சாகாமருந்தைக் கொடுக்கும் சிரஞ்சீவிகள். இவர்கள் மாணவர் மத்தியில் மாற்றத்தை ஏற்படுத்த பின்வரும் செயற்பாடுகளைச் சிரமேற் கொள்வார்கள்.

சிறந்த மனப்பாங்கு அர்ப்பணிப்பு, ஊக்கம், தேடல், தத்துவம், அறிவு என்பவையாகும். வகுப்பறைக் கற்பித்தல் உயிரோட்டம் உள்ளவையாகவும் மாணவர்களில் கற்பித்தலில் நம்பிக்கை கொண்டவர்களாகவும் சிறந்த வினைத்திறனை ஏற்படுத்துபவராகவும் இருக்க வேண்டுமானால் ஆசிரியர்கள் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகின்றது. ஒழுங்குமுறை, உடல்நிலை, வகுப்பறை ஒழுங்கமைப்பு, கவின் நிலை, வீடாக மதித்தல், ஊக்குவிப்பும் பாராட்டும் ஆசிரியர் செயற்பாடுகள்.

ஆசிரியர் வாண்மை என்றால் என்ன என்பதை நாம் நோக்கும் போது வினைத்திறனுள்ள ஆசிரியர்கள் வினைத்திறன் உள்ள கற்பித்தலை மேற்கொள்வதையே குறிக்கின்றது. வாண்மை என்பது துறை தொடர்பான பூரணத்துவ அறிவு, சுதந்திரமான செயற்பாடு, பொறுப்பேற்கும் திறன் என்பனவாகும்.

இன்றைய காலகட்டத்தில் வகுப்பறைக் கற்பித்தலுக்கு அப்பாலும் பல புதுமைகளை மாணவர்கள் எதிர்பார்ப்பதனால் அவற்றை நிறைவேற்றிக் கொடுப்பது நல்லாசானின் தலையாய கடமையாகும். மாணவர் ஒழுக்கம், பாதுகாப்பு, நலனோம்பல் என்பவற்றை மாணவர்களுக்கு பெற்றுக் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும். குருகுலக் கல்வி, ஆசிரியர் மையக்கல்வி ஆகிய இவ் இரண்டிற்கும் அப்பால் இன்றைய நவீன கல்விப்புலத்தில் மாணவர்மையக்கல்வி ஒரு புதுமையான விடயமாகும். 5E கற்பித்தல் முறையில் மாணவர் செயற்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு ஆசிரியர் வழிகாட்டிகளாகத் தொழிற்படுவது ஒரு புதுமையாகும். கற்க மறுக்கும் மாணவர்களையும் நவீன கற்பித்தல் நுட்பங்களின் மூலமாக கற்கத் தூண்டலாம்.

முறையான பொருத்தமான கற்பித்தல் உபகரணப் பயன்பாடு தரமான உள்ளீடு மூலம் கிடைக்கப்பெறும் வளங்களின் ஊடாக மாணவர்களை பாடசாலைக்குள் மீள் எடுக்க முடியும். இடை விலகல் இன்று ஒரு பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது. இதற்கு பல்வேறு காரணங்களை எடுத்துக்கூறினாலும் இன்னும் ஆசிரியர்கள் மாணவர் மையக் கல்விக்கு உள்வாங்கப் படாததனாலும் நுட்பமற்ற கற்பித்தல் அணுகு முறைகளினாலும் மாணவர்கள் இடைவிலக வாய்ப்புண்டு.

எனவே இலங்கை அரசாங்கத்தின் கல்விக் கொள்கைக்கு ஏற்ப ஆசிரியர்களும் மாணவர்களும் பாரிய சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டுமாயின் சகல புதிய நுட்பமான மாற்றங்களை உள்வாங்கிக் கொள்வதே சிறந்ததாகும்.

**திருமதி. விமலராஜினி புஸ்பராஜா**
(ஆசிரியை)

# தெருவோர ஆச்சி

*சிறுகதை*

மருதடிக் கிராமம் அடர்ந்து வளர்ந்த காடுகளையும் அழகான நதியையும் கொண்டு விளங்குகிறது. அந்த நதியோரத்தின் அருகிலுள்ள ஆலமர நிழலில் ஒரு சிறிய குடிசையுள் வாழ்ந்து கொண்டிருப் பவள்தான் தெருவோர ஆச்சி. சிறிய குடிசைதான் ஆனால் அவ்வூரிலே சுத்தமான குடிசை தெருவோர ஆச்சியின் குடிசை. அத்தெருவிலே உள்ள மக்கள் அனைவரும் அவளை தெருவோர ஆச்சி என்றே அழைத்து வந்தனர்.

இவள் ஒன்றும் வேலை வெட்டி இல்லாதவள் இல்லை. அதிகாலையில் திடுதிடுவென எழுந்து அப்பம் சுட்டு ஊருக்கே விற்பவள். ஒவ்வொரு வீட்டிலும் காலை உணவு அவளது அப்பம் தான். ருசியான அப்பம் சுடுவதில் தெருவோர ஆச்சியை மிஞ்சி அவ்வூரிலே வேறு யாரும் இல்லை. அதனால் ஊர்மக்கள் அனைவரும் அவளது வாடிக்கையாளர்களாகக் காணப்பட்டணர்.

அன்று திங்கட்கிழமை அதிகாலை யிலேயே எழுந்து அப்பம் சுட்டு விற்றுக்கொண்டிருந்தாள் ஆச்சி. வழமை போலவே ஊர்மக்கள் அனைவரும் வந்து அப்பம் வாங்கிக் கொண்டு சென்றனர். குறைவான விலைக்கு விற்றாலும் தெருவோர ஆச்சியின் அப்பம் ருசியானது. வியாபாரம் முடிந்ததும் பணத்தை பத்திரமாக மண்பானையில் வைத்துவிட்டு ஏனைய வேலைகளைச் செய்யத் தொடங்கினாள். அந்திக் கதிரவன் தனது கதிர்களை சுருக்கிக் கொண்டிருக்கிறான். சடப்பனவும், பறப்பனவும், ஊர்வனவும் தமது இருப்பிடம் நோக்கி செல்கின்றன.

தெருவோர ஆச்சியும் தனது மாளிகையான குடிசைக்குள் புகுந்து குப்பி விளக்கை ஏற்றுகிறாள். இனி என்ன நித்திரைக்குச் சென்றுவிட்டு காலையில் அப்பம் சுடுவதுதான் அவளது வேலை. ஆனால் என்றுமில்லாத வகையில் அவளது பழங்கால நினைவலைகள் அவளை வந்து மோதத் தொடங்கியது. அவளால் கண்களை மூடி உறங்க முடியவில்லை.

தெருவோர ஆச்சியின் சொந்தக் கிராமம் செந்தூரப் பட்டினம். அங்கு வாழும் பூதாகனின் அழகிய மகள்தான் தெருவாச்சி. ஆடவர்களை மயக்கும் அழகிய கண்களையுடைய தெருவாச்சிக்கு ஒரு நாள் ஊரவர்களால் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. திருமண நாளன்று பூதாகனின் குடும்பமே மகிழ்ச்சி வெள்ளத்தால் மூழ்கியிருந்தது. அன்றைய நாளில் தெருவாச்சிக்கு தனது வாழ்நாளில் மறக்க முடியாத சம்பவம் இடம்பெற்றது.

அவளுக்கு நிச்சயி க்கப்பட்டவன் வந்த மாட்டுவண்டியின் சக்கரங்கள் உடைந்ததால் செந்தூரப் பட்டினத்திற்கு வருவதற்கு முன்பே அவனது உயிரை எமன் காவு கொண்டுவிட்டான். இதனால் அவளது திருமணம் நின்றுவிட்டது. இதனை அறிந்த பூதாகனும் மாரடைப்பில் இறந்துவிட்டான். இதனால் தெருவாச்சி தனிமையாக்கப்பட்டாள். இவளை எல்லோரும் அதிஷ்டம் கெட்டவள் எனப் பழிந்துரைத்தனர். ஊர்மக்கள் வாய்ச்சொல் தாங்க முடியாத தெருவாச்சி அன்றிரவே செந்தூரப்பட்டினத்தை விட்டு வெளியேறி மருதடிக் கிராமத்தில் தெருவோர ஆச்சியாக வாழ்ந்து கொண்டிருக்கிறாள். அவளது பழங்கால நினைவலைகளிலேயே மூழ்கியிருந்த போது சேவலும் கூவியது.

வழமை போல அவள் நேரத்தோடு எழுந்து அப்பம் சுடும் வேலையில் இருந்தாள். அப்பம் சுட்டு முடிந்ததும் பொழுது நன்றாக விடிந்து விட்டது. அப்பம் வாங்குவதற்கு ஊர்மக்கள் அவளை வந்து சூழ்ந்து நின்றனர். அப்பம் அனைத்தையும் விற்று முடித்துவிட்டு ஒரு பெரு மூச்சு விட்டாள். வழமை போலவே மற்றைய வேலைகளைச் செய்து கொண்டிருந்தாள். "என்ன ஆச்சி இண்டைக்கு சரியான யாபாரம் போல.." என்று ஒரு சத்தம் கேட்டது. "ஆ.. நீயா வாடா சுந்தர்" என அவள் அவனை உள்ளே அழைக்கிறாள். அந்த சுந்தரம் வேறு யாரும் இல்லை. அவளைப் போல் வேறு யாரும் இல்லாத அனாதைதான். அவளது வீட்டிற்கு அடிக்கடி வந்து நலன் விசாரிக்கும் ஒரு ஜீவன் சுந்தரம் தான். இருவரும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். சுந்தரம் கிண்டலாக அவளைகேலி பண்ணிக் கொண்டே பேசுகிறான். அவளும் சிரித்துக் கொண்டே அவனுடன் பேசிக் கொண்டிருந்தாள். அப்பொழுது அவளின் வாயிலிருந்து "சுந்தரம் ஒரு வேளை நான் செத்துக் கித்துப் போனா என்னடா செய்வாய்" எனும் வார்த்தை வந்தது. அதற்கு சுந்தரம் சிரித்துக் கொண்டே "அடி போடி கிழவி ஒனக்கு என்ன நூறு இருநூறு வயசா ஆகுது இப்பதானே என்பது வயசு நீ. இன்னும் நூறு வருஷம் இருப்பாய்" என்றான். இவ்வாறாக அன்றைய பொழுது கழிந்தது.

அன்றிரவு தெருவோர ஆச்சி தனது குடிசைக்குள் குப்பி விளக்கை ஏற்றிவிட்டு, களிமண் தரையிலே கிழிந்த பனை யோலைப்பாயை விரித்து தனது இரண்டு கால்களையும் நீட்டி களிமண் சுவற்றிலே சாய்ந்து கொண்டாள். வெற்றிலைத் தட்டை எடுத்து வாய் நிரம்ப வெற்றிலையைப் போட்டு நாளைய பொழுது பற்றி சிந்தித்தாள். அப்பொழுது திடீரென்று அவள் பக்கத்தில் இருந்த குப்பி விளக்கு திடீரென்று அணைந்தது.

மறுநாட் காலை தெருவோர ஆச்சியின் குடிசையைச் சுற்றி ஊர்மக்கள் ஒன்று கூடி நின்றனர். சுந்தரம் பதறியடித்து குடிசையை நோக்கி ஓடி வந்தான். குடிசைக்குள் புகுந்த அவன் அழுது கொண்டே வெளியே வந்தான். செய்தியறிந்த ஊர் மக்கள் அனைவரும் கண் கலங்கினர். தனது சாவுக்கு அழுவதற்குக் கூட யாருமே இல்லையே! என்று ஏங்கிய தெருவோர ஆச்சியின் குடிசை நிரம்பி வழியும் அளவுக்கு ஊர் மக்கள் ஒன்று கூடி நின்றனர். அவளுக்குரிய இறுதிக்கிரியைகள் அனைத்தையும் அவ் ஊர் மக்கள் செய்து முடித்தனர்.

இன்றும் அவ் ஊர் மக்கள் மனதிலே தெருவோர ஆச்சி வாழ்ந்து கொண்டிருக்கிறாள். அவ் ஊர் தாய் மார்கள் தங்களது குழந்தைகளுக்கு கதை கூறும்போது தெருவோர ஆச்சியின் கதையைக் கூற மறப்பதில்லை.

**லோ. கஸ்மிளா**
தரம் - 10V

மனோதிடம் கொண்டவர்களின் போக்கே ஒரு தனித் தன்மையுடையது. நெருப்பு எவ்விதம் தங்கத்தை ஒளிரச் செய்கிறதோ அது போன்று துன்பங்களும் மனோ சக்தியும் மிகுந்த மனிதனை ஒளிரச் செய்யும்.

# நல்லொழுக்கம் நற்பெயர் தரும்

மனிதன் இன்பமான வாழ்க்கையில் கவலையை விடுத்து, பிரச்சினைகளை சுலபமாக எடுத்து, பணவசதி பெற்று ஆடம்பரமாக உயர்ந்த எண்ணங்களாலும் உருவாகி விட முடியும். ஆனால் கௌரவமன வாழ்க்கை என்பது நல்லொழுக்கத்தால் மட்டுமே பெறலாம். உண்மையான கௌரவம் என்பது பிறப்பினால் பெறப்பட்டது அல்ல. நற்செய்கையாலும் நற்குணத்தாலும், நல்லொழுக்கத்தாலும் பெறுவது என்று ஓர் அறிஞன் குறிப்பிடுகின்றான். பணத்தினால் எதனையும் வாங்கிவிட முடியும் என்பர். ஆனால் நற்பெயர் என்பதை வாங்க முடியுமா? அதை நாம் பல சோதனைகளையும், தடைகளையும் தாண்டிச் செய்யும் நற்செயலால் மட்டுமே பெற முடியும்.

நற்குடியில் பிறந்து விட்டால் மட்டும் ஒருவன் நல்லவனாக முடியாது. அவன் புகழ் பெற வேண்டுமாயின் அவன் பல சேவைகளை தன் கடமைப் பொறுப்பாகக் கொண்டு செயற்படுவதன் மூலம் நல்லவனாக முடியும். இதனையே முதுமொழிக் காஞ்சியில் கூடலூர்க் கூறுகின்றார். "காதலில் சிறந்ததன்று கண்ணஞ்சப்படுதல்" அதாவது ஒருவன் பிறரால் அன்பு செய்யப்படுவதைக் காட்டிலும் அவன் தன் செயல்களினால் அவர் மதிக்கும் படி நடத்தல் மேலானது என்கின்றார். இதே போல் வெற்றி வேட்கையில் (நறுந்தொகை) அதிவீரராம பாண்டியனும் "பெருமையின் சிறுமையும் தான் தர வருமே" அதாவது ஒருவன் மேன்மையுடையவனா அல்லது கீழ்மையுடையவனா என்பது அவன் நடந்து கொள்ளும் விதத்திற்கு ஏற்றவாறே வரும் எனக் கூறுகிறார்.

நாமும் புகழ் பெற வேண்டும் என்று நல்லொழுக்கத்துடன் வாழ்ந்து புகழ் பெற்றவர்களைப் பற்றிப் புகழ்ந்து கொண்டு இருப்பவர்களே இன்று எம் மத்தியில் அதிகமாகக் காணப்படுகின்றனர். ஆனால் அவர்கள் சிறிது நேரம் சிந்தித்து ஒழுக்க சீலர்களாக வாழ்ந்தவர்களைப் போல அவர்களது போதனைகளையும், அறிவுரைகளையும் பின்பற்றி நடந்தால் நாமும் உயர்ந்த கௌரவத்தை அடையலாம் அல்லவா?

நற் பெயர் என்பது எதுவென்றால் உண்மையாகவும், நியாயமாகவும், தூய்மையாகவும், மற்றவர்கள் வியந்து பாராட்டத்தக்கதாகவும் இருக்கின்றவை எவையோ அவையே நற்செயல்களாகும் இந் நற்செயல்கள் சில வேளைகளில் தோல்விகளிலும் முடிவடையலாம். ஆனால் அத்தோல்வியைச் சோதனைகளாகவோ வேதனைகளாகவோ எடுக்காமல் வெற்றியின் படிக்கல்லாக மாற்றினால் பல சாதனைகளும் புகழ்களும் உங்களைத் தேடி வரும். நாமும் ஒரு பெரிய காரியத்தைச் சாதித்து விட்டோம் என்ற மகிழ்ச்சி மனதில் தோன்றும். ஆயுள் நீடிக்கும்.

ஒருவன் நல்லொழுக்கத்தை இளமையிலிருந்தே தொடர வேண்டும். முதுமையிலே மரணத்திற்குப் பயந்து நல்லொழுக்கத்தை மேற்கொள்வதை விட நல்லொழுக்கத்திற்கு ஏற்ற பருவம் இளமையே சிறந்ததாகும். இதனையே "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்ற பழமொழி கூறி நிற்கின்றது எனவே ஒவ்வொருவரும்

இளமையிலிருந்தே ஒழுக்க நெறிகளைப் பின்பற்றினால் அது சிலையில் எழுதிய எழுத்துப் போல் அழியாது. முதுமை வரை நற்பெயரையே பெற்றுத்தரும். சுவையுள்ள உணவை அளிக்க அன்புள்ள தாயார் இருக்க வேண்டும். ஒழுக்கமுள்ள நடத்தைக்கு நல்ல சிநேகிதர்கள் தேவை, அறிவு வளர விடயம் அறிந்த நல்ல ஆசான் வேண்டும். தூய்மையான சிந்தனை ஏற்பட தெய்வ பக்தி வேண்டும். பிறரது குற்றங்களைப்பற்றி ஒருக்காலும் பேசாது அவை எவ்வளவு கெட்டவையாக இருப்பினும் அதனால் ஒரு பயனும் இல்லை.

வள்ளுவரின் ஒழுக்கமுடைமை என்னும் அதிகாரத்தில் உள்ள“ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்”என்ற குறளிற்கு ஏற்ப ஒருவர் உயர்ந்த குலத்தவரானாலும் சரி, தாழ்ந்த குலத்தவரானாலும் சரி, ஒழுக்கம் உடையவராக இருந்தால் அவ் ஒழுக்க நெறி அவரது உயிரை விட மேலானதாக மதிக்கப்படும். என்ற கூற்றிற்கு இணங்க எல்லோரும் செயற்பட்டால் எதிர்காலததில் சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பது திண்ணம்.

**திருமதி.சூரியகலா இராஜேஸ்வரன்**
ஆசிரியை

# சிவசக்தியே

குரு வாழ்ந்த மண்ணில் உதிர்த்தெழுந்த சிவசக்தியே
நூற்றாண்டை வென்று விட்ட உன்னை
உன் புகழ் பாட சமர்ப்பணமாய்
தந்து விட்டேன் என்னை.

கையெடுத்து போற்றுகிறோம் சிவ சக்தியே
உன் புகழை பறைசாற்றி வாழ்த்துகிறோம் சிவசக்தியே
ஆசான்கள் பல தந்து எங்கள் அறிவை வளர்த்தாய்
பல சேவைகள் நீ புரிந்து நல்ல பாதை அமைத்தாய்

நல்லாரையும் கெட்டாரையும் காட்டி வளர்த்தாய்
நற்பெயரை நாங்கள் பெற நல்ல சேவை புரிந்தாய்

போற்றுகிறோம் போற்றுகிறோம் சிவசக்தியே
பாமாலை சூட்டுகிறோம் சிவசக்தியே
எத்திசையும் உந்தன் புகழ் ஓங்கவே
இறையாசி வேண்டி நிற்கின்றோம் - நீ வாழ்க

**சு. கிட்சாயினி**
தரம் - 10V



# பாரதி ஒரு தேசிய கவிஞர்

**“தோன்றிற் புகழொடு தோன்றுக.**
**அஃது இலார் தோன்றலிற் தோன்றாமை நன்று”**

என்ற வள்ளுவரின் வாக்குக்கேற்ப தமிழக மண்ணில் புகழ் மிக்க மன்னர்கள், அறிஞர்கள், கவிஞர்கள் போன்ற பலர் தோன்றினர். இந்த வரிசையில் கவிஞர்களை எடுத்துக் கொண்டால் சங்க காலக் கவிஞர்கள் பக்திகாலக் கவிஞர்கள், தேசிய கவிஞர்கள், தற்காலக் கவிஞர்கள் எனப் பல கட்டங்களில் கவிஞர்கள் பலர் வாழ்ந்து தமிழகத்தின் புகழினை உலகறியச் செய்தனர். இவர்களில் தேசிய கவிஞர்களின் வரிசையில் பாரதியார், சுப்பிரமணிய சிவா, பாரதிதாசன் போன்ற இந்திய மக்களின் மனதில் விடுதலை உணர்வை வளர்ப்பதற்குப் பாடுபட்டனர் .இவர்களில் பாரதியாருக்கு தனிச்சிறப்பும், தனிப்பெருமையும் உண்டென்பது உலகறிந்த விடயம். இக்கட்டுரை அவரின் பல்வேறு பரிமாணங்களை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பிறப்பும் இளமைப்பருவமும்

தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள எட்டையபுரத்தில் 1882ஆம் வருடம் டிசம்பர் மாதம் 01ஆம் திகதி சின்னச்சாமி ஐயர் மற்றும் இலக்குமி அம்மாள் ஆகியோருக்கிடையிலே மகனாகப் பிறந்தார் பாரதி. மரபு பிறழாத அந்தணர் குடும்பத்தைச் சேர்ந்த இவரது நடவடிக்கைகள் யாவும் அக்குடும்ப வழக்கில் இருந்து வேறுபட்டதாக இருந்தது. இவரது தந்தையார் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் புலமை பெற்றவர். சிறு வயதிலேயே தாயை இழந்த இவர் இளமையில் ஒழுங்காக பாடசாலை சென்று கல்வியைத் தொடரவில்லை. இவரது தந்தையின் விருப்பம் ஆங்கிலக் கல்வி கற்று அதிகாரியாகவோ அல்லது பொறியியல் நிபுணராகவோ வரவேண்டும் என்பதே. ஆனால் அதற்கு மாறாக இவரது செயற்பாடுகள் கவிதைகள் எழுதுவதிலேயே சென்றது. தனது ஏழாவது வயதில் கவிதை பாடுகின்ற ஆற்றலைப் பெற்றிருந்தார். இதனாலேயே சுப்பையா என்ற இளமைப் பெயரினைக் கொண்ட இவருக்கு 1893இல் எட்டையபுரம் மன்னரவையில் மன்னன் பாரதி என்ற பட்டத்தினை அளித்தான்.

1897இல் கடையத்தைச் சேர்ந்த செல்லப்பா ஐயரின் மகளைத் திருமணம் செய்துகொண்டார். அச்சமயத்தில் அவருக்கு வயது ஏழு. இவர் தனது தந்தையின் மரணத்தின் பின்பாக காசியில் இருந்த சமயத்தில் வட மொழிகளைக் கற்றார். அங்கிருந்த சமயத்தில்தான் அவர் மரபுவழிப்பட்ட தனது குலத்திற்கு எதிராக குடுமியை எடுத்தல், தலைப்பாகை கட்டுதல், மீசை எடுத்தல் போன்ற புதுமைகளை நிகழ்த்திக் காட்டினார். இது போன்ற பல புரட்சிகரமான மாற்றங்கள் காசியில் இவருக்கு ஏற்பட்டன. இங்கிலாந்தின் முதலாம் எர்ட்வேர்ட் மன்னரின் முடிசூட்டு விழாவிற்கு டெல்லி சென்ற எட்டையபுர மன்னர் காசியிலிருந்த இவரது அறிவாற்றலைக் கண்டு பாரதியாரை எட்டையபுரத்துக்கு வரவழைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பத்திரிகைப் பணி

*இவரது பத்திரிகைப் பணி அடிமைப்பட்டுக் கிடந்த தமிழ் மக்களின் விடுதலை உணர்வைத் தூண்டியது. தமிழ், ஆங்கிலம், ஹிந்தி மற்றும் சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் இவர் புலமை பெற்றிருந்ததின் காரணத்தினால் 1904இல் தனது 12ஆவது வயதிலே சுதேசமித்திரன் இதழில் உதவி ஆசிரியராகப் பொறுப்பேற்றார். தொடர்ந்து சாகரவர்த்தனி இதழின் ஆசிரியராகவும் 1906இல் சென்னையில் தோன்றிய இந்தியா என்ற இதழின் பொறுப்பாசிரியராகவும் பணியாற்றினார். 1907இல் பாலபாரதா அல்லது யங்இந்தியா என்ற ஆங்கில இதழின் ஆசிரியரானார்*

*இதன் பின்புதான் விடுதலைப் போராட்டத்தில் இவர் மனம் சென்றது. இவரது புரட்சிகரமான எழுத்துக்களால் சுதேச மித்திரன் நாளிதழுக்கு அரசாங்கத்தின் தடைகளும் இடையூறுகளும் காலத்திற்குக் காலம் ஏற்பட்டன.*

## இலக்கியப் பணி

*பாரதி ஒரு கவிஞர், எழுத்தாளர், பத்திரிகையாளர், விடுதலை வீரர், சமூக சீர்திருத்தவாதி எனப் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டவர். ஓடி விளையாடு பாப்பா போன்ற பாமர மக்களும் புரிந்து கொள்ளக் கூடிய பாடல்களைப் பாடியவர். தமிழ், தமிழர்கள், இந்திய விடுதலை பெண் விடுதலை, சாதி ஒழிப்பு மற்றும் பல்வேறு விடயங்கள் குறித்து கவிதைகள் கட்டுரைகள் வரைந்தவர். மதுரையில் சேதுபதி மேல்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகக் பணியாற்றிய இவர் எழுதிய பாடல் விவேகபானு என்ற இதழில் வெளியாகி பாராட்டைப் பெற்றது. மனிதர்களைப் புகழ்ந்து பாடும் போக்கை இவர் வெறுத்தார். தாகூர் சிறுகதைகள் மற்றும் பகவத் கீதையை தமிழாக்கம் செய்து புகழ் பெற்றார்.*

*இவரது குயில்பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், சுயசரிதை, தேசிய கீதங்கள், ஞானப் பாடல்கள், பல்வகைப் பாடல்கள், தோத்திரப் பாடல்கள், மறுமலர்ச்சிப் பாடல்கள், பகவத் கீதை முன்னுரை, பாப்பாப் பாட்டு, போன்றவை புகழ் பெற்றன. இவரது பாடல்களில் இயற்கை நயமும் உண்டு. தெய்வீக மணமும் உண்டு. சிந்துக்குத் தந்தை எனப் புகழப்பட்டார். சந்திரிகையின் கதை, சின்ன சங்கான் கதை என்ற கதைகளையும் எழுதியுள்ளார். இவர் தெய்வீக கவிஞராக, மத நல்லிணக்க வாதியாக, தீர்க்க தரிசியாக, சமதர்ம வாதியாகக் காணப்படுகிறார்.*

## பெண்மையும் பெண் கல்வியும்

*பெண்களின் முன்னேற்றத்தில் நாட்டின் முன்னேற்றத்தைக் கண்டார். பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்த பாரதி பெண்ணையும் மண்ணையும் ஒன்றாகவே போற்றினார். கல்வி கற்கவும் விரும்பிய தொழிலைச் செய்யவும் ஆணுக்குள்ள சரிசம சுதந்திரம் பெண்ணுக்கும் வழங்கப்பட்டால்தான் இந்தியா முழுமையான சுதந்திரத்தினை அடையும் என நம்பினார். புதிய ஆத்திசூடியில் தையலை உயர்வு செய் என்று உரிமையோடு உபதேசம் செய்துள்ளார். பாரதியின் புதுமைப் பெண் ஞானச் செருக்கு நிறைந்தவள், ஒடுக்கு முறையினை ஒழிப்பவள் மேலும் பாரதி பெண்களை வர்ணிக்கின்ற போது எச்சில் படாத வார்த்தைகளையே பயன்படுத்துகிறார். இவர் பெண்களைக் குழந்தை, பெண்மணி, தாய் எனப் பல்வேறு நிலைகளில் வழிபட்டார்.*

*எதிர் ஜாமின் அல்லது மாப்பிள்ளை விலை என்ற கட்டுரையில் வரதட்சனை வாங்குகிற வழக்கத்தை தாக்குகிறார். தராசு என்ற நூலில் வயது முதிர்ந்தவர்கள் இளம் பெண்களைத் திருமணம் செய்வதனை கண்டிக்கிறார். பெண் கல்வியின் அவசியத்தினை உணர்த்துகிறார். இன்றைய பெண் உரிமை வாதிகளுக்கு பாரதி முன்னோடியாக விளங்கினார் என்றால் மிகையாகாது.*

## தேசியப்பற்று

இலக்கியத்தினைக் குறிப்பாக கவிதை வடிவத்தினை இந்திய விடுதலைக்கு முழுமையாகப் பயன்படுத்தியவர்களில் குறிப்பிடத்தக்கவர் பாரதி ஆவார். இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் பாரதி எழுதிய முதல் விடுதலைப் பாடலாகிய சுதேச கீதங்கள் தமிழ் நாட்டில் விடுதலை வேட்கையினை மக்கள் மத்தியில் உண்டாக்கியது. இவரது முதல் நோக்கமே தேச ஒற்றுமை. இமயம் முதல் குமரி வரை ஒரே நாடாகக் கண்டவர் பாரதி. தமக்குள் ஆயிரம் வேறுபாடு இருந்தாலும் வேறு நாட்டவர்கள் தம்மிடையே பிளவினை உண்டாக்க முடியாது என்பது இவரது எண்ணம்.

தேசிய உணர்ச்சிக்கு ஊக்கம் தருகின்ற வகையில் வா.வே.சு.ஐயர், வ.உ.சிதம்பரம் ஆகியோரின் நட்பும் திலகரின் தொடர்பும் கிடைத்தது. இவ் உணர்ச்சியோடு சென்னை கடற்கரையில் அவர் பாடிய பாடல்கள் நாடெங்கும் பரவின. இதன் மூலமாகவே இவர் நாடறிந்த கவிஞரானார். இவரது பாடல்களில் தமிழ்ப் பற்றும் மொழிப்பற்றும் ஒன்றையொன்று விஞ்சி நின்றன. தமிழால் பாரதியார் தகுதி பெற்றார். பாரதியால் தமிழ் தகுதி பெற்றது என்று பாராட்டும் அளவிற்கு பாரதியின் மொழிப்பற்று அமைந்திருந்தது. இவரது பாடல்களில் எப்போதும் தமிழகத்தின் மலைகள், ஆறுகள் , மரங்கள், கடல்கள், விலங்குகள், மாந்தர்கள் போன்றன வந்து கொண்டே இருக்கும். தமிழின் முதன்மை, தொன்மை, ஆளுமை மற்றும் பெருமைகளை உணர்த்தியவர் பாரதி. இம் மொழி எல்லா வளமும் பெற்று உலகத் தமிழ் மொழியாக விளங்க வேண்டுமென விரும்பியவர் இவர்.

## பொதுவுடமை சிந்தனையாளர்

இவரது பொதுவுடைமைக் கருத்துக்களை ஓரினம் மற்றும் ஓர் சமூகம் என்கின்ற குறுகிய வட்டத்தினுள் அடைத்துவிட முடியாது. உலகத்திற்கே பொதுவான வாழ்வியல் கருத்துக்களை பாரதி எடுத்துக் காட்டியிருந்தார். சோசலிசம், கம்யூனிஷம் என்ற வார்த்தைகளுக்கு நிகரான பொதுவுடைமை என்ற சொல்லாக்கத்தினை வகுத்தவர் பாரதி. 30 கோடி சனங்களில் சங்கம் முழுமைக்கும் பொதுவுடைமை ஒப்பில்லாத சமுதாயம் உலகத்திற்கு ஒரு புதுமை என்று கூறுகின்றார். உலகில் வாழ்கின்ற மானிட சமுதாயம் செழிப்புற்று வாழ வேண்டுமென்றால் உலகம் முழுவதும் இக் கொள்கை பரவி விடுதல் வேண்டும் என்றார். இவரது கருத்துக்கள் உலகில் சமத்துவத் தன்மையுடன் வாழ்வதற்கு வழி காட்டுகின்றன. பாரதியின் தனிப்பட்ட பொதுவுடைமை, சாதிய பொதுவுடைமை, பொன்னியப் பொதுவுடைமை, என்பவை எல்லோருக்கும் எல்லாம் சமம் என்ற கருத்துப்பட உள்ளது. புதிய ருஷ்யா, பாரத சமுதாயம் விடுதலை, சுதந்திரப்பள்ளு போன்ற பாடல்களில் பொதுவுடைமைச் சிந்தனையையும் அது சமுதாயத்தில் பரவவேண்டியதன் அவசியத்தினையும் விரிவாக வற்புறுத்தியுள்ளார்.

## அரசியலில் ஈடுபாடு

1905 இல் பாரதி நேரடியாகவே அரசியலில் ஈடுபட்டார். இரண்டு தடவைகள் காங்கிரஸின் மகாநாட்டில் கலந்து கொண்டார். பாரதியின் கட்டுரைகளில் வேகத்தினையும் வீச்சினையும் கண்டு பயந்த ஆங்கில அரசு பாரதியாரைக் கைது செய்ய முற்பட்டது. இதனால் நண்பர்களின் உதவியுடன் அங்கிருந்து தப்பி புதுவையில் தஞ்சமடைந்திருந்தார். ஏறத்தாழ 10ஆண்டுகள் வரை அங்கு அவர் தங்கியிருந்தார். மீண்டும் திரும்பி வந்த சமயத்தில் கைது செய்யப்பட்டு கடலூரில் சிறை வைக்கப்பட்டார்.

பின்னர் அவரது நண்பரான சதந்திர மித்திரன் ஆசிரியர் அரங்கசாமி ஐயங்காரின் முயற்சியினால் சிறையிலிருந்து விடுபட்டார். பின்னர் தனது மனைவியின் ஊரான கடையத்திற்குச் சென்று அங்கிருந்த கிராம மக்களுக்கு புரட்சிக் கொள்கைகளை எடுத்துக் கூறினார். ஆனால் அவரது கருத்துக்கள் அங்கு எடுபடவில்லை. இதனால் சென்னை வந்த பாரதி தனது படைப்புக்களின் மூலமாக புரட்சிக் கருத்துக்களைப் பரவ விட்டார்.

## சமூக விழிப்புணர்வு

சாதி வேறுபாடுகளை தாக்கிப் பேசினார் மூடநம்பிக்கைகளினை எதிர்த்து முழங்கினார். ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்காத இவர் அக்கல்வியினை முற்றாகப் புறக்கணித்தார் என்றும் கூற முடியாது. நாட்டில் உள்ள சாதி முறையினை ஒழித்தால் அனைவரும் சமன் என்ற நிலை ஏற்பட்டு புதிய மாற்றங்கள் உண்டாகும் என நம்பிக்கை கொண்டார். ஏற்கனவே உள்ள சாதி முறையினை ஒதுக்கிவிட்டு தமிழ்ச் சாதி, மானிடசாதி என்பனவே தமிழகத்தில் தேவை என்றார்.

உழைக்கும் வர்க்கத்தின் மீது மிகுந்த ஈடுபாடு காட்டினார். பிரமதேவன் கலை இங்கு நீரே என தொழிலாளர்களை பாராட்டுகிறார். இவர் கண்ட பாரதத்தில் பசி, பட்டினி, பஞ்சம் என்பன இல்லை. ஏன் சா கூட இல்லை. அறியாமை விரட்டப்பட வேண்டும் என்றார். தெளிவாக அறிதல் தெளிவாக மொழிதல் போன்ற பண்புகள் பாரதியின் செய்யுள் நடையில் காண்பது போலவே உரைநடையிலும் காணப்பட்டன.

## இறுதிக்காலம்

1920 இல் மீண்டும் சுதேச மித்திரன் இதழின் துணைஆசிரியராக பணியாற்றினார். சென்னை திருவெண்ணிக்கேணியில் வசித்து வந்தார். அங்கிருந்த காலப்பகுதியில் பார்த்தசாரதி கோயிலுக்கு அக்கோயிலில் உள்ள யானைக்குப் பழங்கள் கொடுப்பதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒருதடவை யானைக்குப் பழம் கொடுக்க முற்பட்ட போது அவர் யானையால் தூக்கி எறியப்பட்டார். தொடர்ந்து வயிற்று வலியினால் பாதிக்கப்பட்டு வந்த பாரதி 1921 செப்டெம்பர் 11 இல் இறந்தார். இவரது இறுதி ஊர்வலதில் 14 பேர்கள் மட்டுமே சென்றமை குறிப்பிடத்தக்கது. உயிருடன் வாழ்ந்த சமயத்தில் அவரைக் கௌரவம் செய்யாத இந்தச் சமுதாயம் இறந்த பின்பு அவருக்கு மணிமண்டபம் கட்டிக்கொடுத்து கௌரவப்படுத்தியது. இவர் இறந்த சமயத்தில் அவருக்கு வயது முப்பது. இவர் தனது வாழ்நாளில் பெரும்பாலான கட்டங்களை வறுமையிலேயே செலவழித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நிறைவுரை

தேசிய நதிநீர் இணைப்புப் பற்றி அன்று பாடிய பாரதிக்கு தேமதுர தமிழோசை உலகம் முழுவதும் பரவும் வகை செய்தல் வேண்டும். என்பது தனியாத தாகமாக இருந்தது. இவர் ஒரு தீர்க்கதரிசி . இவர் கண்ட கனவுகளில் பல இன்று சாத்தியப்படுகின்ற நிலையில் உள்ளன. சுதந்திர கனவு, சேது சமுத்திரத்திட்டம், எட்டுத்திக்கும் சென்று சாஸ்திரம் கற்றல், வானினை அளக்கும் விண் கலங்கள், சந்திரமண்டலம் கண்டு தெளிதல், ஆண்களோடு பெண்கள் சரிநிகராக செயற்படுதல் என்பன சாத்தியப்பட்டுள்ளன.

*அடிக்குறிப்புக்கள்*


*1. ராஜூ.தி.சா 1960, பாரதிவழி, சென்னை*

*2. கேசவன், கோ, 1991, பாரதியும் அரசியலும், சென்னை*

*3. தேசிய கலை இலக்கியப் பேரவை, 1984, பாரதி பண்முகப்பேர்வை, யாழ்ப்பாணம்*

*4. ஜீவானந்தம்ச ப, 2002 பாரதிதரிசனம், சென்னை*

*5. சுப்பிரமணியப்பாரதியார், சி, பாரதியார் கவிதைகள், சென்னை*

*6. விசுவநாதன். சீனி, 1992, நெறிகாட்டிய பாரதி , சென்னை*

*7. மணியரசன், பெ, வளவன், 1982 பாரதி - ஒரு சமூகப்பார்வை, சென்னை*

*8. பெரியசாமித்தூரன், ம.ப, 1979, பாரதியும் பாட்டும், சென்னை*

*9. பூம்புகார் பிரசுரம், 1977, பாரதியார் கட்டுரைகள்*

*10. அருணாசலம், ச, 1984 பாரதியார் சிந்தனைகள், சென்னை*

*11. சுந்தரவடிவேலு, நெ.து, 1978, வாழ்விக்கவந்தபாரதி, சென்னை*

*12. உமா, சுபத்திரா, சுமதி, பிரேமா, 2009, தமிழ் அறிஞர் வரலாறு, திருவையாறு.*



**கலாநிதி க. அருந்தவராஜா**

சிரேஷ்ட விரிவுரையாளர்

வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


## மாணவர்கள்

*சிந்தனைப் பெட்டகங்கள்....*
*சிற்பிகள் வடித்த*
*மாபெரும் சிற்பங்கள்....*
*ஓவியன் வரைந்த*
*அழகுப் பதுமைகள்...*
*முத்துப் பல்லக்கில்*
*உலாவத் தவிக்கும்*
*நாளைய மன்னர்கள்....*
*நாட்டின் சிம்மாசனத்தை*
*அறிவென்ற முத்தால்*
*அலங்கரிக்கின்ற*
*மாணிக்கப் பரல்கள்....*

*சமூகத்தின் நடுவே*
*புதுமைகள் பல*
*செய்திடப் பிறந்த*
*வெற்றியாளர்கள்.....*
*சாதனைகளைச் சாதிக்க வந்த*
*சமூக விழுமியங்கள்.....*

**இ.யமுனா**

13 கலை

# எமது பார்வையில் பாடசாலை வளர்ச்சி

இலங்கையின் கல்வி வளர்ச்சி பிரித்தானியரின் வருகையுடனே திருப்பு முனையாக அமைந்தது. இதற்குக் காரணம் மிசனெரிமாரின் நடவடிக்கைகளாகும். அந்த வகையிலே யாழ்ப்பாணத்தவர்கள் கல்வியில் இலங்கையில் முன்னணியில் நின்றமைக்கான காரணம் அவர்களுக்கு அமெரிக்க மிசனெரிமார் கிடைத்த வரப்பிரசாதமாகும். அது போலவே எமக்குக் கிடைத்த கொடையே மெதடிஸ்த மிசனெரியின் கடைக்கண் எமது கிராமத்தின் மீது திரும்பியமையாகும்.

எமது கிராமத்தில் மக்கள் குடியேறிய பின் தமது கல்வித் தேவையினை நிவர்த்தி செய்வதற்காக திண்ணைப்பள்ளிகளை நிறுவிக் கொண்டனர். திண்ணைப்பள்ளி எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்பது தெரியவில்லை. திரு கி.தா.சீனித்தம்பியின் திண்ணைப்பள்ளியில் கல்வி கற்றவர்களே எமது பாடசாலையின் ஆரம்பகால அதிபர்களாகவும், ஆசிரியர்களாகவும் பணியாற்றினர். திண்ணைப்பள்ளி 1910ஆம் ஆண்டு மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையாக அந்தஸ்து வழங்கப்பட்டது. மிசனெரியின் நோக்கம் கல்வியின் ஊடாக மதமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் எமது கிராமத்திலே பல படித்த வர்க்கத்தினரை உருவாக்கியதோடு அவர்களால் வழிநடத்தப்பட்ட பாடசாலை இன்று நூற்றாண்டு விழா காண்கின்றது என்றால் முதற்கண் அவர்களுக்கு நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

ஆரம்பக் கல்விப் பாடசாலையாக உருவாகிய இப் பாடசாலை காலத்திற்குக் காலம் கடமையேற்ற அதிபர்களாலும், ஆசிரியர்களாலும் மற்றும் பாடசாலையில் ஈடுபாடு கொண்ட கிராமத்தவரின் உழைப்பின் பலனாலும் 1C பாடசாலையாக தரமுயர்ந்து இன்று நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்றது.

முகாந்திரம் இளையதம்பி அதிபராகக் கடமையாற்றிய 1940 காலப்பகுதியில் எமது பாடசாலையில் SSC வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு உயர்தரப் பாடசாலையாக எழுச்சியடைந்தது. இக்காலப்பகுதியிலே பல அயற் கிராமத்தவர்களும் இப்பாடசாலையில் கல்வி கற்றனர். இப்பாடசாலையின் பாடசாலைக் கீதத்தினை பின்னாளில் இயற்றிய மண்டூர் சோமசுந்தரப் புலவரும் இக்காலத்தில் கல்வி கற்றார்.

திரு.அருள்செல்வநாயகம் ஒரு எழுத்தாளராக இருந்து எமது கிராமத்திற்கு பெருமை சேர்த்தது மட்டுமல்லாது எமது பாடசாலையின் பெயரை சிவ சக்தி வித்தியாலயமாக மாற்றியமைத்தார்.

க.பொ.த (சா/த) தரத்தில் வே.மாலினி குறிப்பிட்ட பாடத்தில் முதல் முதலாக அதி விஷேட சித்தியைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்தார். எமது மாணவர்கள் க.பொ.த (உ/த) படிக்க வேண்டும் என்றால் பட்டிருப்பு.ம.ம வித்தியாலயத்திற்கே செல்ல வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டது. போக்குவரத்து வசதியற்ற, தற்போது போன்று பொருளாதார வசதியற்ற அக்காலத்திலே சுமார் 5km தூரத்தினை கால் நடையாகவும், ஈருருளி மூலமாகவும் மழை, வெயில் போன்ற இயற்கையின் துன்பத்தைச் சுமந்து கல்வி கற்று வந்தனர். இதனால் பலர் உயர்தரம் கற்காமலே விட்டனர். இவ்வாறான துன்பியல் சம்பவங்களுக்கு எல்லாம் சாவுமணி அடிக்கின்ற அதிபராக வந்து சேர்ந்தார் திரு.இ.கந்தசாமி அவர்கள்.

அவரது அயராத பணியினால் 1992இல் உயர் தரம் ஆரம்பிக்கப்பட்டு அதன் முதலாவது அறுவடையில் 1994இல் 4 பேர் பல்கலைக்கழகத்திற்கும் ஒருவர் கல்விக் கல்லூரிக்கும் தெரிவு செய்யப்பட்டனர். அதிபரின் சேவைக்கு மணிமகுடம் சூடும் வகையில் இரண்டாவது உயர்தரப் பெறுபேற்றில் சீ.முரளிதரன் மாவட்ட நிலையில் முதன் நிலை பெற்று சாதனை படைத்தார்.

இதே போல் க.பொ.த (சா/த) பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தியடைகின்ற நிலை திரு.இ.கந்தசாமி அதிபரின் காலத்தில் உருவாக்கப்பட்டது. அவர்களால் உருவாக்கப்பட்ட கல்வி வளர்ச்சியானது திரு.கோ.கயிலாயபிள்ளை அதிபர் காலத்திலும் தொடர்ந்தது. 2003 ஆண்டு கி.ஜயந்திமாலா சகல பாடங்களிலும் அதிவிஷேட சித்தியைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்தார். இதன் தாக்கம் இன்று வரையும் காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. இதற்காகப் பாடுபட்ட அதிபர், ஆசிரியர், மாணவர்கள் அனைவருக்கும் எனது நன்றி கலந்த பாராட்டுக்கள்.

திரு.இ.கந்தசாமி அதிபர் அவர்களின் பணிகள் அளப்பரியன. கல்விப் பணியோடு சமயப் பணியையும் மேற் கொண்டார். கற்பித்த பாடம் சமயம் என்பது மட்டுமன்றி குருமண்வெளி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் தலைவராக இருந்து பல மாற்றங்களைக் மேற்கொண்டார். பாடசாலையில் பௌதிக வளம், ஆளணி வளம் என்பவற்றை பன்முகப்படுத்தினார். இவர் காலத்தில் மாடிக் கட்டடங்கள் வளர்ந்தன. இவர் மெலிந்த உருவமும் வெள்ளை வேட்டியுடனும் காணப்பட்டாலும் இவரது கடினமான வார்த்தைகள் பாடசாலையின் ஒவ்வொரு வளர்ச்சிக்கும் படிக்கட்டாய் அமைந்தன. இதனால் ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வியதிகாரிகள் அனைவரும் இவருக்கு ஒத்துழைப்பு வழங்கினர். ஒரு மகானாகக் காணப்பட்ட அவரை நாம் அனைவரும் சிரம் தாழ்த்தி நன்றியோடு வாழ்த்தி அஞ்சலி செலுத்த வேண்டும்.

இவரின் பாடசாலைக்கான பரந்துபட்ட சேவையை பின்வந்தவர்களால் கட்டிக்காக்க முடியாமல் போனது. இதற்குக் பல காரணங்கள் காணப்பட்டண. அவற்றிலே முக்கியமானது அதிபர், ஆசிரியர், மாணவர்கள், சமூகம் என பல தரப்பினரிடமும் காணப்பட்ட முரண்பாட்டுத் தன்மை மற்றும் கிராமத்தவர்கள் பாடசாலையில் அக்கறை காட்டாமை என சிலவற்றை நாம் கூறலாம்.

இவற்றுக்கெல்லாம் முற்றுப் புள்ளி வைக்கும் சம்பவமாக எமக்கு புதிய அதிபராக திரு.வ.கனகரெத்தினம் அதிபர் அவர்கள் கிடைத்துள்ளார். ஒரு வருடத்திற்கும் மேலாக திட்டமிட்டு செய்ய வேண்டிய நூற்றாண்டு விழா எனும் பாரிய பணியினை தான் பதவியேற்று நான்கு மாதத்தினுள் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், சமூகத்தினர் என அனைவரதும் ஒத்துழைப்புடன் சிறப்பாகவும் செம்மையாகவும் செய்து முடித்த செயல் வீரராவார்.

பட்டிருப்பு கல்வி வலயத்தில் மொத்தம் 44 பாடசாலைகளில் க.பொ.த சாதாரண தரம் காணப்படுகின்றது. பட்டிருப்பு கல்வி வலயத்தில் தேசிய பாடசாலை, 1AB பாடசாலைகள் என பல பாடசாலைகள் உள்ளபோதும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 2009இல் எமது பாடசாலை 2வது இடத்திலே இருக்கின்றது. இவ்வாறு எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்து தருவதற்காக உழைத்த, உழைத்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு பல காரியங்களும் செயற்பாடுகளும் தடையாக அமைந்துள்ளன. பெற்றோர், கிராமத்தின் பொருளாதார எழுச்சி, அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விப் பணிமனை என நாம் இவற்றினை முன்வைக்கலாம். இவற்றில் முதற் காரணம் எமது பெற்றோர் ஆகும். முன்பு தாய்மார் பிள்ளைகளுக்கு தங்கள் கஷ்டத்தை உணர வைத்தனர் ஆனால் தற்போதைய காலத்தில் குடும்பக் கஷ்டம் என்றால் என்ன என்று பிள்ளைகளுக்குத் தெரியாது. அது மட்டுமன்றி படித்து பட்டம் பெற்று தொழிலுக்காக உண்ணாவிரதமிருந்து வேலை கிடைத்தாலும் 20,000 வரையுமே சம்பளம் எடுக்கின்றனர். ஆனால் 19 வயதில் தன் மகன் வெளிநாடு சென்றான் என்றால் 30,000 அல்லது 40,000 சம்பளம் எடுத்து நிறையப் பணத்துடன் நாடு திரும்புவான். அதே போல் கல்வி கற்றும் வேலை பெற முடியாத நிலை இவ்வாறான ஏற்றத் தாழ்வான நிலையினை உணர்ந்த இன்றைய தாய்மார்கள் தமது பிள்ளைகள் படிக்காவிட்டாலும் பரவாயில்லை. நாளை வெளிநாடு சென்று உழைத்தால் மட்டும் போதும் எனும் மன நிலையில் உள்ளனர். இந் நிலை மாறும் வரை கல்வி வளர்ச்சி குறைவாகத்தான் காணப்படும்.

அதிகமான பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வி மற்றும் செயற்பாடுகள் பற்றி போதிய கவனம் செலுத்துவதில்லை. பெற்றோர் தமது பிள்ளையின் கல்வி செயற்பாடுகள் தொடர்பாக பாடசாலையுடன் தொடர்பிலிருப்பதில்லை. மற்றும் தமது பிள்ளைகளின் செயற்பாடு தொடர்பாக ஆராய்ந்து பார்க்காமல் தன்பக்க நியாயத்தை மட்டும் முன்நிலைப்படுத்துவது இவை போன்ற காரணங்கள் எமது சமூகத்தின் கல்விக்கு தடையாகவே அமைந்து விடும். பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வி செயற்பாடு தொடர்பாக கண்காணிப்பில் இருப்பதோடு பாடசாலையுடன் தொடர்பில் இருக்க வேண்டும். தற்போதைய பெற்றோருக்கு இதற்கெல்லாம் நேரம் எங்கே இருக்கப் போகின்றது. எமது தாய்மாருக்கு தொடர் நாடகம் பார்க்கவே நேரமில்லாதபோது இதற்கு எங்கே நேரம் கிடைக்கப் போகிறது.

கல்வி அதிகாரிகளும் எமது பாடசாலை மீது அதிக அக்கறை காட்டாமை பாடசாலை முன்னேற்றத்திற்கு தடை எனலாம். 15.11.2010 அன்று எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவின் போது மாகாணக் கல்விப் பணிப்பாளர் கூறியது இங்கு பொருத்தமானதாகவே அமைகின்றது. தங்கச் சப்பாத்து அணிந்த நகர்புறப் பாடசாலைக்கு வழங்கப்பட்ட சலுகைகள் கிராமப் பாடசாலைகளுக்கு வழங்கப்படுவதில்லை. எமது பாடசாலை எந்த ஒரு விசேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழும் உள்வாங்கப்படவில்லை. நூற்றாண்டு காணும் கட்டடங்கள் கூட மாற்றி அமைக்கப்படவில்லை.

எமது பாடசாலையில் இரண்டு சமாந்தர வகுப்புக்கள் உள்ள நிலையில் ஒரே ஒரு விஞ்ஞான ஆசிரியர் மட்டும் உள்ளார். அது போன்று உயர் தரத்திற்கு வரலாற்றுப் பாடத்திற்கு ஆசிரியர் இல்லை. மற்றும் அதிபர் ஆசிரியர்களின் செயற்பாட்டைக் கூட கல்வியதிகாரிகள் கண்டும் காணாதது போல் ஏற்கனவே செயற்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. இவைகளும் பூர்த்தி செய்யப்பட்டால் பாடசாலை எழுச்சியடையும். இவ்வாறு பல காரணங்கள் இருக்க நாம் பாடசாலையை மட்டும் குற்றம் சுமத்துவது முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாது. இன்று சில பெற்றோர் பாடசாலையின் மீது குற்றச் சாட்டுகளைச் சுமத்திக் கொண்டு ஏனைய பாடசாலைகளில் தன் பிள்ளைகளைச் சேர்க்கும் துர்ப்பாக்கிய நிலையை உருவாக்கியுள்ளனர். இது பிழையான நடவடிக்கை என்றும் எமது பாடசாலைக்குச் செய்யும் துரோகம் எனவும் நான் கருதுகின்றேன் இந்நிலை மாற்றமடைந்து அனைவரும் ஒன்றுதிரண்டு பாடசாலையைக் கட்டியெழுப்ப முன் வர வேண்டும்.

இலங்கைத் தமிழர்கள் தங்கள் வரலாற்றை எழுதிப் பாதுகாக்காதது ஒரு வரலாற்றுத் தவறாகும். இது போன்றே எமது கிராமத்தவர்களும் பாடசாலை வரலாற்றை தொகுக்க மறந்து விட்டனர். இது பாடசாலையின் வரலாறு தொடர்பான தெளிவற்ற தன்மைகளை ஏற்படுத்தியது. ஒரு வருடத்திற்கு மேலாக சிரமப்பட்டு எமது பாடசாலையின் வரலாற்றினை தேடிப் பெற்று திரு.க.உபேந்திரன் ஆசிரியர் 2008ஆம் ஆண்டு எமது பாடசாலையின் "வெட்டாப்பு" சஞ்சிகையில் வெளியிட்டார். அவருக்கு எம் சமூகம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்காக பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் தங்களாலான இயன்ற சேவையினை பாடசாலை நிர்வாகத்திற்கு செய்து வருகின்றனர். இதனோடு ஏனைய எல்லா மக்களும் ஒன்றிணைந்து அதிபரின் கரங்களைப் பலப்படுத்தி மென்மேலும் பாடசாலையை உயர்த்தப் பாடுபட வேண்டும்.

**பொ.ஜெகநாதன்**
குருமண்வெளி

# மலரும் நினைவுகள்...

எங்கோ பிறந்தோம்!
எங்கோ வளர்ந்தோம்!
அனைவரும் இங்கே!
சந்தித்துக் கொண்டோம்!
இதயத்தை நட்பால்
சிந்தித்துக் கொண்டோம்!

முகங்களைப் பற்றி
யோசித்ததுமில்லை!
இனம் பணம் பார்த்து
நேசித்ததுமில்லை!

எதிர்பார்ப்புக்கள்
எதுவுமில்லை!
ஏமாற்றங்கள்
சிறிதுமில்லை!

சின்னச் சின்ன சண்டைகள்
சீக்கிரத்தில் சமாதானம்
கிள்ளியெடுத்த கவலைகள்
சொல்லிமகிழ்ந்த கவிதைகள்

இலச்சினை பதிக்க உற்சாகங்கள்
உழைப்பைப் பெருக்க உற்சாகங்கள்
நலத்தைப் பெருக்க நம்பிக்கைகள் - என்று
கங்கணம் கட்டிக்கொண்ட காலங்கள்

நினைத்தால் இனிக்கும் நினைவுகள்
கலைத்தாலும் மறையாத கனவுகள்
நன்மைகள் வளர முயற்சிப்போம் -
என்றும்
நட்பால் உயர்ந்து சாதிப்போம்.

**கு.லிசன்சங்கர்**
தரம் - 13 கலை




அதிபருடன் சாரணர்களும் பொறுப்பாசிரியர்களும்



அதிபர், பொருப்பாசிரியருடன் பெண் சாரணர்கள்



[illegible]



[illegible]

# எம் வாழ்வில் சக்தி

மனிதன் தனது பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு சக்தி பயன்படுகிறது. வேலை செய்யும் ஆற்றலே சக்தி என்று கூறப்படுகின்றது. சக்தியை அளக்கும் அலகுகளாக யூல், கலோரி, கிலோ, வாற்று மானி என்பன காணப்படுகின்றன. முதன்னிலைச் சக்தி என்பது இயற்கைச் சூழலில் அச் சக்தி நிலவும் நிலையிலே பெற்றுக் கொள்ளத்தக்க சக்தியாகும். இவ்வாறான முதன் நிலைச் சக்திகளாக சூரிய சக்தி, நீர் அமுத்த சக்தி, சமுத்திர வற்றுப் பெருக்குச் சக்தி, அணுக்கரு சக்தி, உயிர்த்திணிவு சக்தி, காற்று சக்தி, உயிர் சுவட்டு எரி பொருள் சக்தி, போன்றவற்றைக் கருதலாம்.

மேற் குறிப்பிட்ட சக்தி வடிவங்களிலே அணுக்கரு சக்தியையும் வற்றுப் பெருக்கு சக்தியையும் தவிர்ந்த மற்றைய அனைத்தையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ அனைத்தையும் சூரிய சக்தி மூலங்கள் எனக் கூறலாம். புவிக்கு சக்தியை வழங்கும் பிரதானமான சக்தி முதல் ஊற்று சூரியன் ஆவான். அதாவது சக்தி அனைத்திலும் மூலமும் முதலுமாக விளங்குபவன் சூரியனே.

சக்தியானது வெப்ப சக்தி, அமுக்க சக்தி, இயக்க சக்தி, மனித சக்தி, இரசாயன சக்தி, பொறிமுறை சக்தி போன்ற பல்வேறு வடிவங்களில் காணப்படுகின்றது. சக்தி ஒரு வடிவத்திலிருந்து இன்னொரு வடிவத்திற்கு மாறுமே தவிர சக்தியை ஆக்கவோ அழிக்கவோ முடியாது. இதுவே சக்திக் காப்பு விதி என்று கூறப்படுகின்றது. இன்று நாம் எமது தேவைகளை நிறைவேற்ற பயன்படுத்தும் சாதனங்களில் பெரும்பாலானவை மின் சக்தி மூலம் இயக்கப்படுகின்றது. மின் சக்தி, ஔிசக்தி, ஒலி சக்தி, வெப்ப சக்தி என பல்வேறு வடிவங்களால் மாறி எமக்கு பயனைத் தருகின்றது. இவ்வாறு இன்றைய நவீன யுகத்திலே மனிதனுக்கு மிக அவசியமான ஒன்றாக சக்தி திகழ்கின்றது.

மனிதன் உயிர் வாழவும் வேலைகளை நிறைவேற்றவும் சக்தி இன்றியமையாதது. ஒருவர் உண்ணும் உணவின் மூலமாக அவருக்கு சக்தி கிடைக்கின்றது அவர் தாவரங்களில் இருந்து நேரடியாக உணவைப் பெற்றபோதும் மறைமுகமாக சூரியனில் இருந்தே பெறுகின்றார் என்பதே அவர் அறியாத உண்மையாகும். ஏனெனில் சூரியனின் ஒளிச் சக்தியைப் பயனுடையதாக மாற்றும் செயன்முறையான ஒளித் தொகுப்பினை செய்வதன் மூலமாகவே தாவரங்கள் தமது உணவை உற்பத்தி செய்கின்றன.

மனிதன் உண்ணும் உணவானது அவனது உடலில் உள்ள கலங்களுக்கு சமிபாடடைந்த விளை பொருளாக மாறி குருதி மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றது. கலங்களில் உள்ள இழைமணிகள் மூலம் உணவு விளை பொருட்களைப் பயன்படுதி சக்தி உற்பத்தி செய்யப்படுகின்றது.

கிட்டத்தட்ட 200 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் தாவரங்களும் விலங்குகளும் இறந்து புவியில் படிந்தன. இவை உதைப்பு, வெப்பநிலை, பற்றீரியாத் தொழிற்பாடு போன்றவற்றின் காரனமாக இவ் உயிர்த் தொகுதி பெற்றோலியமாக மாறியது. இவ்வாறு முற்பட்ட உயிர்களில் சேமிக்கப்பட்ட சக்தியே எரிபொருள், நிலக்கரி, கனியவாயுவாக எமக்கு இன்றும் பயன்படுகின்றது.

21ஆம் நூற்றாண்டின் நவீன அறிவியலின் துரித வளர்ச்சி காரணமாக பெற்றோலிய எரிபொருட்களுக்கான கேள்வி அதிகரித்துள்ளது. இவை மின்சக்தி வளங்களாகும். வரையறுக்கப்பட்ட இவ் வளங்கள் குறித்த பிரதேசங்களில் பரவிக் காணப்படுகின்றன. இதனால் இவை குறித்த காலத்திற்கு மட்டுமே போதுமானவை எல்லையின்றி அதிகரித்துச் செல்கின்ற பெற்றோலிய எரிபொருட்களின் கேள்வியை ஓரளவாவது நிறைவேற்ற இவ் வளங்களை வீணாக்காது காப்பது அவசியமாகும்.

விஞ்ஞான ரீதியில் மட்டுமன்றி ஆன்மிக ரீதியிலும் சக்தி முக்கியமானதாக விளங்குகின்றது. சமயத்தை எடுத்துக் கொண்டால் இந்தப் பூமி அனைத்திற்கும் சக்திமூலம் இறைவன் எனக் கூறப்படுகின்றது.

இவ்வாறாக எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் சக்தியே முதன்மையானது என்றும் அதனைக் கொண்டே இயக்கப்படுகின்றது என்றும் கூறப்படுகின்றது. ஆக மொத்தத்தில் சக்தி இன்றியமையாதது. சக்தியை தவறான விதத்தில் பயன்படுத்தி ஆபத்தில் சிக்காமல் சக்தியின் வீண் விரயத்தை தடுப்போம். எனவே நாம் சக்தியை சிக்கனமாகப் பயன்படுத்துவோம். சிறந்த நல்ல பயன்களைப் பெறுவோம்.

சு. ஜிலக்சி
தரம் 11 S

## எம் இனிய ஆசான்கள்

மகுடம் சூடி வந்த எம் இனிய ஆசான்கள்
இனிய பொன்னாளிலே புன்னகை தவழ
உங்கள் உள்ளங்கள் குளிர
பொன்மாலைகள் சூடி வணங்குகின்றோம்

இடி மின்னலின் பின் தான்
வானில் இன்பமான மழை
எம் ஆசான்களின் கற்பித்தல் தான்
எம் இதயங்களில் கல்வியின் அஸ்திவாரம்

கல்வி ஓவியத்திற்கு களம் அமைத்து
வர்ணம் பூசி வடிவமைத்து
ஏணிபோல் தூண் அமைத்து
ஏற்றி விட்டவர்கள் எம் ஆான்கள்

கோபுரக் கலச மதில்
கொலு விளக்கு வைத்தது போல்
கல்வி ஒளியூட்டி வழிகாட்டி
விழி கொடுத்த எம் ஆசான்கள்

கரையில்லாக் கல்வியை ஊட்டி
களங்கம் இல்லா ஒழுக்கத்தைக் காட்டி
நிலையாக பாரினிலே வாழவைத்த – ஆசான்களே
நித்தமும் உம்மை நெஞ்சார போற்றுகிறோம்

த. ஜெயராஜினி
தரம் :- 11 S

# அன்னை

அண்டம் கண்ட முதல் தெய்வம்
அவனி போற்றும் அன்னையவள்
தரணி பிறக்கக் காரணமே
தாய்தான் அன்றி வேறுண்டோ

பிள்ளை சிறப்பு பிறர் பேச
கொள்ளை இன்பம் குதூகலிப்பாள்
வல்லவர் எல்லாம் அவ்வுலகில்
வாழ்ந்திட காரணமாயிருப்பாள்

உதிரம் உடம்பில் உறையவைத்தே
உருகியே தாய்ப்பால் ஊட்டிடுவாள்
எத்தனை வலிகள் கொடுத்தாலும்
மத்தளம் போலத் தாங்கிடுவாள்


அண்டங்கள் கோடி பெயர் பெறினும்
ஆயிரம் வேதங்கள் முளைவிடினும்
கண்டங்கள் கடந்து நாம் சென்றிடினும்
கலங்கரை விளக்காய் ஒளி கொடுப்பாள்

ஆயிரம் உறவுகள் என்னாளும்
அன்பு ஊன்றி நின்றாலும்
அன்னை என்ற தீபமது
அணைந்திடாது அரவணைக்கும்

சரித்திரக் கவிதைகள் புகட்டிடுவாள்
சந்திரன் அதையும் அணைத்திடுவாள்
ஒன்பதினாயிரம் தாலாட்டி
ஒருவாய் ஊட்டத் தவமிருப்பாள்

பிள்ளை கண்ணில் நீர் வடிந்தால்
உள்ளம் நொந்து உருகிடுவாள்
உறக்கம் உணவு எதுவுமின்றி
உதிரம் கொடுத்து நீர் துடைப்பாள்

பிள்ளையை இத்தலம் போற்றிடவே
பெற்றவள் தினமும் உழைத்திடுவாள்
மற்றவர் காலடி மண்டியிட்டும்
மாட்சிமை பொங்கிட வளர்த்திடுவாள்



**மோ. பிருந்தினி**
தரம் -10V

# வாழ்வும் வளமும்

மேற்கிலே மெல்ல வளைந்தோடும்வாவியும், கிழக்கே கீற்றுக்களாக மீன்கள்துள்ளி விளையாடும் பெரிய குளத்தையும் கொண்டு மற்றைய இரு மருங்கிலும் வயல் சூழ்ந்த மருத நிலமாக மக்களுக்கு வாழ்வூட்டிக்கொண்டிருக்கிறது. தொலைவில் இருந்து பார்க்கும் போதுதான் பச்சைப் பசேல் எனக் காட்சி தரும் பனந் தோப்புகளும் தென்றலில் அசைந்தாடும் தென்னஞ் சோலைகளும் கண்ணுக்குத் தெரிகின்றன. இவ்வாறு இயற்கை வளம் பொருந்திய இக் கிராமத்தில் மாலை வேளையில் புள்ளினங்கள் கூடிக்குலாவுவதையும் பால்சொரியும் பசுக்கள் கன்றைத்தேடிக் கதறுவதையும் காணலாம். இத்தனை எழில் நிறைந்த குருத்து மணல் சூழ்ந்த குருமண்வெளி என்னும் கிராமத்திற்கு அக்காலத்தில் வந்த ஆய்வாளர்கள் "இலங்கையில் ஆரணங்குகள் செறிந்து வாழும் இடம் குருமண்வெளி" என குறிப்பிட்டு எழுதிச் சென்றனர். இவ்வாறு பொறிக்கப்பட்ட வாசகங்கள் பொன் எழுத்துக்கள் போன்று எம் பெண்மைக்கு பெருமை சேர்க்கின்றன.

சோழ வள நாட்டின் இளவரசி சீர்பாததேவி இலங்கை மன்னனை மணந்த காலப்பகுதியில் வீரர்முனையில் விநாயகர் ஆலயம் அமைத்து அவர்களின் அரச, அந்தணர் பரம்பரையினரை ஒன்று சேர்த்து சீர்பாத குலமெனப் பெயரிட்டு அரச விருதினையும், சோழர் காலத்திற்கே சொந்தமான தங்க வேலினையும் பரிசாகக் கொடுத்துச் சென்றனர். நாளடைவில் காடுகளை களனிகளாக்கி விரிந்து பரந்து வாவிக்கரையில் விவசாயத்திற்காக குடிபெயர்ந்த அக்குலத்தவர்கள் அருகிலுள்ள மண்டூர் தில்லை மரத்தில் அவ் வேலை வைத்து தில்லைக் கந்தனாக வழிபடத் தொடங்கினர். தில்லைக் கந்தன் இன்று மண்டூர் முருகனாக அனைவருக்கும் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சிறப்பு வாய்ந்தது எமது பிரதேசமென்றால் மிகையாகாது.

செவி வழியாகக் குருகுல வாசத்தில் தொடங்கி திண்ணைப் பள்ளிகளிலே ஆண், பெண் வேறுபாடின்றி ஆரம்பக் கல்வியை ஐயம் திரிபறக் கற்று அயலில் உள்ள நகர்ப்புற பாடசாலைகளில் மேற்படிப்பை முடித்து ஆசிரியர்களாக சேவை செய்யக் காத்திருந்தனர். இதற்கு ஆதாரமாக 1910 ஆம் ஆண்டு பாடசாலை ஆரம்பித்தவுடனேயே இங்குள்ளவர்கள் சேவையில் இணைந்து கடமை புரிந்துள்ளனர். இதிலிருந்து இவர்களின் கல்வி வளர்ச்சி நூறாண்டுகளுக்கு முன்பே முளைவிட்டு இன்று ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி நாற்றிசையும் படர்ந்து விரிந்து கொண்டிருப்பதனைக் காணமுடியும்.

தன்னலம் கருதாது மக்களுக்காக அரும்பாடுபட்டு அன்புடனும், ஆதரவுடனும் எம்மையும் இப்பாடசாலையையும் ஒழுங்காக வளர்த்து விட்ட தலைவர் பெரிய ஐயா என்று மதிப்புடன் அழைக்கப்பட்ட இளையதம்பி அதிபராவார். பல ஆண்டுக் காலதலைமைப்பதவிக்காக முகாந்திரம் எனும் பட்டமும் வெள்ளிவாளும் இரண்டாம் எலிசபெத் மகாராணியால் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இதை பார்க்கும் போது எமது அரச பரம்பரையின் சின்னங்களோ என எண்ணத்தோன்றுகிறது. இவரது அயராத சேவையின் வழிகாட்டலும் பலரைக் கிறிஸ்தவர்களாக மதமாற்றமடையச் செய்தது. இதைக் கண்டு சைவப்பாடசாலையை அமைக்கும் பணியில் அயராது அல்லும் பகலும் பாடுபட்டு வெற்றி கண்டவர் அவரின் மருமகனான முருகேசப்பிள்ளை இளையதம்பி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவர் தம் கிராமத்தில் மட்டுமல்ல வம்மி வட்டவான் அ.த.க. பாடசாலை போன்றவற்றின் ஸ்தாபகராக விளங்கியதோடு

இக் கிராமத்தில் உள்ள சிலருக்கு உயர்கல்வி கற்க வசதியளித்து அவர்களை ஆசிரியர்களாக பாடசாலைகளில் நியமித்து தொழில்வாய்ப்புக்களையும் தேடிக்கொடுத்த பெருமைக்குரியவராவார்.

இம்மண்ணில் அவதரித்து இங்கு ஆரம்பக்கல்வி கற்ற அருள் செல்வநாயகம் எனும் இலக்கிய எழுத்தாளர் அதிபராயிருந்த காலப்பகுதியில் சிவசக்தி வித்தியாலயம் எனப் பெயரை மாற்றி அமைத்தார். அவர் மறுமநாவல்கள், சிறுகதைகள், ஆய்வுக் கட்டுரைகள், வானொலி நாட்டுக் கூத்துக்கள் போன்றவற்றிலும் தம் திறமையை உலகிற்கு வெளிப்படுத்தினார். அதுமட்டுமல்ல சென்னைத் தமிழராய்ச்சி மகாநாட்டிலும் ஆய்வுக்கட்டுரைகளை வாசித்ததோடு மறைந்து கிடந்த விபுலானந்த இலக்கியங்களை மகுடம் வைத்து சுவைபடத் தொகுத்து பல நூலகங்களிலும் தமக்கெனத்தனி இடத்தைப் பிடித்தவர் குறுகிய காலம் வாழ்ந்தாலும் எல்லோர் உள்ளங்களிலும் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்றால் மறுப்பதற்கில்லை.

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்பதற்கிணங்க இங்கு பல சோதிட பரம்பரையினர் தோன்றினர். அந்தவகையில் பரம்பரை பரம்பரையாக வாய்மொழி மூலம் கற்றுத் தேறியவர்களே பிற்காலத்தில் பிரபல்யம் வாய்ந்தவராக விளங்கினார். இன்று பலர் இக்கிராமத்தில் சோதிடக் கலையை ஆர்வத்துடன் கற்றுவெளிப்படுத்துவதைக் காணும் போது ஆதியில் கலந்த அந்தணர் மரபின் வழித்தோன்றல்களோ என எண்ணத் தோன்றுகிறது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதற்கிணங்க தம்மை நாடி வருபவர்க்கு நாடி பிடித்துப் பார்த்து நோய் தீர்க்கும் குருக்கள் பரம்பரையில் வந்த பரிகாரிகளும் விஷமிறக்கும் வைத்தியர்களும் இங்கிருந்து மக்களை நோய் நொடியின்றி பாதுகாத்துள்ளனர். அந்த வழியில் வாழ்ந்து வந்த இன்னும் சிலர் இலவசமாக இச் சேவையை தொடர்ந்து செய்து எம்மக்கள் வாழ்வை வளமாக்குவதையிட்டு நாம் மகிழ்வடைகின்றோம்.

இவ்வாறு இங்கு வாழ்ந்து வந்தவர்களின் சிறப்பால் கிராமம் வளம் பெற்று நிற்பதற்கு மூல காரணமாய் விளங்குவது ஆரம்பத்தில் அத்திவாரமிடப்பட்ட உறுதியான போதனையும், போதிக்க இடமளித்த இப்பாடசாலையுமே என்பதால் கல்வி வளர்ச்சி பற்றி ஒரு கண்ணோட்டம் செலுத்த வேண்டும்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன் இங்கு வாழ்ந்தவர்களின் வாழ்வும் வளமும் எவ்வளவோ மேலோங்கி உள்ள போதிலும் அவற்றை இந்நூற்றாண்டு மலரில் அடக்க முடியவில்லையே என மணம் வேதனை அடைகிறது. எனக்கெட்டிய கிட்டிய தகவல்களை மாத்திரம் குறிப்பிடுவதில் குறை கூறாது மன்னிக்க வேண்டும். அந்தவகையில் இடைக்கால வளர்ச்சிக்குப் பாடுபட்ட அமரர் திரு.இ.கந்தசாமி அதிபர் அவர்களின் சேவைக்காலம் பாராட்டத்தக்கது. பாடசாலையைத் தரமுயர்த்தி பௌதீக வளங்களைப் பெருக்கி பல்கலைக்கழக அனுமதியைப் பெறுவதற்கு வழிவகுத்த பெருமை அவருக்கே உரியதாகும்.

அக்காலப்பகுதியின் கல்வி வளர்ச்சிக்கும் பல காரணங்களை எடுத்துக் காட்டலாம். அதிபரும் அதிகமான ஆசிரியரும் இக்கிராமத்தைச் சேர்ந்தவராகவும் இங்குள்ள பிள்ளைகள் அனைத்தும் இப்பாடசாலையிலே படிக்க வேண்டும் என்ற

கட்டுக்கோப்பும் காணப்பட்டது. இதனால் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் இடம்பதித்தது. நகர்ப்புறப் பாடசாலைகளுடன் போட்டியிட்டு பல துறைகளிலும் பல வெற்றிகளை ஈட்டி சாதனை படைத்த பொற்காலம் என போற்றத்தக்கதாக இருந்தது.

காலமாற்றத்தால் ஆசிரியர் அதிபர் இடமாற்றங்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு போன்றவற்றின் தாக்கத்தால் மாணவரிடையே சிறு காலப்பகுதியில் படிப்பதில் ஆர்வம் குறைந்த நிலை காணப்பட்டது. என்றாலும் எம்மண்ணில் உதித்த மக்களின் முத்துக்கள் இன்று பலவிதத் துறைகளிலும் உயர் பதவிகள் வகித்து எமது நாட்டில் மட்டுமல்ல மேலைநாடுகளிலும் எம் மண்வாசனையை பரப்பி இப்பாடசாலை வளர்ச்சிக்கு ஆதரவு வழங்குகிறார்கள் என்பதையிட்டு நாம் பெருமையடைகிறோம்.

கல்விக்கூடம் என்பது கட்டி முடிக்கப்பட்ட கட்டிடம் அல்ல. அது தினந்தோறும் வணங்கி வழிபட வேண்டிய தேவாலயம் போன்றது என்பதை எடுத்துக்காட்டும் ஆலயங்களின் மத்தியில் அமைந்த ஒரு மண்டபத்தில் முதலீடு செய்யப்பட்ட கல்வி பல அதிபர்கள், ஆசிரியர்களின் கைவண்ணத்தால் பல சிற்பிகளை உருவாக்கியுள்ளது. இவர்களை புடம்போட்ட பொன்னாக இப்புவியில் பளபளக்க வைத்த கடந்தகால நிகழ்வுகளை நூறு ஆண்டுகளின் பின்னர் நினைவூட்டி மறைந்த இம்மண்ணின் மைந்தர்களையும், வாழ்விற்கு வளமூட்டிய ஒவ்வொருவரையும் மீண்டும் மீட்டிப்பார்க்கத் தூண்டுவதோடு துடிப்புள்ள பழைய மாணவர் சமுதாயத்தின் விளிப்பான செயலால் வெளிச்சத்திற்கு வந்த “வெட்டாப்பு” சஞ்சிகை போன்று இலைமறை காயாக எம்முள் முடங்கிக் கிடக்கும் அறிவுப் புதையல்களை உலகிற்கு வெளிப்படுத்த இம்மலர் அசையாத அத்திவாரமாக உங்கள் வாழ்விற்கு வளமூட்டும் என்பதில் வியப்பதற்கில்லை.

“எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே...”

**திருமதி. வி. இராமச்சந்திரா**
விஞ்ஞான ஆசிரியை
ஓய்வு பெற்ற அதிபர்

☞ எழுந்து நடந்தால் எரிமலையும் வழிகொடுக்கும். உறங்கிக் கிடந்தால் சிலந்தி வலையும் எம்மை சிறை பிடிக்கும்.

☞ எவ்வளவு காலம் வாழ்ந்தோம் என்பது கேள்வியல்ல. வாழ்ந்த காலத்தில் என்ன செய்தோம் என்பதே கேள்வி.

# நுண்பாகக் கற்பித்தல் முறைகள் (Micro - Teaching)

**Micro - Teaching** என்னும் சொற்றொடர் டுவைட் அலன் என்பவரால் 1963ல் ஸ்ராண்ட்போட்பல்கலைக்கழக கல்விப் பீடத்தில் முன்வைக்கப்பட்டது. கற்பித்தல் செயற்பாடு குழப்பமான தன்மையையும் ஒன்றுடன் ஒன்று இணைந்த தன்மையையும் உடையதாகும். அத்துடன் பொதுவான ஒரு அணுகு முறையில் மேற்பார்வை செய்ய முடியாததுமாகும். ஆயினும் கற்பித்தலானது அதன் பிரதான உள்ளடக்கங்களையும் செயற்பாடுகளையும் பகுப்பாய்வு செய்கிறது எனக் குறிப்பிடலாம். வரையறுக்கப்பட்ட உள்ளடக்கங்களையும் அவற்றின் செயற்பாடுகள், சிந்தனைகளை மதிப்பீடு செய்யும் செயற்பாடாக கற்பித்தல் அமைந்து விடுகிறது. விசேடமாக கற்பித்தலின் கடினத் தன்மையும் கற்பித்தலுடன் தொடர்பான குழப்ப எண்ணக்கருக்களும் குறிப்பிட்ட ஒரு தொகை மாணவர்களது அடைவுகளைக் குறைத்து விடுகிறது.

நுண்முறைக் கற்பித்தலானது சமூக விருத்திச் செயற்பாடுகளில் ஒன்றாக அமைந்து விடுகின்றது. அத்தோடு ஆசிரியர்கள் அவர்களது நடத்தையில் மாற்றங்களை ஏற்படுத்தும் பின்னூட்டல் செயற்பாடாகவும் விளங்குகின்றது. அத்துடன் போதிய பயிற்சி, வெவ்வேறு திறன்களை மேற்பார்வை செய்தல் என்பவற்றையும் குறிக்கின்றது. நுண்பாகக் கற்பித்தல் என்பது (அலனும் ஏவவும் - 1968) ஒரு கட்டுப்பாட்டு முறையாக கற்பித்தல் சார் நடத்தைகளை வாதமாக்குவதாக அமையும் என்றும் வெவ்வேறு கட்டுப்பாட்டு விதிகளுக்குஅடங்கி கற்பதையும் குறிக்கும் என்று குறிப்பிட்டனர்.தெரிந்தெடுக்கப்பட்ட 5 - 10 மாணவர்களையும் குறிப்பிட்ட சில நேர கற்பித்தலை உடையதாகவும் இருக்கும் போதிய ஆசிரிய பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பிரச்சினை தீர்க்கும் கற்பித்தலாக வகுப்பறை சூழலை அவதானிக்க வைக்கவும் கற்பித்தல் வசதிகள் கோட்பாடுகளை கற்பித்தல் பயிற்சியுடன் இணைத்துக் காட்டவும் உதவும்.

திறன் விருத்திப் பயிற்சிக்கு நுண்பாகக் கற்பித்தல் சான்றாக அமையும் நுண்பாகக் கற்பித்தல் தொடர்பான ஆய்வில் ஈடுபட்டவர்கள் 13 வகை திறன்கள் வளர்வதை எடுத்தக் காட்டுவர். அவையாவன.

1. கற்பித்தல் நோக்கங்களை வரையறுத்தல்.
2. பாட அறிமுகம்
3. வினாக் கேட்டல் நுட்பங்கள்
4. விபரித்தல் திறன்கள்
5. உதாரணம் காட்டி விளக்கும் திறன்
6. பல்வகைத் தூண்டிகளைப் பயன்படுத்தல்
7. வாய்மொழியற்ற தொடர்பாடல் நுட்பம்
8. வலுவூட்டல் நுட்பம்
9. மாணவர்களை பங்குபெறச் செய்யும் நுட்பம்
10. உபகரணங்களைப் பயன்படுத்தும் திறன்
11. அடைவு மட்ட அணிப்பு
12. நடத்தை வெளிப்பாடு துலங்களை அடையாளப்படுத்தல்

மேற்கூறியவை வகுப்பு, பாடம் முதலிய விடயங்கள் ரீதியாக வேறுபட்டுச் செல்லும்.

மாணவர்கள் சார்பான ஆசிரியரின் தேவை கருதி ஒரு நுட்பத்தை ஆசிரியர் தெரிவு செய்வதும் பயன்படுத்தலும் முதன்மை பெறும். வெவ்வேறுபட்ட பண்புகளும் திறன்களும் அடையாளப்படுத்தப்பட்டு நுண்பாகக் கற்பித்தலின் போது பயன்படுத்தப்படும்.

நுண்பாகக் கற்பித்தல் முறையானது பல்வேறுபட்ட மட்டங்களை தாண்டிச்செல்வதைக் காண முடிகிறது. ஆசிரியர் நுண்பாகக் கற்பித்தலைச் செய்தால் மாணவர்கள் எத்தகைய திறன்களை அடைவார்கள் என்றும் புலக் காட்சியைப் பெற வேண்டும். 5 – 10 நிமிடங்களில் 5 – 10 மாணவர்களுக்குரியதாக நுண்பாகக் கற்பித்தல் திட்டமிடல் இடம்பெற வேண்டும். கற்பித்தல் திட்டமிடலில் மாணவ ஆசிரிய மாணவ தொடர்பாடலில் இடம்பெற வேண்டியது அவசியமாகும். நுண்முறைக் கற்பித்தலானது பாடப்பரப்பில் ஒரு குறித்த பகுதியை எடுத்து நுண்ணிய நேரத்தில் நுட்பமான சில திறன்களைப் பெறக் கூடியதாக அமையும். பிள்ளைகள் குறைவு, நேரம் குறைவு, கற்பிக்கும் அலகு குறைவு அடையச் செய்யும் மட்டுப்படுத்தப்பட்ட தேர்ச்சி என்னும் நிலையிலேயே நுண்பாகக் கற்பித்தல் அமைந்து வருகிறது.

நுண்பாகக் கற்பித்தலுக்காக குறிப்பிட்ட திறனை மட்டும் விருத்தி செய்ய திட்டமிடல் பிரதானமாகும். அண்மைக்காலத்தில் தேர்ச்சிமையக் கலைத்திட்டம் பிரதான இடம் பெறுகின்றது. தேர்ச்சிமையக் கலைத்திட்டத்தின் மூலம் மாணவன் நுண் அலகுகள் ஊடாகவே தேர்ச்சியை அண்மித்ததாக அடைந்து விட்டதாக மதிப்பீடு செய்யப்படுகின்றது. இவ்வாறு குறித்த தேர்ச்சி ஒன்றிற்காக கற்பிக்கும் முறை நுண்முறைக் கற்பித்தல் ஆகின்றது. இதனை விரும்பியோ விரும்பாமலோ போதிய மேற்பார்வைக்கு உட்படுத்தும் போதே நுண்முறைக் கற்பித்தல் தொடர்பான அளவீடுகளை செய்ய முடியும். நுண்பாகக் கற்பித்தலைச் செய்வதை ஒலி, ஒளி ஊடகங்களுக்குள் உட்படுத்தி கற்பித்தவரே அதனைப் பார்ப்பதும் கேட்பதும் மதிப்பீடு செய்வதும் நுண்பாகக் கற்பித்தலுக்கு மேலும் வலுக் கொடுக்கும் எனலாம். ஏனெனில் நுண்முறைக் கற்பித்தலில் பிரதான பகுதி பின்னூட்டலில் இடம்பெறுகின்றது. நுண்முறைக் கற்பித்தலைக் காட்டிலும் பின்னூட்டலை வினைத்திறன் உடையதாக செய்வது இக் கற்பித்தல் முறையின் சிறப்பம்சமாக அமைந்து விடுகின்றது கற்பித்தல் பற்றிய கற்பித்தவரின் சுய மதிப்பீடு நுண்முறைக் கற்பித்தலில் பிரதான இடம் பெறுகின்றது. பின்னூட்டல் ஆனது நேர்முக பின்னூட்டலாக அமைய வேண்டியது அவசியமானதாகும்.

பின்னூட்டலுக்கான தேர்ச்சிமட்டத் திறனை எவ்வாறு அடையாளம் காண்பதும் நுண்முறைக் கற்பித்தலில் பிரதான இடம்பெறுகின்றது. குறித்த ஒரு தவணைப் பரீட்சையிலோ அல்லது முன்னோடிப் பரீட்சை ஒன்றிலோ

1. கூடுதலான மாணவர்கள் தெரிவு செய்யாத வினாக்களையும் அதற்கான அலகுகளையும் அடையாளம் காணுதல்.
2. கூடுதலான மாணவர்கள் தவறுவிட்ட வினாக்களையும் அதற்கான அலகுகளையும் தெரிவு செய்தல்.
3. கூடுதலான மாணவர்கள் ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் மிக குறைந்தளவான புள்ளிகளைப் பெற்ற வினாக்களையும் அலகுகளையும் தெரிவு செய்தல்.

இதன் மூலமாக நுண்பாகக் கற்பித்தலுக்கான அலகினை அடையாளம் காண முடிகின்றது. முன்பு கற்பித்த முறையை விட புதிய முறைமைகளைக் கையாளுதலே நுண்முறைக் கற்பித்தலில் அடிப்படையாக அமைகின்றது. இதனால் கற்பித்தல் முறைமீள் கட்டமைப்பு செய்யப்படும். கற்பித்தல் முறை மட்டுமல்லாது கற்பித்தல் திட்டமிடலும் மீள் திட்டமிடலுக்கு உட்படும் மாணவ தேவைக்கு ஏற்ப மீள் திட்டமிடலும் மீள் கட்டமைப்பும் ஏற்படுவதைக் காண்கிறோம். இதுவே நுண்முறைக் கற்பித்தலின் பிரதான அம்சமாக அமைகின்றது. இதனால் மாணவர் மையக் கற்றலின் பிரதான அம்சமாக நுண்முறைக் கற்பித்தல் அமைந்து விடுகின்றது எனலாம்.

நுண்முறைக் கற்பித்தலின் பரிணாமம் மிகப் பிரதானமானதாகும் பலபடி நிலைகளில் நுண்முறைக்கற்பித்தல் பிரதான இடம் பெறுகின்றது.

| | | |
|---|---|---|
| கற்பித்தல் திட்மிடல் | – | மீள் கற்பித்தல் திட்மிடல் |
| கற்பித்தல் அமைப்பாக்கம் | – | மீள் கற்பித்தல் அமைப்பாக்கம் |
| கற்பித்தல் | – | மீள் கற்பித்தல் |
| பின்னூட்டல் | – | மீள் பின்னூட்டல் |

என்பனவாறு விளக்கப்படம் போல் நுண்பாகக் கற்பித்தல் இடம்பெறும். இத்தகைய செயற்பாட்டு நிகழ்ச்சியிலும் மாணவர்கள் தேர்ச்சி மட்டத்தை அடையாது மீண்டும் அதே செயற்பாட்டு வட்டத்தை செயற்படுத்த வேண்டியது அவசியமானதாகும்.

நுண்முறைக் கற்பித்தலின் மேற்கூறிய படிமுறைகள் அதன் சாதகமான போக்குக்கு ஆதாரமானவையாக அமைந்துள்ளன. கற்பித்தல் சூழலை சிறந்த முறையில் வடிவமைக்கவும் பாடசாலைகளில் கற்றல் கலாசாரத்தை மேம்படுத்தவும் நுண்பாகக் கற்பித்தல் முறை உதவியாக உள்ளது. தேர்ச்சி மட்டம் பெறப்படுவதற்கான நேர இடைவெளியை நுண்பாகக்கற்பித்தல் குறைத்து விடுகின்றது. சாதாரண வகுப்பறைக் கற்பித்தலில் உள்ள குழப்ப நிலையை நுண்பாகக் கற்பித்தல் நீக்கி விடுகின்றது. பேரினக் கற்பித்தல் முறைகளில் உள்ள குறைபாடுகளை விடுவிக்கும் மார்க்கமாகவும் நுண்பாகக் கற்பித்தல் அமைந்து விடுகின்றது. சிறப்பான கற்பித்தல் நுட்பத்தின் ஊடாக சிறப்பான கற்பித்தல் திறனை வெளிப்படுத்தும் முறையியலாகவும் நுண்முறைக் கற்பித்தல் அமைந்து விடுகின்றது.

மாணவர்கள் பெறும் பயிற்சியின் தன்மையை கட்டுப்படுத்துவதாகவும் நுண்முறைக்கற்பித்தல் அமைந்து விடுகின்றது. தாமதியாது தேர்ச்சி மட்டத்தை அடைவதற்கான வழியாகவும் நுண்பாகக் கற்பித்தல் அமைந்து விடுகின்றது. சாதாரண கற்பித்தலை எளிமைப்படுத்தும் வழியாகவும் நுண்பாகக் கற்பித்தல் அமைந்து விடுகின்றது. வினைதிறன் கற்பித்தலுக்கும் நல்லதொரு கற்பித்தல் சூழலை கட்டியெழுப்பவும் நுண்பாகக்கற்பித்தல் காரணமக அமைந்து விடுகின்றது.

**பெ.பேரின்பராசா** (ஆசிரியர்)
மட்/ களுதாவளை ம.வி.

# தமிழ் மொழியின் இன்றைய நிலை

ஒரு சமூகத்தின், இனத்தின் சிந்தனையின் வெளிப்பாடே மொழி என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். இனம் வளர்ச்சி பெறும் போது மொழியும் வளர்ச்சி பெறுவதாக பலரும் கூறிக்கொண்டாலும் மொழி வளர்ச்சி என்பது அம் மொழி பேசும் மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது என அறிஞர்கள் பலரும் எடுத்துரைக்கின்றனர்.

மக்களின் வாழ்க்கை, கலை, கலாசாரம், பண்பாடு, என்பவைகளில் மொழி தாக்கத்தைச் செலுத்துவதை நாம் கண்கூடாகவே உணர்கிறோம். உலகில் பல்லாயிரக்கணக்கான மொழிகள் பரந்து பட்டுக் காணப்பட்டாலும் ஒரு சில மொழிகளே காலத்தால் அழியாத மொழிகளாகக் கருதப்படுகின்றன. ஆரம்ப காலத்தில் இருந்த பல மொழிகள் அழிவுற்றுள்ளன என்று புதிய ஆய்வுகள் கூறுகின்றன.

தமிழ் மொழியின் காலம் இதுதான் என்று இதுவரை எந்த ஆராய்ச்சியாளர்களும், ஆய்வாளர்களும் அறுதியிட்டுக் கூறாவிட்டாலும் காலத்தால் மூத்த மொழி தமிழ் மொழி என்பதை யாரும் மறுக்க முடியாது. தமிழ் மக்கள் எங்கெல்லாம் பரந்துபட்டு வாழ்கிறார்களோ அங்கெல்லாம் தமிழ் மொழி பேசப்படுகின்றது. தமிழ் நாடு தமிழ் மொழிக்கு தாய் நாடு. அந்த தாய் நாட்டிலும், இலங்கையிலும் தான் தமிழ் மொழிப் பிரயோகம் கூடுதலாக அமைந்துள்ளதைக் காணலாம்.

தமிழ் மொழி பழைமை மிகுந்த மொழியாக இருந்தாலும் இன்றைய நிலையில் அதன் வளர்ச்சிப் பாதை முடங்கிவிட்டது என்றே கூறவேண்டும். பேச்சு, எழுத்து வழக்குகளில் தமிழை உபயோகப்படுத்த பின்நிற்பதே பிரதான காரணமாகும். தமிழ் மொழி இலக்கணம், இலக்கியம் என்பவைகளில் ஆரம்ப காலங்களில் இருந்தே முன்னேற்றம் கண்டிருந்தது. ஐரோப்பியர்களான கால்டுவெல்ட், வீரமாமுனிவர் போன்றோர் தமிழ் மொழியைப் படித்து இம் மொழிக்கு இலக்கணம் சேர்த்ததை யாவரும் அறிவர். உலகளாவிய மொழியாகத் திகழும் ஆங்கில மொழியை விட தமிழ் மொழி உயர்ந்தது என கால்டுவெல்ட் கூறியிருப்பதிலிருந்து தமிழ் மொழியின் சிறப்பு மேலோங்குகிறது.

ஆனால் இன்று பாடசாலைகள், கலாசாலைகள் போன்றவைகளில் தமிழ் மொழியைப் பயில்வதற்கும் மேற்கொண்டு கல்வியைத் தொடர்வதற்கும் பலரும் தயக்கம் காட்டுகின்றனர். இதற்கு பல காரணங்கள் கூறப்பட்டாலும் ஆரம்ப காலத்திலிருந்து தமிழ் மொழி கஷ்டமான பாடமாக பலராலும் கருதப்பட்டு வந்ததே முக்கிய காரணம் எனக் கொள்ளலாம்.

ஆங்கிலேயர்களுக்கு ஆங்கிலம் முக்கியத்துவம் பெறுவது போல் சிங்களவர்களுக்கு சிங்களமும் தமிழர்களுக்கு தமிழ் மொழியும் இலங்கையின் தாய்மொழியாக கொள்ளப்படுகின்றன. அரசு தமிழ் மொழிக்கு இரண்டாம்தர மொழியாக அந்தஸ்து கொடுத்துள்ளது. ஆனால் தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்ட தமிழர்கள் சிங்களம் அல்லது ஆங்கில நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அரச கரும மொழியாக சிங்களம், தமிழ் இருந்தாலும் தமிழர் கருமம் ஆற்ற முடியாத சூழ்நிலைக்கு தமிழ் மக்களே காரணகர்த்தாக்களாவர்.

தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் தமிழர்களும் பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் தமிழ் மொழியை பிரயோகப்படுத்துவதில் தயக்கம் காட்டுகின்றனர். அந்நிய மொழியை பேசினால் தங்களை உயர்வாகக் கருதுவார்கள் என்ற தாழ்வு மனப்பான்மையே முக்கிய காரணமாகும். பாடசாலைகளில் தமிழைக் கற்பிப்பதற்கு தமிழ் ஆசிரியர்கள் பற்றாக்குறை உண்டு. பண்டைக்காலத்தில் தமிழ் ஆசிரியர் என்றால் அவருக்கு தனி மதிப்பும் சிறப்பும் இருந்தது. அத்துடன் பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழியை பாடமாக எடுப்பதை பலரும் தவிர்த்து வருகின்றனர். தமிழ் போதிப்பதற்கு விரிவுரையாளர்கள் பற்றாக்குறையும் தமிழைப்பாடமாக எடுத்தால் வேலைவாய்ப்புகள் தேடுவதில் சிரமம் என்ற நோக்கமும் தமிழ் மொழி வளர்ச்சிக்கு இடையூறாக அமைந்து காணப்படுகின்றன.

தமிழ் மொழிக்கு தாய் நாடு தமிழ் நாடு என்று கூறுவார்கள். அந்தத் தமிழ் நாட்டில் ஆங்கிலத்தைக் கலந்து தமிழை உச்சரித்து வருகின்றனர். இலங்கையில் தான் சிறந்த தமிழ் உச்சரிப்பும் பேச்சு வழக்கில் சிறந்து விளங்குகின்றனர் என்று தமிழ் நாட்டு அறிஞர்களே வாய்விட்டுக் கூறுகின்றனர். தங்கள் நாட்டில் ஆங்கிலத்துடன் கூடிய தமிழையும் பேச்சையுமே காண முடிகிறது என தமிழ் நாட்டு அறிஞர்கள் கூறுவதிலிருந்து இலங்கையின் தமிழ் மொழி அந்த மொழிக்குரிய தன்மையில் பேணப்படுகின்றது. என்பதை உணர்ந்து கொள்ளலாம் தமிழ் மொழியை இலங்கையின் தாய்மொழியாகக் கொண்ட தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் தமது பிரதேசங்களில் எந்த அளவுக்கு தமிழை பிரயோகப்படுத்துகின்றார்கள் என்ற ஆய்வொன்றை அண்மையில் ஒரு நிறுவனம் நடத்தியது. அந்த ஆய்வில் தமிழ் மக்களை விட முஸ்லிம் மக்கள் தாங்கள் செல்லும் இடங்களிலும் பேருந்துகள் போன்றவற்றிலும் தயங்காது தமிழைப் பேசுகின்றனர் என அந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது. இதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவே வேண்டும். நாம் தமிழைப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் தயக்கம் காட்டி நிற்கும் போது முஸ்லிம் பின்வாங்காமல் தமிழ் மொழியைப் பேசுகின்றான், செயலாற்றுகின்றான். அவன் தன்னை முஸ்லிம் என்று இனங்காட்டி தமிழைப் பேசுவது போல் தமிழன் தமிழன் என்று இனம் காட்டி தமிழைப் பேச முடியாத சூழ்நிலையே கடந்த காலமாக இலங்கையிலிருந்து வரும் துர்ப்பாக்கிய நிலையாகும் என்பதை யாவரும் அறிவர்.

இந்த நிலை மறையும் வரை தமிழ் மொழியின் வளர்ச்சியில் உயர்வினைக் காண முடியாது. தமிழ் மக்கள் தங்கள் தாய்மொழி என்ற உள்ளுணர்வுடன் செயற்பட்டு தங்கள் கருமங்களை தாய் மொழியாகிய தமிழ் மொழியில் ஆற்றிட வேண்டும். அந்நிய மொழியை எடுத்ததற்கெல்லாம் பிரயோகித்தால் மொழி உணர்வும் பிரயோகமும் மழுங்கடிக்கப்பட்டு தேடுவாரற்ற தன்மைக்கு ஆளாகிவிடும்.

அண்மையில் மொழியாராய்ச்சி ஆய்வாளர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தமிழ் மொழியும் அருகிவரும் மொழிகளில் ஒன்றாக கருதுவதாக குறிப்பிட்டுள்ளார். ஆரம்ப காலத்தில் உள்ள இலக்கண, இலக்கியங்களைக் கொண்டே தமிழ் அறிஞர்களும், ஆய்வாளர்களும் கருமமாற்றுகின்றனரே தவிர புதிதாகத் தமிழ் மொழி ஆராய்ச்சிகள் செய்து அதை மேம்படுத்துவதற்கான முயற்சிகளில் யாரும் ஈடுபடுவதில்லை. அண்மையில் தமிழ் நாட்டில் சில பழைய எழுத்துக்களுக்கு புதுவடிவம் கொடுத்ததுடன் நின்றுவிட்டார்கள். தொடர முன்வரவில்லை.

தமிழ் நாட்டில் 6 கோடி தமிழர்களும் ஏனைய இலங்கை உட்பட பல நாடுகளில் வாழும் 3 கோடிக்கு மேற்பட்ட சுமார் 8 கோடி தமிழ் மக்களும் தமிழைப் பேசினாலும், எழுதினாலும் கூட தமிழ் மொழி இன்றைய நிலையில் வளர்ச்சியுறாத தன்மையிலேயே காணப்படுகிறது என்பதை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இதற்குக் காரணம் தமிழ் மக்களாகிய நமக்குள் தமிழை பிரயோகப்படுத்துவதில் எழுந்துள்ள சிக்கல்களும் தாழ்வு மனப்பான்மையுமே மூல காரணம் எனலாம். இவைகளைக் களைந்து தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் பேச்சில், எழுத்தில் தமிழைக் கூடுதலாகப் பிரயோகித்து வந்தால் தமிழ் மொழியின் வளர்ச்சி உயர்வடையும் என்பதில் ஐயமில்லை.

செம்மொழியாம் தமிழ் மொழியை பேணிப் பாதுகாத்து வளர்ச்சி பெற்று வளம்பெறச் செய்வோம்.

**திருமதி. பவானி. குணரெத்தினம்**
ஆசிரியை

வாழ்க்கையில் ஒருவன் வெற்றி பெறுவதும்
மற்றொருவன் தோல்வியடைவதும்
அவனவன் எண்ணத்தினால் ஆகும்.
ஒருவனுடைய வெற்றியும் தோல்வியும்
அவனுக்கே உரியதன்றி பிறருக்கல்ல.
அவற்றை அவன்தான் திருத்தியமைக்க
வேண்டுமேயன்றி பிறரால் சிறிதேனும்
முடியாது. அவன் என்ன நினைக்கின்றானோ
அதன் படியே வாழ்கின்றான். அவன்
எவ்வளவு காலம் எவ்விதம்
நினைக்கின்றானோ அதுவரையில் அவனது
வாழ்க்கையும் அவ்விதமே அமைந்துவிடும்.



பழைய மாணவர் சங்கம்



பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

பழைய மாணவர் சங்கம்



பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

# ஓங்கிடும் சிவசக்தி

செந் நெல்லும் செந்தமிழும் செழித்தோங்கும்
சேவற் கொடியுடையாள் பதியின் சாரலிலே
குந்தகம் செய்வோரையும் வந்தனை செய்து மகிழும்
குருமண்வெளி தன்னில் தோன்றினாய்

சிவசக்தி மகாவித்தியாலயமென பெயர் படைத்தாய்
சரித்திர ஏட்டில் தடம் பதித்தாய்
வித்தியாரம் சூட்டினாய் நல் மாணவர்களுக்கு
விண்ணைத் தொட்டு நிற்கின்றது நின்பணி

தீட்டாத பென்சிலாய் வந்தவரை – நாநிலத்தில்
தீட்டி கூர்கொடுத்து எழுதவைத்தாய்
கட்டாந் தரையிலுள்ள கருங்கல்லாய் வந்தவரை
கனிவுளச் செதுக்கி இன்பச் சிலையாக்கினாய்

நீண்ட உன் கல்விப் பாதையில் நூறாவது மைல் கல்லை
நிமிர்ந்து நீ அடைந்து விட்டாய்
அண்டசராசரங்கள் அழிந்தாலும் அழியாது
அன்னையே சிவசக்தி வித்தியாலயம் – உன் சேவை

இருண்ட வானில் இருள் அகற்றும்
இனிய நல் அகல்விளக்கு – நீ
கல்வி தருகின்ற கற்பகதரு – நீ
தரணியில் உன்பணி தொடர என் வாழ்த்துக்கள்

கிழக்கு வானில் இருளகற்றும் உதயசூரியன் – நீ
கீதங்கள் இசைத்து உனை வாழ்த்துகின்றேன்
பழக்கவழக்கங்கள் பண்புடன் கற்றுத்தந்தாய்
பாரினிலே நீடூழி வாழ்க என்று

கலையுடன் விஞ்ஞானம் களியுறும் கணிதம்
கண்கள் ஓவியம் கனி இசை சங்கீதம்
மலை என உயர்ந்து நீ தந்தாய்
மாநிலத்தில் நீடூழி வாழ்கவே – நீ

**ம.மிதுலா**
*தரம் :– 13 கலை*

# நட்பின் மகிமை

அன்று வெள்ளிக் கிழமை காலை எட்டு மணி “மீனா எழும்பம்மா...” என்று அவளது அம்மா லட்சுமி மீனாவை எழுப்பினாள். அன்று மீனாவுக்குப் பிடித்த சுப்பிரபாதம் வீடு முழுக்கக் கேட்டது.

“அம்மா..” என்று யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. லட்சுமி கதவைத் திறந்து பார்த்தாள். அது வேறு யாருமல்ல அவள் மகள் பாரதி. வைத்தியராக இருக்கிறாள்.

“என்னம்மா பாரதி நாளைக்குத்தான் வாரதென்டு சொன்னா” எனக் கேட்டவாறு பாரதியின் கையில் இருந்த பெட்டியைக் கைமாறிக் கொண்டாள் லட்சுமி. “இல்லம்மா இங்கு வரணும் போல இருந்திச்சி அது தான் வந்திட்டன்” என்றாள் பாரதி.“சரி பாரதி குளிச்சிட்டு வா..” சாப்பாடு எடுத்து வைக்கிறேன் என்று லட்சுமி உள்ளே சென்றாள்.

தன் ரூமுக்குள் சென்ற பாரதி அறையை சுற்றிப் பார்த்த போது சுவரில் தன் அம்மாவும் அப்பாவும் இருந்த போட்டோவைப் பார்த்தாள். நீர்த்திரை விரிந்தது. பாரதிக்கு தன் பழைய நினைவுகள் மிதக்கின்றன.

டிசம்பர் மாதம் இரண்டாம் திகதி க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு சகல மாணவர்களும் தயாராகிக் கொண்டிருந்தனர். விஷேட வகுப்புக்கள், பாடசாலைப் படிப்பு, கல்விக் கருத்தரங்குகள் என்று தீவிரமாகப் படித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த மாணவ மொட்டுக்களுள் பாரதியும் ஒருவள். கல்வியில் சிறந்து விளங்கிய பாரதிக்கு அம்மா, அப்பா, தங்கை மீனா என்று ஒரு அழகிய குடும்பம் இருந்தது. தங்களைப் போல் கஷ்டப்படாது உயர்ந்த பதவிக்கு தன் பிள்ளைகள் வரவேண்டும். என நினைப்பவர் பாரதியின் அப்பா கந்தசாமி. குடும்பத்தின் மேல் உயிரையே வைத்திருக்கும் அம்மா லட்சுமி. விவசாயியின் மகள் பாரதிக்கு ஒரு வைத்தியரின் மகள் கவிதா உயிர்த் தோழியாக இருந்தாள்.

அன்று 25ஆம் திகதி 10ஆம் மாதம் பாரதிக்கு இந்த நாள் மறக்க முடியாத நாள்.பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு கருத்தரங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. காலை இடியும் மின்னலும் பங்கு போட்டு மழையைத் தள்ளின. இவ்வேளை கந்தசாமி பக்கத்துக் கடைக்குச் சென்றார்.

கருத்தரங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை அவசரமாக உள்ளே வந்த பாரதியின் பக்கத்து வீட்டுக்காரர் ஆசிரியரிடம் அனுமதி பெற்று பாரதியை உள்ளே அழைத்துச் சென்றார். அவள் வீடு சென்றதும் வீட்டு வாசலில் மக்கள் கூடி இருப்பதையும் உள்ளே அலறல் சத்தம் கேட்டதையும் பார்த்த பாரதி கலக்கமுற்றாள். உள்ளே சென்ற பாரதியை ஓடி வந்து பிடித்த எட்டு வயதுச் சிறுமி மீனா “அப்பாவை மின்னல் கொண்டு போட்டாம்” என்று அழுதவாறு கூறினாள். பாரதிக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. சிலையாக நின்றாள். அம்மாவைப் பிடித்து அழுதாள்.

காலம் ஓடியது. O/L பரீட்சைக்கு ஒரு கிழமையே இருந்தது. பாரதியால் படிக்க முடியவில்லை. புத்தகத்தைத் தூக்கினால் அப்பாவின் நினைவும் குடும்பப் பொறுப்பும் நிழலாடின. அம்மாவின் பேச்சுக்கிணங்க O/L பரீட்சை எழுதினாள். முடிவும் வந்தது. பாரதி எதிர்பார்த்ததும் அவளது அம்மா எதிர்பாராததுமான அந்த முடிவு 4A, 4BC. கவிதாவும் பாரதியின் வீட்டுக்கு வந்தாள். படிப்பை தொடர்வது பற்றி கவிதா கேட்ட போது, "இனி எப்படி படிக்க முடியும்" என்ற பாரதியின் கூற்றுக்கு கவிதா "முடியும் தன்னோடு பெண்கள் தங்கி கல்வி கற்கும் விடுதியில் வந்து படிக்கலாம்" என்று ஆறுதல் கூறினாள்.

"அம்மாவையும் தங்கையையும் யார் பார்ப்பது" "என்னோட அப்பா பார்த்துக் கொள்வாரு. அப்பாதான் இத உனக்கிட்ட கேட்க சொன்ன. சம்மதமா?" யோசித்தாள் பாரதி. எப்படியோ பாரதியை சம்மதிக்க வைத்து கவிதா தன்னுடன் கூட்டிச் சென்றாள்.

விடுதிக்குச் சென்ற பாரதி கவிதாவின் துணையுடன் தன் மனக் கவலைக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்து தனது எதிர்கால வாழ்க்கையையும் குடும்பத்தின் நிலைமையையும் நோக்காகக் கொண்டு உயர் கல்வியைத் தொடர்ந்தாள். பாரதி தன் நண்பி காட்டும் அக்கறையை நினைத்து பெருமிதம் கொண்டாள். பாரதிக்கு அன்பை ஊட்டிய கவிதா ஆறுதல் கொடுக்கவும் மறக்கவில்லை.

பாடசாலையின் முதல் மாணவியாகத் திகழ்ந்த பாரதிக்கு பாராட்டுக்களும் பரிசில்களும் தேடி வந்தன. இவையனைத்தும் தன்னுயிர்த் தோழி தனக்கு வழங்கிய வரப்பிரசாதமே என்பதை பாரதி நினைக்கத் தவறவில்லை.

காலம் கரைபுரண்டோடியது. A/L பரீட்சையும் நடந்து முடிந்தது. பாரதியை விட கவிதாவே பாரதியின் பரீட்சை முடிவுக்காக பாடசாலையின் விளம்பரப் பலகையின் முன்னால் தவம் கிடந்தாள். முடிவுகள் ஒட்டப்பட்டது. பாரதி பாடசாலையில் விஞ்ஞானப் பிரிவில் மூன்று பாடங்களிலும் A சித்தி பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டாள். இதைப்பார்த்த கவிதா பாரதியை ஓடிவந்து கட்டியணைத்து ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்.

"பாரதி...." என்ற அம்மாவின் குரல் கேட்டு தன் சுய நினைவுக்கு வந்தாள் பாரதி. "என்னம்மா கண் கலங்கியிருக்கு" தாய் பதட்டத்துடன் வினவினாள். "இல்லம்மா நம்மட இந்த நிலைக்கு காரணமானவங்களை நினைச்சுப் பார்த்தன்"

"ஆமம்மா.. உலகத்தில் கடவுள் இப்படிப்பட்ட நல்லவங்க ரூபத்தில் இருக்காரு, சரி குளிச்சிட்டு வா நம்ம கவிதா வீட்ட போயிட்டு வருவம்" இதைக்கேட்ட பாரதி மகிழ்ச்சியுடன் சென்றாள்.

**மோ. கிருஸ்ணி**
தரம் 12 கலை

# ஈழத்துத் தமிழ் அரங்கப் பாரம்பரியமும் கா.சிவத்தம்பியும்

ஈழத்து தமிழ் அரங்கப் பாரம்பரியத்தினை எடுத்து நோக்கும் பொழுது அப் பாரம்பரியத்தின் வளரச்சியில் ஈழத்துத் தமிழ் அரங்கவியலாளர்களின் முயற்சிகள் மிக முக்கியமான இடத்தினைப் பெறுவதை நாம் அவதானிக்கலாம். எமக்குத் தெரிந்த வகையில் கலையரசு சொர்ணலிங்கம் முதல் இன்றுவரை இவ்வுண்மை நன்கு புலப்பட்டுக் கொண்டே இருக்கின்றது.

ஈழத்துத் தமிழ் அரங்கானது சடங்கினடியாகவே தோற்றம் பெற்று பரிணாம வளர்ச்சியடைந்து வந்திருக்கின்றது என நாடக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஈழத்தமிழர் சடங்குகளில் காணப்படும் நாடக அம்சங்களை இதற்குச் சான்றாகக் காட்டுகின்றனர். நாடகம் சார்ந்த சமயச்சடங்குகள் என இவற்றை இனங்காட்டினர். பூசகர்களும் பாமரமக்களும் இந் நாடகம் சார்ந்த சமயச்சடங்குகளை பேணிவளர்த்தனர்.நாடகம் சார்ந்த சமயச்சடங்குகள் காலப்போக்கில் பயம் பக்தி நம்பிக்கை போன்ற அம்சங்களை இழந்து மக்களை மகிழ்விக்க முனைந்தபோது கும்மி, கோலாட்டம், காவடியாட்டம், கோவலன் கூத்து, பறைமேளக் கூத்து, வடமோடி, தென்மேடி எனப் பரிணாமம் பெற்று மக்களின் பாரம்பரியக் கலைவடிவங்களாக கொள்ளப்பட்டன. இக்கலை வடிவங்களை கிராமத்துக் கலைஞர்களும் அண்ணாவிமாரும் உருவாக்கினர்.

ஈழத்து தமிழ்நாடக மரபில் 19ஆம் நூற்றாண்டுப் பகுதியில் தென்னிந்தியாவிலிருந்து விலாசம், வாசாப்பு, சபா, டிறாமாமோடி எனப் புது அரங்க வடிவங்கள் வந்து சேர்ந்தன. தென்னிந்திய பார்ஸி நாடகக் கம்பனிகளும் மராத்திய நாட்டியக்கம்பனிகளும் பாரசீக நாட்டியக் கம்பனிகளும் இந்நாடக வடிவங்கள் உருவாக அடிப்படையாக அமைந்தன. டிறாமாமோடி எனச்சொல்லப்படும் இசை நாடகங்களை வைரவி அண்ணாவியார், கிருஷ்ணாழ்வார், பொன்னாலைகிருஷ்ணன், கன்னிகா பரமேஸ்வரி, வி.வி.வைரமுத்து, செல்வராசா, தைரியநாதன் போன்றோர் வளர்த்தெடுத்தனர்.

இலங்கை வரலாற்றில் ஆங்கிலேயரின் வருகையுடன் பாரியமாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆங்கிலேயரின் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார கட்டமைப்புக்கள் நவீன வாழ்க்கை முறைமையும் மத்தியதர வர்க்கத்தையும் நவீன நாடக முறைமைகளையும் உருவாக்கின. நாடக சபாக்களும் மன்றங்களும் உருவாகின நவீன பாணியிலான நாடகங்களை மேடையேற்றின. சேர் அம்பலவானகனகசபை, கோபாலசிங்கம், ஏ.தளையசிங்கம் போன்றவர்கள் சபாக்கள் மன்றங்கள் மூலம் நவீன நாடகத்தினை வளர்த்தவர்களாவர். இப் பின்புலத்தில் உருவானவர்தான் கலையரசு சொர்ணலிங்கம் பம்பல்சம்பந்த முதலியாரின் நாடக முயற்சிகளினால் உந்தப்பட்டு 1913ல் லங்கா சுபேத விலாச சபையை ஆரம்பித்து அதன்மூலம் நவீன பாணியிலான நாடகங்களை மேடையேற்றி ஈழத்து தமிழ் நாடகத்துறையில் புதிய அத்தியாயத்தை தொடக்கிவைத்தார்.

நவீன சிந்தனையுடன் நாடகங்களை உருவாக்கமுனைந்த சிலர் ஈழத்து தமிழ் மக்கள் எதிர்கொண்ட நடப்பியற்பிரச்சினைகள், அவர்கள் அபிலாசைகள், அவர்களின் மரபுகள், பேச்சுக்கள் ஆகியவற்றை மேடைக்குக் கொண்டுவந்தனர். இவர்களில் பேராசிரியர் கணபதிப்பிள்ளை முக்கியமானவர். இத்தகைய நாடக முறைமை முலம் ஈழத்துத் தமிழ் அரங்கிற்கு இயல்பு நெறிசார்ந்த நாடக முறைமையை அறிமுகம் செய்து வைத்தார்.

ஈழத்து வரலாற்றில் 1956ஆம் ஆண்டிலேற்பட்ட அரசியல் மாற்றங்கள் சிங்கள நாடக உலகிலும், தமிழ் நாடக உலகிலும் புதிய பிரதிபலிப்புக்களை ஏற்படுத்தின. தமிழ் மக்களுக்கான ஒரு தேசிய நாடக வடிவத்தினை உருவாக்கும் முயற்சிகள் இடம்பெற்றன. கலைக்கழகம் இதற்கு தளமாக அமைந்தது. தமிழ் மக்களின் பாரம்பரியக் கூத்துக்களைப் பேணுகின்ற அவற்றை நவீனப்படுத்துகின்ற செயற்பாடுகள் இடம்பெற்றன. மடிந்து கொண்டிருந்த கூத்துக்கள் உயிர் பெற்று புதுப்பொலிவு பெற்றன. இச் செயற்பாடுகளை கலைக்கழகத்தின் தமிழ் நாடகக்குழுத் தலைவராய் இருந்த சு.வித்தியானந்தன் முன்னெடுக்க கா.சிவத்தம்பி, த.சண்முகசுந்தரம் போன்றோர் பின் நின்று உதவினர். 1975இல் கலைக்கழகத்தின் தமிழ் நாடகக் குழுவின் தலைவராக கா.சிவத்தம்பி நியமிக்கப்பட்டதும் தமிழில் நவீன நாடகங்கள் வளர முயற்சிகளை மேற்கொண்டு சமூகப்பிரச்சினைகளை உள்ளடக்கிய நாடகங்கள் மேடையேற்றுவதற்கு களம் அமைத்துக்கொடுத்தார்.

இலங்கை பல்கலைக்கழகம் கணபதிப்பிள்ளையின் இயற்பண்பு நாடக நெறியை முன்னெடுத்தது. ஆ.முத்துலிங்கம், சொக்கன், அ.ந.கந்தசாமி, கா.சிவத்தம்பி, க.செ.நடராசா, சி.தில்லைநாதன், நந்தி போன்றோர் இத்தகைய நாடகங்களை முன்னெடுத்தனர். இலங்கைத் தமிழ் நாடக உலகில் வானொலி நாடகங்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. சண்முகநாதன்(சானா), பாலசுப்ரமணியம், கா.சிவத்தம்பி, சரவணமுத்து, பி.பி.பிச்சையப்பா, எஸ்.எம்.ஏ.ஜபார், சகிரோபீரிஸ், பிலோமினா சொலமன், கைலாசபதி போன்றோர் வானொலி நாடகச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

ஈழத்துத் தமிழ் அரங்கில் 1970களில் வித்தியானந்தனால் நவீனப்படுத்தப்பட்ட கூத்துமரபில் கவரப்பட்ட நாடகக்காரர்கள் பலர் கூத்து ஆட்டங்களை அடிப்படையாக வைத்து சமூகப்பிரச்சனைகளை வெளிக்கொண்டு வந்தனர். சி.மௌனகுரு, இளையபத்மநாதன், முருகையன் போன்றோரின் நாடகச் செயற்பாடுகள் இதற்கு எடுத்துக்காட்டாக அமைந்தன. அத்துடன் இக்காலத்தில் முன்னிலைப்பட்ட நாடக ஆர்வம் காரணமாக சுய ஆக்கம் கொண்ட நாடகங்கள் உருவாகின. சுஹைர் ஹமீத், நா.சுந்தரலிங்கம், இ.சிவாநந்தன், அ.த.சீஸியஸ், க.பாலேந்திரா போன்ற ஆற்றல் மிக்க புதிய படைப்பாளிகள், தயாரிப்பாளர்கள் உருவாகி ஈழத்து தமிழ் அரங்கை இன்னுமொருபடி மேலே கொண்டுவந்தனர்.

ஈழத்து தமிழ் அரங்கானது 1980களுக்குப்பின் அரசியல் சூழ்நிலைகளையும் மக்கள் பிரச்சினைகளையும் வெளிக்காட்டும் சாதனமாக மாறியது. குழந்தை. ம.சண்முகலிங்கம், சிதம்பரநாதன் போன்ற ஆளுமைகளின் வருகை ஈழத்து தமிழ் அரங்கை புதுப்பொலிவு பெற வைத்தது. பழமையின் வேர்களில் நின்றுகொண்டு புதுமையைச் சுவீகரித்து சமகால அரசியல் சமூக நிலமைகளை இவர்கள் பேசினர். இந்த நீண்ட வரலாற்றைக் கொண்ட ஈழத்து தமிழ் அரங்கம் பாரம்பரியத்தில் பேராசிரியர் கா.சிவத்தம்பியும் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றார். தமிழ் நாடகத்துறையிலே ஏறத்தாழ 50 வருடகாலமாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளவர். தலைசிறந்த வானொலி நடிகர், மேடை நடிகர், நாடக நெறியாளர், தயாரிப்பாளர் கூத்தின் மீட்சிக்காக பேராசிரியர் சு.வித்தியானந்தனுடன் சேர்ந்து உழைத்தவர். நாடகத்தைத் தனது மேற்படிப்புக்கான கற்கையாகத் தெரிவுசெய்து கற்றவர். நாடகத்தை பல்கலைக்கழக உள்வாரி மாணவர்களுக்கும் பாடசாலைக்கும் உரிய கற்கை நெறியாக ஆக்கி அவற்றுக்கான பாடத்திட்டங்களை தயாரித்தவர். பட்ட மேற்கற்கைக்கான மேற்பார்வையாளராகவும் இருந்தவர். இந்தவகையிலே ஈழத்து அரங்கத்துடனும் அரங்க வரலாற்றுடனும் இணைந்து ஈழத்து தமிழ் அரங்கிற்கு பெரும்பங்காற்றியவர் பங்காற்றிக் கொண்டிருப்பவர்.

ஒரு இலக்கிய ஆய்வாளனாக சமூக வரலாற்று ஆய்வாளனாக விளங்கி பேராசிரியர் கா.சிவத்தம்பி தனது நடிப்பின் மூலமாக நாடகத்துறையில் ஈடுபாடு கொண்டார். மேடை நாடகத்திலும் வானொலி நாடகங்களில் நடித்தார். பேராசிரியர் கா.சிவத்தம்பி 1949இல் இருந்து வானொலி நிகழ்ச்சியில் கிராமச் சஞ்சிகை நிகழ்ச்சிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திய இவர் சதை செய்த வதை, தம்பியர் இருவர், கம்பன், பயணம், இரவின் மடியில் விதானையார் வீட்டில், சிராப்பர் குடும்பம், லண்டன் கந்தையா போன்ற வானெலி நாடகங்களில் நடிக்கின்ற, இயக்குகின்ற வாய்ப்பை ஏற்படுத்தியது.

இலங்கை பல்கலைக்கழகத்தில் 1952ஆம் ஆண்டு கலைத்துறை மாணவனாக பேராதனைக்குச் சென்ற கா.சிவத்தம்பிக்கு பேராசிரியர் வித்தியானந்தனுடனும், கணபதிப்பிள்ளையுடனும் தொடர்புகள் ஏற்பட்டன. இத்தொடர்பும் வானொலி நாடக அனுபவங்களும் கணபதிப்பிள்ளையின் உடையார்மிடுக்கு எனும் மேடை நாடகத்தில் உடையாராக நடிக்கும் வாய்ப்பைக் கொடுத்தது. சிவத்தம்பியின் நடிப்பு ஆளுமையானது உடையார் எனும் பாத்திரம் முலம் வெளிப்பட்டது என நாடக விமர்சகர்கள் கூறுவர். அத்துடன் கணபதிப்பிள்ளையின் துரோகிகள், தவறான எண்ணம், சுந்தரம் எங்கே? ஆகிய நாடகங்களிலும் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. இந் நாடகங்கள் மூலம் தான் சிறந்த நடிகர் என்பதை வெளிப்படுத்திக் காட்டக்கூடிய சந்தர்ப்பம் சிவத்தம்பிக்கு கிடைத்தது.

இலங்கை கொழும்புப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் 1958இல் ஹென்றி இப்ஸனின் Pillers of Society என்னும் நாடகத்தை வாழும் இனம் எனும் பெயரில் தயாரித்தது. இந் நாடகத்திற்கான எழுத்துப் பிரதித்தயாரிப்பினை கா.சிவத்தம்பி செய்தார். கொழும்பிலே பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் நாடகத் தயாரிப்புக்கள் பலவற்றில் தோன்றாத் துணையாக இவர் செயற்பட்டார். அத்துடன் 1959இல் அ.முத்துலிங்கத்தின் பிரிவுப்பாதை, 1962இல் அ.ந.கந்தசாமியின் மதமாற்றம், 1963இல் சொக்கனின் இரட்டைவேஷம் ஆகிய நாடகங்களை பெரும் புகழீட்டும் வகையில் தயாரித்தார். இலங்கை பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் 1963இல் வெளியிட்ட மார்க்கண்டன், வாளபிமன் ஆகிய நாடக நூல்களை புதிப்பித்தவரும் கா.சிவத்தம்பி ஆகும்.

இலங்கை கலைக்கழகத்தின் தமிழ் நாடகக் குழுவோடு கா.சிவத்தம்பிக்கு இருந்த தொடர்பு மிகமிக முக்கியமானது. 1954களின் பிற்பகுதியில் இலங்கை கலைக்கழகம் ஸ்தாபிக்கப்படுகின்றது. அதன் தலைவராகப் பேராசிரியர் கணபதிப்பிள்ளை நியமிக்கப்பட்டார். பின் 1956இல் பேராசிரியர் சு.வித்தியாநந்தன் கலைக்கழகத்தின் தமிழ் நாடக குழுவின் தலைவர் பதவியை ஏற்க அதன் செயலாளர் பொறுப்பை பேராசிரியர் கா.சிவத்தம்பி ஏற்றார். கலைக்கழகத்தின் தமிழ் நாடக குழு மூலம் கூத்து மேடையேற்றங்கள் அண்ணாவிமார் மகாநாடுகள் கூத்துப் புத்துருவாக்க முயற்சிகள் என்பன நிறைய நடந்தன. அவற்றுக்குப் பொறுப்பாக நின்று செயற்பட்டவர் பேராசிரியர் வித்தியானந்தன். அவருக்கு உதவியாகச் செயற்பட்டவர் பேராசிரியர் சிவத்தம்பி ஆகும். 1970களில் பேராசிரியர் சிவத்தம்பி கலைக்கழகத்தின் தமிழ் நாடகக்குழுத் தலைவர் பதவியை ஏற்கின்றார். ஈழத்து தமிழ் நாடகங்கள்களைப் புதிய திசைகளை நோக்கி வளர்க்கும் முயற்சிகளில் சிவத்தம்பியின் கீழ் இயங்கிய தமிழ் நாடகக்குழு செயற்பட்டது.

ஈழத்து தமிழ் அரங்கவரலாற்றில் மிக முக்கியமான அம்சமாகக் கொள்ளப்படுவது நாடகத்தை ஒரு கற்கைநெறியாகக் கொண்டுவந்தமையாகும். நாடகத்தை ஒரு கற்கைநெறியாக்கி அந்தத் தொழிற்பாட்டோடு நிறையத் தொடர்புகளைக் கொண்டவர் கா.சிவத்தம்பி ஆவார். 1975இல் கல்வியமைச்சு பல்கலைக்கழகத்திற்குள் கல்வித் துறையில் டிப்ளோமா பெறும் ஆசிரியர்களுக்கு நாடக டிப்ளோமா பயிற்சி நெறியொன்றை ஆரம்பித்தது. நாடகம் கற்கைநெறியாக முதன்முதலாக பல்கலைக்கழகத்தில் போதிக்கப்பட ஆரம்பித்தது. இக் கற்கைநெறிக்கான பாடத்திட்டத்தினை வரைந்தது, விரிவுரைகளை நிகழ்த்தியது. போன்ற தொழிற்பாடுகளை மேற்கொண்டவர்கள் கா.சிவத்தம்பியும் ஏ.ஜே.குணவர்த்தனவும் என்பது பிரதான அம்சமாகும்.

ஈழத்து நாடக வரலாற்றில் நாடகமும் அரங்கியலும் க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கு ஒரு பாடமாக 1979இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு காரணமாக இருந்தவர்கள் ஏ.ஜே.குணவர்த்தன, தம்மயாகொட, கா.சிவத்தம்பி ஆகியோராகும். தமிழ் மாணவர்களுக்கான பாடத்திட்டத்தைத் தயாரித்தல், ஆசிரியர்களை வழிப்படுத்தல், பரீட்சைக்கான வினாப்பத்திரங்களை தயாரித்தல் போன்ற தொழிற்பாடுகளை செய்தவர் கா.சிவத்தம்பியாகும். அவருக்குத் துணையாக இருந்தவர் குழந்தை ம.சண்முகலிங்கம் ஆகும். இன்று நாடகமும் அரங்கியலும் எனும் கற்கைநெறியானது தரம் 6 தொடக்கம் 11 வரை விரிவுபடுத்தப்பட்டமைக்கும் காரணமாக இருந்தவர்களுல் கா.சிவத்தம்பியும், குழந்தை ம.சண்முகலிங்கமுமேயாகும்.

பாடசாலைகளில் மாத்திரமின்றி பல்கலைக்கழகங்களில் பட்டதாரிகளுக்கான ஒரு பாடமாக்கியமை பின் விசேட பாடமாகப் புகுத்தியமை இன்று பட்டப்பின் படிப்புக்கான பாடமாக்கியமை போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டவரும் கா.சிவத்தம்பியேயாகும். 1984இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் பட்டப்படிப்பிற்குரிய ஒரு பாடநெறியாயிற்று. இப் பாடநெறியைத் தொடக்கிவைத்து அதற்கான பாடத்திட்டங்களையும் வரைந்ததிலும் பிரதானமாகச் செயற்பட்டவர். 1991இல் கிழக்கிழங்கை பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் நுண்கலையுடன் இணைந்து பட்டப்படிப்புக்குரிய ஒரு பாரமாயிற்று. இப்பாட நெறிக்குரிய பாடத்திட்டத்தினை பேராசிரியர் சி.மௌனகுரு வரைய அதற்கு ஆலோசகராகச் செயற்பட்டவர் பேராசிரியர் கா.சிவத்தம்பி என்பது குறிப்பிடத்தக்கது. பின் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு விரிவுரையாளராகவும் பெரும் ஆய்வுக் கட்டுரைகளுக்கு மேற்பார்வையாளராகவும் இருந்தது மாத்திரமின்றி அவர்களுக்கு வழிகாட்டிய பெருமையும் கா.சிவத்தம்பிக்கு உண்டு.

ஈழத்து தமிழ் அரங்கப் பாரம்பரியத்தில் கா.சிவத்தம்பியின் முக்கியமான பங்குகளில் ஒன்று நாடகத்துறை சம்பந்தமான அவரது ஆய்வுகளேயாகும். 1970இல் அவரது கலாநிதிப் பட்டத்திற்காக கிரேக்கப் பேராசிரியர் ஜோர்ஜ் தோம்சனின் கீழ்செய்த Drama in Ancient Tamil Society என்ற ஆய்வு மிக முக்கியமானது. தமிழ் நாடக வரலாற்றைப்பற்றி இவருக்கு முன்னால் பலர்.

ஆய்வுசெய்திருந்த போதிலும் தமிழ் நாடக வரலாற்றை கிரேக்க நாடக வரலாற்றுடன் ஒப்பிட்டு ஆய்வுசெய்து தமிழ் நாடகம் பற்றிய பல புதிய கருத்துக்களை வெளிக்கொணர்ந்தவர். தமிழ் நாடக வரலாற்றை பிற மொழியில் கொண்டு வந்தமைக்காகவும் சிறந்த மொழிபெயர்ப்புக்காகவும் இவ் ஆய்வு நூலுக்கு தமிழ் நாடு அரசு இரண்டு பரிசில்களையும் வழங்கியதுடன் ஈழத்திலும் ஈழத்துக்கு வெளியிலும் பெரும்வரவேற்பையும் பெற்றது. அத்துடன் நாடகம் பற்றிய பல ஈழத்து தமிழ் அரங்க ஆய்வுகளில் ஈடுபட்ட பேராசிரியர் சி.மௌனகுரு, காரை சுந்தரம்பிள்ளை, சிதம்பரநாதன், ஜெயரஞ்சினி சீவரெட்ணம், ரவிச்சந்திரா போன்றவர்களது பேராய்வுகளுக்கு மேற்பார்வையாளாகவும் வழிகாட்டியாகவும் இருந்து ஈழத்தில் நாடகம் பற்றிய ஒரு ஆய்வுப் பாரம்பரியத்தினை வளர்த்தெடுப்பதற்கான ஒரு தளத்தை நிறுவியவர். ஈழத்தில் வெளியான நூற்றுக்கு மேற்பட்ட நாடகநூல்களுக்கு முன்னுரைகளை வழங்கி அப் படைப்பாளிகளை ஊக்கப்படுத்தியவர். அவர்களது படைபுக்களைச் செம்மைப்படுத்தியவர். அவ் முன்னுரைகளுக்கூடாக நாடகம் அரங்குபற்றிய அவரது எண்ணப்பாடுகளையும் கருத்து நிலைகளையும் வெளிக்கொண்டு வந்தார். ஈழத்தில் நாடகம்பற்றிய நூல்கள் வெளிவருவதற்கு உந்து சக்தியாக விளங்கியவர்.

உலகத் தமிழ் பேராசிரியராகவே பலராலும் அறியப்பட்ட பேராசிரியர் காத்திகேயன் சிவத்தம்பி வானொலி நடிகராக,மேடை நடிகராக, நாடக நெறியாளராக, தயாரிப்பாளராக இருந்தமையும் இலங்கை கலைக்கழகத்தோடு தொடர்பு கொண்டு கூத்து மீட்சிக்காக பேராசிரியர் சு.வித்தியானந்தனுடன் உழைத்தமையும் நாடகத்தை ஒரு கற்கைநெறியாக ஆய்வுத்துறையாக வளர்த்தமையும் பலரும் அறியவில்லை. ஈழத்து தமிழ் அரங்க வரலாற்றிற்கு ஒரு சாட்சியாக பேராசிரியர் கா.சிவத்தம்பி விளங்குகின்றார் என்பதை எவரும் மறுக்க முடியாது.

## உசாத்துணை நூல்கள்


1. அம்மங்கிளி முருகதாஸ் ஈழத்து தமிழ் நாடக அரங்கப் பாரம்பரியம் குமரன் புத்தக இல்லம் கொழும்பு - சென்னை.
2. சண்முகலிங்கம்.ம. நாடக வழக்கு கலை இலக்கிய வட்டம் இணுவில்
3. மௌனகுரு.சி. ஈழத்து தமிழ் நாடக அரங்கு குமரன் புத்தக இல்லம் கொழும்பு- சென்னை.
4. வித்தியானந்தன்.சு. நாடகம் நாட்டாரின் சிந்தனைகள் தெல்லிப்பளை
5. சுந்தரம்பிள்ளை.காரை.செ. வடஇலங்கை நாட்டார் அரங்கு குமரன் புத்தக இல்லம் கொழும்பு- சென்னை.
6. சிவத்தம்பி.கா. "ஈழத்து நாடக வகைகளும் வளர்ச்சியும்" மல்லிகை யாழ்பாணம்
7. சிவத்தம்பி.கா. தேசிய தமிழ் நாடக விழாமலர் கலைக்கழக வெளியீடு கொழும்பு
8. சிவத்தம்பி.கா. வாழ்த்துரை செவ்வானத்தில் ஒரு விடிவெள்ளி நாடக மலர் கொழும்பு
9. சிவத்தம்பி.கா. "நாடகக் கலையின் சமூகவியல் அம்சங்கள்" மல்லிகை யாழ்ப்பாணம்
10. ராசுகுமார்.மே.து. வசந்ரா.ரா கார்த்திகேசு சிவத்தம்பி நேர்காணல்கள் மக்கள் வெளியீடு திருவல்லிக்கேணி சென்னை
11. ஞானசேகரன். தி.கார்த்திகேசு சிவத்தம்பி இலக்கியமும் வாழ்க்கையும் தமிழினி பதிப்பகம் கொழும்பு
12. Sivathamby.K. Drama in Ancient Tamil Society, Madras
13. Vithiyanthan. S.S The Tamil folk Drama, Ceylon today.


இரா. ஜெகநாதன்
ஆசிரியர்

# நீ நூலைத்தேடு உலகம் உன்னைத்தேடும்

வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான். "கற்றது கையளவு கல்லாதது உலகளவு" இந்த வகையில் நாம் கற்க வேண்டியிருப்பது நிறைய விடயங்களாகும். நாம் எவ்வளவு நூல்களை அல்லது பத்திரிகைகள், சஞ்சிகைகளை வாசிக்கின்றோமோ அவ்வளவு எமது அறிவு கூர்மையடைகின்றது.

ஒரு பிறப்பில் ஒருவன் கற்ற கல்வியானது அப்பிறப்பில் மட்டுமன்று அவனது ஏழு பிறப்பிற்கும் உதவும் தன்மையுடையதாகும். இதனையே வள்ளுவப் பெருந்தகை

*"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவர்க்கு*
*ஏழ்மையில் ஏமாப்பு உடைத்தது"*

எனக் கூறுகின்றார் .அதுபோலவே நாம் வாசிக்கும் வாசிப்புத் திறனும் எவ்வளவு தூரம் தேடி வாசிக்கின்றோமோ அவை எமது இந்தப்பிறவிக்கு மட்டுமல்ல ஏழு பிறப்பிற்கும் எமது வாசிப்புத்திறனை அதிகரிக்கும். அது மட்டுமன்றி உலகில் உயர்ந்த ஒரு அந்நஸ்துக்கு இது எம்மை இட்டுச் செல்லும்.

"கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்" என்பது சான்றோர் வாக்கு. இதற்கு இணங்க நாம் எமக்குக் கிடைக்கும் புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவற்றை சோம்பல் படாது வாசித்து அதில் உள்ள நல்ல கருத்துக்களை அறிந்து கொள்வோமானால் எமது வாசிப்புத்திறன் மேலோங்குவதுடன் மட்டுமல்லாமல் பல்வேறு புதுமையான தகவல்களையும் அறிந்து கொள்ளலாம். ஒவ்வொரு பிரதேசங்களிலும் ஒவ்வொருபாடசாலைகளிலும் மாணவர்களது வாசிப்புத்திறனை அதிகரிக்கவே நூலகங்கள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. நாம் நூலகத்தைச் தேடிச் சென்று அங்குள்ளவற்றை வாசித்து எமது வாசிப்புத் திறனை கூட்டிக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

மணற்கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும். அது போலவே கல்வியினை கற்பவர்களுக்கும் அவர்கள் கற்கும் கல்வியின் அளவிற்கும் தான் அறிவு இருக்கும். அது போலவே வாசிக்கும் திறமையானது எவ்வளவு அதிகமாக இருக்குமோ அந்த அளவிற்கு எமது வாசிக்குத் திறமையும், அறிவும் கூடிக்கொண்டு செல்லும். அத்தோடு அவனது படிப்புக்கும் உறுதுணையாக அமைந்திருக்கும்.

கத்தியானது தீட்டத் தீட்டத்தான் கூர்மையடையும். அது போலவே நாம் வாசிக்க வாசிக்க எமது வாசிப்புதிறமையானது அதிகரிப்பதுடன் பல்வேறுபட்ட அறிவியல் தகவல்களையும் அறிந்து கொள்ள முடியும். இந்த வகையில் வாசிப்புத் திறமையானது மக்கள் மத்தியில் வளர வேண்டும். இது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே ஒக்டோபர் மாதம் வாசிப்பு மாதமாக இலங்கையில் பிரகடனப்படுத்தப்பட்டு பாடசாலைகளிலும் பொது நூலகங்களிலும் ஒரு விஷேட மாதமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இறைவனால் முழுமையாகப் படைக்கப்பட்ட நாங்கள் வாசிப்பு இல்லாத காரணத்தினால் பூரணமடையவில்லை. எனவே சிறந்த வாசிப்பு ஒருவரிடம் இருந்தால் அவர் பூரணமடைகின்றார். ஒருவரிடம் சிறந்த வாசிப்பு இல்லையெனின் கண்கள் இருந்தும் குருடருக்கு ஒப்பானவர்.

சீரழிந்து கொண்டிருக்கின்ற கலாசாரத்தை சீர் தூக்குவதற்கு வாசிப்பு இன்றியமையாததாக அமைகின்றது. மனதை ஒருநிலைப்படுத்தும் நூல்களை வாசிப்பதன் ஊடாக மனதை ஒருநிலைப்படுத்தலாம். நூறு போலியான நண்பர்களை விட ஒரு சிறந்த புத்தகம் ஆயிரம் நண்பர்களுக்கு சமனாகும். சிறந்த நூல்களை இனங்கண்டு நாம் வாசிப்போமானால் சிறப்பான வாழ்க்கையை வாழலாம்.

நாம் வாசிப்பதன் ஊடாக எம் அறிவையும் உளத்தையும் பலப்படுத்தினால் உலகம் எம்மை சிறந்த மனிதனாக நோக்கும். அதனால்தான் நீ நூலைத்தேடு உலகம் உன்னைத்தேடும் என்கின்றனர்.

**வி.ஜயந்திரியா**
தரம் :- **9V**

# அன்புடன் வாழ்த்துகிறேன்

ஆயிரம் கனவுகளுடன் கால் வைத்த எமக்கு
ஆசையுடன் கல்வி வழங்கிய – சிவசக்தியே
கலங்கரை விளக்காய் கல்வி புகட்டி
கண்ணுடையாவ என்ற பெயரைப் பதித்த – சிவசக்தியே
ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தாய் போல்
ஈத்துவக்குமின்பம் பெற வழிகாட்டிய – சிவசக்தியே

அறிவுக் கண்களைத் திறக்க பாதையமைத்து
அன்புக்கு அடிகோலிய – சிவசக்தியே
எழுத்தறிவித்தவன் இறைவன் என்பதற்கு எடுத்துக்காட்டாக
எழுத்தாளர் பலரை உன் சுவாசத்தில் பிரவசித்த – சிவசக்தியே
தலை நிமிர்ந்து நடைபோட வாழவைத்து
தன்னடக்கத்துடன் உயர்ந்து நிற்கும் – சிவசக்தியே

தலைமுறை தலை காத்து தடம் பதித்து
உன் பொலிவைச் சுமக்கும் – சிவசக்தியே
பட்டம் பெற பரிந்துரைத்து பாரினில்
பதவிபெற வழிகாட்டிய – சிவசக்தியே
ஆண்டு நூறு கடந்தாலும்
ஆலவிருட்சமாய் அமர்ந்திருக்கும் – சிவசக்தியே
உனை அன்புடன் வாழ்த்துகிறேன்.

**தி.கிரிகரன்**
தரம் :- 13கலை

## சிறுகதை

# வசந்தங்கள் மறைந்தன

கதிரவனின் ஒளி கட்டிலில் பட்டும் எழும்பாத அவளை கடிகாரத்தின் அலாரம் கூட அவளை எழுப்பவில்லை. ஆனால் அம்மா எனும் ஒலி கேட்டதும் துள்ளி எழுந்தாள் வந்தனா. சுற்றும் முற்றும் பார்த்தாள் நேரமோ எட்டு மணியை தாண்டியிருந்தது. மகனின் குரலால் எழும்பியதும் தன் அரவணைப்பில் உள்ள குழந்தையிடம் குட் மோர்ணிங் அருண் என்ன செய்கிறது எனக் கேட்டாள். குட் மோர்ணிங் மம்மி ஒன்றும் செய்யவில்லை. பசி தாங்க முடியவில்லை மம்மி என்றான் குழந்தை. தான் எவ்வளவு நேரம் தூங்கி விட்டோம். எல்லாம் நேற்று நடந்த செயலால் அவனைக் கண்டதும் அங்கு நடைபெற்ற பிரச்சினையாலும் தான் வேதனையினால் அன்றிரவு தாமதமாக தூங்கிவிட்டதால் காலையில் தாமதமாக எழும்பிவிட்டதை எண்ணினாள்.

பின் அவசர அவசரமாக எழுந்து முகம் கழுவி குழந்தைக்குத் தேவையான பாலைத் தயாரித்துக் கொடுத்து தானும் அருந்திவிட்டு காலை உணவைத் தயாரிக்கத் தொடங்கினாள். உணவைத் தயாரித்து முடித்து குழந்தை அருணைக் குளிப்பாட்டி ஆடைகளை அணிவித்து உணவை ஊட்டி நர்சரிக்கு தேவையான உணவை சாப்பாட்டுப் பெட்டியில் இட்டு தேவையான பொருள்களையும் புத்தகப்பையில் இட்டு எடுத்து ஆட்டோவுக்காக தானும் குழந்தையும் வாசலில் காத்து நின்றனர்.

அப்பொழுது நேற்று நடந்தவை அவள் நினைவில் நிழலாடின. தான் சாமான் வாங்குவதற்காக குழந்தையை பக்கத்து வீட்டில் விட்டு கடைத்தெருவுக்குப் போக நேர்ந்ததும் தன் உடலை உரசியவாறு ஓர் கார் வந்து நின்றதும் திடுக்கிட்டு யாரென நிமிர்ந்து பார்த்தாள். யாரை இனிப்பார்க்கக் கூடாதென்று நினைத்தாளோ இனி இவன் கண்ணில் படக்கூடாதென்று நினைத்தாளோ அவனே நின்றிருந்தான். மம்மி எனக் குழந்தை அருண் அழைக்கும் சத்தம் கேட்டது. திடுக்கிட்டு சுய நினைவுக்கு வந்தாள். ஆட்டோ தூரத்தில் வருவதை அருண் காட்டினான்.பின் சிறிது நேரத்தில் ஆட்டோ பக்கத்தில் நின்றதும் அருணை ஏற்றி விட்டு விடை பெற்று வீட்டுக்குள் திரும்பினாள். அவ்வேளை அவ்வீதியால் ஒரு சிவப்பு நிறக்காரொன்று சென்றதை அவள் அறியாதிருந்தாள். அதனுள் இருந்தவன் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டதையும் அவள் அறியாதிருந்தாள்.

வீட்டுக்குள் சென்றதும் தலை வலிப்பதை உணர்ந்தாள். இரவு வெகு நேரமாக அழுததால் என்று நினைத்து இன்று ஒப்பிசிக்கு லீவு வழங்குமாறு அலுவலகத்திற்குப் பொறுப்பானவரிடம் தொலைபேசியில் கூறிவிட்டு மாத்திரை இரண்டினை போட்டுவிட்டு கட்டிலில் உறங்குவதற்குச் சென்றாள். ஆனால் எங்கே உறக்கம் வருவது. நேற்று தன் அருகில் நின்று வாதாடியது ஞாபகம் வந்தது. 'ம்' யாருக்கும் தெரியாமல் வேறிடம் சென்றால் கண்டுபிடிக்க மாட்டேன் என்ற தைரியமா? எனக் கேட்டுச் சிரித்தான் அரவிந். என்ன வந்தனா சௌக்கியமா? என விசாரித்தான். ஆனால் வந்னாவின் முகம் ஆத்திரத்தில் சிவந்தது. அவனை எரித்து விடுவது போல் பார்த்தால் தன் பார்வையால் எரிய மாட்டானா என எண்ணினாள்.

தன் பார்வையால் அவனை அளந்தாள். உடல் மெலிந்து காதோரம் நரை எட்டிப் பார்த்தது. எவ்வளவு இளைத்திருக்கிறான் என எண்ணியவள் இவனுக்கு இது போதாது இன்னும் வேணும் என எண்ணினாள். என்ன வேண்டும் என வெடுக்கெனக் கேட்டாள் வந்தனா. அரவிந் வந்தனா நம்முடைய குழந்தை எங்கே? என்ன குழந்தை பிறந்தது? குழந்தை சௌக்கியமாக இருக்கிறதா? எனக் கேட்டான். குழந்தையா யாருக்கு? எனக்கா? நீ யாரு அதைக் கேட்க என வெடுக்கென பாய்ந்தாள் வந்தனா.

எனக்குக் குழந்தையும் இல்லை ஒன்றுமில்லை. அது உன்னுடையதும் இல்லை. இனிமேல் என்னைத் தொடர்ந்தால் என் பிணத்தைப் பார்க்க நேரிடும் எனக் கூறிவிட்டு சட்டென சனக்கூட்டத்துள் புகுந்து ஓட்டமும் நடையுமாக தனது வீட்டை அடைந்தாள் வந்தனா. இப்பொழுது இனி என்ன செய்வது என யோசிக்கலானாள். வேலைக்குப் போவதில்லை என முடிவெடுத்தாள். தான் வேலை செய்யும் இடத்தை கண்டுபிடித்து வந்துவிட்டால் எல்லோருக்கும் முன் அவமானப்பட வேண்டுமே என நினைத்தாள். பின் அவசர அவசரமாக சமையலை முடித்து குழந்தையின் வருகைக்காக காத்து நின்றாள். சிறிது நேரத்தின் பின் அருண் “மம்மி” என ஓடி வந்தான். அவனை மார்போடு அணைத்தவள் சிறிது நேரம் நர்சரியில் நடந்தவற்றைக் கேட்டு அவனுடன் இன்பமாகப் பொழுதைக் கழித்தாள். பின் மதிய உணவு உண்டபின் வழக்கம் போல இருவரும் உறங்கலாயினர்.

எவ்வளவு நேரம் உறங்கினாளோ தெரியாது. தனது வீட்டுக் கோலிங் வெல் சத்தம் கேட்டது. யாரது இந்த நேரத்தில், நமக்கு அவ்வாறு தெரிந்தவர் என்று யாரும் இல்லையே காலையில் என்றால் பால்காரன் கூப்பிடுவான் என நினைத்தவள் கதவை திறக்கச் சென்றாள். சிறிது நேரம் யோசித்தபின் கதவைத் திறந்தாள். அங்கே அவள் எதிர்பாராத மனிதனாக அரவிந் நின்றான். என்ன எது என்று கேட்பதற்கு முன்னே அவனே சாவகாசமாக உள்ளே நுழைந்தான். சுற்றும் முற்றும் பார்த்தான். “ம்” நன்றாக இருக்கிறது. நல்ல இடம்தான். என மெதுவாகக் கூறினான். அவளுக்கு ஆத்திரம் வந்தது. என்ன தைரியம் என் வீட்டுக்குள் வந்திருந்து இவ்வளவு பேச்சு வேறு இவனைக் காயப்படுத்த வேணும் என நினைத்தாள். அரவிந்திடம் திரும்பிய வந்தனா என்ன வேணும் உங்களுக்கு எனக் கேட்டாள். என் குழந்தையைப் பார்க்க வேண்டும் எனக் கூறியவன் அத்தோடு உன்னிடம் பேச வேண்டும் எனக் கூறினான். குழந்தையா? இங்கு இல்லை அது என்னுடையது மட்டும் தான் என கோபத்துடன் கூறினாள். அதற்குள் “மம்மி” எனக் குழந்தை அறைக்குள் இருந்து வெளியே வந்தான். அருணின் பார்வை அந்தப் புதியவனின் மீது பட்டது. “யார் மம்மி இந்த அங்கிள்” எனக் கேட்டான். அதற்குள் அரவிந் எழுந்து வந்து அதை உன் மம்மியிடம் கேட்க வேண்டாம். நான் சொல்கிறேன் எனக் கூறி அவனை அன்போடு அணைத்து நான்தான் உன் அப்பா என உச்சி முகர்ந்தான். தான் வாங்கி வந்த சொக்கலேட்டை அவனுக்கு உடைத்து உண்ணக் கொடுத்து பழப்பையையும் அவனிடம் கொடுத்து மடியில் இருத்திக் கொண்டான்.

ஆனால் அவளோ நெருப்பாக நின்றாள். முதலில் நீங்கள் இந்த இடத்தை விட்டுச் செல்ல வேண்டும். தேவையில்லாமல் என் குழந்தையை பழிவாங்க வேண்டாம். எனக் கூறி அழுதாள். தான் படிக்கும் போது தனக்குப் பின்னால் அவன் திரிவதைப் பொறுக்க முடியாமல் தவறாகப் பேசியதால் உன்னைப் பழிவாங்குவேன் என அவன் கூறியதும் தான் ஒரு நாள் வேலைக்குச் சென்ற போது அவளுடைய காரியாலயத்துக்குள்ளே நுழைந்து தனது அம்மாவுக்கு சுகமில்லை எனக் கூறி தன் சினேகிதியின் அண்ணனுடன் வந்து தன்னை அழைத்துச் சென்று நாசமாக்கி தன் வாழ்வையே அழித்து விட்டான்.

பாதகனுடன் நமக்கு என்ன பேச்சு என எண்ணி அவனிடம் உள்ள தன் மகனை தூக்குவதற்காக அருகில் சென்றவள் அப்படியே அவன் காலடியில் சுருண்டு விழுந்தாள்.

அரவிந் உடனடியாக குழந்தையை இறக்கிவிட்டு வந்தனாவிடம் குனிந்து வந்தனா வந்தனா எனக் கூறி எழுப்பிப் பார்த்தான். மயக்கமுற்றிருந்தாள் வந்தனா. உடனடியாக வந்தனாவைத் தூக்கி காரில் வைத்தான். குழந்தையையும் அழைத்துக் கொண்டு வைத்தியசாலைக்குச் சென்றான். அங்கு வந்தனாவுக்கு சிகிச்சையளிக்கப்பட்டதும் மயக்கம் தெளிந்தாள். அப்பொழுது அங்கு வந்த டாக்டர் ரமேஷ் என்னடா அரவிந் இந்தப்பக்கம் எனக் கேட்டான். தன்னுடன் பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப் படித்தவன் ரமேஷ். அவன் வைத்தியத்துறையிலும் தான் பொறியியல் துறையிலும் கல்வி கற்றாலும் இருவரும் இணை பிரியாத நண்பர்கள். அவனிடம் நடந்தவற்றைக் கூறி வந்தனாவை பரிசோதிக்கும் படி கூறினான். ரமேஷ் உடனடியாக தேவையான பரிசோதனைக்கு உத்தரவிட்டான். பரிசோதனை முடிவுகள் நாளைக்கு வந்ததும் உனக்குப் போன் பண்ணுகிறேன் அப்போது எல்லாம் தெரியும் எனக் கூறினான். ரமேஷ். பின் அரவிந்திடம் விடை பெற்றுச் சென்றான்.

அரவிந் வந்தனாவிடம் திரும்பினான். ஆனால் அவள் குழந்தையுடன் கதைத்துக்கொண்டிருப்பதைக் கண்டான். குழந்தை, அம்மா இவர்தான் என் அப்பாவா? எனக் கேட்டான். ஆம் எனக் கூறியவள் உன் அப்பாவை உனக்குப் பிடித்திருக்கிறதா? எனக் கேட்டாள். நிறையப் பிடித்திருக்கிறது என தன் கைகளை அகல விரித்துக் காட்டினான். முகத்தில் மலர்ந்த புன்னகையுடன் நிமிர்ந்தவள் அரவிந் தன்னைப் பார்ப்பதை உணர்ந்து தலையை தாழ்த்திக்கொண்டு மௌனமானாள். தனக்குள் அடங்கியிருந்த நோய் வெளிக்காட்டத் தொடங்கியது. இனியும் நான் உயிரோடு வாழும் காலம் கொஞ்சக்காலம் தான் என நினைத்தவள் தன் குழந்தையின் வாழ்வுக்கு ஒரு ஆதரவு கிடைத்து விட்டது எனவும் அரவிந் குழந்தையை அன்போடு கவனித்துக் கொள்வான் எனவும் எண்ணினாள். அவ்வேளை வந்தனா என அரவிந் அழைத்தது அவள் காதில் விழவில்லை. மீண்டும் வந்தனா என அழைத்ததும் நிமிர்ந்தாள். கட்டிலின் அருகில் வந்து தான் செய்த தவறுகளை மன்னிக்குமாறு கெஞ்சினான். நான் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது உண்மையான காதல் கொண்டிருந்தேன். நீ என்னை அவமதித்ததை தாங்க முடியாமல் இவ்வாறு செய்துவிட்டேன். ஆனால் நான் ஒவ்வொரு நாளும் செய்த தப்புக்காக தினமும் வேதனைப்பட்டேன். உன்னை தேடினேன். உன் சினேகிதியிடம் கேட்டுப் பார்த்தேன்.அவள் என்னிடம் பேசவில்லை.

தன் பெயரை நம்பி என் அண்ணனை நம்பி வந்தவளை மோசம் செய்துவிட்டாய் என ஏசினாள். இனிமேல் தன்னுடன் கதைக்கக் கூடாது எனவும் ஏசினாள். இவ்வாறு இந்த ஐந்து வருடமாக உன்னைத் தேடியும் பயனில்லை என்றிருந்த போது தான் உன் சிநேகிதி ராதாவைக் கண்டேன். அவள் கூறினாள் உன்னை இங்கு பார்த்ததாகவும் ஒரு குழந்தையுடன் நீ இருக்கிறாய் எனவும் கூறினாள். அதன் பின்தான் நான் உன்னைத் தேடித் திரிந்த போது கண்டேன் என்றான். பின் குழந்தையை அணைத்துக் கொண்டு வந்தனாவுக்கு தேவையானவற்றை ஒழுங்கு செய்துவிட்டு தேவையான பொருட்களை எடுத்து வருவதற்கு வீட்டுக்குச் சென்று எடுத்துக் கொடுத்தான். அன்றிரவு குழந்தையுடன் பொழுதைக் கழித்தான். மறுநாட் காலை டாக்டர் ரமேஷ் வந்தான். அரவிந்தை அழைத்துச் சென்றான். அங்கு ரமேஷ் சொன்ன விடயம் அரவிந்தின் தலையில் பேரிடியாக விழுந்தது.

சாரி அரவிந் வந்தனாவுக்கு வந்திருப்பது குருதிப் புற்று நோய். அதை ஆரம்பத்தில் கவனிக்காததால் தீவிரமாகி விட்டது. இனி வந்தனாவின் வாழ்நாளை எண்ணிக்கொண்டிருக்க வேண்டியது தான் எனக் கூறினான். அரவிந் கல்லாய் அமர்ந்திருந்தான். கண்களில் நீர் ஆறாகப் பெருகியது. எத்தனை காலமாக அவளைத் தேடியும் தன் காதலை வெளிக்காட்ட முடியவில்லை.ஆனால் அவள் கிடைத்தும் அவளுடன் தன் அன்பைப் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பத்தை ஆண்டவன் தனக்கு கொடுக்கவில்லை எனக்கு சரியான தண்டனையை கடவுள் தந்துவிட்டான். என எண்ணினான். அரவிந் என ரமேஷ் அழைத்த போது சுய நினைவுக்கு வந்தான். கண்களைத் துடைத்துக் கொண்டு ரமேஷிடம் விடை பெற்றுக் கொண்டு வந்தனாவின் அறைக்குள் சென்றான்.

அங்கு வந்தனா குழந்தை அருணுக்கு உணவு கொடுத்துக் கொண்டிருந்தாள். வந்தனா அரவிந்தின் முகத்தை உற்று நோக்கினாள். பின், என்ன றிப்போட் வந்து விட்டதா எனக் கேட்டாள். ஆம் எனப் பதிலளித்தான். என்னவாம் எனக் கேட்டாள் வந்தனா. ஒன்றுமில்லை சாதாரண மயக்கம் தான். போதிய சத்துக்கள் இல்லாததால் வந்ததாம் எனப் பதிலளித்தான். ஆனால் அவனின் பதிலில் ஏதோ உள் அர்த்தம் உள்ளதை உணர்ந்து கொண்டாள். பின் அரவிந் யாருடனோ தொலைபேசியில் கதைப்பது தெரிந்தது. அதைக் கவனியாமல் அவள் வீட்டுக்குச் செல்வதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்தாள்.

பின் வைத்தியசாலையில் இருந்து வீட்டுக்குச் சென்று அரவிந் வந்தனாவிடம் பேசினான். வந்தனா இனி என்னுடைய வீட்டுக்குப் போகலாம் வீட்டைக் காலி செய்து விட்டு நாளை போகலாம் எனக் கூறினான். ஆனால் வந்தனா மறுத்தாள். திடீரென்று நானும் குழந்தையும் வந்தால் உங்கள் ஆட்கள் என்ன நினைப்பார்கள். நாங்கள் வரவில்லை இங்கேயே இருக்கப் போகிறோம் எனக் கூறினாள். ஆனால் அரவிந் பார்த்த பார்வையில் பேசாதிருந்தாள். ஆனால் அன்றிரவு அதிக நேரம் தொலைபேசியில் அவன் பொழுதைக் கழித்தான். யாருடன் கதைத்தான் என்று அவள் கவனம் செல்லவில்லை. இருவருக்கும் உணவு தயாரித்துக் கொடுத்தாள். உணவு உண்டபின் அரவிந் வந்தனா நீயும் குழந்தையும் நித்திரைக்குப் போங்கள். எனக்கு கொஞ்சம் வேலை இருக்கிறது. பின் தூங்குகிறேன். எனக் கூறினான். இருவரும் சென்று உறங்கலாயினர்.

அடுத்த நாட்காலை எழுந்து காலையுணவை தயாரித்துக் கொண்டிருக்கும் போது இன்று ஊருக்குப் புறப்படுகிறோம் எனக் கூறினான். பின் காலையுணவை முடித்து காரில் புறப்பட்டனர். செல்லும் வழியில் ஓர் ஆலயத்தின் முன் கார் நின்றது. வந்தனா அவனின் முகத்தைப் பார்த்தாள். இறங்குமாறு அவளிடம் கூறினான். மகனையும் அழைத்துக் கொண்டு காரிலிருந்து இறங்கினாள். ஏற்கனவே அங்கு பூசை எல்லாம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அங்கு எளிமையான முறையில் அரவிந் வந்தனாவுக்கு தாலி கட்டினான். பின் அர்ச்சகரிடம் விடை பெற்றுக் கொண்டு ஊருக்குப் புறப்பட்டனர்.

தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று வந்தனாவை நன்றாக கவனித்து வந்தான். வந்தனாவும் சகலதையும் மறந்து பழகினாள். ஒரு நாள் அதிகாலையில் துயில் எழும் வந்தனா நேரமாகியும் எழவில்லை. அரவிந் அருகில் சென்று வந்தனா வந்தனா என எழுப்பினான். எழவில்லை. வந்தனாவின் கையைப் பிடித்துப் பார்த்த பின் அதிர்ந்தான். வந்தனா இறந்து அதிக நேரம் சென்றிருந்தது. அரவிந் வந்தனாவின் உடலில் விழுந்து அழுதான். ஆற்றுவோர் தேற்றுவோர் இல்லாமல் அழுது கொண்டிருந்தான்.

பின் சகல கடமைகளையும் முடித்து வந்தனாவின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. குழந்தை அருணுடன் வீட்டுக்குச் சென்றான். சோபை இழந்து காணப்பட்டது. இனி அருணுக்காக வாழ்வது என முடிவு செய்தான். வந்தனாவின் படத்திற்கு மாலை அணிவித்து குத்து விளக்கு ஏற்றி விட்டு அமர்ந்திருந்தான். படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவனின் இரு விழிகளிலும் நீர் ஆறாகப் பெருகிக் கொண்டிருந்தது. வந்தனா கூறியது ஒவ்வொன்றும் நினைவில் நிழலாடின.

**திருமதி. சு.புட்பமூர்த்தி**

(ஆசிரியை)

# காத்திருப்பு



எந்தன் பூமித்தாய்
எத்தனை வேதனைகளை
எத்தனை வலிகளை
தான் சுமந்து
எத்தனை உயிர்களை
பிரசவித்துள்ள - இப் பூவுலகில்

சொந்த நாட்டில் சண்டையெனில்
ஓடித் தப்பிச் செல்லும்
அதன் குழந்தைகள்
நாதியற்ற குழந்தைதான்

உயிர்களும் மாண்டன
உடைமைகளும் மண்ணாகின
குருதியும் பாய்ந்தன
ஆனால் என் ஈழத்தாய்
ஈரமுள்ள தன் மைந்தர்களை
தன்னைத் தேடி வருவார்கள் என
தலைவிரி கோலத்தோடு காத்திருக்கிறாள்.

**மு.மோகனன்**

குருமண்வெளி

# மனித வாழ்க்கையில் சோதிடத்தின் தாக்கம்

அற்புதங்களும், சித்தியும் தருவதனாலே விநாயகரை அற்புதச் சித்தி விநாயகர் என அழைக்கின்றனர். சோதிடத்தில் சூரியன் - சிவன், சந்திரன் - சக்தி, புதன் - விஷ்ணு என்பது போன்று விநாயகரை கேது என்கின்றோம். இதனாலே அவருக்கு ஞானகாரகன் என்கின்றோம். வேறு எந்தக் கிரகங்களுக்கும் இல்லாத சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது. கேதுவே விநாயகர் ஆவார்.இவர் எழுத்தோடு தொடர்புடையவர். எமது விதியை வரையக்கூடிய வல்லமை இவருக்குத்தான் உண்டு. நாம் செய்கின்ற ஒவ்வொரு காரியங்களையும் துல்லியமாகக் கவனித்துக் கணித்து வருகின்றார். ஒரு எழுத்துப் பிழைக்குமாயிருந்தால் எல்லாம் பிழைத்துவிடும். கும்பகர்ணன் "நித்தியவாழ்வு" என்பதனை "நித்திராவாழ்வு" என்றமையினால் அவன் செய்த தவவலிமை எல்லாம் பயனற்றுப் போயிற்று. ஒரு எழுத்துத்தான் பிழைத்தது.

ஒவ்வொருவரின் ஜாதகத்திலும் கிரகங்கள் இரண்டு அணிகளாகச் சேர்கின்றன. ஒன்று ஆளும் அணி மற்றது எதிரணி. இதில் சந்திரன் சபாநாயகராக இருக்க இலக்கிணம் செயலாளராகச் செயற்படும். ஒரு அணிக்கு தேவர் குழு வியாழன் தலைமை தாங்குவார். இதில் சூரியன் செவ்வாய் உட்பட மூவரும் செயற்படுவர். மற்றைய அணியில் அசுரகுரு சுக்கிரன் தலைமை தாங்க புதன், சனி உட்பட இக்குழுவிலும் இம் மூவரும் செயற்படுவர். எவ்வணி ஒருவர் ஜாதகத்தில் பலமுடையதாக இருக்கின்றதோ அவ்வணி ஆட்சி செலுத்தும். மற்றைய அணி எதிர்க் கட்சியில் அமர்ந்து கொள்ளும். இரு அணிகளும் சமபலம் பெற்றிருக்குமாயின் அங்கு ராகு, கேது எவ்வணியோடு சார்கின்றார்களோ அவ்வணி ஆட்சி செய்யும்.

கேது ஞானகாரகன் என்று முன்னர் கூறினோம். இவ் ஞானகாரகனை அடிப்படையாகக் கொண்டே முற்பிறப்பு பின்னர் என்னவாகப் பிறப்போம் என்பதும் கூறப்படுகின்றது. இவருக்கு உருவம் கிடையாது. எல்லாக்கிரகங்களும் நேர்த்திசையாகச் சுற்ற இவர் ராகுவை இழுத்துக் கொண்டு எதிர்த் திசையாகச் சுற்றுவார். சூரியன் முதல் கேது வரையான நவக்கிரகங்களில் அறுதிப்பலம் இவருக்கே உண்டு. இவருக்கு ஆட்சிவீடு இல்லை. கடகத்தில் இருக்கும் போது நல்ல பலன்களை செய்வார். மகரத்தில் இருக்கும் போது சாதகமான பலன்களைச் செய்வார். இவரினால் அமையும் யோகங்கள் இரண்டு. ஒன்று கேள யோகம் இதன் மூலம் நல்வாழ்க்கை, உயர்கல்வி என்பன உருவாகும் மற்றயது காலசர்ப்ப யோகம் காலசர்ப்ப தோசம் (நாகதோசம்) என்றும் கூறுவர். ஆனால் இளம் வயதில் சில தடைகள் செய்தவாறு இருந்தாலும், முப்பத்திரண்டு வயதின் பின் யோக வாழ்க்கையைக் கொடுக்கும். இவர் ஒருவர் யாதகத்தில் ஐந்தாம் வீட்டில் அமர்ந்திருந்தாலும் புத்திர பாக்கியத்தில் குறைபாடுகள் காணப்பட்டாலும், இவரோடு வியாழன், புதன் தொடர்புடையவராகக் காணப்பட்டால் உயர் கல்வியின் உச்ச நிலைக்கு சென்றுவிடுவார்கள். நுண்ணறிவு வீதம் அதிகமாகக் காணப்படும். ஆன்மாக்களிடம் ஞான அறிவு வளர்வதற்கு இவருடைய பார்வை அவசியமாகின்றது.

"வேதமோடாகமும் மெய்யாம் இறைவன் நூல்" சிவபெருமானால் அருளப்பட்ட வேதம். இதுவே உலகில் முதல் தோன்றிய நூலாகும். வேதங்கள் நான்கு. இருக்கு, யசூர், சாமம், அதர்வணம். வேதங்கள் ஆறு அங்கங்களுடையது. இவை முறையே இக்சை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிரி, சோதிடம் என்பனவாகும். இதில் சோதிடம் வேதத்தின் கண் என்பர். வேதம் எழுதாமறை, சுருதி என அழைக்கப்படும்.

எனவே சோதிடத்தின் புனிதம் கெட்டுவிடும் என்பதற்காக எழுதாமல் முற்காலத்தில் குரு சீடர் பரம்பரையாக பேணப்பட்டு வந்தது எனலாம். இராவணனுடைய அரசசபை அங்கே அசுர குருவான சுக்கிராச்சாரியார் அமர்ந்திருக்கின்றார். குருவிடம் இராவணன் கேட்கின்றான் "குருவே நான் ஒரு புதல்வனைப் பெற வேண்டும். அப்படியானால் எப்போது பெற வேண்டும்" எனக் கேட்கின்றான். எல்லாக் கிரகங்களும் பதினோராம் இடத்தில் இருக்கின்ற போது நன்மையே செய்யும். நீர் புதல்வனைப் பெற வேண்டும் என்கிறார். "அப்படியானால் இலக்கிணமும், இராசியும் வேறு வேறாக அமைந்துவிடுமே" என்கிறான். அப்படியானால் இலக்கிணத்தில் சந்திரன் இருக்க மற்றைய கிரகங்களெல்லாம் பதினோராம் இடத்தில் இருக்கட்டும்" என்றார். "குருவே நீங்கள் எவ்விடத்தில் இருக்க வேண்டும்" என்று இராவணன் கேட்கவில்லை. குருவும் சொல்லவில்லை. பதினோராம் இடத்தில் வெள்ளி இருப்பது தந்தைக்கு ஆகாது. யாதகருக்கும் அற்ப ஆயுள். இங்குதான் சனியின் துணைக் கோளான மாந்தி (குளிகை) செயற்பட்டு ஆதிக்கம் செலுத்தியது எனலாம். அதே போன்று பஞ்சபாண்டவர்களில் ஒருவரான சகாதேவன் அமர்ந்திருக்கிறார். பஞ்சபாண்டவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விடயத்தில் இணையற்ற வல்லவர்கள். அதே போன்று சகாதேவன் சோதிட சாஸ்திரத்தில் வல்லவன். அப்போது துரியோதனன் வருகின்றான். தம்பி சகாதேவன் பஞ்சபாண்டவர்களோடு போர் புரிந்து வெல்வதற்கு ஓர் நல்ல நாள் என்கின்றார். சோதிட தர்மம் மாறாத சகாதேவன் வருகின்ற அமாவாசை அன்று கிரகங்களெல்லாம் தங்களுக்கே சாதகமாய் அமைவதனால் அன்று போர் தொடங்குவீர்களாக இருந்தால் பஞ்சபாண்டவர்களை போரில் வெல்வது திண்ணம் என்றார். ஆனால் மாயக்கண்ணனின் சூழ்ச்சியினால் அது மாறியமையலாயிற்று.இவ்வாறு வேதங்களிலும் பின் இதிகாசங்களிலும் சோதிடத்தின் தன்மை சக்தி படைத்ததாகக் காணப்பட்டது.

சோதிடம் இரண்டு வகைப்படும். ஒன்று வாக்கியம். இம்முறை பழமையானது. ரிஷிகள், சித்தர்கள், முனிவர்களின் ஆய்வுக்கு உட்பட்டது. மற்றையது திருக்கணிதம். இவ்விரண்டு முறைகளாலும் கணிக்கப்படுகின்ற பஞ்சாங்கங்களை எமது நாட்டில் இன்றும் காணலாம். சூரியன் நட்சத்திரம், சந்திரன் துணைக்கோள், செவ்வாய், குரு, சுக்கிரன், புதன் சனி கோள்கள், இராகு கேது என்பவற்றிலும் அடங்காது. சாயாக் கோள் இவ் ஒன்பதையும் சோதிடத்தில் கிரகங்கள் என்கிறோம். பதினெட்டாம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட யுரேனஸ் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட நெப்ரியூன் இக்கிரகங்களினால் கூடுதலான எப்பலனையும் நாம் பெறவில்லை. 1930 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட புளூட்டோ பற்றி எந்தவொரு சோதிடங்களும் பிரஸ்தாபிக்கவில்லை. அதே போல் விஞ்ஞான ரீதியாகவும் எமது கிரக மண்டலத்தில் இருந்து விலகிச் சென்றுவிட்டது. நட்சத்திரங்கள் அஸ்வினி முதல் ரேவதி ஈறாக 27 உம் மேடம் முதல் மீனம் ஈறாக இராசிகள் 12 உம் பிரதமை தொடக்கம் பூரணை வரை, பிரதமை முதல் அமாவாசை வரை திதிகள் முப்பதும் சூரியனை அடிப்படையாகக் கொண்டு பகலிரவு கணித்தது போல் 30 திதிகளையும் அடிப்படையாகக் கொண்டு முற்காலத்தில் மாதங்கள் கணிக்கப்படலாயிற்று. இவற்றை அடிப்படையாகக் கொண்டு இன்றைய பஞ்சாங்கங்களின் மூலம் ஒவ்வொரு ஜாதகத்தின் பலன் கணிக்கப்பட்டு கூறப்பட்டு வருகின்றது. இதில் நேர நிர்ணயம் முக்கியமானதாகும். ஒவ்வொருவரும் பிறந்த நேரம் துல்லியமானதாக இருக்கும் பட்சத்தில் அவர்களுடைய விதிகளை சோதிடர்கள் நிர்ணயிக்கின்றார்கள்.

சோதிடத்தின் தந்தை என வர்ணிக்கப்படுபவர் வராகமிகுதர் ஆவார். இவரின் காலத்தில் இராகு கேதுகள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட காலத்தில் 2ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் தோன்றிய சோதிட சிந்தனையாளர் ஆரியப்பட்டர் ஆவார். இவர் காலத்தில் சோதிடமானது கணிதரீதியாக வளர்ச்சியடைந்தது எனலாம். இது இன்னும் வேகமாக வளர்ச்சியடைந்து பல்கலைக்கழகங்களில் பாடங்களாக பயிலப்படுவதனைக் காணலாம்.

"அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃது பிறர் பழிப்பில்லாயின் நன்று." என்கிறது பொய்யாமொழி. இல்வாழ்க்கை எப்படி அமைய வேண்டும் என்பதனை ஆருடச் சக்கரம் ஒவ்வொருவருக்கும் வழிகாட்டி நிற்கின்றது. சோதிட ஆருடசக்கரத்தில் முதலாமிடம் (இலக்கினம்) ஓர் ஆன்மா ஈடேற்றம் பெற வேண்டுமானால் தமது வினைகளுக்கு ஏற்ப செயற்படுவதற்கு உடம்பு அவசியமானதாகும். இலக்கினமே உடலைக் குறித்து நிற்கின்றது. அடுத்ததாக குடும்ப வாழ்க்கையை நோக்குவோமாக இருந்தால் திருமணம் மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது. இது முக்கியம் பெறுவது நட்சத்திரம், யோனி, கணம், இராசி, இராசியாதிபதி, வசியம், வேதை, மாகேந்திரம், இஸ்திரிதீர்த்தம், இரட்சி இவை நட்சத்திரத்தோடு தொடர்புடைய முக்கியமான பொருத்தங்களாகக் கருதப்படுகின்றது. இதில் நான்கு பொருத்தங்கள் எல்லோருக்கும் பொருந்தும். அவை வெவ்வேறாக காணப்படலாம். யோனிப்பொருத்தம் சூத்திரருக்கு முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது. கணப்பொருத்தம் சத்திரியருக்கே முக்கியம் எனக் கூறப்படுகின்றது. மாகேந்திரப் பொருத்தம் வைசிகர்களுக்கு முக்கியமானதாகக் காணப்படுகின்றது. இன்று இம் மூன்று சாதியினரும் இல்லாத நிலையில் அசுசையாக காணப்படுகின்றது. எல்லோரும் கற்றவர்களாக காணப்படுகின்றனர். இவற்றை சீர்தூக்கிப் பார்க்கின்றபோது இவற்றில் ஓர் ஆறு பொருந்தினால் போதுமானதாகி விடுகின்றது. திருமணப் பொருத்தத்தில் மிக முக்கியமானது கிரக நிலையைக் கொண்டு கணிப்பிடப்படும் பொருத்தமாகும். இது மிகவும் அவதானமாகச் செய்ய வேண்டிய ஒன்றாகும். சந்திரன், செவ்வாய், சுக்கிரன், கேது இந் நால்வரையும் நன்கு அலசி ஆராய்ந்து ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரவேண்டி உள்ளது.

செவ்வாய் தோசம் பற்றி பலர் பலவாறு அலட்டிக் கொள்கின்றனர். இலக்கினத்துக்கு இரண்டு, நான்கு, ஏழு, எட்டு, பன்னிரெண்டு இவ்விடங்களில் செவ்வாய் அமைவது செவ்வாய் தோசம் என்று கூறப்படுகின்றது. இவ்விடங்களில் அமைந்த சிலருக்கு அதன் தாக்கம் அற்ற நிலை காணப்படும். சிலருக்கு அற்பமாகக் காணப்படும். எனவே அதனுடைய தன்மையை ஆய்ந்தறியாமல் அப்படி அமைபவர்களுக்கு செவ்வாய் தோசம் தான் என்று முடிவுக்கு வந்துவிடக் கூடாது. ஒரு ஜாதகரின் ஜாதகத்தில் பல வழிகளில் செவ்வாய் தோசம் பங்கமடையலாம். அதே போன்று ருதுவான ஜாதகக்குறிப்பினையும் எந்தவொரு நிகழ்வுக்கும் முதன்நிலைப்படுத்தக் கூடாது. ஏனெனின் ஆருட சோதிடத்தை பொறுத்தவரையில் நேர நிர்ணயம் மிக மிக அவசியமானதாகும். இது ஒரு துல்லியாமன நேரக் கணிப்பீடாக அமைவதில்லை. ஒரு குழந்தை பிறக்குமாக இருந்தால் அக் குழந்தை 5-10 நிமிடங்கள் நேரத்தில் வித்தியாசம் இருந்தாலும் கணிப்பின் மூலமாக ஆண் குழந்தையா, பெண் குழந்தையா என அறிகின்ற வேளையில் உண்மையான நேரத்தைச் சோதிடர்கள் அறிந்து கொள்கின்றார்கள். ஆனால் இதனுடைய நிச்சயமற்ற தன்மை பல மாற்றங்களைக் கொண்டுவரக் கூடும்.

ஒவ்வொரு ஜாதகரும் தங்களுடைய ஜாதகத்தினை அவரவர் வாழ்க்கைக்கு ஏற்ப சாதகமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். ஒரு சில ஜாதகர்கள் அவர்களின் ஜாதகக் குறிப்பில் கிரகங்கள் ஆட்சி அல்லது உச்சம் பெற்ற நிலையில் இல்லையே என்று அங்கலாய்ப்பதும் உண்டு. சில பேர் தங்களது பிள்ளைகள் இப்படிப் பிறக்கவில்லையே என்று கவலையடைவதும் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| | | வியாழன் | கேது |
| | கிரக நிலை | | இலக்கினம் சனி |
| சந்திரன் | | | செவ்வாய் |
| சுக்கிரன் இராகு | புதன் சூரியன் | | |

எமது அண்மை நாடான இந்தியாவின் பிரதமராக இருந்து இந்திய துணைக் கண்டத்தையே தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்திய பெண் இந்திராகாந்தி ஆவார். இவருடைய ஜாதகத்தைப் பார்க்கின்ற போது சந்திரன்-பகை, சனி-பகை, கேது-நட்பு, இராகு-நட்பு, செவ்வாய்-பகை, வியாழன்-நட்பு, புதன்-நட்பு, சூரியன்-பகை, சுக்கிரன்-நட்பு ஆகவே நாமும் ஆட்சி, உச்சம் கிரகங்கள் அடையவில்லை என்று கவலையடைய வேண்டாம். எனவே அவ்வாறு இல்லாவிட்டால் இவருடைய உயர்ச்சிக்கு என்ன காரணம்? என்பதனை எதிர்வரும் காலங்களில் சந்தர்ப்பம் வரும்போது ஆராய்வோம். அதே போன்று உலக நாடுகளையே தன்வசபடுத்திய சக்கரவர்த்தினி விக்டோரிய மகாராணி அவர்களின் ஜாதகக் குறிப்பு பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| செவ்வாய் சனி இராகு | புதன் சுக்கிரன் | இலக்கினம் சூரியன் சந்திரன் | |
| | கிரக நிலை | | |
| வியாழன் | | | |
| | | | கேது |

இக் குறிப்பும் அவ்வாறே சந்திரன் மட்டும் உச்சம் பெற ஏனைய கிரகங்கள் நட்பு, பகை, நீசங்களாக காணப்படுகின்றன. இப்படி இருந்த போதிலும் இவருடைய வெற்றிக்கும் புகழுக்கும், உயர்ச்சிக்கும் என்ன காரணம் என்பதனை பிறிதொரு சந்தர்ப்பத்தில் ஆராய்வோம். முன்னர் முதலாமிடம் உடம்பு எனப் பார்த்தோம். இரண்டாமிடம் வாக்கு, நேத்திரம், குடும்பம், என்பவற்றை இரண்டாமிடம் குறித்து நிற்கும். இதில் பாவக்கிரகங்கள் அமையக்கூடாது. புதனும் சூரியனும் குடியிருத்தல் கல்வியில் உயர்ச்சி தரும் எனக் கூறப்படுகிறது. மாதுருத்தானம், சுகஸ்தானம் என நான்காம் இடத்தைக் கூறுவர். இத்தானத்தில் கேது இருக்கக் கூடாது. கேது இருந்தால் அதுவும் பெண்களுக்கு அமைந்திருந்தால் தேவையற்ற கெட்ட பெயர்கள் எல்லாம் எடுக்க வேண்டி இருக்கும். அதே போன்று ஐந்தாமிடம் புத்தி, புத்திரஸ்தானம் இதில் கேது இருந்தால் அப்பப்பா எவ்வளவு செல்வாக்கான திடகாத்திரமாக இருந்தாலும் ஏகப்பட்ட கஷ்ட நஷ்டங்களைப் பொறுத்து மாரகத்தின் தன்மைக்கு கொண்டுவந்து விடும். கேதுவோடு சுபக்கிரக சம்பந்தம் ஏற்படின் கல்வியில் முன்னேற்றம் காணப்படும். நான்காம்; ஐந்தாம் இடங்கள் பாதிக்கப்பட்டிருந்தால் அல்லது அவ் இராசிக்குரிய கிரகங்கள் 6,8,12 போன்ற இடங்களில் மறைந்திருந்தாலும் எவ்வளவுதான் பிறருக்கு உதவி செய்தாலும் அவ் ஜாதககாரரால் நல்ல பெயர் வாங்க முடியாது. அதே போன்று ஏழாம் எட்டாம் இடங்களைப் பார்த்தோமாயின் கூட்டுத் தொழில், திருமணம், மாங்கல்யம், ஆயுள் என்பனவற்றைக் குறித்து நிற்கும். இவ்விடங்கள் சுபக்கிரகங்களின் பார்வையற்று பாதிக்கப்படுமானால் மேற்கூறியவை திருப்தியற்ற நிலையில் காணப்படும். 9ஆம் இடம் வாக்கியஸ்தானம் இது உயர் கல்வியைப் பெறக்கூடிய இடமாகும். 10 ஆம் இடம் தொழிலுக்குரிய இடம், கருமஸ்தானம் 11ஆம் இடம் இலாபஸ்தானம் இதனைக் கொண்டு வருமானத்தை அறிந்து கொள்ளலாம். 12 ஆம் இடம் மிகவும் முக்கியமான ஒரு இடமாகும். இதனை விரயஸ்தானம், சயனஸ்தானம் என்றும் கூறுவர். எவ்வளவுதான் பணம், பொருள், செல்வாக்கு இருந்தும்

நிம்மதியான நித்திரை இல்லை என்றால் எல்லாம் இருந்தும் இல்லையாகிவிடும். எனவே அவ்விடம் பாதிக்கப்பட்டு இருந்தால் அவ்விடத்தை சரிசெய்தல் முக்கியமானதாகும். மேற்கூறியவைகள் சரியாக அமைந்தாலும் விதிக்கமைய எமது வாழ்க்கையை கொண்டு செல்கின்றவர் தெசாநாதன் ஆவார். இவருக்கு உதவியாக புத்திநாதர் காணப்படுவார். தனது வாழ்க்கைக் காலம் முழுவதும் எமக்கு சாதகமாக எமது வாழ்க்கை சிறப்புடையதாகக் காணப்படும்.

"தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதம் மெய்வருத்தக் கூலி தரும்" என்கிறது பொதுமறை. நாம் செய்த கர்ம வினைகளுக்கு ஏற்ப எமக்கு அவ் கரும வினைகள் நீக்கிக் கொள்வதன் ஊடாக இவ் உடல் கிடைக்கப்பெற்று இருக்கிறது. அவ் விதியிலே சென்று கொண்டிருக்கின்ற போது பல இடையூறுகளும் துன்பங்களும் எமது வினைக்கேற்ப கஷ்டமாக அமைந்து விடலாம். அவ்வேளையில் விதியிலே கூறப்பட்ட உரிய இடத்தினை அடைவதற்கு சோதிடக் கலையானது பலவகையான பரிகாரங்களைக் கூறுகிறது. இதில் தெய்வ தரிசனம், பிரார்த்தனை, பிராயச்சித்தம், சாந்தி போன்றவைகள் மிக முக்கியமானவைகளாகும். விதி தானாகவே நடக்கும் தானே என்று இருப்போமாக இருந்தால் விதியாகவே உள்ள சில தடைகளைத் தாண்ட முடியாமல் போய்விடும். ஒருவர் பொறியியலாளராக வேண்டுமானால் அவர் வேறொரு துறையை தெரிவு செய்வாராயின் அவருக்குரிய துறை இதுதான் என எடுத்துக் கூறுவது சோதிடக் கலையாகும். அதே போன்று எந்தக் காலத்தில் ஒவ்வொரு காரியம் செய்தால் சித்தியடையலாம் என்றும் சோதிடக் கலை கூறுகின்றது.

சோதிடத்திலே நட்சத்திரங்கள் அதன் தன்மைக்கேற்ப ஒவ்வொரு காரியமும் செய்வதற்கு எவையெவை எனக் கூறப்பட்டுள்ளது. எந்தத் தொழிலை ஆரம்பிப்பதற்கும் நல்ல நட்சத்திரமாக கூறப்படுகின்ற நட்சத்திரம் ரோகினி ஆகும். ஆனால் இவ் நட்சத்திரத்தில் ஆண் குழந்தைகள் பிறந்து விட்டால் கம்சனை வதை செய்வதற்காக இந்த நட்சத்திரத்தில் மாயக்கண்ணன் தோன்றியதனால்தானே தாய் மாமனுக்குப் பல தொல்லைகளையும், துயரங்களையும் கொடுத்து மரணத்தின் விளிம்புக்கு கொண்டுவந்து விடும் எனவே சோதிடத்தின் நோக்கம் அறிவுடைய ஆன்மாக்கள் தங்களது விதியின் வழியில் நடப்பதற்கு சிற்றினம் பேரின்ப வாழ்வினைச் சிறப்புறச்செய்வதற்கும் இப்பிறப்பிலே தாங்கள் செய்ய வேண்டிய முயற்சியை எடுத்தியம்பி நிற்கிறது எனலாம்.

சோதிடத்தின் கண் விளக்குவது முயற்சியும், தெய்வ தரிசனமும் ஆகும். ஒரு ஜாதகர் அவருடைய கரும வினைக்கேற்ப முயற்சி செய்யாமலே பலனையடையலாம். சிலர் முயற்சி செய்து பயனை அடையலாம். சிலர் முயற்சி செய்தும் அதனுடைய பயனை அடையமாட்டார். சிலரால் முயற்சிக்கவே முடியாத நிலை ஏற்படலாம். எத்துறையில் முயற்சி செய்யவேண்டும், எப்போது முயற்சி செய்ய வேண்டும், எப்போது முயற்சி செய்தால் வெற்றி பெறலாம் என்பதனை ஒரு ஜாதகரின் 5ஆம், 9ஆம், 10ஆம் இடங்கள் இதனை விளக்கி நிற்க இவற்றிற்கு தடைகளாக கிரகங்களின் அல்லது இறை குறைபாட்டை 4 ஆம், 7ஆம், 8ஆம் இடங்களைக் கொண்டு தீர்மானித்தல் வேண்டும். கிரக சாந்திக்காக பரிகாரம் செய்கின்ற போது பிற உயிருக்கோ, பிறருக்கோ சூழலுக்கோ தீங்கு ஏற்படாத வண்ணம் செய்ய வேண்டும் என சோதிடம் கூறுகின்றது. எனவே வாழ்க்கையில் ஆண்மாக்கள் விதி வழி செல்வதற்கு அவைகள் செய்ய வேண்டிய முயற்சிகளையும் பரிகாரங்களையும் சோதிடக் கலை பகிர்கிறது எனலாம்.

**கோ. வரதராஜசுந்தரம்**
ஆசிரியர்

# உன்னையே நீ எண்ணிப்பார்...

உன்னையே நீ எண்ணிப்பார்
நீ தொலைந்ததும் தொலைத்ததும் தெரியும்
நீ எதைச் சாதித்திருக்கிறாய் மற்றவரைச் சோதித்துப் பார்ப்பதற்கு
நவீன குளத்தின் நாகரீக நண்டாக
கண்டதை நறுக்கிக் கட்டவிழ்த்துச் செல்லாமல்
விழித்துக்கொள் பல விடியல்களுக்காய்
பறந்தோடும் காலங்களை சிறகடித்துச் சிறைப்பிடி
சிந்திக்கத் தெரிந்திடு
நிந்திக்க மறந்திடு
நேரம் பார்த்து தூரம்போ
நேயம் கொண்டு பாரம்தீர்
ஏக்கமில்லா நோக்கம்கொள்
தூக்கம் மறந்து தொடர்ந்து செல்
தோல்வியைச் சுட்டெரி
சோகங்களைவிட்டெறி
அன்னம் போல் - பால்
கிண்ணம் பகுத்தறி
நிலையான இடம்பிடி
நினைத்ததை அடைந்திடு
பீனிக்ஸ் பறவைபோல வரலாறு படைத்திடு
யோசித்துப்பார்
சாதித்துக் கொள்வாய்
உன்னையே நீ எண்ணிப்பார்
நீ தொலைந்ததும் தெரியும் தொலைத்ததும் தெரியும்

**திருமதி. சறோஜினி சுகுணராஜன்**
ஆசிரியை

தோல்வியை ஒப்புக்கொள்ளத் தயங்காதே
தோல்வியில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கின்றது.

# My School

School is a strong foundation to the human being by getting Education. School has included discipline, knowledge, good behavior, punctuality, good moral activities.

The name of my School is BT/Kurumanvely Sivashakthi Maha Vidyalayam. It is in the Batticaloa district. It was established by Mr.Danial Seenithampi in 1910. Our Village lady was Mrs.Mary Samithamby. She was the First professional trained Teacher in the Eastern province 1883. She became the second principal of our school in 1914. There are Classes from grade one to grade thirteen. There are about eight hundred students studying my School. And also forty two teachers are teaching here. They are very kind and also they lead the students to become as a perfect man and good citizen to my country.

My School has eight building sand beautiful flower garden. There are all facilities such as Classrooms, Library, Laboratory, and Play ground. We can learn all activities in my School. Like that my School has a big Computer room. So we can learn and develop our knowledge about the Computer easily. And also many students enter the University every year in my School.

The name of my School principal is Mr.Kanagarathnam. He is a kind Person and maintains not only the students but also teachers.

However we see everything depends on educated people. It may be in political affairs or administration in Company or in Government departments Almost Educated Persons will never agree to destruction. So the school will make good citizen in this earth.

We have a new library in my school. And it has a Librarian. There a lot of books. The Librarian helps to us to need books. We take books and Return the due time but not Return we want to pay the fine.

Mahathma Ganthi Who said Education is the development of the body, mind and spirit. It is the development of the head, the heart and the hand. According to I think, A teacher is an important of society and he is quite often the backbone of the community. A teacher's responsibility is great. It is he who moulds and shapes "Tomorrow's citizen who are today's people" So we must respect the teacher.

**P.Sevvanthy**
Grade :- 12 Arts

# விழுமியக்கல்வி பற்றிய சுவர்ந்த சிந்தனைகள்

"மனிதன் எந்த அளவு அறிவினைப் பெருக்குகிறானோ அந்தளவு தூய அறநெஞ்சத்தை வளஉத்துக்கொள்ளவில்லை எனில் அந்த அறிவுப்பெருக்கம் துன்பப்பெருக்கத்தில் போய் முடியும்." என்கிறார் தத்துவஞானி பேட்டன்றஸல். இக்கூற்றின் உண்மை இன்று தெளிவாகத் தெரிகிறது.

"கல்வியே கருந்தனம்" என்று ஆன்றோஉகள் கூறிவைத்தார்கள். "கேடில் விழுச்செல்வம் கல்வி" என்றார் வள்ளுவர். கல்வியின் நோக்கம் சான்றோனை உருவாக்குதல் என்று நம்முன்னோர்கள் கொண்டனர். கல்வி கேள்வி ஒழுக்கங்களில் சிறந்தவனாக விளங்குபவனே சான்றோன். அறிவோடு அறம்பரப்புபவன் சான்றோன். கல்வியினால் அடையப்பெற்ற அறம் பொருள் இன்பம் ஆகிய வாழ்க்கைப் பயன்களைப் பிறருடன் பகிர்ந்து துய்த்து பல்லுயிர் ஓம்பி வாழ்பவன் சான்றோன். கல்வியினால் எழுகின்ற அன்பு, தீமை செய்வதற்கு நாணுதல்இ ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்து சால்புகளையும் கொண்டு வாழக்கையில் ஒழுகிவருபவன் சான்றோன். இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யும் குணப்பண்பு நலம் கொண்டவர் சான்றோர். "உலகை ஒன்றாகக் காணபதே கல்வி" எனக் கல்விக்கு வரைவிலக்கணம் வழங்கியவர் ஔவையார். அந்தவகையில் கல்விப் பயனாக வடிவெடுத்த சான்றோன் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் மகுடவாசகத்தின் பொருளை நடைமுறையில் வாழ்ந்து காட்டுவதன் மூலமாக உணர்த்தி உலகக் குடிமகனாகத் திகழ்பவன்.

"குணநலம் சான்றோர் நலமே" என்பது வள்ளுவம். உடல்நலம், மனநலம், அறிவுநலம், நல்லொழுக்கம் என்பவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை மனிதனில் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொள்வது கல்வி. அதுவே முழுமைக் கல்வி. உலகியல் சார்ந்த நோக்கங்களும் இணையப்பெற்ற கல்வியே விழுமியக் கல்வியாகும். இவை சமநிலையில் விளங்கி செழுங்கலவைக் கல்வியாகப் பரிணமிக்கும் போதே முழுமைக்கல்வியாக நிறைவுபெறும். இத்தகைய முழுமைக் கல்வியே தற்கால உலகம் எதிர்பார்த்து நிற்கிறது. அது வாழ்வில் இன்பம், மகிழ்ச்சி, சாந்தம், அமைதி என்பவற்றை உருவாக்கும் கல்வியாக விளங்கும்.

கல்வியிலே பழமையும், புதுமையும் ஒன்றிக்க வேண்டும். ஆன்மீகமும், உலகியல் அறிவும் ஒன்றிக்க வேண்டும். கல்வி மனித வரலாற்றில் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து விழுமியக் கல்வியாகவே கற்பிக்கப்பட்டும் வந்தது. கல்விக்குப்பயன் அறிவு அறிவுக்குப் பயன் ஒழுக்கம் என்ற நிலைப்பாட்டினைப் போற்றிப் பாதுகாத்து வந்தது வருவது விழுமியக்கல்வி.

கல்வியாளர் பலரும், கடன்வாங்கிய கல்விக் கொள்கைகளிலே அமிழ்ந்து கிடக்கும் புத்தி ஜீவிகளும், மரபுசார் சிந்தனைகளையும், சமயம் சார் கொள்கைகளையும் நிராகரிப்போம், உண்மை மறுப்போரும், சுயநலப்பிசாசு பிடித்தலைவோரும், கீழ்மைப் பண்புகளால் வளர்க்கப்பட்டவர்களும் 'பழமை' என்பது பிற்போக்கு என்று பிதற்றிக் கூறுகின்றனர். உண்மையில் அது பின்னோக்கு ஆகும். பின்னோக்கு அன்று நாம் கடந்த காலத்தைப் பின்னோக்கி ஆராய்ந்து பார்க்க வேண்டும். தற்காலத்துக்கு வேண்டியனவாக இருப்பின் அக்கருத்துக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வாதன தாமாகவே கழிந்துவிடும். பழையன எல்லாமே கூடாதன அல்ல. எனவே நம்முன்னோர் நமக்களித்த கல்விச் செல்வங்களையும், பண்பாட்டுச் செல்வங்களையும் 'பழமை' என்ற ஒரே காரணத்திற்காகப் பிற்போக்கு என்று அவற்றைத் தள்ளிவிடுதல் அறிவுடைமையாகாது. எனவே கல்வியின் மூலம் பண்டைய

காலத்துக்குரிய பழைமைக் கருத்துக்களை உற்றுநோக்கி ஆராய்ந்து பார்த்து சீர்செய்து பக்குவப்படுத்தி நிகழ்காலத்திற்குரியதாக்கிட வேண்டும். பண்டு தொட்டு மனிதத் தன்மைகளோடுகூடிய மனிதராகச் சீர்செய்து பண்பட்டோராக வளர்த்துவந்த ஆன்மீகம் சார்ந்த விழுமியக் கல்வியின் தேவை நிகழ்காலத்தில் பெரிதும் உணரப்படுகிறது, வேண்டவும் படுகிறது.

நிகழ்காலத்தில் கல்வி பெரிதும் முன்னேற்றம் கண்டுள்ளது என்பதை மறுக்கமுடியாது. அக்கல்வி விஞ்ஞான ஆராய்ச்சி அறிவைப் பெருக்கி பல அற்புதக் கண்டுபிடிப்புக்களைச் செய்யவும் உதவிவருகிறது. அறிவியல் அறிவு தொழிநுட்பத்திறன் என்பவற்றில் மனித இனம் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளது. பல அரிய சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. மனிதனுடைய விஞ்ஞான தொழிநுட்ப கணணி அறிவு பன்மடங்கு மேலோங்கியுள்ளது. அதேவேளை மனிதவாழ்வியல் துன்பங்கள், பிரச்சனைகள், பகை, பிணக்கு, போர், வன்முறை, சாதி அடக்குமுறை, மிலேச்சத்தனம், வன்முறை, குளப்பங்கள் தினம் தினம் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. இன்பம், மகிழ்ச்சி, அமைதி, ஆனந்தம், நிம்மதி என்பன மனித இனத்திடமிருந்து விடைபெற்று வெகுதூரம் சென்ற வண்ணம் இருக்கின்றன. எங்கும் எதிலும் மனிதரின் சுயதலவேட்கை பேராசை, பொறாமை, ஆரோக்கியமற்ற போட்டிமனப்பான்மை, சுரண்டல் பாங்கு, முறையற்ற வழியில் பொருள் தேட்டம், வஞ்சகம், பகைமை, வெறுப்புணர்ச்சி, மேலாண்மை செலுத்துகின்றன. மனிதர்கள் பெரும்பாலான கல்விமான்கள் இத்தீயசக்திகளின் வயப்பட்டு பேய்பிடித்தவர்களின் நிலையில் உள்ளனர்.

ஓரறிவு முதல் ஐந்தறிவுவரை கொண்ட உயிரினங்களிடம் காணப்படும் அறிவு இயல்பூக்க அறிவு எனப்படுகிறது. ஆனால் மனிதஇனம் ஆறறிவுடையது. அந்த ஆறாவது அறிவு பகுத்தறிவு எனப்படுகிறது. பகுத்தறிவு ஆராய்ந்தறியும் திறன் உடையது. சரி எது பிழை எது என்று பிரித்துக்காட்டக் கூடியது. மனிதன் தன்னை உணர்ந்துகொள்ள அறிவு உதவுகிறது. மனிதனின் இந்த அறிவு அவன் வாழ்கின்ற இயற்கையைப்பற்றியும் பௌதீகச் சூழல்பற்றியும், இயற்கை செயல்படும் நுட்பங்கள் பற்றியும் ஆராய்ந்தபோது அது விஞ்ஞான அறிவு ஆகியது. விஞ்ஞானமற்றும் தொழிநுட்ப அறிவு மனித சமூகம் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக்கொள்ளப் பேருதவியாக இருந்து வருகிறது. அதேவேளை மனிதரின் மகிழ்ச்சி அமைதி என்பவற்றைக் குலைக்கவும், மனிதருக்கு உதவுகிறது. விஞ்ஞானமற்றும் தொநுனுட்ப அறிவுப்பெருக்கம், அபரிமித வளர்ச்சி ஆக்கத்திற்கும், அழிவுக்கும் பயன்படுத்தப்படுகிறது. தவறு மனிதனுடையது, விஞ்ஞானத்தினுடையது அல்ல. விஞ்ஞான தொழிநுட்ப அறிவினைக் கையாள்பவன் மனிதன். தனது ஆராய்ச்சித்திறன்மிக்க பகுத்தறிவைப் பயன்படுத்தி மனிதன் நல்லது, கெட்டது பிரித்துணர்ந்து விஞ்ஞான அறிவினை ஆக்கத்திற்கு மட்டும் பயன்படுத்தி வந்தால் தரமானதும் வசதிகள் நிறைந்ததுமான வாழ்க்கையினையும் அமைதி, மகிழ்ச்சி, சாந்தி நிறைந்த மனிதர்களையும், உலகினையும் விரைவில் காணமுடியும்.

மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் மனிதனில் இணைகின்றன. அஞ்ஞானம் மனிதனைவிட்டு விலகிவிடுகின்றது. மனிதனிடத்தில் அதுவரை மறைந்திருந்த விலங்கினத்தன்மை நீங்கப்பெற்று மனிதத்தன்மை மலர்ச்சிபெறுகின்றது.

மனத் தூய்மை, சொற்றூய்மை, செயல் தூய்மைபெற்று மனிதஇனம் மனிதத்தன்மைகளோடு நடந்துகொள்ளும் நிலையில் பரிணாம வளர்ச்சி முழுமை எய்துகிறது. மனிதன் விஞ்ஞான அறிவினை வளர்த்துக்கொண்ட அளவிற்குத் தனது பகுத்தறிவினையும், அதனூடாக மனிதப் பண்பையும் வளர்த்திருப்பானாயிருந்தால் இன்று உலகில் இத்தனை குழப்பங்களும், அட்டூழியங்களும், அழிவுகளும், அனர்த்தங்களும் ஏற்பட்டிருக்கமாட்டா. மனிதன் முழுமையான தூய அறிவினை அடையக்கூடிய தகுதிப்பாட்டினைப் பெற்றிருக்கிறான். ஆனால் அதற்கேற்ப மனித இனம் இற்றைவரை மனிதத்தன்மைகளோடுகூடிய மனிதர்களாக வாழும் நிலையை எய்தவில்லை. மனிதர்கள் உருவக அமைப்பில், அங்க அடையாளங்களில் மட்டும் விலங்கிலிருந்து வேறுபட்டிருக்கின்றார்களே தவிர, மனிதவடிவம், குணத்திலோ, பண்பிலோ, அறிவின் தரத்திலோ மனிதனாக உயரவில்லை. விளைவுகளிலிருந்து செயலின் தன்மை நல்லதோ, கெட்டதோ என்பதை அறிந்துகொள்ளலாம். அவ்வாறே தற்கால உலக சமுதாயங்களிடம் பெறுகின்ற எதிர்மறை விளைவுகள் இதனைச் சுட்டிக்காட்டுகின்றன.

தற்காலத்தில் விஞ்ஞான, தொழிநுட்பவிருத்தி அதிகளவில் வளர்ச்சியும் முன்னேற்றமும் கண்டிருக்கும் நிலையில் அந்தளவிற்கு ஈடுகொடுக்கும் வகையில் மனிதப்பண்பு விருத்தி மனிதரில் ஏற்படவில்லை என்பதே எல்லோரினதும் ஆதங்கமாக உள்ளது. அண்மைக்காலத்து கல்வி முன்னேற்றம் மனிதரை மனிதப்பண்புகள் கொண்ட மனிதராகப் பண்படுத்துவதில் படுதோல்வி கண்டுள்ளது. விஞ்ஞான அறிவிலும், தொழிநுட்பத்திறனையும், கணினியைத்திறம்பட நுட்பமாக இயக்கும் வல்லமையையும் மாணாக்கரில் அதி உச்சஅளவிற்கு எப்படி விருத்திசெய்யலாம் என்று அக்கறையும், சிரத்தையும் கொள்ளும் நமது தற்காலக்கல்விமுறை நல்ல உள்ளங்களை, நல்லமனிதப்பண்புகளை, நல்லொழுக்க நன்னடத்தைகளை, நற்செயல்களை உருவாக்குகின்ற மனிதவிழுமியக் கல்வியையும் மாணவர்களுக்கு வழங்கவேண்டும் என்பதில் அத்துணை அக்கறையோ, சிறிதளவில் தன்னிலும் சிரத்தையோ எடுத்ததாகத் தெரியவில்லை. இந்நிலையைத்தொடரவிடக் கூடாது என்பது ஒரு சில உயரிய கல்விச்சிந்தனையாளர்களது கருத்து நமது கல்விமுறையில் சமநிலைத் தன்மை இன்மையாலேயே இத்துணை சீர்கேடுகளும் அமைதியின்மையும், அவலங்களும், நடத்தைப் பிறழ்வுகளும், கொடுமைகளும், குணநலமின்மையும், வன்முறைக் கலாசாரமும் உலகில் பல்கிப்பெருகியுள்ளன.

விழுமியக்கல்விச்சிந்தனைகள் பலவுள. தற்காலக் கல்விமுறையில் நன்மையும் தீமையும் உள்ளன. தீமைகள் துன்பங்களைத் தரக்கூடியவை அதனால் அவை அகற்றப்படவேண்டும். நன்மைகள் வாழ்க்கைக்குத் தேவையானவை. அதனால் அவை பேணிக்காக்கப்பட வேண்டும். தற்காலக் கல்விமுறை மனிதரை இயந்திரமாக்கியுள்ளது. அதனால் மனிதன் தான் மனிதன் என்பதை மனதில் கொள்ள மறக்கிறான். மனித ஒழுக்கம் நன்னடத்தை தான் மனிதன் என்ற உணர்வு குறையும் போது "நான்" என்ற அகந்தை மற்றும் சுயநலப்பற்று "எனது" என்ற மமதை மற்றும் பொருள்பற்றும் மனிதனில் தோன்றுகின்றன. இப்பற்றுக்கள் மனிதரில் பேராசை, கோபம், தற்பற்று, முறையற்ற பாற்கவர்ச்சி, உயர்வுதாழ்வு மனப்பான்மை, வஞ்சகம் ஆகிய தீய குணங்கள்போன்றன தோன்ற வழிவகுக்கின்றன. இக்குணங்கள் தனக்கும் பிறருக்கும் தீங்குவிளைவிக்கின்றன. மாற்ற வேண்டும். அதற்கு குணங்கள் சீரமைக்கப்பட வேண்டும்.

விழுமியக்கல்வியினால் உண்டாகப்போகும் பயன் - பலன் என்ன என்று சிலர் வினவலாம். தற்கால வாழ்க்கை முறையில் மனிதரில் இடம்பெற்றுள்ள தீய

குணங்களை அழுக்குகளை உயர் குணங்களை விழுமியக் குணங்களாக முறைப்படுத்தப்பட வேண்டும், கல்வியே உறுதுணையாக வரவேண்டும். விழுமியக்கல்வியை தற்காலக் கல்வி முறையுடன் இணைத்துக் கொண்டால் அதன் மூலம் போதிய வலுவைப் பெற்று, தன்னிலை உணரப்பட்டு, தீய குணங்கள் நலம் விளைவிக்கும் உயர் குணங்களாக மாற்றம் பெற வழி ஏற்படும். விழுமியக்கல்வி நிகழ்ந்தால் ஆசை நிறை மனமாகவும், கோபம் சகிப்புத் தன்மையாகவும், தற்பற்று ஈகையாகவும், முறையற்ற பாலகவர்ச்சி கற்பு ஆகவும், உயர்வு தாழ்வு மனப்பான்மை சமத்துவ நிலையாகவும், வஞ்சம் மன்னிப்பாகவும் மாற்றமடையும்.

தீய குணங்களையும், சிந்தனைகளையும் மனதில் சுமந்துகொண்டிருக்கும் வரை மன அமைதி கெடும். தொடர்ந்து குடும்பத்தில் அமைதி, சமூகத்தில் அமைதி எல்லாமே கெட்டுவிடும். தீய குணங்களை முற்றிலுமாக ஒழித்துவிடுவது என்பது மனிதர்க்கு முடியாத காரியம். அதனால் மனிதன் பரிணாம வளர்ச்சியின் பயனாகப் பெற்றுக் கொண்ட பகுத்தறிவைப் பயன்படுத்தி, விளைவுகளை ஆராய்ந்து பார்த்து தீய குணங்கள் தேவையற்றவை, தீய விளைவுகளை ஏற்படுத்துபவை என்பதைத் தெரிந்து குணங்களைச் சீர் செய்து, முறைப்படுத்தி தமது வாழ்க்கையை நெறிப்படுத்தி வாழ்தல் உத்தமவாழ்வு ஆகும். ஒவ்வொரு தனிமனித உள்ளத்திலும் ஏற்படும் இந்த நன்மாற்றம் அமைதியையும், இனிமையையும் வழங்கி குடும்ப, சமூக, உலக அமைதிக்கும் வழிவகுக்கும். எல்லா நிலைகளிலும் இனிமை, மகிழ்ச்சி, அமைதி, ஆனந்தம் என்பவற்றை மனிதர்கள் அடைவதற்கு உறுதுணையாகத் தூய நற்கல்வி அமையவேண்டும். விழுமியக்கல்வியே தூய நற்கல்வியாகும்.

'விழுமியங்கள்' எவை என்ற வினா எழுதல் தவிர்க்கமுடியாதது. விழுமியங்கள் பெறுமதிமிக்கவை, அனைவராலும் மதிக்கப்படுபவை, பொருள் விரையம், பண விரையம் என்பனவும் தவிர்க்கப்பட வேண்டும். பொருட்களின் மதிப்பு, பெறுமானம் உணராதவர்கள் வாழமறுப்பவர்கள் வாழத் தகுதியற்றவர்களாவர். வீடுகளில் உணவுகள் விரயமாக்கப்படுதலைக் காண்கிறோம். பலரின் பசியைப் போக்கக்கூடிய உணவுகள் தினமும் வீசி எறியப்படுகின்றன. அவ்வாறு செய்ய எமக்கு உரிமை இல்லை. அவ்வாறு உணவை வீணாக்குவது பாவகாரியம் மட்டுமல்ல, மனித குலத்திற்குச் செய்யும் துரோகமாகும். நீரைத் தினமும் விரயஞ்செய்யலாம். அது தவறு என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். காடுகளை அழிக்கின்றனர். பல்வேறு இயற்கை வளங்கள் சூறையாடப் படுகின்றன. எத்தனையோ தலைமுறைகளுக்குப் போதுமான வளங்கள் இவ்வுலகில் உண்டு. அவற்றை இந்தத் தலைமுறையிலேயே அளவுக்குப் பன்மடங்கு அதிகமாக எடுத்துக் கொண்டால் அதுவும் வீண்விரயம்தான். இயற்கை வளங்கள் பொதுவானவை, மனிதகுலம் முழுவதுக்கும் உரித்தானவை, எதிர்காலத் தலைமுறையினரின் பயன்பாட்டுக்காகப் பாதுகாத்துச் சேமித்துவைக்கப்பட வேண்டியவை. எனும் பண்பாடு எம்மிடையே வளரவேண்டும். அது விழுமியம் சார் பண்பாடு ஆகும்.

செல்வம் மிகினும், குறையினும் துன்பத்திற்கு ஏதுவாகும். பொருளைப் போற்றி அளவறிந்து பேராசை கொள்ளாது அறவழியில் ஈட்டி, பிறருக்கும் உதவி வீண்விரையம் செய்யாது தாமும் செம்மையாக வாழ்தல் சிறந்த மனித விழுமிய வாழ்வாகும். பொருளைப் பொறுத்தளவில் ஏற்பது இகழ்ச்சி, ஐயமிட்டுண், ஒப்புரவொழுகு என்னும் ஔவையின் அறிவுரைக்கிணங்க ஒழுகினால் ஒரு பொல்லாப்பும் இல்லை. விழுமியம் சார் பண்பாட்டிலே மனிதன் அறிவையும், திறனையும் பெற்றிருந்தால்

மட்டும் போதாது, சிறந்த மனப்பாங்குகளையும் மனிதப் பண்புகளையும், மனித விழுமியங்களையும் உடையவராகவும் விளங்கும் போதே நிறைமனிதன் ஆகின்றான்.

எமது கடமைகளைச் சரிவரச் செய்வதன் மூலமும், பிறரின் வாழ்க்கையில் எத்துணை மகிழ்ச்சியையும், நிறைவையும் எம்மால் ஏற்படுத்த முடியுமோ அந்த அளவிற்கு நாம் பெற்ற கல்வி பெறுமானம் மிக்கதாக இருக்கும். நாமும் பிறரால் மதிக்கப் பெறுபவர்களாக விளங்குவோம். பதவியிலோ, அதிகாரத்திலோ இருந்து இறங்கிய பின்னரும் நாம் மதிக்கப்பெறுவோம். பிறரைக்கண்டு ஒதுங்கியோ, அஞ்சியோ வாழவேண்டிய நிலமையும் ஏற்படாது. ஒருவரை அவர் கொண்டுள்ள பதவிக்காகவோ, அதிகாரத்திற்காகவோ மதிப்பவர்கள் அவை நீங்கியநிலையில் அவரை மதிப்பதில்லை. ஆனால் பதவியையோ, அதிகாரத்தையோ துஷ்பிரயோகம் செய்யாது தம் கடமைகளையும் ஆட்சிப் பொறுப்புக்களையும் நிறைவேற்றி வருபவர்கள் என்றென்றும் பெரு மதிப்பிற்குரியவர்களாகவே இருப்பர். அவர்களே கற்றறிந்தவர்கள்.

இன்றைய உலகு வேண்டி நிற்பது விழுமியக்கல்வியேயாகும். இன்று பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் யாவும் இளைய சந்ததிக்கு கல்வியை வழங்குகின்றன. கல்வி ஸ்தாபனங்களின் தொகையும், கல்விக்காகச் செலவிடும் பணத்தின் தொகையும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. கல்வியை வழங்குவதிலும், பெறுவதிலும் நாட்டம் கூடிவருகிறது. கல்வியில் யாவருமே அக்கறை கொண்டுள்ளனர். கல்வியைத் திட்டமிடுவதிலும், அத் திட்டமிடல்களைச் செயற்படுத்துவதிலும், மீண்டும் மீண்டும் மாற்றியமைப்பதிலும், புதிய மாற்றங்களைப் புகுத்துவதிலும், மீள் பரிசீலனை செய்வதிலும் பல்வேறு நிபுணத்துவ நிலையங்கள் ஈடுபட்டு வருகின்றன. ஆக்குவதும், அழிப்பதும், மாற்றுவதும் எனக் கல்வி எத்தனங்கள் நிகழ்ந்தபடியே உள்ளன. கல்வியைப்பற்றிப் பேசப்படும் அளவிற்கு வேறு எந்தத் துறைசார்ந்த விடயம் பற்றியும் பேசப்படுவதில்லை. காரணம் சிறியோர் முதல் வளஉந்தோர் வரை ஏதோ ஒரு விதத்தில் கல்வி எல்லோரையும் பாதிக்கின்றது. கல்வியைப் பற்றிக் கருத்துச் சொல்லக்கூடியதாக யாவரும் இருத்தல் மற்றொரு காரணம்.

கல்வி குறிப்பாக இந்த நூற்றாண்டில் வழங்கப்பட்டு வருகின்ற கல்வி பொருளாதார, விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திக்குத் துணைசெய்து வந்திருந்த போதிலும் மனிதப் பண்பாட்டு வளர்ச்சிக்கு, மனிதவிழுமியங்களைப் பேணுவதற்குரிய அறிவு ஆற்றல் வளர்ச்சிக்கும் இன்னும் சொல்லப்போனால் "மனித ஆக்கத்திற்கு" உதவவில்லை என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய மதிப்பீடாக உள்ளது.மேலான கல்விகற்றோரின் ஆணவத்தையையும், அகந்தையையும் போக்கும் அறியாமையை அகற்றும், பணிவுடையன், இன்சொல்லன் ஆகக் கற்றோர் விளங்குவர். அத்தகைய கல்விகற்றோர் நற்குண நற்செய்கைகளுடைய மேலோராகத் திகழ்வர். மனிதனை மனிதத் தன்மைகளுடைய மனிதனாக உயர்த்த உதவுகின்ற கல்வியே கற்கவேண்டும். "கற்றோர்க்கு அழகு கருணையே" என்கின்றது நீதிவெண்பா. கல்வியின் மூலம் "மனித ஆக்கம்" ஏற்படவேண்டும் என்று கூறியுள்ளார் சுவாமி விவேகானந்தர். கல்வி ஒருவனை அருள் நிறைந்தவன் ஆக்கவேண்டும் என்கிறார் திருமூலர். 'விழுமியக்கல்வி' எவற்றைக் கற்பிக்கிறது என்பது வினா. பணிசெய், உயிர்களை நேசி, பகிர்ந்து உண், பிறர்மீது கரிசனை கொள், மனத்தை ஒருவழிப்படுத்து, நடுவு நிலமையில் நில், இன்னாசொல்லாதே, இன்சொல் பேசு, நல்லனவற்றை நாடு,

நல்லனவற்றையே புரி, நல்லவருடன் சேர், இரக்கம் கொள், கருணை காட்டு, அறங்கள் செய், கோபத்தைத் தணி, பொறுமையைப் பேணு என்பவற்றைக் கற்பிக்கிறது. மனிதவிழுமியக்கல்வி இவற்றைத்தான் கற்பிக்கிறது. எல்லா மனிதருக்கும் மிகப்பொருத்தமான கல்வியின் சாரமாக இது மிளிர்கிறது. கற்கவேண்டிய கல்வியைக் கற்றவர்களால் தான் இவ்வாறு ஒழுகமுடியும். இக்காலத்தவர்களின் ஒழுக்கம் அவ்வாறு அமையாமைக்குக் காரணம் ஒழுக்கம் சார்ந்த சமய விழுமியக் கல்வியைக் கற்கும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடையாமையே ஆகும். மேலே கூறிய விழுமியங்கள் எவற்றையேனும் தற்காலக் கல்வி மாணவர்களுக்குப் புகட்டுகின்றதா? இல்லை, ஒழுக்கத்தைக் கற்பிக்காத கல்வி கல்வியாகமாட்டாது. கல்வி கற்றும் கற்றோர் சமூகத்தில் அமைதி இல்லையென்றால் மனிதத்துவம் வலுவிழந்திருந்தால், நீதி, நேர்மை, நியாயம் என்பன ஓரங்கட்டப்பட்டிருந்தால் அந்தக் கல்வியால் ஒருபயனுமில்லை. அக் கல்வியைக் கற்றகாலம், கற்பதற்குச் செலவுசெய்த பணம், மனித சக்தி ஆகியகடும் பிரயாசையுடனான உழைப்பு யாவுமே விரயம்தான்.

மனிதன் வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொண்டே இருக்கவேண்டும். "கற்க மறுப்பவன் வாழ மறுப்பவனாகிறான்". கல்வியை இளமை தொட்டு மரணபரியந்தம் விடாது கற்கவேண்டும்" என்பது முதுமொழி. கல்வியெனும்போது வள்ளுவர் அடிச்சுவட்டில் நின்று கற்க வேண்டியவற்றைக்கற்றல் என்பதே கல்வி என்ற நிலைப்பாட்டினைக் கொண்டவர்கள் அச்சான்றோர்கள். கல்விமூலம் சான்றோர்களைக் கொண்ட சமுதாயம் ஒன்றினை உருவாக்குவதே அவர்களின் கல்வி நோக்கமாகும். சூழ்ச்சி, சூது, அண்டிக்கெடுத்தல், ஏமாற்றுதல், திமிர் என்பன மனிதர்களுக்குப் பகையானவை, மனித இனத்திற்கு உரிமையானவையல்ல. ஆனால் தற்காலத்தில் இவற்றிற்குத்தான் உரிமை கொண்டாடப்பட்டு வருகின்றது. இவையாலும் சுயநலத்தினின்றும் எழும் ஆசைகள் மனித குலத்தை அழிக்கவந்தவை. இவை என்பதை மனித அறிவு ஏனோ மனிதர்களுக்குசுட்டிக்காட்ட மறுத்துவருகின்றது என்பதுதான் விடுவிக்க முடியாத புதிராக இன்று உள்ளது. எமக்கு உதவக் கல்விதான் - விழுமியக் கல்விதான் முன்வர வேண்டும்.

மாணவர்கள் சமூக சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். வெறும் புத்தகப் படிப்பு விஞ்ஞான அறிவு உலகாயத்தை வளர்க்கின்றன. உள்ளங்களை பண்படுத்தாமல் விட்டுவிடுகின்றன. அன்பு, கருணை, இரக்கம் என்னும் மனித உணர்வுகள் மழுங்கிய நிலையில் மனித உயிர்ப்பு இருக்காது. மனிதர்கள் இயந்திரங்கள் அல்ல. வெறும் ஜடங்களும் அல்ல என்பதை கல்வி உணர்த்தத் தவறியமையினால் மனித நெஞ்சங்களில் ஈரம் காய்ந்து வருகின்றது. பக்தி நல மேம்பாடு உள்ளவர்களை தெய்வச் சேக்கிழார் பெரிய புராணத்தில் "ஈர நெஞ்சம்" என்பர். இன்றைய மாபெரும் கல்வியியலாளர்கள் இறைமறுப்புக் கொள்ளையுடைய பகுத்தறிவாத வாதிகள் என்பதால் மனித செழுமை நலம் (ஈரம்) காய்ந்தவர்களாகவே உள்ளனர். கல்வி உள்ளத்திற்கு வேண்டும். மனித விழுமியங்களை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள உதவுவதாகக் கல்வி அமைதல் அவசியம். அத்தகைய விழுமியக் கல்லியை, ஒழுக்கக் கல்வியை , பண்பாட்டுக் கல்வியை, மானுடம் சார்ந்த கல்வியை தூய நற் கல்வியை இன்றைய உலகு வேண்டி நிற்கின்றது என்பதை உணர்ந்து கொள்வது அவசியம்.

"மாணவர்கள் ஜீவனோபாயத்தை தேடிக்கொள்ளக் கூடிய வாய்ப்பினை அளிக்கும் அதே வேளை தங்களுக்குள்ளே மறைந்திருக்கும் தெய்வீகத்தையும் வெளிக்கொணரக் கூடிய இயல்புகளும் உள்ளதாய் அமைந்திருப்பதே முறையான கல்வியாகும்" என்று கூறுகிறார் பகவான் சத்தியசாயிபாபா.

உலகினைஅழிவின் விளிம்பிற்கு கொண்டு செல்லும் துர் சிந்தனைக் கல்வியை தடுத்து நிறுத்துவதற்கு கல்வி முறையில் விழுமியக் கல்வியை இடம்பெறச் செய்ய வேண்டுமென்பது அறிஞர்கள், கல்வியலாளர்கள், ஆண்மீக நெறியியலாளர்கள் ஆகியோரின் கருத்தாக உள்ளது.

விழுமியங்கள், விழுமியக் கல்விகள் வரைவிலக்கணங்களைச் சற்று விபரிப்பது இவ்விடத்திலே மிகவும் பொருத்தமானதாகும். விழுமியங்கள் (Values) என்பதற்கு மதிப்பு, பெறுமதி பெறுமானம், எனப் பொருள் கொள்ளப்படுகிறது. பணம், பண்டம், பொருள், நிலம் என்பன உலகியல் ரீதியில் மதிப்பு, பெறுமானம் வாய்ந்தவை. இவற்றை "செல்வங்கள்"என்றும் அழைக்கின்றனர். இவை ஒவ்வொன்றினதும் மதிப்பு, பெறுமானம், பெறுமதி பல்வேறு காரணிகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. இடத்திற்கிடம், காலத்திற்குக் காலம் அவை மாற்றமடைகின்றன.

Values என்னும் ஆங்கிலப் பதம் "விழுமியங்கள்" என்ற தமிழ்ச் சொல்லினாலும் உணர்த்தப்படுகின்றது. விழுமியங்கள் விழுப்பம் (மேன்மை) தரலாம். அவை உயர்வானவை, மேன்மையானவை, அதி உன்னதமானவை, எமது உயிரிலும் மேலான பெறுமதி உடையவை. விழுமியங்களின் மதிப்பு நம் உயிரை விட, உறவை விட இவ்வுலகில் எவ் எவ் பொருள்களையும் பெறுமதியும், பெறுமானமும் மிகுந்தன என்று கொண்டாடி மகிழ்கின்றாயோ அவற்றின் மதிப்பை விட பன்மடங்கு உயர்ந்து காணப்படுகின்றது. எனவே எந்த நிலையிலும் விழுமியங்களை இழந்து விடல் ஆகாது. விழுமியங்கள் தான் மனித அடையாளங்கள். மிருகத்திலிருந்தும் ஏனைய உயிர்களில் இருந்தும் மனிதனை வேறுபடுத்திக் காட்டும் குறி காட்டிகள். "மனித நாகரிகமானது வெறுமனே சொற்களாலும், சாந்தினாலும், இரும்பினாலும், இயந்திரங்களினாலும், கட்டியெழுப்பப்படுவதன்று. மனிதர்களினாலும் அவர்களின் நற்குணப் பண்புகளினாலும், நல்லொழுக்கத்தினாலும் உருவாக்கப்படுவதே நயத்தக்க நாகரிகம் ஆகும்" என்பர். இந்திய தத்துவஞானி சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் இங்கு நற்பண்புகள், நல்லொழுக்கங்கள் என்று குறிப்பிடப்படுபவை மனித விழுமியங்கள் ஆகும்.

## விழுமியங்களை இணங்காணல்

Dackaawish *(1959)* என்பவர் 12 அடிப்படை விழுமியங்களை இணங்கண்டு எழுதியுள்ளார். கல்வி ஆலோசனை நிபுனர் கலாநிதி குமாரசுவாமி சோமசுந்தரம் அவர்கள் (2010:207) அவையாவன

| | | |
|---|---|---|
| 1. மனித நேயம் | 2. மகிழ்ச்சி | 3. பெரியோரைக் கனம் பண்ணல் |
| 4. நல்மனப்பான்மை | 5. நேர்மை | 9. மனித நல்லுறவுத் திறன்கள். |
| 10. பணிவுடைமை | 11. சமயத்திறன் | 12. உணர்ச்சிக் கட்டுப்பாடு |
| 3. சாந்தம் | 14. உண்மை | 15. நடுநிலமை என்பனவாம். |

**Ramji (1986) என்பவர் கீழ்வரும் பத்து விழுமியங்களை** மாணவர்களிடத்தில் விருத்தி செய்யப்பட வேண்டியவை என சுட்டிக் காட்டுகின்றார்.

**1. தைரியம் 2. உண்மை 3. அன்பு 4. தொழில் மகத்துவம்**
**5. சேவை 6. சுத்தம் 7. மரியாதை 8. மனத்தூய்மை**
**9. சமாதானம் 10. இன்பம் என்பனவாம்.**

பகவான் சத்தியசாயி பாவா இனங்கண்டுள்ள அடிப்படை மனித விழுமியங்கள் பின்வருமாறு

**1. சத்தியம் 2. தருமம் (நன்னடத்தை) 3. சாந்தி (சமாதானம்)**
**4. பிரேமை 5. அஹிம்சை என்பனவாம்.**

இவ்வாறு மேலும் பலர் மனித விழுமியங்களை இணங்கண்டுள்ளமையுடன் சமூக, ஒழுக்க, ஆன்மீக, சமய, கலாசார, பொருளாதார, மனித விழுமியங்கள் என வகைப்படுத்தியும் காட்டியுள்ளனர். மேலும் விழுமியங்கள் மனவெழுச்சி ஆட்சியுடன் தொடர்புபட்டவை என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒருவரின் மனவெழுச்சி ஆட்சியே அவரின் நடத்தையைக் கட்டுப்படுத்தவும் இயக்கவும் பொறுப்பாகவுள்ளது. எனவே மாணவரின் முழுமையான அபிவிருத்திக்கு மன எழுச்சி ஆட்சி, அறிதல் ஆட்சி , உள இயக்க ஆட்சி என்பன ஒருங்கினைக்கப்பட்டு அவை சமமாக விருத்தி செய்யப்பட வேண்டும் என்பதை ஆசிரியர் உணர்ந்திருத்தல் அவசியம்.

மாணவரில் விருத்தி செய்வதற்கு மனித விழுமியங்களை இணங்கானும் ஆசிரியர்கள் இலங்கை ஒரு பல்லின சமய பல்கலாசார சமூகங்களை உள்ளடக்கிய நாடு என்பதை கவனத்தில் கொள்ளுதல் அவசியமாகும். இன, மத, பிரதேச சார்பற்ற அதேவேளை முரண்பாடுகள் இல்லாத எல்லாச் சமூகங்களும் ஏற்றுக் கொள்கின்ற உடன்பாடான நவீன முற்போக்கு சமூக சிந்தனைகளுக்கு பொருந்தக் கூடிய மனித விழுமியங்களை இணங்காணுதல் இன்றியமையாதது.

## விழுமியம் சார் கல்வியின் பண்புகள்

சமாதானம், சகவாழ்வு, நல்ல மனித உறவுகள், நட்பு, இனங்களுக்கிடையில் ஒற்றுமை, புரிந்துணர்வு, மனிதநேயம், பலஉயிர் ஓம்புதல், பகிர்ந்து அனுபவித்தல், வளங்களைப் பாதுகாத்தல் என்பன விழுமியக் கல்வி ஊடாகவே எய்தப்பட முடியும். சமாதானத்திற்கான கல்வி என்பது மனித விழுமியங்களை விருத்திசெய்வதற்கான கல்வி ஆகும். உடல், உள, விவேகஉணர்வு, ஒழுக்கம், ஆன்மீகம், பண்பாட்டு கலாசாரம், சமூக பொருளாதார விருத்தி, சமநிலையில் ஒருங்கிணைந்த முறையில் மாணவரில் கல்வி ஏற்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. விழுமியம் சார் கல்விப் பண்புகளையும் கல்வி இணைத்துக் கொள்ளும் போதுதான் எதிர்பார்ப்பு நிறைவேறும். கல்வியின் ஊடாக விழுமியங்களைத் தெரிதல் (அறம் தெரிதல்) விழுமியங்கள் அல்லாதவற்றை தெரிதல் (மறம் தெரிதல்) என்பன நிகழ்தல் வேண்டும். அப்போதுதான் விழுமியங்களை ஏற்று வாழ்வில் ஏற்றுக் கொள்ளவும் அல்லாதவற்றை விலக்கிக் கொள்ளவும் முடியும். கல்விச் செயன்முறையில் கற்றல், கேட்டல், உணர்தல், தெரிதல், நிற்றல் என்பன முடிவின்றி நடைபெறும் போதே பூரண நிறைவான கல்வியாக அது கொள்ளப்படும்.

**விழுமியம்சார் கல்வியை வழங்குதல்**

விழுமியக் கல்வியை ஒரு பாடமாகக் கற்பித்தல் பாடசாலைக் கல்வி முறையில் அத்தனை சாத்தியமில்லை. ஏற்கனவே கலைத்திட்டத்தில் ஏராளமான பாடங்கள் இடம்பெற்றுள்ளன. இப்பாடத்தையும் சேர்த்து கலைத்திட்டத்தை ஒரு சுமையாக்க கல்வியாளர்கள் விரும்பவில்லை. எனவே மனித விழுமியங்களை ஏனைய பாடங்களுடன் இணைத்து கற்பித்தலையே கல்வியாளர்கள் விதந்துரைக்கின்றார்கள். ஏற்கனவே நடைமுறையில் உள்ள பாடத்திட்டங்களில் மாற்றங்களைச் செய்யாமல் அவற்றில் புதைந்து காணப்படும் மனித விழுமியங்களை இணங்கண்டு கற்பித்தலே இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது. ஆசிரியர் நன்கு திட்டமிட்டு போதிய முன்னாயத்தங்கள் செய்தே இதனை நிறைவேற்ற முடியும். மொழி, இலக்கியம், சமயம், கணிதம், விஞ்ஞானம், சமூகக் கல்வி, அழகியற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி, வாழ்க்கைத்திறன்கள் போன்ற பாடங்களில் விழுமியங்கள் உள்ளன. அப்பாடங்களைக் கற்பிக்கும் போது ஆசிரியர்கள் விழுமியங்களை வெளிக்கொணர்ந்து அவற்றிற்கு அழுத்தம் கொடுத்து மாணவர்களை உணரச் செய்தல் மிக அவசியமாகும்.

பாடசாலையில் நடைபெறுகின்ற இணைப்பாட விதானச் செயற்பாடுகள் மற்றும் புறப்பாடவிதானச் செயற்பாடுகள் என்பவற்றின் ஊடாகவும் மனித விழுமியங்களை ஒன்றிணைத்து மாணவர்களுக்கு கற்பிக்க முடியும். விளையாட்டுச் செயற்பாடுகள் கலை நிகழ்ச்சிகள், கல்விச் சுற்றுலா, மன்றங்கள், இலக்கியக் கழகங்கள், கலைக்கூடம், சாரணர் இயக்கம், சிரமதானம், சமூக சேவை, சமய விழாக்கள் என்பன மனித விழுமியங்களை மாணவர்கள் விருத்தி செய்து கொள்வதற்கு வாய்ப்பான சந்தர்ப்பங்களை அமைத்துக் கொடுக்கின்றன.

பாடசாலையில் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்களும் மாணவர்கள் நேரடி அனுபவங்களைப் பெற தேவையான சூழல்களை அமைத்துக் கொடுப்பவர்களும் ஆசிரியர்களே. விழுமியக் கல்வியை பாடசாலையில் நடைமுறைப்படுத்துவதில் வெற்றி காண்பது ஆசிரியர்களின் திறமையிலும் அர்ப்பணிப்பிலும் தங்கியுள்ளது. இளம் சிறார்களுக்கு விழுமியக் கல்வி செயற்பாடுகள் மூலம் வழங்கி நன்நெறிப்படுத்தும் ஆசிரியர்களும் மற்றும் பாடசாலை சமூகத்தினரும் தமது நடத்தைகளில் முன்மாதிரியாகத் திகழ்வதோடு மனித விழுமியங்களை தமது அன்றாட வாழ்க்கையுடன் இணைத்துக் கொள்ளுதல் இன்றியமையாதது ஆகும். மனித விழுமியங்கள் உலகியல் வாழ்க்கையை செம்மைப்படுத்துகின்றது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளுதல் அவசியமாகும்.

**கலாநிதி கனகசபாபதி . நாகேஸ்வரன்** (M.A.Phd.)
முதுநிலை விரிவுரையாளர் மொழித்துறை
சப்ரகமுவ பல்கலைக்கழகம் பெலிகுல்லோயா.

ஒரு செயலை உன்னால் செய்ய முடியும் என்று நீ திடமாய் எண்ணினால் அது எவ்வளவு துன்பம் நிறம்பியதாய் இருப்பினும் அதை நீ செய்து முடிப்பாய். ஆனால் அதற்கு மாறாக இவ்வுலகத்தில் மிக எளிதாய் இருக்கக் கூடிய செயலையும் உன்னால் செய்ய முடியாது என்று எண்ணினால் அதை உன்னால் ஒரு போதும் செய்ய முடியாது. சிறு குப்பை மேடு கூட உனக்கு கடக்க முடியாத பெரு மலையாக தோற்றமளிக்கும்.

# முதியோர்களைப் பேணுவோம் ......



"மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" என்னும் ஆன்றோன் வாக்கு மூத்தோரின் முதன்மையை எமக்கு எடுத்தியம்புகின்றது. மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் முதுமையடைவது இயற்கையின் நியதியாகும். மூப்படைந்த நம் ஒவ்வொருவரினதும் தாய், தந்தை, குரு, உறவினர்கள் போன்றோர்களே முதியவர்களாவர். முதியவர்களைப் பேணிப் பாதுகாப்பது மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும் எனக் கூறினால் மிகையாகாது.

"தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை, தந்தை சொல்மிக்க மந்திரமுமில்லை". என்னும் முதுமொழிகளும் பெற்றோரின் சிறப்பையும் அவர்களின் அவசியத்தையும் ஆணித்தரமாக அறிவுறுத்துகின்றன. இந்த அழியாத அருளுரைகள் ஏட்டிலும், வீட்டிலும், நாட்டிலும் எழுதப்பட்டு பேசப்பட்டாலும் அவை தற்போதய நிலைமையில் மதித்துப் பேணப்படுகின்றனவா? என்பதை நாம் சிந்திக்க வேண்டும். எமக்கு கண்கள் எவ்வாறு முக்கியமோ அதேபோல் முதியவரும் எம் வாழ்வில் முக்கியமானவர்கள். அதாவது முதியவர்கள் அனுபவசாலிகள் வாழ்க்கை எனும் பாடத்தை நன்கு படித்தவர்கள். இவர்களின் ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் பல நல்ல பண்புள்ள மனிதர்களை உருவாக்குகின்றன என்றால் அது மிகையாகாது. முதியவர்களின் மனம் புண்படாமல் அவர்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். அவ்வாறு பாதுகாப்போமானால் அவர்களது ஆசீர்வாதத்தினால் சீரும் சிறப்புமாக வாழ்வோம்.

பத்து மாதம் எம்மைச் சுமந்து பெற்று, தன் குருதியை உணவாக்கிக் கொடுத்து சொல்லமுடியாத துன்பங்கள், துயரங்கள், வேதனைகளுக்கு முகம்கொடுத்து பாராட்டி, சீராட்டி, பாலூட்டி, அமுதூட்டி, கல்வியூட்டி வளர்த்து சமூகத்திற்கு ஏற்ப ஒரு பிள்ளையாக தாய் உருவாக்குகின்றாள். கடைசிவரை தந்தை தன் பிள்ளைகளுக்காக வியர்வை சிந்தி உழைக்கிறார். இவ்வாறான எம் பெற்றோரை முதுமைப்பருவத்தில் கைவிடுதல் தர்மமாகுமா? அன்று, இன்று, நாளை என்ற வகையில் நாம் முதியவர்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்பதை அன்று இருந்த நம் முன்னோர்கள் தமது தாய், தந்தை, உறவினர்கள் போன்ற முதியவர்களை மதித்து பேணி அவர்களை ஆதரித்து வந்துள்ளமையை சில எடுத்துக்காட்டுகள் மூலம் அறியலாம். உலக உத்தமர் காந்திமகான் மனிதகுல மாணிக்கமாக மதிக்கப்பட்டார். இன்றுவரை மதிக்கப்படுகின்றார். மகாத்மா காந்தி தன் தாயாரைப் பேணிப் பாதுகாத்தார். அவரின் வாக்கை மதித்து பஞ்சமா பாதகச் செயல்களாகிய கொலை, கொள்ளை, காமம், குருநிந்தை, கள்ளுண்ணாமையை விரதமாகக் கைக்கொண்டார். மாமிசம் உண்ணாமையை தனது இலட்சியமாகக் கொண்டு ஒழுகினார். தாயைப் பேணிய தலைமகனாக, அகிம்சாமூர்த்தியாக உலக உத்தமராக காந்தி அன்று விளங்கியமையை இன்றும் நாளையும் உலகம் போற்றும் என்பதில் ஐயமில்லை. இன்று இவரை முதியோர் வரிசையில் முதன்மைப்படுத்தி பாடசாலைகள், பொது இடங்கள், வீதிகள் போன்ற இடங்களில் சிலைவைத்து பேணிப் பாதுகாத்து வருவது அப்பழுக்கற்ற உண்மையன்றோ?

"ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பது போல காந்தி தாயாரைப் பேணியவாறு இன்னும் பலரும் தமது தந்தை, தாயரையும் ஏனைய முதியவர்களையும் பேணியுள்ளமை வரலாறு காட்டும் உண்மையன்றோ! முதியவர்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்னும் எண்ணம் சில இளைஞர்கள் எண்ணத்தில் இல்லை. "முதியவர்களைப் பேணவேண்டும்" எனும் கருத்தைத் தற்காலத்தில் ஆராயப் புகுந்தால் இக்கருத்து இன்று என்ன நாளையும் மதித்துப் பேணப்படுமா? என்பது கேள்விக் குறியாகவேயுள்ளது. "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் என்றும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்" என்று உறுதியாகக் கூறப்பட்டாலும் இதுவும் கேள்விக் குறியாகவே உள்ளது. முதியவர்களான பெற்றோரைப் பாரமாக நினைத்து அவர்களை அனாதரவாக வயோதிபர் மடங்களில் சேர்த்துவிட்டு தாய்நாட்டைத் துச்சமாக மதித்து வெளிநாட்டுக்கு வேகமாக வெளியேறும் மக்கள் எப்படி முதியோர்களைப் பேணமுடியும்? வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் நம் தாய், தந்தையை, உறவினர்களை மறந்துவிடுவது மனித நேயமா?

நல்ல தாய், தந்தைக்குப் பிறந்த , நற்பண்புடன் படித்து பட்டம் பெற்று வாழ்ந்தவர்களும் தமக்குக் கிடைக்கும் கணவன், மனைவி, மக்களின் அடக்கு முறைக்கு உட்படுவதால் தத்தமது தாய், தந்தையை அவமானச் சின்னமாக மதித்து அவர்கள் விடும் சிறுசிறு தவறுகளைக் காரணங்காட்டி கைகழுவி விடுகின்றார்கள்.

ஒருவருக்கு வசதியான வாழ்வு கிட்டிவிட்டால் "தான் ஆரம்பத்தில் எப்படி பிறந்து வாழ்ந்தேன், தனது பெற்ற தாய் யார்?, தன்னை வளர்த்த தந்தை யார்?" என்பது கூடத் தெரியாத பிள்ளைகள் இன்று சமூகத்தில் அதிகம், அதிகம் அப்பப்பா! சொல்லவே வாய் கூசுகிறது. சுவீகாரம் எடுத்து வளர்க்கப்பட்ட பிள்ளை தான் வளர்ந்த விதத்தை அறிந்ததும் சில சூழ்நிலைகளால் அத் தாயைப் பேணாது கைவிட்டு விடுகின்றார்கள். சிலர் கணவனுடன் அல்லது மனைவியுடன் சேர்ந்து முதியவர்களை வைத்திருப்பது தங்களது பொருளாதாரத்துக்கு சேதம் என நினைத்து அவர்களை வேலைக்காரர்களாக நடத்துவது கொடுமையாகும். இதை நினைக்க நினைக்க வேதனையல்லவா? இவர்களை நாம் மனிதர்கள் என்று கூறலாமா? சிலர் பெற்றோரைப் பாரமாக நினைத்து அடித்துக் கொல்வதுமுண்டு.

உலகம் இன்று விஞ்ஞான கைத்தொழில் துறைகளில் வேகமா வளர்ச்சியடைந்து ஒரு குடும்பமாகத் திகழும்போது சில பிள்ளைகள் பெற்றோர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு அவர்களைத் தெய்வமாக மதித்துப் பேணிவருவதும உண்டு. இப்படியான செயல்களும் இன்று இல்லாதில்லை ஆனால் கூடிய பங்கினர் முதியோர்களான பெற்றோரைப் பேணுவதில் தாமதம் காட்டுவது சர்வதேச சமூக நிலைமையில் அதிக நூற்றுவீதத்தில் இருப்பது கண்டறியப்பட்ட உண்மையாகும்.

முதியவர்கள் முதுமைப்பருவத்தில் எந்தவித கவலையுமின்றி சந்தோசமாக மீதியுள்ள நாட்களைக் கழிக்கவேண்டும். ஆனால் அவர்களோ தினமும் அடி, உதைபட்டு, அவமானப்பட்டு உள்ளத்தில் ஓராயிரம் சுமைகளுடன் வாழ்கின்றார்கள். இந்நிலை மாறவேண்டும். முதுமைப் பருவத்தில் எம் தாய், தந்தை விடும் சிறிய தவறுகளைப் பொறுத்து அவர்கள் சந்தோசப்படும் வழிகளில் அவர்களை வாழவைக்க வேண்டும். முதியவர்களைக் கடைசிக்காலத்தில் துன்பப்படுத்தாமல், அநாதைகளாக்காமல், பாரமாக நினைக்காமல் அவர்களைப் பொக்கிசங்களாக மதித்து கண்ணிமைக்குள் வைத்து பேணிப் பாதுகாக்கவேண்டும்.

*இதற்காகவே முதியோர் தினமாக ஒக்டோபர் 01 அனுட்டிக்கப்பட்டு முதியோர்கள் பாதுகாப்புக்கு எவ்வளவோ வசதிகளையும், வாய்ப்புக்களையும் உலக அரசுகளும், அரச சார்பற்ற நிறுவனங்களும் விசேட உதவித் திட்டங்களை அமைத்து பேணிப் பாதுகாத்து வருகின்றன. உதாரணமாக இங்கிலாந்து முதியோர்களுக்கான வறுமை நிவாரணச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளது.*

*அதுமட்டுமன்றி அரசும், சில நிறுவனங்களும் முதியோர் விடுதிகளை விஸ்தரித்து அவர்களுக்கு சிறந்த போசாக்கு உணவு, பராமரிப்பு, வைத்திய வசதிகள், ஓய்வு, விளையாட்டு, பத்திரிகை வாசிப்பு, பட்டாடை போர்த்திப் பாராட்டுதல் போன்ற வசதிகளையும் செய்து கொடுத்துள்ளது. மேலும் முதியோர் உபகாரச் சம்பளம் வழங்கல் ஒரு மனிதாபிமான திட்டமாக வகுத்துள்ளமையும் முதியோர் வாழ்வதற்கு வசதியாக உள்ளது.*

*தெற்காசிய நாடுகளுள் இலங்கையிலேயே முதியவர்களின் வீதம் அதிகமாகும். அதாவது அறுபது வயதுக்குமேற்பட்ட இரண்டு மில்லியன் முதியோர்கள் வாழ்கின்றார்கள் என அண்மைக்கால செய்திகளிலிருந்து அறியலாம். இன்று சில நாடுகளில், தேசங்களில், ஏன் கிராமங்களில் எல்லாம் சங்கங்கள், ஒன்றியங்கள், விளையாட்டுக் குழுக்கள், அமைப்புக்கள் மூலம் இளைஞர்கள் சகல முதியவர்களையும் பேணிப் பாதுகாப்பதில் முதன்மை காட்டி வருவதுகண்டு நாம் இளைஞர் குழாத்தை பாராட்டாமல் இருக்கமுடியாது.*

*எனவே ஒட்டுமொத்தமாகக் கூறுவதானால் பிள்ளைகளைப் பெற்று வளர்த்து சமூகத்திற்கேற்ற நற்பிரஜைகளாக்கிய முதியவர்களான பெற்றோரையும் ஏனையோரையும் பேணிப்பாதுகாப்பதே நாட்டிற்கேற்ற சிறந்த நற்பணியாகும். இளைஞர்களே! முதுமை என்பது நியதி, அது எல்லோருக்கும் வரும் என்பதை நீங்கள் உணர்ந்து இன்றிலிருந்து முதியோரைப் பேணிப்பாதுகாக்க பழகிக்கொள்ளுங்கள்.*

**சு.தர்ஜனா**

*தரம் – 12 கலை*

நீங்கள் இளமையில் விருத்தி செய்யும் தன்னம்பிக்கை,
தளராத ஊக்கம், துணிச்சல், பணிவு, உன்னத இலட்சியம், ஒழுக்கம்
முதலியவைதாம் வருங்காலத்தில் உங்களை வெற்றி வீரனாக்கும் என்பது நிச்சயம்.
இவ்விதமே நீங்கள் சிறு வயதில் மேற்கொள்ளும் கெட்ட குணங்களான கோபம்,
பிறர் கையை நம்பியிருத்தல், பணிவின்மை முதலியவை உங்களை வருங்காலத்தில்
தோல்விப் படுகுழியில் தள்ளிவிடும் என்பது நிச்சயம்.

# ஆலயமாகும் கல்விச்சாலை

அறிவிற்கு வித்திட்ட பாடசாலை - அது
ஆயகலைகளும் வளர்கின்ற சோலை!
இணையற்றதெங்கள் கல்விக்கூடம் - உயர்
ஈடில்லாச் சோலையை என்றுமே நாடும்

உயர் கல்வி ஊட்டியே வாழ்வில்
ஊக்கமாய் உழைத்திடும்
ஊமை மொழி பேசுமது புகழ் பாரினில்
எத்திசையும் நற்பெயரைத் தேடி
ஏற்றம் பெறும் எங்கள் சிவசக்தியே வாழி!

ஐயந் திரிபறக் கற்றவர்கள் கோடி
ஒற்றுமையாகவே எல்லோரும் கூடி
ஓங்காரமான சிவசக்தியைப் பாடி
உயவுகல்வி கற்கவே சென்றிடுவோம் தேடி

வாழிய வாழிய சிவசக்தியே
நீங்காமல் நீடூழி வாழியவே!
ஓடி ஓடி கல்விச் செல்வமே
தேடுவோம் சிவசக்தி மகா
வித்தியாலயம் புகழ் பாடுவோம்!

நூற்றாண்டு கடந்த சிவசக்தியே
உன்னைப்பாராட்டி புகழ்கிறேன் வாழியவே!
பற்பல பட்டதாரிகள் வருகவே
அற்புதக் கல்வியைத் தருகவே
அறிஞர்கள் இங்கு பெருகவே
ஆயகலைகளும் நிறையவே!

ஆலயமாகும் எம் கல்விச்சாலை
அறம் வளர்க்கும் அறச்சாலை
கோயில் போன்ற தவச்சாலை
பசுமை நிறைந்த பலாச்சோலை

ஆண்டுகள் பல கடந்தாலும்
ஆழிப் பேரலை எழுந்தாலும்
நீண்ட நெடுங்காலம் நிலை பெற்று
நீடூழி வாழ்வாய் சிவசக்தியே

அரும்பாய் மலராய் காயாய் - நல்ல
அறிவுக்கனிகளை ஈன்றவள் நீ!
திரும்பும் திசையெல்லாம் உன் பெருமை
திக்கெட்டும் பரவி நிற்குதம்மா!

ஆதியாய்த் தோன்றி அறிவொளியை
அள்ளி வழங்கிய அன்னையும் நீ
சுடராய் கல்வித் தீபமதை
சுயமாய் ஏற்றிவைத்தவள் நீ
ஓங்கிடவேண்டும் உந்தன் குரல்
விண்ணைத் தாண்டிடவேண்டும் உந்தன் புகழ்
வாழ்ந்திட வேண்டும் நீ யுகங்கள் பல - என்றும்
அமைந்திட வேண்டும் நீ அறிவின் களம்



**இ.அலோஜிதன்**
தரம் :-13கலை

# நாட்டார் பாடலின் இயல்புகள் - மறுமதிப்பீடு

நாட்டார் பாடலின் இயல்புகளாக பெரும்பாலான ஆய்வாளர்களால் பின்வரும் இயல்புகள் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றன.

I. வாய்மொழியாகப் பரப்பப்படுவது

II. மரபு வழிப்பட்டது

III. ஆசிரியரற்றது

IV. ஒருவித வாய்ப்பாடுகளுக்குள் அடங்குவது

V. ஒரு குழுவினரால்(நாட்டாரால்) பகிர்ந்து கொள்ளப்படுவது

VI. பல்வேறு வடிவங்களாகத் திரிபடைவது

மூத்த தலைமுறை ஆய்வாளரான கலாநிதி க.விசாகரூபன் வரை இதற்கு விதிவிலக்கானவர்களல்லர். ஆயினும் நாட்டார் இலக்கியத் தேடல்கள் ஓரளவு அதிகரித்து வருகின்ற இன்றைய தமிழ்ச் சூழலில் மேற்குறித்த இயல்புகள் எவ்வளவு தூரம் பொருத்தப்பாடுடையன என்பது பற்றி பரீசீலனை செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள் முதன்மையிடம் பெற்றுள்ள, வாய்மொழியால் பரப்பப்படுவது என்பது ஓரளவே உண்மையானது. ஏனெனில் நாட்டார் பாடல்களுள் ஒரு வகையானவை ஏடுகளில் எழுதப்பட்டு பேணப்பட்டு வந்துள்ளன. இவற்றுக்கான சிறந்த எடுத்துக்காட்டுகளாக வன்னிப் பிரதேச நாட்டார் பாடல்கள், மகாமாரி திவ்விய கரணிப்பாடல்கள், ஆகிய வற்றைக் குறிப்பிடலாம். வன்னிப்பிரதேச நாட்டார் பாடல்களின் தொகுப்பாசிரியர் நூல் முன்னுரையில் பின்வருமாறு கூறுவது கவனத்திற்குரியது. "வன்னிவள நாட்டில் சிதறி ஆங்காங்கே பல முதியவர்கள் மனதில் இருந்த பாடல்களையும் கறையானால் அரிக்கப்பட்ட கையெழுத்து ஏட்டுப்பிரதிகளில் இருந்த பாடல்களையும் தொகுத்து நூலாக வெளியிட முயன்றேன்."

ஆகவே நாட்டார் பாடல்களுள் சிலவகையானவை வாய்மொழியாகவன்றி ஏடுகள் கையெழுத்துப் பிரதிகள் ஊடாகவும் பரப்பப்பட்டு வந்துள்ளன எனறே குறிப்பிடத் தோன்றுகிறது. மேலே நாட்டார் இலக்கிய இயல்புகளுள் மற்றொன்றாக அது மரவுவழிப்பட்டது என்பது எடுத்துரைக்கப்படுகின்றது. இக்கூற்றின் உட்கிடை நாட்டார் பாடல்கள் புதிதாக உருவாக முடியாதென்பதே. ஆயின் நாட்டார் பாடல்கள் சமகாலச் சூழலில் புதிதாகவும் உருவாக்கம் பெறுவது கவனிக்கத்தக்கது.

உ-ம்: அஷ்ரப் அகால மரணமெய்திய சூழலில் முஸ்லீம் பெண்கள் பாடிய ஒப்பாரிகள்.

**ஆலமெல்லாம் படைத்த அந்த மேலோனை முன்னிறுத்தி**
**மனமிரங்கி பாடுகிறேன் பொதுமக்களே நீங்கள் கேட்டுங்க**
**பிஸ்மில்லாஹி என்று நம்மடை வேதத்தை முன்னிறுத்தி**

முஸ்லிமுக்குப் பாடுபட்டார் - நமக்கு
முன்னுரிமை வேணும் என்று
அறிவு மரம் நாட்டி
அதன் நிழலில் நாங்கள் குந்தி
பழமருந்தும் வேளையில் - அல்லாஹ் நீ
பறிச்செடுத்துப் போட்டாயடா

லம்மு லக்கின்
கிளம்பிவந்த சூரியனே
மேகம் மறைத்ததல்லாஹ்
கிளம்பி வரும் நிலவ
கிராணம் மறைச்சதுபோல் - எங்கட
முடிசூடா மன்னனே - அல்லாஹ்
மூடி மறைச்சிப்போட்டாயடா
வேயிலால பால் குடிச்சி
வேர்வையாலே தண்ணீர்வாத்து
கால் நடையாய் வந்த காட்சி - இப்ப எங்கட
கண்ணெதிரே தோன்றுதல்லாஹ்

நடையாய் நடநடந்து - அவர்
நாட்டுமக்களை தாங்கி நின்று
நமக்கு கட்சி ஒன்றா உருவாக்கினார் - அதற்கு
நாம் கருணை காட்ட வேணுமல்லோ
பார்லிமன்றில் உதிச்சி பிறச்செடுத்தோம் வெண்ணிலவ

மழையென்னும் கருமேகம் இப்ப மூடி மறைச்சதல்லஹ்
எங்கள் இளவரசர் ஏறிவந்த கப்பலுக்கும்
சூட்சுமம் என்னும் மாலபோட்ட இப்ப
சுட்டெரிச்சு போட்டதல்லதஹ்

தங்கம்போல் மேனி தரையிலே தானுளுந்து
சடலமத காணமா தவிச்சம் அல்லாஹ் கொஞ்சநேரம்
பொன்னான மேனி அல்லாஹ்
பூப்போல நானுளுந்து
கண்ணால காணாம
கடும் கொலை ஆக்கினாக

உத்தம ராசாவே
உசிசு வந்த ஒளி விளக்கே
பத்தியெரிய வெச்சி - அல்லாஹ் இப்ப
எங்கள பரதேசி ஆக்கினாக

**எங்கட பட்டத்துராசா**
**பறந்து வந்த கப்பலுக்கு**
**ஆரும் அறியாம அநியாயம் செய்தாக அல்லாஹ்**
**குத்து விளக்கெடுத்து கொழுத்தி வெச்சோம்**
**கோடி காலம் அது பத்துமென்று**
**பொறாம என்னும் புயலடிச்சு**
**ஒளி மறஞ்சி போச்சு கல்லாஹ்**
**மாறுதில்லை ஆறுதில்லை அல்லாஹ்**
**மனவருத்தம் தீருதில்லை.**

ஆகவே நாட்டார் பாடல்கள் சமகாலத்திலும் உருவாகின்றமை கவனத்திற்குரியது. நாட்டார் பாடலின் இயல்புகள் தொடர்பான மேலே குறிப்பிட்டவற்றுள் பிறிதொன்று 'அவை ஆசிரியரற்றவை' என்பது. ஆனால் சமகால நாட்டார் பாடல்களுள் சிலவகையானவை ஆசிரியர் பெயர் அறியக்கூடியவை. அத்தகைய பாடல்கள் கிழக்கில் கடந்த ஒரு நூற்றாண்டுகாலமாக காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

- புயற்காவியம் - சேகுமதார் புலவர்
- எல்லாம் அதுக்குள்ளே - வி.எஸ்.கோவிந்தசாமி தேவர்
- ஈழத்து இரட்டையப் மணிமாலை - க.சின்னவப்புலவர்

க.கணபதிப்பிள்ளை ஆகியோர் பாடிய தனிப்பாடல்கள்

ஆகவே நாட்டார் பாடல்களுள் ஒருவகையானவை ஆசிரியர் இன்னாரென்று அறியக்கூடியவையாகவும் உள்ளமை புலப்படுகிறது. ஆரம்பத்திலே குறிப்பிட்ட பிறிதொரு இயல்பு ஒரு குழுவினரால் பகிந்துகொள்ளப்படுவது என்பது. ஆயினும் மேற்குறிப்பிட்ட பாடல்களுள் சில தனி மனித வெளிப்பாடுகளாகவுள்ளமை கவனத்திற்குரியது. இதுவரை கூறியவற்றை நோக்கும்போது நாட்டார் பாடலின் இயல்புகளாக மேலே குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள் சிலவற்றின் பொருத்தப்பாடின்மை புலப்படுகின்றதெனலாம். அதேவேளையில் நாட்டார் பாடலின் இயல்புகளாக முற்றிலும் புதிய இதுவரை கூறப்படாத சில இயல்புகளையும் இனங்காணமுடிகிறது. அதாவது நன்கு படித்த புலவர்களால் பாடப்படுகின்ற நாட்டார் பாடல்களும் இருந்து வந்துள்ளன.

உ-ம்: வன்னிப்பிரதேச பிள்ளையார் சிந்து.

**"வீசுகர மேகநிற வேதநுதலாள் கருணை**
**மேவுமத வரண வினாயக வினோத**
**கூசுதமிழ் சேர் முதல் கோமண வள்ளிக்கிளைய**
**குஞ்சுமத ஜைக்கிசாய குஞ்சரமு கத்தோன்**
**பேசுதிக ளூன் கதைகளிசைபாடுவதற்குமொரு**
**பிழைகள் வராமலே"**

இத்தியாதி பாடல்களும் இதே வகைப்பட்ட கண்ணகி வழக்குரை வசந்தன் கவித்திரட்டுப் பாடல்களும் நாட்டார் பாடல்கள் தொடர்பான இன்னொரு முக்கியமான - இலக்கிய ஆர்வலர்கள் பலரும் கவனிக்கத்தவறிய பிறிதொரு பண்பையும் இனங்காட்டியுள்ளன. அதாவது பொதுமக்களை மனங்கொண்டு நன்கு படித்த புலவர்களால் பாடப்பட்டு வந்த சில வகைப் பாடல்களையும் நாட்டார் பாடல் என்ற பிரிவினுள் அடக்க வேண்டிய அவசியமாகின்றது.

நாட்டார் பாடல்கள் நேரடியாக நடைமுறை வாழ்க்கையோடு தொடர்புபட்ட சூழலிலிருந்து எழுகின்றன என்றொரு அபிப்பிராயமும் நிலவி வருகின்றது. ஆயினும் ஒருசில சந்தர்ப்பங்களில் நேரடியான வாழ்க்கையோடு தொடர்புபடாது பாவனையாக எழுகின்ற பாடல்களுமுள்ளன என்பது கவனிக்கத்தக்கது. குறிப்பாக முஸ்லீம் மக்கள் மத்தியில் பாடப்பட்டுவருகின்ற கவிகளுள் பாவனைப்பாடல்களென்பர்.

உ-ம் **"சிற்றெழுங்கையாலே**
**செருப்புழுது பேறெரெப்பம்**
**பார்த்தேன் ஆரெண்டு என்ர**
**அழகுதுரை மாமிமகன்"**

தவிர அண்மைக்கால நாட்டார் பாடல் தொகுப்புகளில் சிலவற்றிலே புதிய நாட்டார் பாடல் வகைகளும் இடம்பெற்றுள்ளன. உதாரணமாக மலையக நாட்டார் பாடல்களின் மலையகக் கூத்துக்களில் பபூன் பாடிவருகின்ற பாடல்களும் நாட்டார் பாடல் வகைகளிலொன்றாக சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய சேர்ப்புமுறை பொருத்தமுடையதாகவுள்ளது.

சுருங்கக்கூறின் இதுவரை கூறியவற்றை அடிப்படையாகக் கொண்டு நாட்டார் பாடல் இயல்புகளாக பின்வருவனவற்றை இனம் காணலாம்.

I. வாய்மொழியாகப் பரப்பப்படுவது.

II. ஏடுகளுடாகவும் பரப்பப்பட்டு வந்துள்ளது.

III. ஆசிரியற்றது.

IV. சில வகை நாட்டார் பாடல்களுக்கு ஆசிரியர்களுள்ளமை

V. மரபுவழியாகவன்றி சமகாலத்தில் புதியதாகவும் உருவாகக்கூடியது.

VI. மரபு ரீதியில் புதியவகை நாட்டார் பாடல்களும் உள்ளமை.


VII. சிலவகை நாட்டார் பாடல்கள் படிப்பறிவுள்ளவராலும் (பொதுமக்களுக்காக) பாடப்பட்டுள்ளமை.

VIII. குழுவினரால் மட்டுமன்றி தனிப்பட்டவர்களாலும் பாடப்பட்டுள்ளன.

**கலாநிதி. செ. யோகராசா**
கிழக்குப் பல்கலைக் கழகம்



# புகைத்தலினால் மனிதனுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்



இன்றைய காலகட்டத்தில் புகைத்தலினால் ஏற்படும் பாதிப்புக்களுக்கான எச்சரிக்கைகளைத் தெரிந்தும் அநேக மக்கள் புகைத்தலுக்கு அடிமையாகி உள்ளார்கள். சிக்ரெட்டில் 4000 வகையான இரசாயணங்கள் உள்ளன. இதில் 100 சிக்கொடாஸ் எனப்படும் இரசாயணப் பதாஉத்தமானது எமது சுவாசத்தொகுதியை பாதிப்பதுடன் நாளடைவில் பல தீவிரமான பாதிப்பையும் மனித உடலுக்கு ஏற்படுத்துகின்றது. இறுதியில் இறப்புக்கு காரணமாகின்றது.

அதிகரித்து வரும் புகைத்தல் பழக்கமானது புகைப்பிடிப்பவரை மட்டுமன்றி சுற்றியிருப்பவர்களின் உடல் நலத்துக்கும் தீங்குவிளைவிக்கும் என்பது யாவருக்கும் தெரிந்த உண்மையும்கூட. புகைத்தலினால் சுவாசத்தொகுதி மாத்திரமன்றி உள்ளுறுப்புக்களும் நீர்ப்பீடனத் தொகுதியும் பாதிப்படைகின்றன.சிகரெட் புகைத்தலினால் நச்சுப் பதார்த்தங்கள் உடலில் பலவழிகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. நிக்கொட்டின் 10 செக்கன்களில் மூளையை அடையக்கூடியதாக இருப்பதுடன் உடலில் எல்லாப் பகுதிகளுக்கும் பரவலடைகின்றது. ஈமோகுளோபினில் ஓட்சிசன் பெறும் அளவைக் குறைக்கின்றது. சில புற்றுநோய் ஏற்படுத்தக்கூடிய காரணிகள் புற்றுநோயை ஏற்படுத்துகின்றன. இவை பிற பொருள் எதிரிகள் உருவாக்கத்தில் குறைவை ஏற்படுத்துகின்றன. மேலும் இவை அழுத்தம் போன்ற நோய்களுக்கு வழிவகுக்கின்றன.

புகைத்தலினால் உடனடியாக ஏற்படும் விளைவுகளாவன குருதியமுக்கமும், இதயத்துடிப்பு வீதம் அதிகரிக்கின்றது, குருதி உடல் பாகங்களுக்கு கடத்தப்படும் அளவு குறைகின்றது, மூளை நரம்புத்தொகுதியில் கணத்தாக்கம் கடத்தல் குறைவடைதல் இதேவேளையில் மேலதிக விளைவுகளாக புகைத்தலினால் சுவாசவீதம் குறைவடைதல், இருமல், பற்களில் மஞ்சள் பிடித்தல், சிறிய நோய்களிற்கும் நிர்ப்பீடனம் ஏற்படுவதில் கஷ்டம் ஏற்படல், மலட்டுத்தன்மை, மூப்படைதல் போன்ற விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

புகைத்தலினால் எமது உடலில் பல நோய்கள் ஏற்படுகின்றன. நியுமோனியா, நுரையீரல்அலர்ச்சி, சுவாச சிறப்பங்கள் சிதைவடைதல், உயர்குருதியமுக்கம், புற்றுநோய், குடற்புண் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. ஒருமனிதன் புகைத்தலுக்கு அடிமையாகி விட்டால் அவனைப் பின்வரும் அறிகுறிகளை வைத்து அதன் தீவிர பாதிப்பை அறிந்துகொள்ளலாம். மனஅழுத்தம், குழப்பம் காணப்படும், நித்திரையின்மை, தலைவலி, கவனக்குறைவு, இருமல் போன்றன காணப்படும். புகைத்தலானது உடலுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. அத்துடன் எமது வாழ்க்கைக் காலத்தை குறைவடையச் செய்யும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. சாதாரண மனிதனின் ஆயுட்காலத்தை 10-12 வருடங்களால் குறைவடைகின்றது. ஆகவே புகைத்தலினால் ஏற்படும் தீமைகளை எமது எதிர்காலச் சந்ததியினருக்கு புரியவைத்து அதிலிருந்து வளமான சந்ததியை உருவாக்க எல்லோரும் முனைவோம்.

**ந.கஜாந்**
தரம்-9V

சிறுகதை

# வெளியூர்க் கல்வி

பஸ்ஸில் ஒரு மூலையில் உட்காந்து கொண்டு அன்றைய பத்திரிகையை படித்துக் கொண்டிருந்தான் அகிலன். ஆனால் அவனால் பத்திரிகையைப் படிக்க முடியவில்லை. பத்திரிகையை மடித்து பக்கத்தில்வைத்துவிட்டு பஸ் வண்டியின் யன்னலினூடாக இயற்கையை ரசித்துக் கொண்டிருந்தான். ஆயினும் அவன் மனம் திருப்திப்படவில்லை. அந்தக்கணத்தில் பஸ்வண்டி ஓர் தரிப்பிடத்தில் நின்றது. அங்கிருந்து பல மக்கள் பஸ்வண்டியில் ஏறினர். அவர்களுள் அகிலனுடைய நெடுநாள் நண்பனான அசோக்கும் ஏறினான். மனம் உடைந்து ஆழ்ந்த சிந்தனையில் இருந்த அகிலன் அசோக்கைக் கண்டதும் பெரும் மகிழ்ச்சி அடைந்தான்.

"டேய் அசோக் வா எனக்குப் பக்கத்தில் வந்து உட்காரு. எப்படி நீ சுகமாக இருக்கிறாயா? நாம் எவ்வளவு நாட்களுக்குப் பிறகு சந்தித்திருக்கிறோம்". என்று கேட்டான் அகிலன். "நான் சுகமாக இருக்கிறேன். நீ எப்படி டா இருக்கிறாய்?" என்றான் அசோக் அதற்கு அகிலன் எவ்வித பதிலும் சொல்லவில்லை. ஆமாம் அது சரி, நீ என்ன செய்கிறாய் என்று சற்று நேரத்தின்பின் அசோக்கிடம் கேட்டான் அகிலன்.

"எனக்கென்னடா ஊரோட வேலை அதுவும் கல்வி கற்பித்தல் நான் நல்ல சுகமாக இருக்கிறேன்" என்றான் அசோக். அதைவிடு நீ ரவுணுக்கு படிக்கப் போனேயே என்னமாதிரி தற்போது என்ன செய்கிறாய் என்று அசோக் அகிலனிடம் கேட்டான். அதற்கு அகிலன் எவ்வித வார்த்தையும் சொல்லாமல் மௌனம் சாதித்தான். அப்போது அசோக் நான் இறங்கவேண்டிய இடம் வந்ததால் "வாவண்டா வீட்டபோவம் பிறகு எல்லாத்தையும் கதைக்கலாம்" என்று அகிலனிடம் கேட்டான் அசோக்.

இல்லை வேறு ஒருநாள் வருகிறேன் என்றான் அகிலன். சரி சரி இந்தா என்னுடைய வீட்டு விலாசம் என்று கொடுத்துவிட்டு பஸ்சிலிருந்து இறங்கிச் சென்றான் அசோக். அப்படியே பஸ்ஸில் உட்காந்தபடி தன்னுடைய கடந்தகால வாழ்க்கையினை மீட்டிப்பார்க்கிறான் அகிலன். சிறு வயதிலிருந்தே தானும் அசோக்கும் ஒன்றாகப் படித்தவர்கள் மட்டுமல்ல இருவரும் இணைபிரியாத நண்பர்களாக இருந்தார்கள். இப்படியாக 5ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் இருவரும் சிறந்த சித்தியைப் பெற்றனர். இவ்வாறு இவர்கள் இருவரும் வகுப்பில் திறமையாகப் படித்து கெட்டிக்காரர்களாக விளங்கினர். படிப்பில் மட்டுமன்றி விளையாட்டிலும் சிறந்த வீரர்களாக விளங்கினர்.

இவ்வாறாக இவர்கள் (கா.பொ.த) சாதாரண தரத்தை அடைந்தனர். இவர்கள் இருவருமே திறமையாகப் படித்து பரீட்சையில் சகல பாடங்களிலும் அதி விசேட சித்தியைப் பெற்றனர். அகிலன் பணக்கார வீட்டுப்பையன். அவனை அவனது பெற்றோர் டாக்டருக்கு படிக்க வைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டனர். அகிலனை நகர்ப்புறத்திலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் உயிரியல் துறையில் படிப்பதற்காக கொண்டு சேர்த்தனர். ஆனால் அசோக் தனது ஊரிலுள்ள பாடசாலையிலே உயர்தரப் படிப்பை படித்தான். இதனால் அசோக்குக்கும், அகிலனுக்கும் இடையே நீண்ட பிரிவு ஏற்பட்டது.

அகிலன் பணக்காரக் குடும்பத்துப் பையனாக இருந்தபடியால் அவன் பணத்தின் அருமையை உணரவில்லை. நண்பர்களுடன் உல்லாசமாகநகரைச்

சுத்தித் திரிந்தான். பிரத்தியேக வகுப்புகளுக்கும் அவன் ஒழுங்காக போகவில்லை. அதே நேரம் பாடசாலைக்கும் ஒழுங்காகச் செல்லவில்லை. இவ்வாறு அகிலன் சுதந்திரமாகத் திரிந்தான். அகிலனுடைய பெற்றோர் தன்மகன் டாக்டராக வருவான். என்று அவாவுடன் இருந்தனர். ஆனால் அகிலன் அவர்களுடைய சோற்றில் மண்ணை வாரிப்போட்டுவிட்டான். ஆனால் அசோக் தன்னுடைய வீட்டுக் கஸ்ரத்தை உணர்ந்து தன்னுடைய அம்மா, அப்பாவுக்காக அயராது கண் விழித்து படித்து (க.பொ.த) உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று பல்கலைக்கழகம் சென்றான்.

ஆனால் அகிலன் உயர்தரப் பரீட்சையில் தோல்வியையே தழுவினான். தன்னுடைய பெற்றோரின் முகத்தில் முழிப்பதற்குப் பயந்து வீட்டுக்கு வராமல் இருந்தான். தான் செய்த தவறுகளையெல்லாம் பிறகுதான் அகிலன் உணர்ந்து கொண்டான். பஸ் வண்டியில்தான் உட்காந்து கொண்டு தான் செய்த தவறுகளை உணர்ந்துகொண்டான். தன்வாழ்க்கையைத் தானே நாசமாக்கிவிட்டதாக நினைத்து ஏங்கினான்.

"அசோக்கப்போல நாம ஊருல படிச்சிருந்தா நல்ல நிலமைக்கு வந்திருக்கலாம்" என்று பலவாறாக சிந்தித்தான். பஸ்வண்டியின் யன்னலினுடாக வந்த தென்றல் காற்றின் இதமான மயக்கத்தினால் தன்னையே மறந்து உட்காந்தபடியே நித்திரை செய்து விட்டான். ஒரு சில மணி நேரத்தின் பின் நித்திரையிலிருந்து திடீரெனத் திடுக்கிட்டு எழுந்து பார்த்தான். தான் இறங்க வேண்டிய இடத்திற்கு மேலாக பஸ்வண்டி செல்வதை உணர்ந்தான். உடனே சீட்டிலிருந்து எழுந்து பஸ் வண்டியின் சைகை மணியை ஒலிக்கச் செய்துவிட்டு பஸ்வண்டியிலிருந்து இறங்கி சஞ்சலத்துடன் வீட்டுக்கு நடந்துசென்றான்.

**வி. யாழினி**
தரம்- 12 கலை

# மானிடா எழுந்திரு...

வாழ்வதே சொற்ப நாட்கள் ~ அதில்
வஞ்சனை செய்வார் உள்ளமோ பல கோடி
நித்தமும் எதை நீ செய்தாயோ ~ அதில்
எத்தனை பயன்தான் கண்டாயோ
மண்ணிலே பிறந்து மானிடா எனப்
பெயர் கொண்டாய்
அகிலமே போற்ற அலை கடல் போலஷ
நீ விரைந்து செல்

**சு. கஜானா**
தரம் - $10^{V}$

# சித்திரங்கள் ஊடாக சிறுவர்களது மனவெளூச்சி வெளிப்பாடு

சிறுவர்களின் உள்ளாந்த ஆக்கத்திறன்களை தூண்டக்கூடிய ஒரு வழியே சித்திரம் வரைதலாகும். சிறுவர்களின் சித்திரங்கள் சிறுவர் உலகைப் பிரதிபலிக்கும் ஓர் ஊடகமாகும். பிள்ளைகளின் விவேகம், மனவெழுச்சிகளின் தன்மை, சமூக விருத்தி என்பன தொடர்பான தகவல்களை அறிந்துகொள்ள சிறுவர் சித்திரங்கள் ஓர் மூலாதாரமாக நிகழ்கின்றன. சிறுவர் சித்திரங்கள் தொடர்பாக பல்வேறு ஆய்வுகள் முன்வைத்துள்ளனர். குட் இன்ஃப்இ விக்டர் லெவன், சிறில் பேல்ட் போன்றோர் இவ்வாறான ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளனர். இந்த வகையில் இன்றைய நவீன யுகத்தில் சிறுவர்களின் சிந்தனாசக்தி ஊற்றெடுக்கும் வீதம் அதிகரித்துக் கொண்டே செல்லுகின்றது. எனவே அதற்கேற்ற வகையில் வளர்ந்தோரும் அதுபற்றி அறியவேண்டியது காலத்தின் தேவையாகும்.

ஒவ்வொரு பிள்ளையினதும் சித்திரம் வரையும்விருத்தி அவர்களது முதிர்ச்சிக்கு ஏற்பவே அதிகரித்துச் செல்லுகிறது. சித்திரமொன்றை வரைவதற்கு அறிதல் ஆட்சிவிருத்தியும், விவேக விருத்தியும் அத்திவாரமாய் அமைகின்றன. அறிதல் ஆட்சி விருத்தியானது புலன் அங்கங்களான கண், காது, மூக்கு, நாக்கு, தோல் என்பவற்றினூடாக வெளியுலகம் பற்றி பெற்றுக்கொள்ளும் தகவல்களை பொருளுள்ள விதத்தில் உள்ளத்தினால் ஒழுங்கமைத்துக் கொள்ளும் கருமத்தொடராக அமைகிறது. இதற்கு புலன் அங்கங்களின் முதிர்ச்சியும், மூளையின் மையநரம்புத் தொகுதியின் வளர்ச்சியுமே ஆதிக்கம் செலுத்துகிறது. இவ்வாறான விருத்தியின் பின்னணியிலேதான் சிறுவர் சித்திரங்கள் வளர்ச்சியடைகின்றன.

சிறுவர்களது ஒவ்வொரு செயற்பாடும் அவர்களது முதிர்ச்சிக் கேற்பவே எளிய நிலையிலிருந்து சிக்கலான நிலைவரை படிப்படியாக விருத்தியடைகின்றது. இதனடிப்படையில் தான் சிரில்பேட், விக்டர்லொவன் பெல்ட் லம்பேட்ப்ரிவேன் ஆகியோர் சிறுவர் சித்திர அபிவிருத்திப் படிகளை வயதினை அடிப்படையாகக் கொண்டு வகுத்துள்ளனர். இவ்வாறான அபிவிருத்தியானது எளியதிலிருந்தே சிக்கலிற்கு செல்லுகின்றது. அதாவது முதலில் மனித உருவங்களை வரைந்த பின்னரே வெளியைக் காட்டுவதும் நிறங்களைப் பயன்படுத்துவதும், திட்டமிடுவதும் என வளர்ச்சியடைகின்றது.

இந்தவகையில் இரண்டுதொடக்கம் நான்கு வயது வரையிலான படியைக் கிறுக்கும்படி எனக் கூறுகின்றனர். இதில் பிள்ளைகள் ஒழுங்கின்றிக் கிறுக்குவதன் மூலம் தமது கை அசைவுகளைக்கொண்டு திருப்தியடைகின்றனர். இவ்வாறு கிறுக்கிய மனித உருவங்களுக்கு அம்மா அப்பா எனப் பெயரிடுவர். இப் படிநிலையில் மனித உருவங்களை வரையமாட்டார்கள். ஆனால் அவர்களது எண்ண நிலைகளே வெளிப்படும் அதாவது சக சிலுவை போன்ற அடையாளங்களைக் கட்டவே முற்படுகின்றனர்.

அடுத்ததாக நான்கு தொடக்கம் ஏழு வயது வரையிலான நிலை முன் ஸ்கீமா எனப்படும். இந்த நிலையினையுடைய பிள்ளைகளின் ஆக்கங்களை நோக்குமிடத்து மனித உருவங்களை வரையும்போது தலையை வட்டமாகவும் கைகளையும் கால்களையும் வெறும் கோடுகள் மூலமும் கழுத்திற்கும் கிடைக்கும்.

இடைப்பட்ட பகுதியை செவ்வகமாகவும் காட்டமுற்படுவர். வெளியைக் காட்டும்போது ஒவ்வொரு பொருட்களையும் ஒழுங்குபடுத்தி வரைவர். ஆனால் தளம் பூராகவும் மிதக்கும் தன்மையிலேயே காட்டுவர். இது என்னுடைய வீடு இது என்னுடைய அறை எனும் மனவெழுச்சியை வெளிப்படுத்துவர். நிறத்தைப் பயபடுத்தும்போது இயற்கையுடன் எவ்விதமான தொடர்புகளையும் பேணாது தமக்கு இன்பத்தை ஊட்டுகின்ற நிறங்களையே பயன்படுத்துவர்.

அடுத்த நிலையாக 7-9 வரையிலானவஉகளை பின்ஸ்கீமா நிலை எனக்கூறலாம். இப்பகுயினையுடைய பிள்ளைகள் தமது எண்ணக்கருக்களை மீண்டும் மீண்டும் வரைவதனால் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்கின்றனர். இதில் கேத்திர கணித தளங்கள் கோடுகள் போன்றவற்றால் கட்டியெழுப்பப்படும். இவர்கள் மனிதனை வரையும்போது மனிதனின் முக்கிய உறுப்புக்களை முக்கியத்துவப்படுத்தி மீண்டும் மீண்டும் வரைவதனால் மனிதன் தொடர்பான எண்ணக்கருக்கள் கட்டியெழுப்பப்படும். மேலும் வெளியைக் காட்டும்போது வெளி தொடர்பான எண்ணக்கருக்கள் கட்டியெழுப்பப்படும். பொருட்களின் அமைவிடத்தைக் கோடுகள் மூலமும் தளம், இடம் என்பவற்றைக் கருத்தில்கொண்டும் அனுபவங்களூடாக வரைவர். நிறங்களைப் பயபடுத்தும்போது பொருட்களுக்கு ஏற்ற நிறங்களையே பயன்படுத்துவர். அதாவது மரம் பச்சை, வீதி கறுப்புஇ வீடு கபிலம் எனக் காட்டுவர். தமது மனவெழுச்சிகளை வெளிப்படுத்தும்போது நிற ஸ்கீமாவிலிருந்து விலகிச் செல்லதைக் காணமுடியும். இப்பருவத்தினரிடையே திட்டமிடல் காணப்படாது.

இதனை அடுத்து 9-11 வயது வரையிலானபருவத்தை யதார்த்தத்தை நோக்கிச் செல்லும் பருவம் என அழைப்பர். இவர்கள் கேத்திர கணித தளங்கள் கோடுகள் பயன்படுத்துவதிலிருந்து சற்று விலகிச்செல்வர். மனித உருவை வரையும்போது ஆடைஅணிகளின் கவனம்செலுத்துவர். ஆண், பெண் உருவங்களை அவர்களுக்கு உரித்தான ஆடைஅணிகள் மூலம் காட்டுவர். மனிதஉரு செம்மையானதாக அமையாது வெளியைக் காட்டும்போது தூரத்தில் தென்படும் பொருட்களைச் சிறிதாக வரைவர். ஒரு பொருள் மற்றொரு பொருளால் மறைக்கப்பட்டிருப்பதையும் காட்டுவர். வானத்தைக் காட்டும்போது அடித்தளக்கோடு வரைபும் காட்ட முயற்சிப்பர்.

நிறங்களைப் பயபடுத்தும்போது மனவெழுச்சியின் அடிப்படையிலேயே பயன்படுத்துவர். தமது விருப்பிற்கேற்ற நிறங்களையே பயன்படுத்துவர். தமது விருப்பிற்கேற்ற நிறங்களையே தீட்டுவர். நெகிழ்வுத் தன்மையுடைய நிறப்பயன்பாட்டே காணப்படும்.

அடுத்த நிலையாக 11-13 வயது வரையிலானவர்களை போலியதார்த்த பருவநிலையாக கருதலாம். இப் பருவத்தில் விவேகத்தின் வளர்ச்சி காணப்படும். கட்புலகாகின்றவை, கட்புலனாகாதவை எனத் தெளிவை ஏற்படுத்தி வரைவர். மனித உருவை வெளிப்படுத்தும்போது தொழிற்பாடு ரீதியான மெய்நிலைகளைக் காட்டமுயல்வர். உடல்உறுப்புக்களின் பருமனில் கூடியகவனம் செலுத்துவர். வெளியைக்காட்டும்போது பொருட்களின் பருமன், முப்பரிமானம் என்பவற்றைக் காட்ட முயல்வர் அண்மை, சேய்மை போன்ற எண்ணக்கருக்கள் விருத்தியடையும். நிறங்களைப் பயன்படுத்தும்போது அண்மை, சேய்மை உணர்வுகள் போன்ற எண்ணக்கருக்களை கருத்திற்கெதண்டு பயன்படுத்துவர்.

இறுதியாக 15 வயதிற்கு பின்னரான பருவத்தினரை கலையம்ச மீள்பிறப்புப் பருவம் என அழைப்பர். இப்பருவத்தினர் கலையம்ச தன்மையை வெளிப்படுத்தும் வகையில் ஆண்பிள்ளைகளினதும், பெண்பிள்ளைகளினதும் சித்திரங்களிடையே தெளிவான வேறுபாடுகள் காணப்படும். சிறுமிய, பல்வேறு வர்ணங்களையும் கோடுகளையும் விரும்புவர். அலங்காரப் படுத்தும்தன்மை மேலோங்கிக் காணப்படும். ஆண்பிள்ளைகள் மெய்நிலைகளைக் காட்டுதல், பொறிமுறை சார்ந்த கருமங்களைக் காட்டுதல் போன்றவற்றில் மேலோங்கிக் காணப்படுவர்.

சிறுவர்கள் சித்திரங்களை உருவாக்கும் போது அவற்றின் மூலம் அவர்களது மனநிலை, குடும்பத்தின்நிலை, தனிப்பட்ட விருப்புவெறுப்பு, பொருளாதார நிலை, வாழும் சூழல் என்பவற்றை இனங்கண்டு கொள்ளமுடியும். அதாவது அவர்கள் பயன்படுத்தும் வர்ணத்தைக் கொண்டும், உருவங்களில் ஏற்படுத்தும் மாற்றங்களைக்கொண்டும் வெளிப்படுத்தும் காட்சிகளைக் கொண்டும் இனங்காணலாம். இந்தவகையில் வர்ணப்பாவனையை நோக்குமிடத்து ஒரு பிள்ளை கறுப்பு வர்ணத்தை அதிகமாகப் பயன்படுத்துகின்றது எனின் அதனுடைய வாழ்க்கை துன்பகரமான நிலையில் இருப்பதை அறியமுடிகின்றது. அது பெற்றோரின் அதிக அரவணைப்பைப் பெற்றால் பிரகாசமான வர்ணத்தையும் அரவணைப்பு இல்லாவிட்டால் பிரகாசமற்ற இருண்ட வர்ணத்தையும் அதிகமாகப் பயன்படுத்தும்.

மேலும் உருவங்களின் முகபாவங்களை நோக்குமிடத்து கோபம், பயம், மகிழ்ச்சி போன்ற விடயங்களை அறிந்துகொள்ளலாம். அதாவது ஒரு மனிதனை வரையும் பிள்ளையானது அம் மனிதனின் முகத்தைப் பயங்கர உருவமாகக்காட்ட முற்படுமாயின் அப்பிள்ளையிடம் பயவுணர்வு இருப்பதோடு யாரோ ஒருவரின் துன்புறுத்தலுக்கு ஆளாகியிருக்கும் என்பதை அறியமுடியும். குடும்பத்தில் அனைவராலும் எந்தவித தொந்தரவுமின்றி மகிழ்ச்சியாக வாழும் பிள்ளை உருவங்களின் முகபாவங்களை மகிழ்ச்சியுணர்வுடையதாகவே காட்டமுயல்வர். அதுமட்டுமின்றி சோகவுணர்வுடைய முகபாவத்தைக் காட்டுவதற்கு கண்களிலிருந்து கண்ணீரைக் காட்டமுயல்வர். அதனால் அதன் வாழ்வில் ஏதோ மறக்க முடியாத சம்பவமொன்று இருக்குமென்பதை இனங்காண முடியும்.

வெளிப்படுத்தும் காட்சிகளைக் கொண்டும் பிள்ளைகளின் நிலையை அறிய முடியும். இந்தவகையில் கஸ்ரமான குடும்பத்தில் ஓலைவீட்டில் வாழும் பிள்ளை வீட்டினை வரையும்போது அதனுடைய வீட்டைக் காட்டவே முற்படும். எதிர்மாறாக பெரிய கல்வீட்டைக் காட்ட முற்படுமாயின் அப்பிள்ளையானது இலக்குகளைக் கொண்டு குறிக்கோளுடன் வாழும் நிலையை அறியமுடிகின்றது. பெரியவீட்டில் வாழும் பிள்ளையானது தனது வீட்டையே காட்டமுற்படும். இதன் மூலம் அப் பிள்ளையின் பொருளாதார நிலையை அறியலாம். மாறாகச் சிறிய வீட்டைக் காட்ட முற்படுமாயின் பிறரின் துன்பத்தில் பங்குகொள்ளும் பிள்ளை எனவும் பிறருக்கு உதவும் மனப்பாங்குடைய பிள்ளை எனவும் அறியமுடிகின்றது.

காட்சிகளின் அழகுப்பொருத்தப்பாட்டினைக் கொண்டு பிள்ளைகளின் கற்பனைத்திறன், இரசனை உணர்வு, நயக்கும் திறன் என்பவற்றை அறியமுடியும். மேலும் சில பிள்ளைகள் தமது பிரச்சனைகளை வெளிப்படையாகக் கூறாமல் அடிமனதில் பதித்து வைத்திருக்கும் இவ்வாறான பிள்ளைகள் சில குறியீடுகளின் மூலம் தமது பிரச்சினையை வெளிப்படுத்தமுயல்வர். இவை மட்டுமன்றி குடும்பத்தில் பிள்ளைகளின் சுத்தமான சுகாதாரமான பழக்கவழக்கங்களையும் இனங்காணமுடியும். அதாவது சுத்தமாக வாழும் பிள்ளையானது தனது ஆக்கங்களை மிகவும் நேர்த்தியான முறையிலும் அழகாகவும் உருவாக்குவர். நல்ல சுத்தம் சுகாதார பழக்கவழக்கங்கள் அற்ற பிள்ளையின் ஆக்கங்களில் நேர்த்தியான தன்மை காணப்படாது. அத்துடன் அழகு குறைவாகவும் காணப்படும்.

இவ்வாறாக சித்திரப் பாடநெறியை மாணவர்கள் கற்றுக்கொள்வதன் மூலம் எதிர்கால சமூகத்தில் சிறந்த இடத்தினைப் பெறுவதற்கு துணை புரிகின்றது. மேலும் கலை ரசனை, கற்பனைத் திறன், நயக்கும்திறன், ஆக்க வெளிப்பாட்டுத் திறன் என்பன போன்ற பல்வேறு விடயங்கள் கட்டியெழுப்பப் படுவதோடு சிறந்த ஓவியராகத் திகழவும் சித்திரப்பாடநெறி உதவுகிறது. எனவே இன்றைய கற்கும் சமூகம் மேற்படி சிறுவர் சித்திரங்கள் தொடர்பான விளக்கங்களைப் பெற்று அதனோடு தொடர்புடைய உளவியல் சார்ந்த விடயங்களைக் கருத்திற் கொண்டு கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பது சிறப்பாக அமையும் என்பதில் எதுவித மறுப்பும் கிடையாது. ஆகவே சிறுவர்களின் சித்திரங்களின் மூலம் மனவெழுச்சி வெளிப்பாடுகளை இனங்கண்டு அதற்கேற்ப செயற்படுவது இன்றியமையாததாகும்.

"இன்றைய சிறுவர்கள்
எதிர்காலத் தலைவர்கள்"

## உசாத்துணை


1. சிறுவர் சித்திரங்கள் - தேசிய கல்வி நிறுவகம்.
2. விரிவுரையாளர் திரு.சு.ரவீந்திரன் அவர்களுடன் கலந்துரையாடிப் பெற்ற சில தகவல்கள்.



**போ.புஸ்பநாதன்**
(கட்டுறுப் பயிலுனர்)


தன்னம்பிக்கை இல்லாதவனின் வாழ்க்கை தாமரை இலை நீர் போல் தத்தளிப்பதே ஆகும் வாழ்க்கையாகிய பெருங்கடலில் தன்னம்பிக்கை என்னும் தெப்பமே நம்மை கரை சேர்க்க வல்லது



# கருவறைச் சிசுக்களின் அவலக் கண்ணீர்

கருவறைச் செடிகளில் தெரிந்தும்
மொட்டாகவே நசுக்கப்படும்
இளம் ரோஜாக்கள்

அழகிய புல்லாக வளர்ந்து வரும் போது
மாடுகளால் மேயப்படும்
பச்சைப் பசேல்கள்

மதிகெட்ட சமூகம் மதிப்பறியாமல்
அழித்துக் கொண்டிருக்கும்
மாணிக்கக் கற்கள்

வாழ்க்கை எனும் கனவின் காலடியை
தொட்டுக் கூட பார்க்க முடியாமல்
கரைந்து போன மூன்றாம் பிறைகள்

வயிற்றுக் கடலின் பயணத்தில்
மருத்துவ சோதனை எனும் புயலில் சிக்கி
உருவில்லாமல் உடைந்து போன
தங்கக் கப்பல்கள்

தாய் மார்களே! வைத்தியர்களே!
ஏன் எங்களை அழிக்கின்றீர்கள்?
நீங்களும் ஒரு வேளையில்
சிசுவாக இருந்தவர்கள் தான்
அதை சற்று எண்ணிப் பாருங்களேன்.

**அ.லக்ஸ்மன்**
**குருமண்வெளி**

# தன்னூரே தனக்குக் கதி...

குளங்களாலும் பச்சைப்பசேலென்னும் வயல் வெளிகளாலும் ஊடுருவிப் பாய்ந்தோடும் மட்டக்களப்பு வாவியினாலும் சூழப்பெற்ற அந்த அழகிய கிராமத்தில் கணபதிப்பிள்ளையின் சில்லறைக் கடையிருந்தது. பார்த்தால் கண்ணுக்கெட்டிய தூரத்தில் நான்கைந்து வீடு கழித்தாற்போல் அந்த ஏழை மகாலிங்கத்தின் பனையோலைக் குடிசை. அவன் மனைவியின் பெயரோ மரகதம். இவர்களுக்கோ தங்கம் போல் கமலா, சந்திரன் என இரு பிள்ளைகள்.

திடீரென மகாலிங்கத்தின் குடிசை முன்னால் ஒரு புத்தம்புதிய பளபளப்பான கார். அந்தக் கிராமத்தில் இதனைப்போல் ஒரு காரும் வந்தது கிடையாது. இந்தக் காரைக் கண்டதும் அங்குள்ளவர்களுக்கெல்லாம் ஒரு வியப்பான புதுனம்.

குடிசை முற்றத்திற்கு வந்து எப்படிப்பார்த்த மரகதத்தின் கண்களில் புரியாத ஓர் ஆனந்தக்கண்ணீர். இதற்குக் காரணம் அந்த வண்ணத்துப் பூச்சியின் அழகைப்போன்ற அந்தக் காரில் வந்து இறங்கிய தன் அண்ணன் வரதன்.

வாங்கண்ணா வாங்க. கம்லா... கமலா... இங்க வாயேன் வந்துபார் யார் வந்திருக்கான்று. என்றவாறே ஒரு கதிரைக்கும் கூட வழியில்லாத அந்த ஏழைகளின் வீட்டிலிருந்த ஓலைப்பாயைப் போட்டாள் மரகதம். இல்லை நான் இருக்கவில்லை என்று சொன்னதும் மரகதத்தின் மனதில் ஓர் அழுத்தம்.

யாரம்மா இவரு நான் ஒருநாளும்கூட பார்த்ததில்லையே. என்னடி நீ கேட்ட கேள்வி இது என்ர அண்ணன். உன்ர மாமன்.

என்னம்மா உன்ர மகளா? ஆமாண்ணன் என்ர மகள்தான். கமலா ஆமாம் உனக்கு ரெண்டு பிள்ளைகளாமென்று கேள்விப்பட்டன். இப்படிக் கேட்கும்போதே உயிரற்ற மனிதனைப்போல் ரெயில் வண்டியின் ஓசையைப்போன்ற இறதல் சைக்கிளை உருட்டிக்கோண்டு வந்த சந்திரனுக்கு தன்ர வீட்டுக்கு முன்னால் நிற்கும் அந்த மினுமினுப்பான காரைக் கண்டதும் ஒரு அதிசயம். படலையைத்தாண்டி உள்ளே சென்றால் வெள்ளையும் சுள்ளையுமாக ஒருத்தர். இதோ என் மகன் சந்திரன் என்றதும் இவர்தான் நம்ம அம்மாவின் அண்ணன் என்று அவன் புரிந்துகொண்டான்.

கமலா தேத்தண்ணீ ஊற்றிக்கெண்டு வருகிறாள். இல்லை இல்லை எனக்கொன்றும் வேண்டாம் நான் இப்பதான் சண்முகம் வீட்டில ரீ குடிச்சநான்.

ஊருல அண்ணி பிள்ளைகளெல்லாம் எப்படியண்ண இருக்கிறாங்க அவங்களையும் கூட்டித்து வந்திருக்கலாமே.

ஊரில் இருந்து நாங்க எல்லோருந்தான் ஒருவாரம் கடைக்கு லீவு போட்டுத்து வீடுவாசலை எல்லாம் பூட்டிக்கொண்டு வந்த நாங்க. இங்க வரும் போது கூப்பிட்ட நான் தான் சரியான வெயிலாக இருக்குதாம் என்று சொல்லிக் கொண்டு மகாலிங்கத்தின் வீட்டில இருக்கிறாங்க.

ஆமாண்ண கேட்கவே மறந்திட்டன் என்ன விசயமாக யாழ்ப்பாணத்திலிருந்து வந்தநீங்க?

அதை என்னத்தம்மா கேட்கிறா. இது என்ன ஊரா இங்க உள்ள சனங்களெல்லாம் காட்டுமிராண்டிகள் காட்டில வசிக்கிறதுங்களெல்லாம் இங்கதான் கிடக்குதுாங்க. நான் வேண்டிப்போட்ட வளவில அடைச்சியிருந்த வேலிகளையெல்லாம் பிடுங்கித்துப் போயிருச்சுகள் மரங்களில்ல காய்ச்சிக் கிடந்த மாங்காய், தேங்காய்களை எல்லாம் பிச்சித்திண்டிருச்சிங்க அதுதான் இந்த வளவு விற்பம் என்று வந்த நான். அதுமட்டுமா இங்க உப்புத்தண்ணியாம் பிள்ளைகளுக்கெல்லாம் விருப்பமில்லை.

ஏன் யாரையாவது அந்த வளவில வைக்கலாம் தானே அண்ண. நல்லாயிருக்கும் நீ சொல்றது. யாரையாவது வைக்கப்போய் நாளைக்கு அவங்க வளவுல உரிமை கொண்டாடினால் நம்மட கெதி என்ன? பிறகு செகிடன் காதில சங்கு ஊதியதைப் போலதான் நம்ம நிலையும்.

சரி சரி நான் பேசிக்கொண்டே நிற்கிறன் மகாலிங்கம் எங்கம்மா காணல. அவருக்கு ஏளெட்டு நாளாக உடம்பேசரியில்ல. வேணாம் வேணாம் என்று சொல்லச் சொல்ல வேலைக்குப் போயிருக்காரு. அவரும் இல்லையென்றா என்னத்த சாப்பிடுறது.

ஏன் சந்திரனுக்கு என் மகள் லதாவின்ர வயசுதானே இருக்கும். மூத்தவ காவேரி சந்திரனுக்கு இரண்டு வயதுக்கு மூப்பு. என்ர மகள் லதா படிப்பையெல்லாம் முடிச்சி வேலைக்காக காத்துக் கொண்டிருக்கிறாள். சந்திரனுக்கு கொழும்புல நான் வேலைவாங்கித்தாரன் என்று வரதன் சொன்னதுமே அடிக்கும் கடல் அலையைப்போல் பாய்ந்தது மரகதத்தின் மனம். சந்திரனையும் ஒரு வேலைக்காரனாகத்தான் தன் அண்ணன் பார்த்தான் என்பது அவள் கள்ளம் கபடமற்ற மனதிற்கு புரியவில்லை.

சரி நான் அப்ப போய்வாரன். அண்ணி, பிள்ளைகளைப் பார்க்க வேணுமென்றால் சண்முகத்தின் வீட்டில வந்துபாரு நாங்க வந்து மூன்றுநாளாகுது. நாளைக்குப் போயிருவம். என்று சொல்லிக் கொண்டே சால்வையைத் தோளில் போட்டவாறு புறப்பட்டார். சொந்த இரத்தபாசத்தைக்கூட மதியாத பணத்தில் மதிமயங்கிப்போன மரகதத்தின் பாசமான அண்ணன் வரதன்.

என்னம்மா உங்கட அண்ணனைப்பற்றி எல்லையற்றளவெல்லாம் புகழ்ந்து சொல்லுவேங்களே அவருடைய குணத்தப் பாத்திங்களா கூடப்பிறந்த தங்கச்சியின் வீட்டில் உக்காரவேயில்லை. அப்பிடித்தான் கேளுடா சந்திரா உக்காரவும் இல்ல, தேத்தண்ணீ குடிக்கவுமில்ல தன்ர பணக்காரப் புத்திய காட்டித்தாரு பார்த்தாயா?

நான் ஆருகிட்ட வேலைக்குப்போனாலும் இவருகிட்ட வேலைக்குப் போகமாட்டன். நம்மட ஊரைப்பற்றியெல்லாம் எவ்வளவு கேவலமாகப் பேசி அவமானப்படுத்தினார். என்னென்னவோ சொன்னார் இந்த ஊரில இருக்கிறதுங்களெல்லாம் காட்டுமிராண்டிகளாமா அப்படியன்றா அவரென்ன வெள்ளைக்காரன்ட வயிறிலையா பிறந்தார். இந்த ஊரிலதானே பிறந்தவர் அதுக்குள்ள அவரின்ர கதையைப் பாரேன். விழுந்தாலும் மீசையில மண்ஒட்டாத கதை.

ஆமாண்டா சந்திரா இந்த ஊரில உப்புத் தண்ணியாம் வெயில்ல வந்தா கறுத்துருவாங்களாம். அவங்க பெரிய எலிசபெத்தியன் மகாராணிகள் நாம போய் அவர்களைப் பார்க்கணும்.

நாளைக்கு யாராவது அவங்களைப் பார்க்கப்போனால் என்ன நடக்கும் என்று பாருங்களன். இத ஏன் என்கிட்ட சொல்றா உண்ட பாசமான அம்மாட்ட சொல்றதுதானே.

இடி இடித்துஇ மின்னல் மின்னி பெய்து ஓய்ந்த மழையைப்போல் சந்திரனும், கமலாவும் கேட்ட கேள்விகளுக்கு முகங்கொடுக்க முடியாமல் கொளுத்தும் வெயிலில் பிடுங்கிவைத்த துளசிச் செடியைப் போல் மனம் வாடிப்போனாள் மரகதம்.

மறுநாள் காலையில் மரகதம், மரகதம் என்றவாறே ஒரு கூக்குரல் யார் என்று பார்த்தா மரகதத்தின் முன்னால் பதபதப்புடன் இழுத்து வாங்குகின்ற மூச்சுகளுடன் கண்ணம்மா. என்னடி கண்ணம்மா இவ்வளவு அவசரமா வந்திருக்கா?

என்னடி மரகதம் உனக்கு ஒன்றுமே தெரியாதா? என்ன சொல்லுறா நீ? யாழ்ப்பாணத்தில உன்ர அண்ணன் வரதன்ட வீட்டுல இரவு ஷெல் கொண்டு விழுந்துத்தாம் மாடி வீடாம் மற்ற எல்லாப் பொருட்களாம் எல்லாமே தரைமட்டமாகித்தாம் என்று சொன்னதுமே மரகதம் கதறி ஒப்பாரி வைத்தாள்.

நீ ஏன்டி கதறனும் உன்ர அண்ணன் பொன்டாட்டி பிள்ளைகளுக்கு ஒன்றுமில்ல நல்லகாலம் அவங்க யாழ்ப்பாணத்திற்குப் போக புறப்படும் போதே செய்தி எட்டித்து பணம் இண்டைக்கு இருக்கும் நாளைக்குப் போகும் குணந்தான் வேணும் என்று உன்ர அண்ணன் குடும்பத்தாக்கள் நினைச்சாங்களா? என்று புறப்பட்டாள் கண்ணம்மா.

இதனை அறிந்த கமலாவும், சந்திரனும் பணத்திமிர் உள்ளவரகக்கெல்லாம் இதுதான் கெதி எந்த ஊரையும் கழிச்சி வைத்தாங்களோ அந்த ஊரும் மக்களுந்தான் கடைசியில் அத்திவாரத்திற்கு. அதுதான் கழித்த கல்லுதான் கடைசியில் அத்திவாரத்திற்கு உதவும் என்று சொல்லுவார்கள் அது இதுதான்.

**உ. தனுஷாந்தினி**

*தரம்:-13 கலை*



ந
ட்
பி
ன்
ம
கி
மை

நட்பெனும் ஒரு சொல்லில்
ஆயிரம் விண்மீன்
ஒளிர்வதைக் கண்டேன்
ஓராயிரம் சிறகுகள்
அதற்கும் உண்டென
உணர்ந்தேன்
மனிதத் தேடலில்
நட்பும் ஓர் தேவையென
உணரக் கண்டேன்...

**லி. நிஷாந்தா**

தரம்-13 கலை

# நவீன அரங்கில் காட்சியமைப்பு

ஒரு நாடகத்தின் பௌதீகச் சூழலை மேடையில் கொண்டு வருவதற்கு காட்சியமைப்பு உதவுகின்றது. அரங்கு கட்புல, செவிப்புல, மூலங்களைக் கொண்டது. இதில் கட்புலக் கூறுகள் மிக முக்கியமாகும். ஆகவே காட்சியமைப்பு முக்கியமாகின்றது. காட்சியமைப்பு சூழலையும் கதையுடன் ஒன்றிப்பதற்கான மனநிலையையும் கதையின்ஃ பாத்திரத்தின் நிலையையும் கதைப்பின்னணியையும் காட்டி நிற்கின்றது.

இக்காட்சியை வடிவமைக்கும் போது சில அடிப்படை விதிமுறைகளை நாம் கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| **இசைவு** | – | Harmony |
| **சீர்** | – | Valance |
| **விகிதம்** | – | Proportion |
| **அழுத்தம்** | – | Emphasis |
| **சீர்ப்பிரமாணம்** | – | Rhythm |

காட்சியமைக்கும் போது ஒவ்வொரு சிறு காட்சியும் முரணற்றதாக அமைய வேண்டும். காட்சிகள் மாறுகின்ற போது அந்த மாற்றம் ஒருமையை நோக்கியதாக இருக்க வேண்டும். இது இசைவு என அழைக்கப்படும். சீர் எனும் போது நாடகத்திற்கான உறுதியை வழங்குவதாக அமையும். அதாவது மேடையின் இரு பகுதிக்கும் சரியான அளவில் சுமைகளை பங்கிட்டுக் கொடுப்பதன் மூலமே இந்த உறுதியைக் கொடுக்க முடியும். இங்கு நிறம், இழைநயம் (Texere) என்பனவும் கவனத்தில் எடுக்கப்படும்.

காட்சியமைப்பில் பொருட்களை பொருத்துகின்ற / சேர்க்கின்ற திறமையினால் அக்காட்சிக்கு அழுத்தம் உண்டாகின்றது. மேடையில் ஒரு தனி நாற்காலி கூட அது போடப்படும் விதத்திற்கேற்ப காட்சிக்கான அழுத்தம் வேறுபடும். காட்சியமைப்பின் பாகங்களுக்குள் தொடர்பை ஏற்படுத்தக் கூடியதாகவும், ஒரு வடிவத்தின் அளவு மற்றைய வடிவத்தின் அளவோடு பொருந்தக் கூடியதாகவும் காட்சியமைப்பின் விகிதம் அமைதல் வேண்டும். சீர்ப்பிரமாணம் என்பது காட்சிப் பொருட்களுக்கிடையிலான அசைவியக்கத்தைக் குறிக்கும். அதாவது காட்சி ஒன்றின் ஒரு பகுதியில் இருந்து இன்னொரு பகுதிக்கு கண் நகர்வதற்கு சீர்ப்பிரமாணம் உதவும்.காட்சியமைப்பில் மேலும் கவனிக்க வேண்டிய விடயங்களாக கோடுகள், வர்ணம், வெளி, என்பன உள்ளன.

### கோடுகள்

கோடுகள் அளவிற்கேற்ப குறுகிய /நீண்ட கோடுகளாகவும், பண்பிற்கேற்ப நேர்/ வளை கோடுகளாகவும், குணங்களுக்கேற்ப ஒத்திசை முரண் கோடுகளாகவும் அமைகின்றன. ஒரு காட்சி விதானிப்பாளன் காட்சியை மனக்கண் முன் கொண்டு வந்து முதலில் கோடுகள் மூலமே வரைகின்றான். இக்கோடுகள் அதன் தன்மைக்கேற்ப பல்வேறு உளவியல் அர்த்தங்களைக் கொடுக்கின்றன. இக்கோடுகளை பிரதானமாக நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

1. கிடைக்கோடுகள்
2. செங்குத்துக் கோடுகள்
3. சாய் கோடுகள்
4. வளை கோடுகள்

கிடைக்கோடுகள் மனிதச் செயற்பாட்டின் அழுத்தத்தையும், செயலற்ற தன்மையையும் குறிக்கும். கிடையாகக் கிடக்கும் பாறாங்கல் அழுத்தத்தையும், தூங்கும் மனிதன் செயலற்ற தன்மையையும் குறித்து நிற்கின்றன. செங்குத்துக் கோடுகள் செயற்பாட்டைக் காண்பிப்பவை. நின்று கொண்டிருப்பவன் செயலில் இருக்கின்றான். செயலில் ஈடுபடப் போகின்றான், எல்லாவற்றையும் விட அவன் உயிரோடிருக்கிறான். நாடகத்தின் அசைவியக்கத்தில் இச் செங்குத்துக் கோடுகள் பிரதான பங்கினை வகிக்கின்றன.

சாய் கோடுகள் ஒரு ஸ்திரமற்ற தன்மையைக் காட்டுவதாக அமைகின்றன. தடுமாறி விழும் மனிதன், சாய்ந்து விழும் மரம், கவிழ்ந்து விழ இருக்கும் வாகனம் என்பன இச்சாய்கோடுகளால் குறிக்கப்படும். வளை கோடுகள் பதட்டம், அமைதியற்ற நிலை, குழப்பமான சூழ்நிலை இவற்றைப் பிரதிபலிக்கும். குழம்பிய மனிதன், காற்று, புயல், அலைகள் இவையெல்லாவற்றையும் வளை கோடுகள் வெளிப்படுத்தும்.

## வர்ணங்கள்

வர்ணங்களுக்கும் மன நிலைக்கும் இடையில் நெருங்கிய தொடர்பிருக்கின்றது. நாடகக் காட்சியமைப்பில் வர்ணங்களை நாம் பயன்படுத்தும் விதம் அதனை ஒன்றுடன் ஒன்று இணைக்கும் முறை என்பவற்றால் காட்சிப் பாதிப்பை Visual Impact) இலகுவாக ஏற்படுத்த முடியும்.

வர்ணங்களில் சிவப்பு, மஞ்சள், நீலம் என்பன அடிப்படை வர்ணங்கள் எனவும் பச்சை, ஊதா, செம்மஞ்சள், என்பன துணை வர்ணங்கள் எனவும் அழைக்கப்படும். இவற்றில் சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள் என்பன பிரகாச வர்ணங்களாகவும், நீலம், பச்சை, ஊதா என்பன குளிர் வர்ணங்களாகவும் உள்ளன.

வர்ணங்களின் பாவனையைப் பொறுத்த மட்டில் வெண்மை நிறத்தை வேறு நிறங்களுடன் படிப்படியாகச் சேர்க்கும் போது இளம் நிறமாகவும் ( Tint Colours) கறுப்பு நிறத்தைச் சேர்க்கும் போது அது கருநிறமாகவும் மாறும். இதனை நிற அழுத்தம் என்கின்றோம்.

வர்ணங்களின் குணாதிசயத்தினைப் பொறுத்த வகையில் சிவப்பு - ஆபத்து, மஞ்சள் - இளமை ஆரோக்கியம், ஊதா – Royalty, Brown – Faith, Poverty, Sadness, Orange – அறுவடை, நீலம் - Romances, Truth, பச்சை – Live, Youth, வெள்ளை - சமாதானம், கறுப்பு - இறப்பு பயங்கரம் என்பவற்றைக் குறிக்கும். இந்த வர்ணங்களை நாம் சேர்க்கும் போது அவ்வர்ணங்களின் குணங்கள் நாடகக் கருவோடு ஒன்றிப்பதாக அமைய வேண்டும். ஒரு நாடகத்தில் எல்லா வர்ணங்களையும் நாம் பயன்படுத்து வதானாலும் அந்த நாடகத்தைப் பிரதிபலிக்கக் கூடிய வர்ணம் பெருமளவில் வெளிப்படையாகப் புலப்படும் விதத்தில் அமைதல் வேண்டும்.

## தன்மை, வடிவம்

பாத்திரங்களின் தன்மையை மென்மை, கடினம் என இரு பெரும் பிரிவுக்குள் அடக்க முடியும். சில நாடகங்களில் முரட்டுத் தன்மையான இழைநயமும் சில நாடகங்களில் மிருதுவான இழைநயமும் கொண்டு காணப்படும். எனவே நாடகத் தன்மையை / பாத்திரக் குணாம்சத்தை வெளிப்படுத்தக்கூடியதாக பொருட்களின் தன்மை அமைதல் வேண்டும்.

காட்சியமைக்கும் போது வடிவங்கள், அவற்றிற்கிடையிலான வெளி என்பனவும் கவனத்தில் எடுக்கப்படுதல் வேண்டும். வடிவங்கள், வட்டம், உருளை, செவ்வகம், சதுரம், என பாத்திரக் குணாதிசயத்திற்கேற்ப தீர்மானிக்கப்படும். இதே போல் பொருட்களுக்கிடையிலான இடைவெளி எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதும் நாடகப் பகுதிக்கு ஏற்ப வித்தியாசப்படும்.

## காட்சியமைப்பின் வேலை முறை

ஒரு காட்சியமைப்பாளன் நாடகப் பிரதியை முழுமையாக வாசித்து அதனுடைய கரு, செயல், பாத்திரங்கள், மொழி, எனப்பகுத்தாராய்ந்து நாடகத்தின் முழுமையான தன்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். அத்தோடு நாடக ஒத்திகைகளில் கலந்து கொண்டு நடிகர்களின் அசைவியக்கங்களை கவனித்துக்கொண்டு அதற்கேற்றதாக காட்சியமைப்பை உருவாக்க வேண்டும். காலம், இடம், சூழல், என்பவற்றுக்கு ஏற்ப பிரதிக்கும், காட்சிக்கும் இடையில் தொடர்பை காட்சியமைப்பாளன் ஏற்படுத்த வேண்டும்.

காட்சியமைக்கும் போது பார்வையாளனது கற்பனைக்கு இடையூறு ஏற்படாத வகையில் அமைப்புக்களை உருவாக்க வேண்டும். இதற்கான வரைபடங்களை உருவாக்கி இயக்குனரோடும், நாடகக் கலைஞர்களோடும் கலந்துரையாடல் வேண்டும். ஒலி, ஒளி, இசை, நடன, உடை, வடிவமைப்பாளர்கள் அனைவருடனும் இக்கலந்துரையாடல் இடம்பெற வேண்டும். அத்துடன் பின்வருவனவற்றையும் கவனிக்க வேண்டும்.

1. காட்சியமைப்பின் முழுமையான வரைபடம்
2. தரை வரைபடம்
3. காட்சியின் அளவுகோல் மாதிரி
4. பின்கோணத்திலிருந்து காட்சிப் பொருட்கள் இடம்பெறும் முறை
5. முன்முகப்புக் கோணத்திலிருந்து காட்சிப் பொருட்கள் இடம்பெறும் முறை
6. இருபுறக் கோணங்களிலிருந்தும் காட்சியின் தன்மை
7. மேடைப் பொருட்கள் பாவிக்கும் ஒழுங்கு முறை
8. காட்சிப் பொருட்களின் கோட்டு வரைபடம்
9. காட்சிப் பொருட்களுக்குப் பயன்படும் வர்ணம்
10. காட்சியமைப்பாளர் பிரதி

மேற்கூறிய வகையில் காட்சியமைப்பாளனினால் காட்சிக்குரிய வேலைத்திட்டங்கள் செய்யப்பட்டாலும் நெறியாளனின் கற்பனைக்கு ஏற்றதாகவே எல்லாம் தீர்மானிக்கப்படும்.

காட்சிப்படுத்தலில் மேடைப் பொருட்கள், கைப்பொருட்கள், என்பவற்றோடு நடிகர்களும் காட்சிக் கோலத்தினை உருவாக்குவர். காட்சியமைக்கும் போது மேடை உருமாற்றம் செய்யப்படுகின்றது. இவ்வாறு உருமாற்றும் போது நாடக மோடியும், மேடையமைப்பும் கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

யதார்த்த நாடகங்களின் காட்சியமைப்பு, நிஜத்தை ஒத்ததாக இருக்கும் வீடு எனும் போது வீட்டுக்குரிய அத்தனை பொருட்களும் அங்கு இருத்தல் அவசியமாகின்றது. குறியீட்டுப் பண்பு நாடகமாயின் கருத்துருவக் காட்சிகளாக அமையும். ஒரு கொடி ஒரு அரசியற் கட்சியைக் குறிக்கும், சிலவேளை ஒரு கப்பற் பயணத்தைக் குறிக்கும். ஒரு குறியீடு வெவ்வேறு அர்த்தங்களைத் தரக்கூடும். அதற்கேற்றது போல் காட்சிப் பொருட்களை அமைத்தல் அவசியமாகும்.

மேடையமைப்பினைப் பொறுத்த வரையில் வட்ட அரங்கா, தெருவெளி அரங்கா, படச்சட்ட அரங்கா, என்பதையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் வட்ட அரங்கில் காட்சியமைப்பது போல் படச்சட்ட மேடையில் காட்சியமைக்க முடியாது.

எனவே அரங்கில் காட்சியமைப்பு பிரதான இடத்தினை வகிக்கின்றது. இக்காட்சியமைப்பினை அமைக்கும் போது மேற்கூறிய விடயங்களை கவனத்தில் எடுத்தால் இக்காட்சிக்கான காட்சிப் பாதிப்பு மிகவும் உயர்வானதாக இருக்கும்.

**க.மோகனதாசன்**
விரிவுரையாளர்
நடன நாடகத்துறை
சு.வி.அ.க.நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

நாம் செய்யும் பெருந்தவறு என்னவென்றால் நம்முடைய தவறுகளில் இருந்து படிப்பினையைக் கற்றுக் கொள்ளுமாறு நம்மையே நாம் அனுமதிக்க மறுத்து விடுவதுதான். தவறுக்கான காரணங்களைக் கண்டு பிடிக்காது நம்முடைய உள் மனது நொண்டிச் சாக்குகளையும், போலி தற்காப்பையும் கூறி எம்மை ஏமாற்ற முயல்கின்றது.

# ஆசானைப் போற்றுவோம்

"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்பதற்கிணங்க குருவைத் தெய்வமாக போற்றிவணங்கவேண்டியது எமது தலயாய கடமையாகும் ஆசிரியர்கள் வெறுமனே அறிவை மட்டும் வழங்குபவர்கள் அல்லர். எதிர்கால சமுதாயத்தையே கட்டியெழுப்பும் மாபெரும் சக்தியைக் கொண்டவர்கள் மாணவர்களது நற்பண்புகளை வளர்தெடுப்பதிலும் இலைமறைகாய்களாய் உள்ள மாணவர்களது திறைமைகளை இனம்கண்டு அவர்களுக்கு ஊக்கம் கொடுப்பதிலும், அவர்களை கல்வியிலும் கலாசாரத்திலும் முன்னேற்றுவதிலும் பெரும்பங்கினை வகிப்பவர்கள் ஆசிரியர்களே என்றால் அது மிகையாகாது.

"அறிவற்றம் காக்கும் கருவி" அதாவது ஒருவரை இறுதிக்காலம் வரையும் காப்பாற்றும் கருவி அறிவாகும் இத்தகைய அறிவினை மாணவரிற்கு புகட்டி ஒவ்வொரு மாணவனது எதிர்கால கனவுகளையும் தன்னுடையகனவுகளாகக் கொண்டு அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுத்து எல்லோரும் மதிக்கும் படியான உயர்ந்தநிலைக்கு கொண்டுவருகின்ற பெருமை அனைத்து ஆசிரியர்களுக்கே உரியது ஒவ்வொரு மாணவரும் நிலத்தில் விதைக்கப்பட்ட விதைக்கு ஒப்பானவர்கள் அந்த விதைக்கு அறிவு, தன்னம்பிக்கை, ஒற்றுமை, மனஉறுதி, மன்னிக்கும் மனப்பான்மை ஆகிய போசனைக் கூறுகளை தகுந்தவாறு வழங்கி உலகிற்கே பயனுள்ள வகையில் விருட்சமாக்குபவர்கள் ஆசிரியர்களே என்பதை யாராலும் மறுக்க முடியாது.

அறிவுக்கு கண்கொடுத்த ஆசான்களுக்கு எம்மால் ஒருபோதும் கைமாறு செய்ய முடியாது. அன்னப்பறவையானது எவ்வாறு தண்ணீரை விடுத்து பாலை மட்டும் அருந்திக்கொள்கிறதோ அவ்வாறே அன்புக்காக ஏங்கும் குழந்தைகளுக்கும் சாதிக்க தவிக்கும் மாணவர்களுக்கும் நல்லவற்றையும் கெட்டவற்றையும் வேறுபடுத்தி அறியக் கற்றுக் கொடுப்பவர்கள் ஆசான்களே ஒரு வைத்தியரால் இன்னுமொரு வைத்தியரை உருவாக்க முடியுமா? ஒரு பொறியியலாளரால் இன்னுமொரு பொறியியலாளரை உருவாக்க முடியுமா? நிச்சயமாக முடியாது. ஆனால் ஆசிரியர்களால் மட்டும்தான் எத்தனையோ ஆசிரியர்களை, வைத்தியர்களை பொறியியலாளர்களை, வழக்கறிஞர்களை உருவாக்க முடியும். இத்தகைய மகத்தான தொழிலைச் செய்யும் ஆசான்கள் என்றும் வணக்கத்துக்குரியவர்களாவர். ஆசிரியர் என்பதனை ஆ- ஆக்குபவர், சி- சிற்பி, ரி- ரிக்ஷி, ய- யதார்த்தவாதி, ர்- அன்புடையவர் என பொருள்படுத்திக் கொள்ளலாம். குரு மீதுள்ள பற்றுக் காரணமாக ஏகலைவன் என்பவன் தனது பெருவிரலையே துரோணாச்சாரியாருக்கு வழங்கினான் என வரலாறு கூறுகிறது. "ஒருமைக்கண் தான் கற்ற ஒருவர்க்கு எழுமையும் ஏமாப்புடைத்து" அதாவது ஒருவன் ஒரு பிறவியில் கற்ற கல்வியானது ஏழ் பிறப்புக்களிலும் அவனைப் பாதுகாக்கும் சிறப்புடையது. இத்தகைய ஞான வேலான கல்வியினை இன மத வேறுபாடுன்றி கற்றுக்கொடுப்பது மட்டுமல்லாது மாணவர்கள் தோல்வியைக் கண்டு துவல்கின்ற போது அவர்களை கைகொடுத்து தூக்கி விடுவதுடன் மீண்டும்மீண்டும் முயற்சிக்கத்தூண்டுகின்றன.

இன்றைய உலகில் திறமையாக கற்கக் கூடிய எத்தனையோ மாணவர்கள் இருந்தும் அவர்களுக்கு கல்வி என்பது எட்டாக் கனியாகவே உள்ளது. காரணம் பணத்தின் தேவை அதிகரித்து விட்டது. இவற்றைக் கருத்தில் கொண்ட ஆசிரியர்கள் இன்றைக்கு எத்தனையோ மாணவர்களுக்கு இலவசமாக கல்வி புகட்டுவதுடன், பகுதி நேர வகுப்புக்களையும் நடத்தி வருகின்றனர்.

கருங்கல்லாக கல்லூரிக்குச் செல்லும் மாணவர்களை செதுக்கி சிலையாக வடிக்கின்ற வல்லமையுடையவர்கள் ஆசான்கள். உயர்ந்தவராயினும் தாழ்ந்தவராயினும் ஏற்றத் தாழ்வின்றி அனைத்து மாணவர்களையும் சரிசமமாக வைத்து கற்றுக் கொடுப்பதுடன் தன்னம்பிக்கையை அளித்து ஒவ்வொரு படியாக அடிமேல் அடிஎடுத்து வைத்து உயரத்துக்கு கொண்டு வருவதுடன் மகிழ்ச்சி கரமான வாழ்கைக்கு வழிவகுக்கின்றனர்.

ஒரு தங்கக்கட்டியானது அப்படியே இருந்து விட்டால் அதனால் பயன் எதுவுமில்லை. அதனைத் தீயில் வாட்டி பட்டறையில் அடித்து நகையாக மாற்றும் போதுதான் அதனைக் கழுத்திலோ, கையிலோ போட்டு அழகு பார்க்க முடிகிறது. இவ்வாறே ஒவ்வொரு மாணவரையும் தடைகளிலிருந்து வெளியே எடுத்து அவர்களுக்கு எதிர்காலத்தை சிறக்க வைக்கின்றனர். இத்தகைய அறிவு தரும் அமிர்த சஞ்சீவிகளுக்கு நன்றி செலுத்தும் முகமாகவே அகில உலகிலும் அக்டோபர் – 6 அன்று ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகின்றது. இவ்வகையில் ஆசிரியர்களின் முக்கியத்துவம் உணரப்பட்டு அவர்களின் தொழில் புனிதமாக கௌரவிக்கப்படுகின்றது.

நாட்டிற்குத் தேவையான நல்ல குடிமகனை உருவாக்கும் உலைக்களமே பாடசாலை. இங்கு உருவாகும் மாணவர்களே நாளைய உலகை பாதுகாக்கும் பாதுகாவலர்கள். இதனால்தான் ஒவ்வொரு ஆசிரியரும் மாணவர்களிடையே ஒற்றுமை உணர்ச்சியை ஊட்டவும், கூடிப்பணிசெய்யும் ஆற்றலை வளர்க்கவும், ஒழுக்கத்தை போதிப்பதற்குமான கடமைகளில் ஈடுபடுகின்றனர்.

எத்தனையோ ஆசான்கள் தமது கடமைகளை சரிவரச் செய்வதில் சவால்களுக்கு முகம் கொடுக்கின்றனர். மாதா, பிதா, குரு, தெய்வம் என்னும் வரிசையில் தாய் தந்தையருக்கு அடுத்த படியாகவும் தெய்வத்திற்கு முதற் படியிலும் விளங்குகின்றனர். கடுகை மலையாக்கவும் மலையை கடுகாக்கவும் கூடிய திறமை உடையவர்கள். உலகிற்கு சூரியன் எந்த அளவிற்கு முக்கியமோ அவ்வாறே மாணவர்கள் சமுதாயத்திற்கு ஆசிரியர்கள் இன்றியமையாதவர்கள்.

ஆக்கம் :- **சி. சிந்துஜா**
*தரம் : 11V*

*வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தினால் எல்லோரும்*
*சூரியனைப் போல் பிரகாசிக்க முடியும் இல்லையெனில்*
*மெழுகுவர்த்திதான்.*

# இலங்கையின் பொருளாதாரப் புவியியலை மீள வடிவமைத்தல்

உலக நாடுகளை நோக்குகின்றபோது பொருளாதார வளர்ச்சியானது சமமற்ற முறையிலேயே உள்ளது. இச்சமனற்ற வளர்ச்சியினூடாகவே பொருளாதார அபிவிருத்தியும் அடையப்பட்டுள்ளது கைத்தொழிலாக்க வளர்ச்சியின் ஊடாக பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கில் அரசுகள் றேற்கொள்ளும் கொள்கை சீர்திருத்தங்கள் உலகரீதியில் சில பிராந்தியங்களிலும் நாடுகள் ரீதியில் சில பிரதேசங்களிலுமே உயர்ந்து செல்வதாகவுள்ளது. பிராந்தியங்களுக்கிடையிலான அல்லது பிரதேசங்களுக்கிடையிலான பொருளாதார வளர்ச்சியானது சமமற்ற முறையில் அமைவதே தற்போது வளக்கமாக உள்ளது. யப்பான், அமெரிக்கா போன்று சீனா, இந்தியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளிலும் இத்தகைய நிலமையே காணப்படுன்றது. இதன் அடிப்படையிலேயே உலக வங்கியின் அபிவிருத்தி அறிக்யில் பொருளாதாரப் புவியியலை மீள்வடிவம் செய்தல் என்ற நோக்கம் முன்வைக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையானது உலக வங்கியின் இலங்கையின் பொருளாதார புவியியல் தொடர்பாக வெளியிட்டுள்ள முடிவுகளை பொருளாதார ஆர்வலர்களுக்கு விளக்குவதனை நோக்மாகக் கொண்டுள்ளது.

சமமற்ற வளர்ச்சியின் காரணமாக குறைந்த வருமானம் பெறும் மக்கள் தொகையினர் சில பிரதேசங்களில் மாத்திரம் அதிகரித்துச் செல்லும் நிலை உருவாகியுள்ளது. இலங்கையின் பொருளாதார புவியியல் நிலையும் அத்தகையதொரு சாயலையே கொண்டுள்ளது. இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் பொருளாதார ரீதியில் கனிசமான அளவு முன்னேறியுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைகள் காட்டுகின்றன இலங்கையில் வெளிநாட்டு வானிப செயலாற்றம் மிக உயர்வடைந்துள்ளது. 2008ம் ஆண்டில் 3.7 மில்லியன் கொள்கலங்களை இலங்கை தனது துறைமுகங்களின் ஊடாக அனுப்பியுள்ளது. எனினும் இவ்வாணிபத்தினூடாக நன்மைகளை இலங்கையின் மேல்மாகாணம் மாத்திரம் பகிர்ந்து கொள்ளக்கூடியதாகவே இருந்தது. இலங்கையில் மேல்மாகாணமே கைத்தொழில் வளர்ச்சியில் பெருகியுள்ளது. இதுவரை இலங்கையில் ஆட்சியதிகாரத்திலிருந்த அரசுகள் மேல்மாகாணத்திலே கைத்தொழில் விருத்திக்கான கூடியகட்டுமான வசதிகளை ஏற்படுத்தி கொடுத்துள்ளது. ஏறத்தாள 37000 கைத்தொழில் உற்பத்தி நிறுவனங்களை கொண்டுள்ள மேல்மாகாணங்களை 540,000 மேற்பட்ட வேலைவாய்ப்புக்களை வழங்குகின்றது இலங்கையில் மொத்த தேசிய உற்பத்திக்கு அண்ணளவாக 50சதவீதத்தின் பங்களிக்கின்றது. ஏனைய மாகாணங்கள் அனைத்தும் பங்களிப்புச் செய்யும் அளவிற்கு சமமான பங்களப்பினை மேல்மாகாணம் மாத்திரம் ஆற்றுகின்றது. ஆகாய, கடல் மார்க்க போக்குவரத்து, வங்கி மற்றும் நிதித்துறைகள் பாரிய உற்பத்தி நிறுவனங்கள் என்பன மேல்மாகாணத்திலேயே செறிந்துள்ளன.

கொழும்பை மையமாகக் கொண்டுள்ள உயர்வான பொருளாதார மலைகள் ஏனைய மாகாணங்களில் உள்ள பொருளாதார மலைகளை விட கூடிய வருமானம் பெறும் வாய்ப்பினை வழங்குகின்றன. எனினும் உலகின் ஏனைய நாடுகளிலுள்ள பொருளாதார மலைகளுடன் ஒப்பிடுகின்ற போது கொழும்பை மையமாகக் கொண்டுள்ள பொருளாதார மலைகளின் வளர்ச்சி மிகக் குறைவே

கொழும்பின் பொருளாதார செறிவு ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 15மில்லியன் டொலர்களாகும். இதனை உலக சந்தையில் தங்களுடைய நாடுகளை இணைக்கும் பிரதேசங்களான ஹோஷின் மின் நகரத்தின் சதுர கிலோமீற்றருக்கான 37மில்லியன் டொலர்கள் பங்கொக் நகரத்தின் சதுர கிலோமீற்றருக்கான 88மில்லியன் டொலர்கள் மற்றும் சிங்கப்பூர் நாட்டின் சதுர கிலோ மீற்றருக்கான 269 மில்லியன் டொலர்களாகும்.

மேல்மாகாணத்தின் வளம்மிக்க தன்மையானது. கொழும்பிற்கு மிகவும் தொலைவில் உள்ளவர்கள் உட்பட பல இலங்கையர்களின் வாழ்க்கை தரத்தை மிகவும் உயர்த்தியுள்ளது. கொழும்பு நகரத்தில் வசிக்கும் 650,000 திற்கும் அதிகமான மக்கள் நாட்டின் ஏனைய பாகங்களிலேயே பிறந்துள்ளனர். பலர் அண்மையிலுள்ள காலி, களுத்துறை, கண்டி போன்ற பிரதேசங்களிலிருந்தும் பலர் யாழ்ப்பாணம் போன்ற தூரப் பிரதேசங்களிலிருந்து வந்து கொழும்பில் வசிக்கின்றனர். பொருளாதார உற்பத்தி முக்கியமானதொரு காரணியாக மாறியுள்ளது. அதேவேளை சமூகநலனை மையமாகக் கொண்ட பொது கொள்கைகளும் குறிப்பிடத்தக்க வெற்றிகளை கண்டுள்ளது. கல்வி அடிப்படை வைத்திய சேவைகள், நீர் சுகாதாரம் உள்ளடங்கிய அடிப்படை உட்கட்டமைப்பு நாட்டின் சகல பாகங்களுக்கும் சென்றடைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இது வளங்களைத் தங்களுக்கு அனுகூலமாகப் பயன்படுத்த இலங்கை முயற்சித்துள்ளமையை வெளிப்படுத்துகின்றது. எனினும் இவ்வாறான இடம்சார்ந்த மாற்றங்களை அதிவேகத்தில் அடைந்து அதிகளவிலான இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்க கொள்கைகள் அவசியப்படுகின்றன.

தேச ஒருங்கிணைப்பிற்கான கொள்கைச் சட்டகமொன்றினை (உலக அபிவிருத்தி அறிக்கை 2009 : பொருளாதார புவியியலை மாற்றியமைத்தல்) வழங்குகின்றது. அத்துடன் நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர்களால் கைவிடப்பட்ட பிரதேசங்களில் வளர்ச்சியை அதிகரித்தல் என்பதில் மாத்திரம் முழுக் கவனத்தையும் செலுத்தாது பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரதேசங்கள் மற்றும் முன்னேற்றமடைந்த பிரதேசங்களுக்கிடையில் காணப்படும் அதிகரித்த ஏற்றத்தாழ்வுகள் மீதும் பொதுக் கொள்கைகள் அக்கறை செலுத்தவேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றது. நாடுகள் துரித கதியில் பொருளாதார முன்னேற்றத்தை அடையவும் பிரதேசங்கள் மத்தியில் வாழ்க்கை தரம் ஒன்றோடொன்று இணைவதற்கும் தேவையான பிரதான காரணிகளாக தொழிலாளர் தொடர்பான புவியியல் நகர்வினை ஏற்படுத்தலும் பின் தங்கிய மற்றும் முன்னேற்றமடைந்த பிரதேசங்களுக்கிடையிலான பொருளாதார இணைப்பினை விருத்தி செய்தலுமாகும் என பொருளாதார புவியியலை மாற்றியமைத்தல் என்ற அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.

பிரதேச ரீதியான அல்லது இடஞ்சார்ந்த குருட்டுத்தன்மை கொண்ட கொள்கைகள் உருவாக்கமானது இடஞ்சார்ந்த கூர்மையான விளைவுகளை கொண்டுள்ளது. முன்னேற்றமான வருமான வரிக் கொள்கைகள், அடிப்படை சுகாதாரம் மற்றும் கல்வி சுட்டிகளுக்கான தேசிய குறைந்தபட்ச தரங்களை அடைதல் மற்றும் தொழிலாளர் நகர்விற்கான தடைகளை அகற்றுதல் போன்றவையே இங்கு பிரதானமானவையாகும். அத்துடன் போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு முன்னேற்றங்கள் போன்றவை பின்தங்கிய பிரதேசங்களையும்

முன்னேற்றமடைந்த பிரதேசங்களையும் நேரடியாக இணைத்து பொருளாதார அபிவிருத்தியை அதிகரிக்கும். உள்ளக பிரிவுகளின் காரணமாக உற்பத்திக் காரணிகளின் நகர்வு பலமற்று காணப்படும் பட்சத்தில் மாத்திரமே கடைசி உபாயமாக இதனை உபயோகிக்க வேண்டும். தற்போதைய நிலையில் இடஞ்சார்ந்த இலக்குகளை இலங்கையில் பல கொள்கைகள் அளவுக்கதிகமாக வலியுறுத்துகின்றன. எனினும், இம் முயற்சிகள் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார நன்மைகளை அளிக்கவில்லை. கொழும்பிற்கு அப்பால் பொருளாதார நடவடிக்கைகளை நகர்த்த முதலீட்டுச் சபையினால் வழங்கப்பட்ட மானியங்களை கருத்தில் கொள்ளும் போது இது தெளிவாகும். 200 ஆடைத் தொழிற்சாலைகள் திட்டத்தில் முதலீட்டுச் சபை சட்டத்தின் 17ஆவது உறுப்பின் கீழ் அனுமதி வழங்கப்பட்ட 80சதவீதம் முதலீடுகள் மேல் மாகாணத்திலேயே தாபிக்கப்பட்டன. இவை பின்தங்கிய பிரதேசங்களில் இடம்பெறவில்லை. இடம் சார்ந்த குருட்டுத்தன்மையினை குறைப்பதனை இலங்கையில் உருவாக்கப்பட்ட கொள்கைகள் நோக்காகக் கொண்டிருந்த போதிலும் அவை அடையப்பட்டனவா என்பது விமர்சனத்திற்குரியது. அத்துடன் தொழில்வாய்ப்பினை உருவாக்க உதவிபுரியும் " Nipayum Sri Lanka" என்ற முக்கிய திட்டத்தில் முதலீடு செய்யப்பட்ட 44 மில்லியன் ரூபாயில் 21மில்லியன் ரூபா மேல் மாகாணத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. இதேபோன்று பின்தங்கிய பிரதேசங்களில் கிராம அபிவிருத்தியை அதிகரிக்கும் பொருட்டு விவசாய நிலங்களின் உபயோகம் மற்றும் கை மாற்றம் தொடர்பான சட்ட முயற்சிகள் பிரதிகூலமாக விளைவுகளையே ஏற்படுத்துகின்றன. நில அபிவிருத்திச் சட்டங்கள் கிராம பிரதேசங்களில் பன்மைப்படுத்தலை மட்டுப்படுத்துகின்றது. மேலும் பண்ணை மற்றும் பண்ணையல்லாத செயற்பாடுகளில் மிகவும் குறைந்த ஊதியம் வழங்கப்படும் காரணத்தால் வறுமைக்குறைப்பு திட்டத்தின் முன்னேற்றத்தினையும் குறைத்துள்ளது.

இடம் சார்ந்த வேறுபாடுகளைக் குறைக்கும் வகையில் அடிப்படை சேவைகள் சகல மக்களுக்கும் சகல இடங்களிலும் சமமாக வழங்கப்படுகின்றது என்பதை உறுதி செய்தல் வேண்டும். அடிப்படை சேவைகளில் எவைகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை வரையறுப்பதில் நடுத்தர வருமான இலங்கை கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். இச்சேவைகள் புவியியல் ரீதியில் சமத்துவ அடிப்படையில் கிடைக்கப் பெறுகின்றனவா என்பதை உறுதி செய்வதுடன் இச்சேவைகளின் தரத்தை உயர்த்துவதும் பிரதானமானதாகும். தற்போது இலங்கையில் உள்ள பாடசாலைகளில் தரம் எட்டு மாணவர்களில் 70 வீதமான மாணவர்கள் மாத்திரமே தாய்மொழியிலும் கணிதத்திலும் சித்தி அடையும் அதேவேளை 50வீதம் மாத்திரமே ஆங்கிலத்தில் சித்தியடைகின்றனர். இது கல்வியின் தரம் மேலும் உயர்த்தப்பட வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டுகின்றது. யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியில் இது மேலும் குன்றிய நிலையில் காணப்படுவதால் கல்வியின் தரம் மற்றும் பொருத்தப்பாட்டினை அதிகரிப்பது மிகவும் முக்கியமாக கவனம் செலுத்தப்பட வேண்டியதொரு விடயமாகும். இது பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் பிள்ளைகள் பொருளாதார ரீதியில் உயர் வளர்ச்சி அடைந்த இடங்களிலும் தொழிற்சந்தைகளிலும் பிரவேசிக்கும் ஆற்றலை அதிகரிக்கும். எனினும் இலங்கையில் மேல்மாகாணத்திற்கான கல்விக்கான செலவீனங்கள் அதிகமாகவே உள்ளன. சிறப்பான வளப்பகிர்வினை கொண்ட பாடசாலைகளும் மேல்மாகாண சூழலிலேயே செறிந்துள்ளன. ஏனைய மாகாணங்களிலிருந்து தொழிலாளர் நகர்ச்சிக்கு வழிவகுத்தல்

தேசிய வறுமையை மேலும் குறைக்கும். சர்வதேச தரத்துடன் ஒப்பிடுகையில் இலங்கையின் கல்விக்காக முதலீடு சிறிதளவே. தேசிய மாற்றத்திற்கு மூன்றாம் நிலைக் கல்விக்கு ஓர் முக்கிய தூண் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லாத போதிலும் உயர்கல்வி மானியங்கள் மேல்மாகாணத்திலுள்ள செல்வந்த குடும்பங்களுக்கே அனுகூலமாக காணப்படுகின்றன. இடம்சார்ந்த பயனுறுதிக்கும் வளமைமிக்க நிலைக்கு மக்களை இணைப்பதற்கும் காணப்படும் தெரிவுகளில் ஒன்றாக மூன்றாம் நிலைக் கல்வியை வழங்குவதில் தனியார் துறையின் ஈடுபாடும் உள்ளடக்கப்பட வேண்டும்.

இலங்கையின் சுகாதார சேவைகளை மாகாண மட்டங்களில் சகல இடங்களிலும் முறையாக உள்ளடக்கப்பட்டுள்ளது. அத்துடன் நடுத்தர வருமான நாடுகள் தரத்தில் வைத்தியசாலைப் படுக்கைகளை அளவுக்கு அதிகமாக கொண்டுள்ளது. ஆனால் மாகாண சபைகளால் நடத்தப்படும் வைத்தியசாலைகளில் வழங்கப்படும் சேவைகளை மக்கள் பயன்படுத்திக் கொள்வது மிகவும் அரிதாக உள்ளது. இதற்குக் காரணம் கீழ்மட்ட வசதிகள் மற்றும் சேவைகளைவிட்டு மக்கள் சகல உபகரணங்கள், வளங்கள் கொண்ட புல்வகையான சேவைகளை வழங்கும் தேசிய வைத்தியசாலைகளை நாடுகின்றனர், பின்தங்கிய பிரதேசங்களில் காணப்படும் வசதிகள், வைத்திய நிபுணர்கள், பொதுவைத்திய அதிகாரிகள் மற்றும் தாதிமார்களை நியமிப்பதில் சிக்கல்கள் காணப்படுகின்றன. மாகாண ரீதியில் முகாமை செய்யப்படும் வைத்தியசாலைகளில் வசதிகள் குறைவாக இருப்பதே இதற்குக் காரணமாகவுள்ளது. மேலும் உயர்வசதிகளும் வளங்களும் காணப்படும் வைத்தியசாலைகளினாலும் சுகாதாரத்துடன் தொடர்பற்ற ஏனைய வசதிகளினாலும் தனியார்துறை மூலம் வருமானமீட்டும் நல்ல வாய்ப்புக்கள் போன்றவற்றினாலும் தேர்ச்சிபெற்ற வைத்திய அதிகாரிகள் தொடர்ந்து மேல்மாகாணத்தினையே விரும்புகின்றனர்.

மேலும் பின்தங்கிய மற்றும் முன்னேற்றமடைந்த பிரதேசங்களை இணைப்பதற்கான உட்கட்டமைப்பில் சர்வதேச தரத்துடன் ஒப்பிடுகையில் இலங்கையின் போக்குவரத்துச் செலவு அதிகரித்து காணப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்காவில் உற்பத்திகளைக் கொண்டு செல்வதற்கு ஒரு கிலோமீற்றருக்கு செலவாகும் 1.25 டொலருடன் ஒப்பிடுகையில் இருமடங்கிற்கும் அதிகமாக இலங்கையில் காணப்படுகின்றது. கரடு முரடான பாதைகள் போக்குவரத்து செலவினை மேலும் உயர்த்துகின்றன. கொழும்பு மாநகர எல்லைகளில் போக்குவரத்து நெருக்கடி நாளுக்கு 60,000 முதல் 80,000 வாகனங்களாகவிருக்கும். இதற்கு மாறாக ஊவாமாகாணத்தில் காணப்படும் தேசிய வீதிகளில் உதாரணமாக போக்குவரத்து நெருக்கடியளவு நாளுக்கு 1500க்கும் 2500 க்கும் இடையிலேயே காணப்படுகின்றது. கண்டியை கொழும்புடன் இணைக்கும் வீதியே அதிகமான போக்குவரத்து நெருக்கடியினைகொண்டுள்ளதோடு பாரிய தொகையிலான வறிய மக்களை வழமைமிக்க வாழ்வுடன் இணைக்கிறது. இது தேசிய மட்டத்திலும் ஊவாமாகாணத்தின் பின்தங்கிய பிரதேசத்திலும், கிழக்கு மாகாணம் மற்றும் வடமாகாணங்களுக்கும் பொருந்தும். செயற்றிறன் மிக்க ரீதியில் இணைத்தல் என்றவகையில் போக்குவரத்துப் பாதைகள் பாரிய சந்தைகளுடன் இணைவதால் கொழும்பு - கண்டி நெடுஞ்சாலை மற்றும் தென் நெடுஞ்சாலை போன்றன உயர்பொருளாதார வருமானங்களை உருவாக்குகின்றது. போக்குவரத்து அபிவிருத்திக்கான தேசியப்பட்டியலில் இம்முதலீடுகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

மேலும் பாடசாலைகள், வைத்திய வசதிகள் மற்றும் உள்நாட்டுச் சந்தைகள் போன்ற அடிப்படைச் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கும் போக்குவரத்து விருத்திகள் தேவைப்படுகின்றன. சமூக நலனை அதிகரிக்கவும் வாய்ப்புக்களில் உச்சப்பயனை ஈட்டவும் மக்களுக்கு மேற்குறிப்பிட்ட சேவைகளை வழங்கப்படுவது மிகவும் அவசியமான அதேவேளை பின்தங்கிய பிரதேசங்களில் போக்குவரத்து சேவைகளை வழங்குதல், பேணுதல் மற்றும் நிலைக்கச் செய்தல் போன்றவற்றிற்கான செலவு அதிகமானது. குறைந்த கேள்வியானது நிர்ணயிக்கப்பட்ட உயர் சேவைகளைக் கொண்ட முறையான போக்குவரத்து சேவை வழங்குனரை கவரப்படாத பட்சத்தில் அப்பிரதேச வாசிகளினால் செயற்படுத்த முடிந்த இடைநிலைப் போக்குவரத்து வழிகளை ஊக்கப்படுத்துவது ஒரு சவாலாக காணப்படலாம். சைக்கிள்கள், கைவண்டிகள், மாட்டுவண்டிகள், டிரக்டர்கள் போன்ற வாகனங்கள் சாதாரனமாக கிராமப்புறங்களில் போக்குவரத்துக்காக உபயோகிக்கப்படுகின்றன. இச்சேவைகளை வழங்குவதற்கும் முகாமை செய்வதற்கும் சமுதாயப்பங்களிப்பை ஊக்கப்படுத்தல் கிராமப்புற நகர்வினை அதிகரிக்கும் நம்பிக்கையான தெரிவாகக் கொள்ளலாம்.

பின்தங்கிய பிரதேசங்களில் அநேகமானவை இயற்கை வளங்கள் நிறைந்தவை. வினைத்திறன் மிக்க வகையில் அபிவிருத்தியுடன் மக்களை தொடர்புபடுத்த வெவ்வேறு பிரதேசங்களில் மக்கள் முகங்கொடுக்கும் சவால்களுக்கமைய கொள்கைகள் உருவாக்கப்பட்டிருத்தல் அவசியம். சகல இடங்களிலும் அடிப்படை சேவை வழங்கலை விருத்தி செய்தலே வெற்றிகரமான கொள்கை முயற்சிகளுக்கான அடிக்கல்லாக காணப்படுமென ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. அத்துடன் அதிகளவிலான வறிய மக்கள் வாழும் பின்தங்கிய பிரதேசங்களை முன்னேற்றமடைந்த பிரதேசங்களுடன் நேரடியாக இணைக்கும் உட்கட்டமைப்பானது வர்த்தகத்தையும் வணிகத்தையும் உயர்த்தும். குறிப்பிட்ட பிரதேசத்திற்கான சவால்களின் கடுமையான தன்மைக்கேற்ப கொள்கைகளின் பண்பாற்றலை அறிந்து செயற்பட ஒரு கட்டமைப்பை உலக அபிவிருத்தி அறிக்கை 2009 வடிவமைத்துள்ளது. அத்துடன் இவை வறுமையான பிரதேசங்கள் எவை மற்றும் வறிய மக்கள் வாழும் பிரதேசங்கள் எவை என்பதைக் காட்டும் வறுமை வரைபடங்களோடு நன்கு தொகுக்கப்பட்டு காணப்படுகின்றது. மாகாணங்களுக்கு மத்தியில் வளர்ச்சியினால் ஏற்பட்ட நன்மைகளை பகிர்ந்தளிக்கும் அதேவேளை நடுத்தர வருமானத்திற்கூடான பயணத்தை அதிகரிக்கவும் மேலும் இக்கொள்கைகள் உதவி செய்கின்றன. பொருளாதார வளமை சில பிரதேசங்களில் மாத்திரமே கவனக்குவிப்பை செய்கின்றன என்பதை கொள்கை வகுப்பவர்கள் கண்டுகொள்வார்களானால் இதன் மூலம் அதிகளவிலான மக்கள் வளமையுடன் இணைக்கப்படுவதை உறுதி செய்யலாம்.

**திரு. ச. ஜெயராஜ்**
தலைவர்
பொருளியல் துறை
கிழக்கு பல்கலைக்கழகம்

# அம்மா



அன்னையின்றி அகிலமில்லை
அம்மா இன்றி உயிர்களில்லை
பத்து மாதம் சுமந்து சென்றாள்
பாசத்தையே ஊட்டி வளர்த்தாள்.

அம்மா என்றழைத்தால்
அணை கடந்த வெள்ளமெனப்
பொங்கி வருமே உன்னிடத்தில் பாசப்புனல்
கங்கைக்கு அணை கட்டி
காட்டாற்றை திசைதிருப்பி கடலோடு
சங்கமிக்கும் சங்கடத்தை
தடுக்க முடியும் ஆனால்
அன்னையின் அன்பு இதயத்திலிருந்து
பெருக்கெடுக்கும் பாசப்புனலை
எவனால் அளக்க முடியும்..?

மனிதர்களின் தெய்வம் அம்மா தானே...!
பூமியின் புனிதமே அம்மா தானே
அன்பின் பிறப்பிடமே அம்மா தானே,
அம்மா என்னும் பெயரில் வாழும்
கண் கண்ட தெய்வம் நீ தானே...
போற்றிடுவோம் புகழ் மாலை சூட்டுவோம்
வைத்துவிட்டோம் அன்னையர்க்கு ஓர் தினம்....!
அன்னையர் தினம் என்ற அன்பு தினம்...?

ம. கிட்டுதாஸ்
தரம் :- 9V

# சிறந்த மாணவன் யார்?

தொல்காப்பிய நெறி நின்று பவணந்தி முனிவர் மாணாக்கரை மூன்று வகையாகப் பிரிக்கின்றார். அவை முறையே முதல் மாணாக்கண், இடை மாணாக்கன், கடை மாணாக்கன் என்பனவாகும் இவர்களின் குணவியல்புகள் பற்றி நன்னூலார் கூறுகின்றார். "அன்னங் கிளிறே நன்னிற தெய்யரி யானையானே றென்றிலை போல கூறிக் கொள்ப குணமான் போரே வழியில் பவனந்தி முனிவரும் அன்னம் ஆகவே மண்ணொடு கிளியே இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி அன்னர் தலை இடை கடை மாணாக்கர்"என்பதை அழகாக வகுத்த முறையில் நன்னூலார் காட்டும் இயல்பில் அன்னம், பசு, மண், கிளி, இல்லிக்குடம், ஆடு, எருமை, நெய்யரி ஆகிய குணங்களை உடையவர்கள் இம்மாணவர்கள் என்பர். அதைக் கூர்ந்து பார்க்கும் போது அன்னம் பாலையும் நீரையும் சேர்த்து வைத்தால் அது நீரைப்பிரித்து பாலை மட்டுமே பருகும் குணத்தை உடையது. அன்னத்தின் உண்மை நிலை யாதெனில் பாலைத் தவிர நீரைக் குடியாது. இது போல் முதல் மாணாக்கன் தான் பெறுகின்ற நல்லறிவோடு தேவையற்ற விடயங்கள் இருப்பினும் தேவையற்ற விடயத்தை சிந்தையில் பதித்து சிந்தியாது தேவையானவற்றை மட்டும் கருத்தில் கொள்வான்.

பசு மாடு நிறைய புற்களை சாப்பிட்டு தனியாக ஓர் இடத்திலிருந்து அசைத்து அசைத்து மெது மெதுவாக உண்ணும் இயல்பை உடையது. அந்தவகையில் முதல் மாணாக்கணும் நல்ல விடயங்களை நிறையப் படித்து தனியாக ஓரிடத்திலிருந்து ஆராய்ந்து தெளிந்து கொள்வான். இடை மாணாக்கன் யார் எனப் பார்க்குமிடத்து மண்ணைப் போன்றவன் ஒரு விதையை நட்டு தினம் நீரை விட்டு கவனம் செலுத்தினால் நட்ட விதை வளர்ந்து பயிராகும். அதை கவனித்து நீர் விடாவிட்டால் அப்பயிர் மடிந்துவிடும். இதே போலவே இடை மாணாக்கண் அறிவு விடயங்களை நினைவில் பெற்றாலும் அவனை அடிக்கடி ஊக்கப்படுத்தினால்தான் அவனது வளர்ச்சியைக் காணலாம்.

கடை மாணாக்கர் கிளி ஓட்டைக் குடம், ஆடு, எருமை மாடு, பன்னாடை போன்ற உவமைகளுக்கு உவமையாகின்றான். ஓட்டைக் குடத்திற்குள் நீர் வார்த்தால் குடத்துள் தங்காது ஓட்டை வழியால் செல்வது போல் கடை மாணாக்கண் தான் கற்றவற்றை உடனே விட்டுவிடுகின்றான். கிளி சொன்னவற்றை திருப்பிச் சொல்லும் இயல்புடையது. சிந்தித்துச் சொல்ல முடியாது. இதே போல் கடை மாணக்கணும் கற்ற விடயத்தை சிந்தித்து தெளிவு பெறாமல் கற்றவற்றை மட்டும் நினைவில் வைத்துக் கூறும் இயல்புடையவன். எருமை மாடு சேற்று நீரைக் கலக்கி விட்டு குடிக்கும் அதே போல் கடை மாணாக்கணும் எல்லாவற்றையும் தெளிவில்லாமல் குழப்பமாகி மூழ்கி விடுவான்.

ஆடு எல்லாத் தழைகளிலும் ஒவ்வொரு கடி கடிக்கும். இதை "ஆடு நுனிப்புல் மேய்ந்தாற் போல்" என்பர். அதே போல் கடை மாணாக்கர் கல்வியை ஆழ்ந்து கற்காது நோக்காது மேலோட்டமாக அறிய முற்படுவர். பண்ணாடை கழிவான பொருளை தனக்குள்ளாக்கி நல்ல பொருளை விட்டு விடும். இது சக்கை எடுத்து சாறை விடுவது போல் இக்குணம் படைத்த மாணவன் தேவையற்ற விடயத்தை எடுத்துக் கொண்டு தேவையான விடயத்தை விட்டு விடுவான். இவ்வாறு முதல் மாணாக்கன், இடை மாணாக்கன், கடை மாணாக்கன் என மூன்று வகையில் காணப்படுகின்றனர். இவர்களில் சிறந்த மாணவன் யார்?

**திரு. வ. திருநாவுக்கரசு**
ஆசிரியர்

# ஆசிரியரும் விளை திறனும்

*அறிமுகம்:-*

*கல்விப்புலத்தில் பண்புசார் அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டும் என்று பலரும் பலவாறு கருத்துக்களை முன்மொழிந்து வருகின்றனர். கல்வியை முகாமைத்துவம் செய்யும் பல்வேறு மட்டத்தினரும் (மத்திய கல்வி அமைச்சு, மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், வலயம், கோட்டம், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், பல்கலைக்கழகம் சார், சாராக் கல்வியாலர்கள்) பலவாறான உத்திகளை, உபாயங்களை, நுட்பங்களை பண்புசார் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக முன்வைத்துள்ளனர். முன்வைத்தும் வருகின்றனர். அவைகளைத் தொகுத்து நோக்கும் போது புதிய கற்றல் துணைப் பொருள்கள், நவீன கற்றல் கற்பித்தல் உத்திகள், புதிய கலைத்திட்ட ஆக்கம், பாடசாலைச் சமூகத்தை உள்ளீர்த்தல், வெளிவாரி, உள்வாரி மதிப்பீடுகள், பௌதீக வளங்களை அதிகரித்தல் எனப் பட்டியல் நீண்டு கொண்டு செல்வதை அவதானிக்கலாம்.*

*மாணவர்கள் பெறும் கல்வியின் தரமானது ஆசிரியர்களின் கற்பித்தல் தரத்திலேயே தங்கியுள்ளது. கல்வியின் விளை திறனானது ஆசிரியரின் விளை திறனிலேயே தங்கியுள்ளது என்பது யதார்த்த நிலையாகும். ஆசிரியரின் விளை திறனை எவ்வாறு அதிகரிக்கலாம் என்னும் குறிக்கோளையே இக் கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.*

*விளை திறன்* Effectiveness *என்னும் பதத்திற்கு வியாக்கியானம் கொள்ளும் போது* Advadce Deluxe Dictionary *"செயலூக்கம் உடைய", "ஆழமாகப் பதிவு ஏற்படுத்துகின்ற" எனப் பொருள் விளக்கம் தருகிறது. விளை திறனுடைய ஆசிரியர்கள் தமக்குத்தாமே வகுத்துக் கொண்ட இலக்குகளை அல்லது அவர்களுக்காக கல்வி நிருவாகிகள் அல்லது கல்வி முகாமையாளர்களால் வகுத்தொகுக்கப்பட்ட இலக்கை அடைபவர்கள் ஆவர். எனவே ஆசிரியர்கள் தாம் வரிந்து கொண்ட இலக்குகளை அடைவதற்கான அறிவையும் ஆற்றலையும் கொண்டிருப்பதுடன் இவ்விரண்டையும் பொருத்தமான முறையில் பயன்படுத்தக் கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.*

*"அறிவையும் ஆற்றலையும் கொண்டிருத்தல் என்பது ஆசிரியர் தேர்ச்சி. மாறாக அறிவையும் ஆற்றலையும் வகுப்பறையில் பயன்படுத்துதல் ஆசிரியர் வினையாற்றுகை எனப்படும்" என மெட்லி* (Medly *1982) என்பவர் குறிப்பிடுகின்றார். எனவே "ஆசிரியர் விளை திறன்" என்னும் பதத்தை நாம் பகுத்து நோக்கும் போது ஆசிரியர் தகைமை, ஆசிரியர் வினையாற்றுகை, ஆசிரியர் பயன்தரு தன்மை ஆகியவவற்றுடன் இணைத்து நோக்குதல் வேண்டும்.*

*ஆசிரியர் தன்மை பற்றி நோக்கும் போது "தரம் கூடிய ஆசிரியரைப் பெறுவதற்கு செலவு சற்று அதிகமாக உள்ளது. ஆனால் தரம் குறைந்த ஆசிரியர்களினால் செலவு அதிகம் ஏற்படுகின்றது." ஆசிரியன் தேசத்தைக்கட்டியெழுப்புபவன். மனித இருப்பும், எதிர்காலமும் அவன் கையில் உண்டு.*

ஆசிரியர்கள் தொடர்ந்து கற்று அதன் மூலம் ஆழமான அறிவையும், விஷேட திறன்களையும், பொருத்தமானவிழுமியங்களையும், வளர்த்துக் கொள்ளல் வேண்டும். தொடர்ந்து கற்பவரே ஆசிரியத் தொழிலுக்குப் பொருத்தமானவர். இன்று ஒரு ஆசிரியர் தன் தொழில் வாண்மையைப் பெருக்கிக் கொள்வதற்கான கதவுகள் அகலத் திறந்து விடப்பட்டுள்ளன. ஆனால் எம்மில் எத்தனை சதவீதமானோர் இவ் வாய்ப்பை பயன்படுத்துகின்றோம்?

"சனி நீரோடு" என்கிறது எமது முதுமொழி. "ஓடுகின்ற நீரில் ஸ்நானம் செய்" என்கிறது சீனப் பழமொழி . இவற்றை கிரகிக்கும் போது தொடர்ந்து கற்பதன் மூலமே கற்பித்தல் கருமத்தொடர் மேன்மையுறலாம் எனும் கூற்று பொதிந்திருப்பதை நாம் நோக்கலாம். தேங்கி நிற்கின்ற நீரை நாம் ஆற்று நீர் என்று கூறலாமா? என்பதை சிந்திக்க வேண்டும்.

தன் தகைமையை அதிகரித்துக் கொள்ளாத ஒரு ஆசிரியர் ஓரங்கட்டப்பட்டவராக, எல்லைப்படுத்தப்பட்டவராக, காலாவதியான ஒரு ஆசிரியராக, காலம் கடத்தும் நபரொருவராக இருப்பார் என்பதில் ஐயமில்லை. ஆசிரியர் கல்வியின் தோற்றம் வேதகால இலக்கியங்களில் இருந்து முகிழ்ந்தெழுவதைக் காணலாம். குருகுலக் கல்வி முறையில் கல்வியுடன் வழிகாட்டலும் வழங்கப்பட்டிருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலைத்தேயத்தவர்களின் வருகையுடன் ஆசிரியர் கல்வியில் மேலும் அக்கறை காட்டப்பட்டது. "கல்விச் சீர் திருத்தங்களின் திறவுகோல் ஆசிரியர்களுக்கு சிறந்த பயிற்சி வழங்குவதே எனக் கூறிய C.W.W.கண்ணங்கரா குழுவினர் ஆசிரியர் கல்வி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தினார். ஆசிரியர்களுக்கு வழங்குகின்ற பயிற்சி "ஆசிரியர் கல்வி" என உயர் பெறுமானத்தைப் பெற்றுக் கொண்டது.

பட்டதாரி ஆசிரியர்களுக்கான பயிற்சியை பல்கலைக்கழகமும், பட்டதாரி அல்லாத ஆசிரியர்களுக்கான பயிற்சியை Single Type Of Training Colleges தேவையும் முன்வைக்கப்பட்டது. இதற்காக திரு.J.E. ஜயசூரியா அவர்களின் விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டு இருந்தது. ஆனால் எந்த விதப்புரைகளும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதே கசப்பான உண்மையாகும். சுதந்திரத்திற்குப் பின்னர் கல்விப் புலத்தில் பல பெருமைப்படத்தக்க சாதனைகள் உருவாகின என்பது மறப்பதற்கில்லை. ஆசிரியர் தொகையில் ஏற்பட்ட கேள்வி அதிகரிப்பை நிவர்த்தி செய்வதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளில் ஆசிரியர் தகைமை பற்றி கவனத்திற் கொள்ளப்படவில்லை என்பது சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டிய விடயமாகும்.

இன்று ஆசிரியர் கல்வியில் தோன்றியுள்ள ஏழு வினாக்களை நாம் நோக்கும் போது

**1. ஆசிரியர் கல்வியை வழங்கும் நிறுவனங்களுக்கிடையில் ஒருமுகத்தன்மயின்மை.**

**2. ஆசிரியர் பயிற்சி இன்றி, சேவை முன் பயிற்சி இன்றி வகுப்பறைக்குச் செல்லக் கூடாது என்ற கொள்கை உள்ள போதும் நடைமுறைச் சாத்தியம் இன்மை.**

**3. நிபுனத்துவமற்றவர்களால் பயிற்சிச் செயற்பாடுகள் முடுன்னெடுக்கப்படல்.**

**4. ஆய்வுக் கலாசாரம் வளர்ச்சி பெறாமை அல்லது முற்றாக இன்மை.**

**5. பகுதி நேரப் பயிற்சிகள் (தொலைக்கல்வி) எதிர்பார்த்த வெற்றியளிக்காமை.**
**இப்படியே பட்டியல் நீண்டு கொண்டு செல்லும்.**

*ஆசிரியர் தகைமைத்திறன் பற்றிச் சிந்திக்கும் அதேகணம் ஆசிரியர் கல்வி பற்றிய மீள் பார்வையில் கவனம் குவிக்கப்பட வேண்டும் என்பது யதார்த்தமாகும். ஆசிரியர் கல்வி விளைதிறன் மிக்கதாக அமையும் போதே ஆசிரியரும் விளைதிறன் மிக்கவராக உருமாறுவார் என்பதில் சந்தேகமில்லை.*

*ஆசிரியர் விளை திறனில் அடுத்த மிகப் பெரிய பரிமாணம் கற்றலுக்கான சந்தர்ப்பங்களாகும். கற்றலுக்கான சந்தர்ப்பம் என்பதை பகுத்து நோக்கும் போது குறிப்பிட்ட பாடவிடயங்களை அல்லது பாடங்களிலுள்ள சிறப்பு அம்சங்களை கற்பிப்பதற்கும் கற்றலுக்கு கொடுக்கும் கால அளவு அல்லது அழுத்தமாகும். இன்று கற்பதற்கான சந்தர்பங்கள் அல்லது வாய்ப்புகள் மிக அதிகமாகவே உண்டு. எனினும் எல்லாப் பாடங்களுக்கும் கற்றலுக்கான சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றதா? என்பது சீர்தூக்கி நோக்கப்பட வேண்டியதாகும்.*

World Bank *1990 அறிக்கை அனேக நாடுகளில் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு கணிதத்தை கற்பிப்பதற்குரிய சந்தர்ப்பத்திலும் பார்க்க மொழியை (வாசிப்பு உட்பட) கற்பதற்குரிய சந்தர்ப்பமே அதிகமாக உண்டு. அண்ணளவாக மொத்த போதனை நேரத்தில் 1/3பங்கு மொழிக்கு செலவிடப்படுகின்றது. 1/8 பங்கு கணிதத்திற்கு செலவிடப்படுகின்றது. மற்றைய கல்விசார் பாடங்களைக் கற்பதற்கு மாணவர்களுக்கு குறைந்தளவு சந்தர்ப்பமே உண்டு எனக் குறிப்பிட்டு இருப்பதும் கவனத்திற்குரியது.*

*கற்றலுக்கான சந்தர்ப்பத்தை வழங்கும் ஆசிரியர் ஒருவர்.*

**1. மாணவர்களின் உடல், உளம் பாதிக்குமாறு தண்டனைகளை வழங்கவே மாட்டார்.**
**2. மாணவர்களை ஊக்கப்படுத்திக் கொண்டே இருப்பார்.**
**3. மாணவர்களின் பலங்களை இணங்கண்டு ஊக்கப்படுத்துவதுடன் பலவீனங்களை இழிவளவிற்கு கொண்டுவருவார்.**
**4. மெல்லக் கற்கும் மாணவர்கள், மீத்திறன் கூடியமாணவர்கள் ஆகியோரிடம் தனித்தனியாக கவனத்தைக் குவித்து கற்பித்தலில் ஈடுபடுவார்.**
**5. இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் மணவர்களை ஊக்குவிப்பார்.**
**6. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினூடாக அனுபவங்களைப் பெறவைப்பார்.**
**7. நேர முகாமைத்துவத்தைப் பேணுவார்.**
**8. மாணவர்களுக்கு கௌரவமளிப்பார்.**
**9. மாணவர்களுடன் சிநேக பூர்வமாக உறவைக் கொண்டிருப்பார்.**
**10. எவ்வேளையிலும் கற்றல் கற்பித்தல் கருமத்தொடரில் மிக ஆர்வமாக இருப்பார்.**

வினைதிறன் மிக்க ஆசிரியர்கள் மாணவர்களின் வாழ்க்கைக் கோலத்தை நேரடியாகவும், மறைமுகமாகவும் உவப்பான திசையை நோக்கி ஆற்றுப்படுத்துபவராக இருப்பார். மாணவர்கள் கற்பதற்கான சந்தர்ப்பம் மதிப்பீடுகள் வாயிலாகவும் பெறப்படுகின்றது. விளைதிறன் மிக்க ஆசிரியர் ஒருவர் மாணவர்களுக்கு கொடுக்கப்பட்ட வேலைகளை நாளாந்த ரீதியாக மதிப்பீடு செய்து பலம், பலவீனங்களை அறிந்து தனது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை திட்டமிட்டுக் கொள்வார். தவணை முடிவில் மாணவர்களுக்கான தேர்ச்சி அறிக்கைகளை வழங்குவதற்கான முழுமூச்சுடன் செயற்பாட்டில் ஈடுபடுவார். ஆனால் எம்மில் எத்தனை பேர் முழு ஈடுபாட்டுடன் தவணை முடிவில் மாணவர்களுக்கான தேர்ச்சியறிக்கைகளை வழங்கி வைக்கின்றோம்.

ஆசிரியர் வினைதிறனில் அடுத்த மிக முக்கிய பரிமாணம் வகுப்பறை முகாமைத்துவமாகும். “மனிதனை ஆக்குபவன் ஆசிரியன்” என்கிறார் ஜோன் அடம்ஸ் (John Adams) “வரலாற்றை உண்மையாகப் படைப்பவர்கள் ஆசிரியர்கள்” என்பது எச்.ஜீ.உவெல்ஸ் (H.G.Wells) அவர்களின் கூற்று. பேராசிரியர் கூமாயுன் கபீர் (Prof Gumayun Caffir) “நாடுகளின் தலை விதியை நிர்ணயிப்பவர்கள் ஆசிரியர்கள்” என்கிறார். “ ஒரு நாடு முதலாந்தரமான நாடாக இருக்க வேண்டுமெனில் அந்நாட்டின் ஆசிரியர்கள் முதலாந்தரத்தினராக இருக்க வேண்டும்” என்பது கலாநிதி இ.ஏ.பையர்ஸ் (E.A.Fiares) என்பவரின் கருத்தாகும் “தரங்குறைந்த வைத்தியர்களினால் மக்களுடைய சுகாதாரம் பாதிக்கப்படும். தரங்குறைந்த ஆசிரியர்களினால் மாணவர்கள் சீர்கெட்டு நாடே பாழடையும்” என்பது வுனித் வாலத்த (Vunith Walatte) அவர்களின் கூற்றாகும். இத்துணை பெருமை பெற்ற ஆசிரியர் சமூகம் மாணவர்களில் உருமாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய வகுப்பறை முகாமைத்துவம் பற்றிய தெளிவான நோக்கைக் கொண்டுள்ளனரா?

கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை நோக்கும் போது ஆசிரியர் - மாணவர்களுக்கிடையில் நடைபெறும் வேறானதொரு செயற்பாடல்ல. ஒரு சமூகப்பாரம்பரியத்திற்கு ஏற்ப நடைபெறும் ஒரு செயற்பாடாகவே கருத வேண்டும் என்பது ஜெலன் லாங்போர்டு (Gellan Langford) என்பவரின் கருத்து ஆகும். கற்றல் - கற்பித்தல் நிகழும் வகுப்பறையானது அதி உச்ச பௌதீக வசதிகளுடனும், நவீன தொழிநுட்ப வசதிகளைக் கொண்டிருந்தாலும் கற்றலுக்கான சூழ்நிலையை உருவாக்கும் மிக முக்கிய காரணி ஆசிரியரின் சொல்சார், சொல்சாரா நடத்தையே ஆகும்.

கற்றல் கற்பித்தல் செயற்பாடும், வகுப்பறை முகாமைத்துவமும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த பிரிக்க முடியாத இரு அம்சங்களாகும். இவை ஒன்றிலொன்று தங்காமல் தனித்து இயங்க முடியாதவை. கற்பித்தலில் அறிதலாட்சியின் செல்வாக்கு கூடுதலாக இருப்பது யாரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயமாகும். எனினும் சிக்கல் நிறைந்த நடத்தையை வெளிக்காட்டும் மாணவர்களிடம் அறிதலாட்சி மாத்திரம் போதிய தாக்கத்தை ஏற்படுத்தாது என்பது யதார்த்த நிலையாகும். ஏனையோருடன் இணைந்து செயலாற்றுதல், மற்றவர்களின் நோக்கங்களை மதித்தல், தானாகவே முன்வந்து வினையாற்றுதல், ஊக்கலையும், இரசனையையும் தம்மில் மேம்படுத்தல் போன்ற எழுச்சியாட்சியின் உள்ளடக்கங்களும் கற்பித்தலில் உள்வாங்கப்பட வேண்டும். அறிதலாட்சிப் பண்புகளுடன் எழுச்சியாட்சிப் பண்புகளை உள்வாங்கிக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடும் ஆசிரியரே விளைதிறனுள்ள ஆசிரியராக மிளிர்வார்.

வினை திறனுள்ள ஆசிரியர் உவப்பான மாற்றங்களை உள்வாங்குபவராக இருப்பார். சிலர் பல வருடங்களாக கற்பித்தல் தொழிலை மேற்கொண்டு வருவதாகவும், நிறைந்த அனுபவம் மிக்கவர் எனவும் வாதிட்டு கற்பித்தலை வரையறை செய்ய வேண்டியதில்லை எனவும் நினைக்கலாம். கற்றல் – கற்பித்தல் செயற்பாட்டில் அனுபவத்திற்கு அலாதியான இடமுண்டு என்பது மறுப்பதற்கில்லை. எனினும் விரைவான மாற்றத்திற்கு உட்பட்டிருக்கும் உலகில் அனுபவத்தை மாத்திரம் துரும்புச்சீட்டாகப் பயன்படுத்த முடியாது. கற்பித்தலை திட்டமிடவும் விருத்தி செய்யவும் முடியாது. மாற்றத்தை உவப்பான முறையில் உள்வாங்கி மாற்ற முகவராக (Change Agent) விளங்கும் ஆசிரியரே வினைத்திறன் மிக்க ஆசிரியராக விளங்க முடியும்.

வினைத்திறன் மிக்க ஆசிரியர் ஒருவர் பாடசாலை தொடங்குதல், பாடசாலை நிறைவு செய்தல் என்பனவற்றை குறிப்பிட்ட நேரத்தின் படியே செய்வார். ஒரு பாடத்திலிருந்து அடுத்த பாடத்திற்கு மாறும் போது நேர விரயம் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வார். கடைசிப்பாடவேளை முழுநேரமும் வகுப்பறையில் தரித்திருப்பார். மாணவர்களின் பல்லினத்தன்மையினை விளங்கிக் கொண்டு தொழிற்படுவார்.

ஆசிரியர் பணியை, பாடவேளைகளை, வினைத்திறன் உடையதாக்கு வதன் மூலமே முன்னேற்ற முடியும். ஒரு வகுப்பறையில் தரப்பட்டுள்ள நேரத்துள் குறிப்பிட்ட நேரத்தை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய ஒழுங்கு முறையில் அமைந்த செயற்பாடுகளின் தொகுதி பாடவேளை என்பதை வினைத்திறனுள்ள ஆசிரியர் விளங்கிக் கொள்வார். வகுப்பறையில் அறிகை சார், எழுச்சி சார், உள இயக்கம் சார் நோக்கங்களுக்கு அமைய 40 நிமிட நேரங்களையும் மிகக் கவனமாகக் கையாள்வார்.

வினைத்திறனுள்ள ஆசிரியரின் மிக முக்கியமான அடுத்த பரிமாணம் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் உள்ள தொடர்பாடலை மிக வினைத்திறனுள்ள முறையில் பேணுதல் ஆகும். கற்பித்தல் வினாக்களைக் கேட்டல்,, விளக்கமளித்தல், அறிவுறுத்தல்களை வழங்கல், கட்டுப்படுத்தல்,ஊக்கமளித்தல், தனிப்பட்ட தேவைகளில் மாணவர்களுக்கு அனுசரணை வழங்குதல் போன்ற செயற்பாடுகளில் தொடர்பாடல் செயற்பாட்டை மிக கவனமாக கையாள்வார்.

வினைதிறனுள்ள ஆசிரியர் ஒருவர் மாணவர்களின் அடைவையும், ஆற்றுகையையும் முன்னேற்றுவதில் முன்னின்று உழைப்பார். இவ்வாறு வினைத்திறன் மிக்கதாக பாடங்களைப் படிப்பது, மனனம் செய்வது, நினைவை மீட்பது, பரீட்சைகளில் சமர்பிப்பது தொடர்பான தொழில்நுட்ப அறிவையும் பயிற்சியையும் மாணவர்களுக்கு வழங்கிக் கொண்டிருப்பார். மேலும் பாராட்டு, ஊக்கல் என்பவற்றை சிறப்புக் கவனத்தடன் மேற்கொள்வார்.

## முடிவுரை

ஆசிரியர்களின் வினைதிறனை அதிகரிப்பது என்பது தமக்கென ஒதுக்கப்பட்ட வகுப்பறையிலான அவர்களது செயற்பாடுகளில் பூரணத்துவம், வெற்றி என்பவற்றில் தங்கியிருப்பதாக உலகலாவிய கல்வியின் ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. கலைத்திட்டங்களை வடிவமைப்போர், கல்வித்திட்டமிடுவோர்,

கல்வி நிருவாகிகள், கல்வி முகாமைத்துவத் துறையினர் போன்ற பல பகுதியினரும் ஆசிரியர்களின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக நிகழ்சித் திட்டங்களை தயாரித்தல் வேண்டும். குறிப்பிட்ட நிகழ்சித் திட்டங்களை தயாரிக்கும் போது பிரதேசத்தின் புவியியல், பொருளாதார, சமூக, தொழில்நுட்ப தரநிலைகளை மிக முக்கிய கவனத்தில் கொள்ள வேண்டும். ஆசிரியர்களும் "கௌரவமான அடிமைத்தனத்தைப்" பேணாமல் ஆசிரியத்ததுவத்தின் வினைதிறனை அதிகரித்துக் கொள்வதன் மூலம் சமகால கல்விப் புலத்தில் மிகப்பாரிய சவாலாக உள்ள பண்புசார் விருத்திக்கு தம்மால் இயன்ற பங்களிப்பை செய்தல் வேண்டும்.

**பு.பாலச்சந்திரன்**
அதிபர்
மட்/களுதாவளை ம.வி

# நூற்றாண்டை மிஞ்சிவிட்ட சிவசக்தி

அழகு வயல் ஓரம் அலை தவழும் வாவி
வியந்து போற்றும் அம்மன் அருகில் வினைதீர்க்கும் தெய்வம்
கொள்ளை அழகாம் குருமண்வெளிதனில் அமர்ந்திருந்து
என் கல்விக்கூட மகத்துவத்தைக் களிகூர்ந்து பாடுகின்றேன்

கிறிஸ்தவரின் வேதப்பள்ளியாய் வேர்கொண்டு
சிவசக்தி வித்தியாலயமாய் தழை கொடுத்து - இன்று
சிவசக்தி மகா வித்தியாலயமாய் கிளைபரப்பி
ஓர் நூற்றாண்டையும் மிஞ்சி வெற்றிக்கொடி பிடிக்கிறது

சகாப்தத்தை மிஞ்சிவிட்ட சாதனை - கண்டு
சளைக்காமல் சேவைசெய்யவேண்டும் என்று
என் உள்ளமும் உவகையால் பொங்க இன்று
கல்விக் கூடமாம் எம் கற்பகதருவினைப் போற்றுகின்றேன்

இவ்விடத்தில் கல்வி கற்ற எம்மவர்கள் - நூறு
ஈழமணி நாட்டில் பல அறிஞர்களாம் பாரு
பல்துறையும் பயிற்றுவித்த பயிற்சியாளன்யாரு
உம் கலையகத்தை மிஞ்சிவிட்ட கல்வி உண்டா கூறு

சொல்லச் சொல்ல வாயினிலே தேன்துளிகள்
அவை அள்ள அள்ள குறையாத பொன்மொழிகள்
எண்ண எண்ண நனைகிறது என் விழிகள்
மனநிறைவோடு வாழ்த்துகிறேன் பலவரிகள்.

**பு.சௌமிகாந்**
தரம்:10$^{v}$

# திராவிடர்கள் அரக்கர்களா.....?

இலங்கையை ஆட்சி செய்த இராவணன் பத்துத் தலைகளை உடையவன் என்றும் அரக்கன் என்றும், இங்கு வாழ்ந்த மக்களும் அவலட்சனம் உடையவர்கள், அரக்கர்கள், கொம்புகளைக் கொண்டவர்கள் என்று நாம் இலக்கியம், திரைப்படம், நாடகங்கள் ஊடாக அறிகின்றோம். இவை யாவும் ஆரியர்களாலும், கம்பராலும் முன்வைக்கப்பட்ட பொய்களாகும். அவ்வாறெனில் இராவணன் யார்? அரக்கர் என்ற இனம் உலகில் வாழ்ந்ததா? என்ற வினா நமக்குள் எழுகின்றதல்லவா?

## சிந்துவெளி தமிழர் நாகரிகம்

ஆரியர் இந்தியாவுக்கு வந்த வேளையில் இந்தியாவில் சிந்துவெளி நாகரிகம் வளர்ச்சியடைந்து காணப்பட்டது. சிந்துவெளியை அடிப்படையாகக் கொண்டு மொகஞ்சதாரோ, ஹரப்பா, லோத்தல் போன்றவை முக்கியம் பெற்ற நகரங்களாக காணப்பட்டன. சிந்துவெளியில் வாழ்ந்த மக்கள் திராவிடர்கள் ஆவர். அறிஞர் கால்டுவெல திராவிட மொழிகளை வகைப்படுத்தினார். திராவிட மொழியில் மூத்த மொழி அதாவது தாய் மொழி தமிழ் மொழியாகும். தமிழ் மொழியில் இருந்தே ஏனைய திராவிட மொழிகள் தோற்றம் பெற்றன. (உலகில் இன்று தமிழ், சமஸ்கிருதம், சீனம், இலத்தீன், ஹீப்ரு, கிரேக்கம் ஆகிய ஆறு மொழிகளுமே மூத்த மொழிகளாக சிறந்த இலக்கியங்களை உடைய மொழிகளாக உள்ளன. இதனால்தான் இந்த ஆறு மொழிகளும் செம்மொழிகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன)

சிந்துவெளி நாகரிகம் திராவிடர்களான தமிழர்களின் நாகரிகமாகும். சிந்துவெளியில் மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற இடங்களில் (1922 - 1927) ஆய்வினை மேற்கொண்ட ஸ்பானிய தேசத்தவரான பேராசிரியர் ஹெரஸ் பாதிரியார் மொகஞ்சதாரோ பட்டயங்களில் காணப்பட்ட எழுத்தக்கள் தமிழ் எழுத்துக்களின் ஆதி எழுத்துக்கள் என்பதை நிறுவினார். இது போன்றே இங்கு ஆய்வினை மேற்கொண்ட சேர்.ஜோன் மார்ஷல், ஜீ.ஆர்.ஹன்டல் போன்றோர் சிந்துவெளி நாகரிகம் திராவிடர் நாகரிகம் என்பதை நிறுவினர். எனவே இவற்றை நோக்குகின்ற போது இந்தியாவில் நாகரிகமாக வாழ்ந்த முதற் குடிகள் திராவிடர்களாகிய தமிழர்கள் என்பது தெளிவாகின்றது.

## ஆரியரின் ஆக்கிரமிப்பு

மத்திய ஆசியாவின் கஸ்பியன் கடலை சூழவுள்ள பிரதேசங்களில் வசித்த ஆரிய இனத்தவர்கள் பிழைப்புத் தேடி ஐரோப்பா மற்றும் கிழக்கு மேற்கு நோக்கி இடம்பெயர்ந்தனர். கிழக்கு நோக்கி இடம்பெயர்ந்தோர் இந்துகுஸ்தான் மலைத்தொடரில் உள்ள கைபார்க் கணவாய் (பள்ளத்தாக்கு) ஊடாக இந்தியாவிற்கு வந்தனர்.

குதிரைப் படையுடன் வந்த ஆரியர் சிந்துவெளிப் பிரதேசத்தினை ஆக்கிரமித்து தம்மை நிலைநிறுத்திக் கொண்டனர். ஆரியருக்கும் திராவிடருக்கும் இடையில் அடிக்கடி யுத்தம் ஏற்பட்டது. ஆரியரின் இயற்கை வழிபாடு வேள்வி செய்தல், பலி கொடுத்தல் போன்ற வழிபாட்டு முறைகளை திராவிடர்கள் எதிர்த்தனர். இவர்களுடைய வேள்விகள் திராவிட மன்னர்களால் அழிக்கப்பட்டன.

ஆரியர் தங்களுடைய எதிரிகளான திராவிடர்களிடமிருந்து தங்களையும் தங்கள் கலாசாரத்தையும் பாதுகாக்க யுத்தம் அரசியல், இலக்கியம் மதம், சாதி என பல்வேறு வழிகள் ஊடாக திராவிடர்களை ஆக்கிரமித்தனர். ஆரியர்கள் உயர்ந்தவர்கள் சிறந்த மனிதர்கள் எனக் காட்டவும் திராவிடர்களை கீழானவர்கள் கொடூரமானவர்கள் அரக்கர்கள் எனக் காட்டவும் சம்பவங்களை திரிவுபடுத்தி புராணங்களையும், இதிகாசங்களையும் எழுதினர். கந்த புராணம் திராவிடர்களை அசுரர்கள் எனக் கூறுகின்றது. லிங்க புராணம் லிங்க வழிபாடு தோற்றம் பெற்றதை கேவலப்படுத்தி கூறுகின்றது. இருக்கு வேதத்தில் ஆரியர் அல்லாதவர்களை தாசர்கள் (கறுப்பர்கள்) அரக்கர்கள், தைத்தியர்கள் என்றும் லிங்க வழிபாட்டினை விமர்சித்தும் எழுதப்பட்டுள்ளது. ஆரியர் மொழியில் அரக்கர் என்றால் பேய் எனக் கூறுகின்றார் ந.சி.கந்தையா. (மறைந்த நாகரிகங்கள் பக்கம் - 70)

**இலங்கையின் ஆதிக்குடிகள்**

இலங்கையின் ஆதிக்குடிகள் இயக்கர், நாகர் ஆகும். இவர்கள் திராவிடர்கள் ஆவர். இவர்களின் வழித்தோற்றல்களே இன்றைய இலங்கைத் தமிழர்கள் ஆவர். சிங்கள வரலாற்று நூலான மகாவம்சத்தில் விஜயன் இலங்கைக்கு வந்த போது இயக்க வம்சத்தைச் சேர்ந்த காளிதாசன் என்ற மன்னன் ஆட்சி செய்ததாகவும், குவேனி என்ற இளவரசி துணி தயாரிப்பதற்கு நூல் கோர்த்துக் கொண்டிருந்ததாகவும், விஜயன் குவேனியைத் திருமணம் முடித்து ஆட்சி செய்ததாகவும் அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்ததாகவும் மகாவம்சம் கூறுகின்றது. இதை நோக்குகின்ற இலங்கையின் ஆதிக் குடியான இயக்கர் நாகரிகத்துடன் வாழ்ந்தார்கள் என்பது தெரிய வருகின்றது.

மகாவம்சத்தில் இலங்கையில் பௌத்த மதம் பரவுவதற்கு முன்னர் புத்தர் மூன்று தடவை இலங்கைக்கு வந்ததாகக் கூறுகின்றது. புத்தர் இலங்கைக்கு வந்த காலப்பகுதியில் இங்கு பிரதான மூன்று இராட்சியங்கள் இருந்தன. அந்த மூன்று இராட்சியங்களுக்கும் புத்தர் வந்துள்ளார். அவையாவன கல்யாணி (களனி), நாகதீபம் (யாழ்ப்பாணம்) போன்றவற்றில் நாக மன்னர்களும் மஹியங்கனையில் இயக்கர் மன்னர்களும் ஆட்சி செய்தனர். கல்யாணியை ஆட்சி செய்த மணிஅக்கிகன் என்ற நாக மன்னனின் அழைப்பின் பெயரில் புத்தர் கல்யாணிக்கு வந்ததாகவும், நாகர் இயக்கர் கோத்திரங்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டைத் தீர்த்து சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக புத்தர் நாகதீபத்திற்கும் மஹியங்கனைக்கும் வந்ததாக மகாவம்சம் கூறுகின்றது.

இலங்கைக்கு மூன்று தடவைகள் வந்த புத்தர் சிங்கள மன்னனையோ, சிங்கள மக்களையோ சந்தித்ததாக குறிப்பிடவில்லை. புத்தர் இலங்கைக்கு வந்த போது சிங்களவர் என்ற இனமோ மொழியோ இருக்கவில்லை. அப்போது இங்கு வாழ்ந்த மக்கள் இயக்கர், நாகர் வம்சத்தையுடைய திராவிடர்களாவர். இலங்கையில் பல இடங்களில் நூற்றுக்கணக்கான தொல்லியல் ஆய்வினை மேற்கொண்ட ஜி.சி.மெண்டில், எஸ்.பி.எஸ்.சேனாரத்தினா, சி.க.சிற்றம்பலம், ப.புஸ்பரெட்னம் போன்ற உள்நாட்டு ஆய்வாளர்களும் விமலாபேக்லே (அமெரிக்கா) கொட்றிங்ர (பிரித்தானியா) போன்ற மேற்கத்தேய நாட்டு ஆய்வாளர்களும் மேற்கொண்ட ஆய்வுகள் இலங்கையின் ஆதிக்குடிகள் திராவிடர் என நிறுவினர். எனவே இவற்றை நோக்குகின்ற போது இந்தியாவில் தமிழர்கள் நாகரிகத்துடன் வாழ்ந்தது போன்று ஈழத்திலும் தமிழர்கள் இலங்கையின் முதற் குடிகளாகவும் நாகரிகத்துடன் வாழ்ந்தவர்களாகவும் விளங்குகின்றமை தெளிவாகின்றது.

**இராவணன்**

மொழி ஞாயிறு. ஞா.தேவநேயபாவானர் இராமாயணக் காலம் கி.மு. 1300 தொடக்கம் கி.மு 1200க்கு உட்பட்டது என்றும் வரலாற்று அறிஞர் ந.சி.கந்தையா கி.மு 14ஆம் நூற்றாண்டளவில் இராமாயண நிகழ்வு இடம்பெற்றதாக குறிப்பிடுகின்றனர். எனவே இற்றைக்கு கிட்டத்தட்ட 3300 வருடங்களுக்கு முன் இராவணன் ஆட்சி செய்திருக்கிறான் என்பது தெரிய வருகிறது.

வட்சிரவாணன், கைகேசியின் மக்கள், இராவணன், கும்பகர்ணன், சூர்ப்பணகை, விபிடன் ஆகியோர் ஆவர். இராவணனின் மனைவியான மண்டோதரி மாயன் மகள் ஆவாள். இவர்கள் இயக்கர் வம்சத்தை சேர்ந்தவர்கள் ஆவர். இராவணன் சிறந்த சிவ பக்தனாகவும், மாபெரும் வீரனாகவும் விளங்கினான். அவனது செங்கோல் இலங்கையுடன் மட்டும் நிற்காமல் இலங்கையை சூழவுள்ள எல்லா நாடுகளிலும் தன் ஆட்சியை நிலைநிறுத்தினான். தமிழ் நாட்டில் இராஜராஜ சோழன் போன்றே இவன் விளங்கினான். இராவணன் இலங்கை முதல் ஜனஸ்தானம், திருச்சிராப்பள்ளி, தண்டகாருண்யம் எனப் பத்து இடங்களை ஆட்சி செய்தான். பத்து இடங்களிலும் பத்து தலைவர்களை நியமித்து ஆட்சியை நிர்வகித்தான். பத்து இடங்களுக்கு தலைமை தாங்கியதால் பத்துத் தலை இராவணன் என அழைக்கப்பட்டான். பின்னர் இது பத்துத் தலைகளை உடைய இராவணன் என திரிபடைந்தது. இந்தியாவில் உத்தராப்பிரதேச மாநிலத்தின் கான்பூரில் கைலாஷ் மந்திரி கோவில் வளாகத்தில் இராவணனுக்கு கோயில் உண்டு இது 150 ஆண்டுகள் பழமை வாய்ந்த கோயிலாகும். விஜயதசமி அன்று இந்தக் கோயில் திறக்கப்பட்டு பெருந்திரளான மக்கள் வழிபடுகின்றனர். அப்பகுதி மக்கள் இராவணனை சிறந்த அறிவாளி எனக் குறிப்பிடுகின்றனர்.

நம் முன்னோர் கடவுளை மனிதர்களிடமிருந்து வேறுபடுத்தி சிறப்பித்துக் காட்ட வேண்டும் என்பதற்காக பல தலைகளையும் பல கைகளையும் கடவுளுக்கு வைத்தனர். இதன்படி பிரம்மாவுக்கு நான்கு முகங்களும் முருகனுக்கு ஆறு முகங்களும் வைத்தனர். ஆனால் இராவணனுக்கோ பத்துத் தலைகளும் இருபது கைகளுமாக கூறப்படுகின்றது. எனவே கடவுளை விட இராவணன் சிறந்தவனா? இல்லையே. இராவணன் ஒரு மனிதன் எனவே இராவணனுக்கு பத்துத் தலை என்பது வெறும் பொய் ஆகும். ஆரியர் இராவணனை கொடியவனாகவும் வித்தியாசமாகவும் காட்ட வேண்டும் என்ற வெளிப்பாடே பத்துத் தலை ஆகும்.

தமிழர்களின் தனிப்பெரும் தலைவனான திராவிட வேந்தனான இராவணனைப் பற்றி பாவேந்தன் பாரிதாசன் வீரத் தமிழன் என்ற கவிதையில்

**"அன்றந்த லங்கையினை ஆண்ட மறத்தமிழன்**

........................................................................................

என் தமிழர் மூதாதை என் தமிழர் பெருமான் இராவணன் காண் அவன் நாமம் இவ்வுலகம் அறியும்" என சிறப்பித்துக் கூறுகின்றார்.

திருகோணமலை கோணேசர் பெருமானைப் பாடிய சம்பந்தர், சுந்தரர் இராவணனின் சிவ பக்தியையும் இசைஞானத்தையும் பாடியுள்ளார்.

### வால்மீகி இராமாயணம்

வால்மீகி இராமாயணம்.ஆரியரான வால்மீகி இராமாயணத்தை எழுதும் முன்பே வடஇந்தியாவில் நாற்பது வகையான இராம கதைகள் புழக்கத்தில் இருந்தன. இதில் மிக முக்கியமானது "தசரத சாதகம்" ஆகும். இதில் இராவணனைப் பற்றியோ இராவணன் சீதையைக் கவர்ந்தது பற்றியோ, இராம, இராவண யுத்தம் பற்றியோ எதுவும் கூறவில்லை. சில இராவணன் பற்றிய கதைகளில் இராவணனின் தங்கை சீதை எனவும் குறிப்பிடுகின்றது.

கர்ண பரம்பரைக் கதையை (வாய்மொழியாக) அடிப்படையாகக் கொண்டே வால்மீகி தனது இராமாயணத்தை இயற்றியுள்ளார். வால்மீகியினால் இயற்றப்பட்ட இராமாயணம் சிறிய அளவு உடையது என்றும். திருமாலின் தசவதாரக் கோட்பாடு வகுக்கப்பட்ட பின்பே இராமாயணம் விரிவடைந்தது எனக் கூறும்மொழி ஞாயிறு ஞா.தேவநேயபாவாணார். இராம யுத்தம் இலங்கையில் நடந்தது எனக் கூறுவது எல்லாம் பிற்காலத்துக் கட்டுக் கதைகள் என்றும் அதற்கான 13 ஆதாரங்களை முன்வைக்கின்றனர். (தமிழர் வரலாறு - 2, பக்கம் 23)

எனவே இவற்றை நோக்கும் போது அந் நாட்களில் இராமனைப்பற்றியும் இராவணனைப்பற்றியும் தனித்தனியாக பிரபல்யம் பெற்றிருந்த கதைகளை இணைத்தே வால்மீகி தனது இராமாயணத்தை இயற்றியுள்ளார். ஆரியரான வால்மீகி தன் இனத்தைச் சேர்ந்த இராமனைக் சிறப்பாக் கூறவும் திராவிடரை மோசமாகக் காட்டவும் இராமாயணத்தை எழுதியுள்ளார்.

தற்போது வால்மீகி இராமாயணம் 24.000 சுலோகங்களையும் 7 காண்டங்களையும் கொண்டுள்ளது. இதில் வால்மீகியால் இயற்றப்பட்டது. 2ஆம் காண்டம் தொடக்கம் 6ஆம் காண்டம் வரை ஆகும். அதே நேரம் இந்தக் காண்டங்களில் இடைச் செருகல் காணப்படுகின்றன.முதற் காண்டமும் 7ஆம் காண்டமும் பிற்காலத்தில் எழுதப்பட்டு வால்மீகி இராமாயணத்துடன் இணைக்கப்பட்டது என பேராசிரியர் ஜாக்கோபி குறிப்பிடுகின்றார்.வால்மீகியினால் இயற்றப்பட்ட இராமாயணத்தில் இராமனை சிறந்ததொரு இளவரசனாகவே குறிப்பிடுகின்றார். பிற்காலத்தில் சில நூற்றாண்டுகளின் பின் வால்மீகி இராமாயணத்துடன் இணைக்கப்பட்டுள்ள முதலாம், ஏழாம் காண்டத்தில் இராமனை விஷ்ணுவின் அவதாரம் எனக் குறிப்பிடுகின்றனர்.. வால்மீகி தன் இனத்தைச் சேர்ந்த இராமனை உயர்த்திக் காட்டுவதற்காக எதிரான திராவிட மன்னனான இராவணனை மிக மோசமாக அரக்கன் எனக் கூறுகிறார்.

### கம்பராமாயணம்

தமிழில் இராமாயணத்தை எழுதிய கம்பர் வால்மீகி இரமாயணத்தைப் பின்பற்றி தாம் இக் காவியத்தை எழுதியதாகக் குறிப்பிட்டாலும் கம்பர் தாம் வாழ்ந்த காலத்திற்கு ஏற்பவும் தம் எண்ணங்களுக்கு ஏற்பவும் இராமாயணத்தை எழுதியுள்ளார். இவர் வால்மீகியை விட இராவணனை மிக மோசமான அரக்கனாகவும் அவன் குடி மக்களை மிக அவலட்சணமான அரக்கர்களாகவும் காண்பிக்கின்றார். இந்தியாவின் சைவத்துக்கும் வைணவத்திற்கும் இடையில் எதிரான போட்டி நிலவியது. ஒரு மதத்தை மற்ற மதம் தூற்றியது. உதாரணம் திருமங்கையாழ்வார் தனது பாசுரங்களில் சைவ சமயத்தவர்களை தாழ்த்திப் பாடியுள்ளார். இது போன்றே வைணவ மதத்தவரான கம்பர் இராமனை விஷ்ணுவின் அவதாரமாகவும்சிவபக்தனான இராவணனை மிகமோசமான அரக்கனாகவும்சித்தரித்துள்ளார்.

இதனால் கம்பர் தனது இராமாயணத்தில் இராமனை ஏகபத்தினி விரதன் எனக் குறிப்பிடுகின்றார். ஆனால் வால்மீகி தனது இராமாயணத்தில் இதற்கு எதிர் மாறான கருத்தை முன்வைக்கின்றார். சுந்தர காண்டத்தில் சீதை இராமனைப் பார்த்துக் கூறும் "நீர் பித்துரு வாக்ய....." என்ற பாடலிலும் யுத்த காண்டத்தில் இராமன் தர்ப்ப சயனத்தில் படுத்திருப்பதை வர்ணிக்கும் "உத்தம ஸ்திரிகளின்....." பாடல் மூலமும் வெளிப்படுகின்றது. இதனை ஸ்ரீனிவாச ஐயங்கர் தனது "ஸ்ரீராமாயண தத்துவார்த்த பீடிகை" என்ற நூலில் அலசுகின்றார்.

தமிழில் பெரும் இலக்கியமாண கம்பரின் இராமாயணத்தில் உள்ள கவித்துவமும் மொழிச் செழுமையும் தமிழ் மொழியை வளர்ச்சியடையச் செய்தது. இதனால் தமிழ் மொழி சிறப்பும் பெருமையும் அடைந்தது.

ஆனால் கம்பர் தனது இராமாயணத்தின் மூலம் தமிழர்களை இழிவுபடுத்தி விட்டார். தமிழ் நாட்டில் திரவிட இயக்கம் எழுச்சியடைந்திருந்த 1960 காலப்பகுதியில் கமபராமாயணம் தீயிட்டு எரிக்கப்பட்டது.

ஆரியர் திராவிடர்களான தமிழர்களை அரக்கர் என சித்தரித்தார். ஆனால் கம்பர் தம் இனமான தமிழர்களை மிக மோசமான அரக்கர்களாக அதுவும் குறிப்பாக இலங்கைத் தமிழரை இழிவுபடுத்துகின்றார். கம்பராமாயணத்தில் கூறப்பட்டுள்ள இராவணனையும் அவனது குடி மக்களையும் அரக்கர்கள் என்பதை நாம் ஏற்றுக் கொண்டால் அதாவது நம் முன்னோர் அரக்கர் என்றால் தமிழர்களாகிய நாமும் அரக்கர்கள் தான்.

பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த டைனோசரின் எச்சங்கள் கூட இப்போது கண்டெடுக்கப்படுகிள்றது பல நூறு வருடங்களுக்கு முன் வாழ்ந்த ஆரியர்களாலும் கம்பராலும் கூறப்படுகின்ற அரக்கர்களின் எச்சங்கள் ஏன் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இதற்கான விடை அரக்கர் என்ற இனம் உலகில் வாழ்ந்ததுமில்லை, திராவிடரான தமிழர்கள் அரக்கரும் இல்லை என்பதாகும். எனவே இக்கட்டுரையின் நோக்கம் இராமாயணத்தையோ இராமனையோ இழிவுபடுத்துவதற்கல்ல. இந்தியாவிலும் இலங்கையிலும் ஆதிக்குடிகள் திராவிடர்களாகிய தமிழர்கள் என்றும், அவர்கள் நாகரிகத்துடன் வாழ்ந்த சமூகம் என்றும் திராவிடர்கள் அரக்கர் அல்ல என்பதையும் உலகில் அரக்கர் என்ற இனம் வாழ்ந்ததும் இல்லை என்பதை வெளிப்படுத்துவதேயாகும்.

**உசாத்துணை**


1. வடமொழி இலக்கிய வரலாறு - செம்மொழிக்காலம் - நாவலியூர் சோ.நடராசன் 1967
2. தென் இந்திய வரலாறு - நீலகண்ட சாஸ்திரி - 1966
3. மறைந்த நாகரிகங்கள் - ந.சி.கந்தையா - 1950
4. தமிழர் வரலாறு - 2 - மொழிஞாயிறு ஞா.தேவநேயபாவனார் - 1972
5. இராமயணம் என்பது ஓர் இலக்கியமா? - அம்பலவானர் மயூரன் - வீரகேசரி-2008
6. பாரதிதாசன் கவிதைகள்



**திரு.க. உபேந்திரன்**

ஆசிரியர்

## நூற்றாண்டு விழாவில் கௌரவிக்கப்படுபவர்கள்

### மட்/குருமண்வெளி சிவ சக்தி மகா வித்தியாலயத்தின் அதிபர்கள்

1. திரு.கி.தா.சீனித்தம்பி
2. திருமதி.மேரி சாமித்தம்பி
3. திரு.முகாந்திரம் ஜே.சீ.இளையதம்பி
4. திரு.க.ஏ.சரவணமுத்து
5. திரு.எஸ்.ஈ.கணபதிப்பிள்ளை
6. திருமதி.கிருபையம்மா அழகையா
7. திரு.க.கந்தையா
8. திரு.சா.நாகமணி
9. திரு.த.செல்வநாயகம்
10. திரு.மு.தம்பிராசா
11. திரு.த.செல்வநாயகம்
12. திரு.மு.இராசரெத்தினம்
13. திரு.இ.கந்தசாமி
14. திரு.கோ.கயிலாயபிள்ளை
15. திரு.சோ.தர்மசீலன்
16. திரு.வ.கனகரெத்தினம்

### மட்/ குருமண்வெளி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர்களின் விபரம்

1. திரு.மு.இளையதம்பி
2. திரு.க.வேல்முருகு
3. திரு.மு.தம்பிராசா
4. திரு.க.வெ.வீரக்கோன்
5. திரு.மு.இளையதம்பி
6. திரு.மு.இராசரெத்தினம்
7. திரு.சீ.தம்பிராசா (பண்டிதர்)
8. திரு.வீ.தம்பையாப்பிள்ளை
9. திரு.பி.கி.இராசதுரை கவிஞர் இராஜபாரதி)
10. திரு.சி.சோமநாதன்
11. திரு.க.இரட்ணசிங்கம்
12. திரு.செ.காசிப்பிள்ளை
13. திரு.தெ.சங்கரலிங்கம்

## மட்/ குருமண்வெளி
## சிவ சக்தி மகா வித்தியாலயத்தில் சேவையாற்றி

# ஓய்வு பெற்ற ஆசிரியர்கள்

1. திரு.க.இராஜகோபால்
2. திரு.கே.பொன்னுத்துரை
3. திருமதி.த.பரராசசிங்கம்
4. திருமதி.அ.சங்கரப்பிள்ளை
5. திருமதி.நே.அம்பலவன்
6. திருமதி.ம.திருத்தணிகாசலம்
7. திருமதி.து.இரத்தினசிங்கம்
8. திரு.மு.செல்வராசா
9. திரு.அ.மகாலிங்கசிவம்
10. திருமதி.வி.இராமச்சந்திரா
11. திரு.பெ.தருமரெத்தினம்
12. திரு.க.துரைராசா
13. திரு.பொ.தம்பிமுத்து
14. திருமதி.த.சேதுநாதன்
15. திரு.க.தம்பிரெத்தினம்
16. செல்வி.சு.நாகரெத்தினம்
17. திரு.செ.சிவனேசராசா
18. திரு.வே.கிருஸ்ணன்
19. திரு.மு.தம்பிப்பிள்ளை
20. திரு.வ.சிவசுந்தரம்
21. திரு.சி.நடராசா
22. திரு.சீ.விஸ்ணுமூர்த்தி
23. திரு.செ.சிவசம்பு
24. திரு.அ.தொ.பெர்ணாண்டோ
25. திரு.எஸ்பழனிநாதன்
26. திரு.கு.வன்னியசிங்கம்
27. திரு.கி.மயில்வாகனம்

# பரிசளிப்பு விழா – 2010











Golden Offset Printers, Kalmunai. 067-2223939